# அபத்தம்

புரட்டாதி 2023 9



## கருத்துக்களை அடைகாக்கும் ‘கருத்து முதலீட்டு’வாதிகள்

# கருத்துக்களை அடைகாக்கும் ‘கருத்து முதலீட்டு’ வாதிகள்

கருத்துச் சுதந்திரத்திற்காக குத்தி முறிவோரே, படுமோசமான கருத்து மறுப்பாளர்களாக இருக்கிறார்கள்.

இப்படிக் குத்தி முறிவோரில் பலரிடம் கருத்து என்று சொந்தமாக எதையும் கண்டதுமில்லை. இவர்களில் பலருடைய கருத்துக்கள் இவர்கள் வாழ்ந்த யாழ்ப்பாண சமூகத்தின் சிந்தனையை அடித்தளமாகக் கொண்டதாகவும், இவர்கள் கற்றுக் கொண்ட, அல்லது கற்றுக் கொண்டதாக பாசாங்கு பண்ணுகிற ஏதோ தத்துவம் சார்ந்ததாகவும் தான் இருக்கும்.

யாழ்ப்பாண சமூகத்தின், பிற்போக்குத் தனமான சிந்தனைகளை வைத்துக் கொண்டு, கூர்ப்பின் உச்சத்தில் தான் மட்டுமே இருக்கும் மேலானவனாகவும் நினைக்கும் நம்பிக்கையும், நான் நம்புகிற தத்துவம் எந்த வித அப்பழுக்கும் அற்ற புனிதமான விஞ்ஞான உண்மை என்ற எண்ணமும் தான் இவர்களின் கருத்துச் சுதந்திரம் பற்றிய எண்ணப்பாடுகளுக்கான அடிப்படை.

இதில் புலிகள் புனிதப் போராட்டம் நடத்தினார்கள், தலைவர் சூரியதேவன் என்று சிந்திக்கும் புலிவால்களுக்கும், பல்வேறு ‘இசங்கள்’ பேசும் பேஸ்புக் இடதுசாரித் ‘தோழர்’களுக்கும் பெரிய வித்தியாசம் இருந்ததில்லை.

ஆனால், இடதுசாரிகளுக்கு தாங்கள் புத்திஜீவிகள் என்ற நினைப்பு இருப்பதும், புலி வால்கள் சுத்திஜீவிகளாக இருப்பதும் தான் நிலைமை.

இதனால் தான் இடதுசாரிகளில் பலர் தாங்கள் நம்பும் தலைவர்கள் மீதான எந்த விமர்சனத்தையும் எதிர்கொள்ள மறுக்கிறார்கள்.

அதே யாழ்ப்பாணிய சிந்தனையுடன் அந்த விமர்சனத்தை வைப்பவர்கள் மீது வன்மும் காழ்ப்பும் கொண்டவர்களாக, கருத்துக்களைக் கடந்து, தனிப்பட்டு அவதூறு செய்கிறவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால், புலிவால்கள் ‘அண்ணை உவரை மண்டையில் போட வேண்டும்’ என்பதும், புத்திஜீவிகள் ‘கருத்தைக் கருத்துக்களால் எதிர்கொள்வோம்’ என்று கூட்டறிக்கை விடுவதும் தான் வித்தியாசமாக இருக்கும்.

அண்ணை அடிச்சுப் பறிப்பார் என்பதும், மானிட விடுதலைக்கு தாங்கள் நம்பும் தத்துவம் தான் முடிவு என்பதும், தங்கள் நம்பிக்கை எந்தக் கேள்விக்கும் இடமில்லாத விஞ்ஞான முடிவு என்ற ஒரே சிந்தனை தான்.

விஞ்ஞானம் என்பதே முடிந்த முடிவாக இருப்பதில்லை. அது உண்மையை நோக்கிய பயணம் மட்டுமே.

பிரபஞ்சம் தோன்றிய காலம் என்று விஞ்ஞானம் இத்தனை நாள் சொல்லி வந்த காலத்தை விட, இரண்டு மடங்கு காலம் என்று தற்போது அதே விஞ்ஞானம் சொல்கிறது.

**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**

கணிதம் போலன்றி, இப்படியான கருதுகோள்களும் விஞ்ஞானம் என்பதற்குள் தான் வருகிறது. கேள்விக்குள்ளாகாத எந்தக் கருத்தும் விஞ்ஞானத்திற்குள் இல்லை.

ஆனால், இந்த யாழ்ப்பாணச் சிந்தனைவாதிகளின் விஞ்ஞானம் தங்கள் முடிவுகள் எந்தக் கேள்விக்கும் அப்பாற்பட்டவை என்பவையாகவும், அந்தக் கருத்து மீதான கேள்வியை எழுப்புவோரை, துரோகி என்பது முதல் 'அவன் வியரன்!' என்பது வரைக்கும் இருக்கிறது.

உலகத்தில் கடவுள் என்று ஒரு சாராரால் கொண்டாடப்படுகின்ற எல்லாத் தலைவர்கள் மீதும் கடுமையான விமர்சனத்தைக் கொண்டிருக்கும் இன்னொரு சாரார் இருக்கிறார்கள்.

ரஷ்ய, சீன பிரிவினால், மார்க்ஸிஸ்ட், மாவோயிஸ்டுகள் யாழ்ப்பாணத்தில் பிரிந்த போது, தற்போது பேஸ்புக்கில் கருத்துச் சொல்லும் ஒருவரின் தரப்பினரின் அலுவலகப்பக்கம் தாங்கள் போக முடியாத நிலைமை இருந்தது என்று மற்றத் தரப்பைச் சேர்ந்த இன்னொரு செயற்பாட்டாளர் எனக்குச் சொல்லியிருந்தார்.

கருத்தை அடிதடியால் எதிர்கொள்ளும் நிலைமை அங்கேயும் அப்போதும் 'கருத்தைக் கருத்தால் எதிர்கொள்ளும்' அவர்களுக்கு இடையிலும் இருந்தது.

தமிழ்நாட்டில் பெரியார், அம்பேத்கார், இடதுசாரிகளின் பரஸ்பர வன்மமும் கொலைவெறியும், (அதை விட திராவிட உடன்பிறப்புகள் தொல்லை வேறு) எனக்கு பல தடவைகளில் ஆச்சரியமாக இருக்கிறது.

இதற்கான அடிப்படைக் காரணம், மானிட நேயம் என்பது இந்த தத்துத்துவங்களுக்கு எல்லாம் மேலானவை என்ற சிந்தனை இவர்களுக்கு இல்லாமல் இருப்பதால் தான்.

'எங்களுடைய எல்லாச் சிந்தனைகளுமே மானிட மேன்மைக்கான ஒவ்வொரு வழிகளே, அந்த ஒவ்வொரு வழிகளிலும் ஏதோ குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன, ஆனால் அந்த மானிட மேன்மைக்காக உடன்பாடுகளுக்குள் முரண் பாடுகளைத் தேடுவதை விடுத்து, முரண்பாடுகளுக்குள் உடன்பாடுகளைக் காண்பதன் மூலம் தான் அந்த மானிட மேன்மையை அடைய முடியும்' என்ற எண்ணம் இவர்களுக்கு இருப்பதாக நான் கண்டதில்லை.

**“ 'எங்களுடைய எல்லாச் சிந்தனைகளுமே மானிட மேன்மைக்கான ஒவ்வொரு வழிகளே, அந்த ஒவ்வொரு வழிகளிலும் ஏதோ குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன, ஆனால் அந்த மானிட மேன்மைக்காக உடன்பாடுகளுக்குள் முரண் பாடுகளைத் தேடுவதை விடுத்து, முரண்பாடுகளுக்குள் உடன்பாடுகளைக் காண்பதன் மூலம் தான் அந்த மானிட மேன்மையை அடைய முடியும்' என்ற எண்ணம் இவர்களுக்கு இருப்பதாக நான் கண்டதில்லை. ”**

என்னோடு நட்பாக இருக்கும் மாற்று இயக்க நண்பர்கள் பலர் கூட, தங்கள் தலைவர்கள் பற்றி நான் எதையாவது சொல்லி விட்டால், என் மீது எப்படியான அவதூறு செய்வார்கள் என்பது எனக்குத் தெரியும்.

புலித் தலைவர் பிரபாகரனைச் சூரியதேவன் என்று ஒரு கூட்டம் ஆராதித்து வணங்கிக் கொண்டிருக்கும் அதே நேரம், அவரை ஒரு வெறும் கொலைகாரன் மட்டுமே என்று எண்ணும் பலரும் இருக்கிறார்கள்.

அதே போல, மாற்று இயக்கங்களின் தலைவர்களைக் கொலைகாரர்கள் என்பவர்கள் முதல் புனிதர்கள் என்பவர்கள் வரை பேஸ்புக்கில் நீங்கள் காணலாம். இது கிட்டத்தட்ட யாழ்ப்பாணத்தில் தோன்றிய தீவிரவாத இயக்கங்கள் எல்லாவற்றுக்கும் பொதுவானவை.



facebook: George RC

சுகன் கடந்த அபத்தம் இதழில் உமா மகேஸ்வரனை 'மக்கள் யுத்தத்தின் மகத்தான தளபதி' என்று எழுதிய கட்டுரைக்கான எதிர்வினைகள் கூட இப்படியான சிந்தனைக்குள்ளால் தான் வந்திருக்கின்றன.

சுகன் கட்டுரையை அனுப்பிய போது, அந்தக் கருத்துக்களோடு எனக்கு உடன்பாடு இருக்காது என்பதும் சுகனுக்கும் தெரியும். அதைத் தெரியவும் படுத்தியிருந்தேன்.

அதற்கு வரக்கூடிய எதிர்வினைகள் பற்றி எங்கள் இருவருக்கும் தெரியும். எனக்கான கேள்விகளையும் சுகனிடம் கேட்டிருந்தேன்.

இதைவிட, உமா மகேஸ்வரனோடு இருந்து முரண்பட்ட தீப்பொறி குழுவில் இருந்தவர்களில் முக்கியமானவர்கள் சிலர் என்னோடு மிகவும் நெருக்கமான நண்பர்களாகவும் இருக்கிறார்கள்.

அவர்களில் ஒருவரான என் நீண்ட கால நண்பர் சொன்னது...

அமிர்தலிங்கம் அரசியல் வியாபாரி என்றால், உமா மகேஸ்வரன் மொத்த வியாபாரி.

இதை அவர் சொன்னது, நான் தாயகம் ஆரம்பிப்பதற்கான எண்ணத்தையே கொண்டிருப்பதற்கு

**இப்படி இவர்கள் எல்லாம் தங்கள் கருத்துக்களை, தங்களோடு மட்டும் வைத்துக் கொண்டு, வாய் திறக்காத வெறும் விமர்சகர்களாகத் தான் இருக்கிறார்கள்.**

**இவர்களுடைய கருத்துச் சுதந்திரம் பற்றிய குமுறல்கள் எல்லாம்... சீமானின் 'இந்த நாடு என் கையில் சிக்கிச்சு, பச்சை மட்டை அடிதான்!' என்பது போன்றதே.**

**'எங்களுடைய வர்க்கச் சர்வாதிகாரம் ஆட்சிக்கு வரும் போது, முதல்ல மண்டையில போடிறது ஆரெண்டு தெரியுமே?'.**

**என்னுடைய பெயரும் லிஸ்டில் இல்லாமலா போய் விடும்?**

முன்பாக.

பிரபாகரன் பற்றி உயர்வான கருத்துக்கொண்டிருப்பவர்கள் போல, உமா மகேஸ்வரன் பற்றியும், அவர் ஒரு வெறும் கொலைகாரனே என்ற எண்ணம் கொண்டவர்களையும் கண்டிருக்கிறேன்.

உமா மகேஸ்வரனோடு இருந்த பல முக்கியஸ்தர்கள் ஈன இரக்கமற்ற கொலைகாரர்களாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள்.

ஒரு தடவை பார்ட்டி ஒன்றில், குடித்து விட்டு அங்காங்கே நடமாடித் திரிந்த ஒருவரை எனது நண்பர் ஒருவர் காட்டி, 'உவனைத் தெரியுமோ, உவன் புளட்டில அங்க பெரிய கொலைகள் செய்த பேமஸ் ஆள்' என்று பெயரைக் கூறியிருந்தார்.

ஆகவே, எங்கள் கருத்துக்களும் நம்பிக்கைகளும் கணித உண்மைகள் இல்லை. விஞ்ஞானக் கருதுகோள்கள் போல, கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டியவையே.

ஆனால், சுகனின் இந்தக் கட்டுரைக்கான எதிர்வினைகளில் எனக்கு சிரிப்பு வரவைத்தது...

உவர் எப்படி அதைப் பிரசுரிப்பார் என்பது தான்.

இவர்களில் பலர் கருத்துச் சுதந்திரம் பற்றி, புலன் பெயர்ந்த இலக்கிய வட்டங்களில் எனக்குத் தெரிய கருத்துச் சொன்னவர்கள்.

இன்னும் சிலர், தங்கள் மாக்ஸிஸப் 'புலமையால்', தங்களைப் பற்றிப் பெரிய நினைப்புகளோடு இருப்பவர்கள்.

இப்படி இவர்கள் எல்லாம் தங்கள் கருத்துக்களை, தங்களோடு மட்டும் வைத்துக் கொண்டு, வாய் திறக்காத வெறும் விமர்சகர்களாகத் தான் இருக்கிறார்கள்.

இவர்களுடைய கருத்துச் சுதந்திரம் பற்றிய குமுறல்கள் எல்லாம்... சீமானின் 'இந்த நாடு என் கையில் சிக்கிச்சு, பச்சை மட்டை அடிதான்!' என்பது போன்றதே.

'எங்களுடைய வர்க்கச் சர்வாதிகாரம் ஆட்சிக்கு வரும் போது, முதல்ல மண்டையில போடிறது ஆரெண்டு தெரியுமே?'.

என்னுடைய பெயரும் லிஸ்டில் இல்லாமலா போய் விடும்?

தாயகம் பத்திரிகையை நான் ஆரம்பித்த போது, கருத்துச் சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற பெரிய நோக்கோடு எல்லாம் ஆரம்பித்ததில்லை.

கண்டடைந்த தொழில்நுட்பம் தந்த சாத்தியமும் ஆர்வமும் மட்டுமே இருந்தது. இயக்கங்களின் பக்கச்சார்பு செய்திகள் மட்டுமே இருந்து, பிரசார நோக்கத்தோடு மட்டுமே வெளிவந்த சூழ்நிலையில், ஒரு நடுநிலைப் பத்திரிகையாகத் தான் அதை வெளிக்கொணர வேண்டும் என்று நினைத்திருந்தேன்.

அதனால் தான் 'உண்மையைத் தேடி' என்ற தாரக மந்திரத்தோடு அது வெளிவந்தது.

உண்மையைத் தேடுவது என்பதை, தங்களின் இருப்பிற்கான அச்சுறுத்தலாக நினைத்த புலிவால்களின் மிரட்டல்களுக்குப் பயந்து, யாழ்ப்பாணிகள் மாதிரி, 'புறுபுறுத்துக் கொண்டே' புலிகளுக்கு ஆதரவு கொடுப்பதாக நடித்துக் கொண்டு பிழைப்பு நடத்தாமல், அதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு தான், கருத்துச் சுதந்திரம் பற்றிய என் நிலைப்பாட்டை எனது செயற்பாடுகள் மூலமாகக் காட்டினேன்.

'உண்மையின் முன்னால் நடுநிலை என்று ஒன்று இல்லை' என்று கண்டுபிடித்த விஞ்ஞானிகளும் இருந்தார்கள். அந்த விஞ்ஞானிகளும் போராட்டத்திற்குச் சேர்த்த பணத்தைச் சுருட்டிக் கொண்டு தலைமறைவாகி விட்டார்கள்.

தங்கள் கருத்தைத் துணிந்து சொல்கிறவர்களுக்கான தளமாக அதை உருவாக்கினேன். அதில் எழுதிய எல்லோருக்குமே தெரியும், என்னுடைய கருத்துக்களோடு முழுமையாக அவர்கள் உடன்படாதது போலவே, அவர்களுடைய கருத்துக்களுடன் நானும் முழுமையாக உடன்படுவதில்லை என்பது.

ஆனால், அவர்களுடைய கருத்துக்கள் வெளியில் வர வேண்டும் என்பதில் எனக்கு உண்மையான அக்கறை இருந்ததால் தான், கொலைப் பயமுறுத்தல்களுக்கும் மத்தியில் அதை வெளிக்கொணர்ந்திருந்தேன்.

தாயகத்தில் தங்களின் கருத்தை எந்தத் தணிக்கையும் இல்லாமல் வெளியிடுவேன் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. இன்றைக்கும் தங்களுக்குக் கிடைத்த அந்தச் சுதந்திரம் பற்றிப்

பெருமையோடு நினைவுகூரும் நண்பர்கள் இருக்கிறார்கள்.

தங்களைப் பற்றி அனாமதேயங்கள் சொன்ன புகழுரைகளை மட்டும் வெளியிடும், பகிர்ந்து கொள்ளும் இலக்கிய மேதகுக்கள் மாதிரி இல்லாமல், என்னைப்பற்றியவிமர்சனங்களையும் வெளியிட்டு, அதற்கான என் பதிலை இன்றைக்கும் வெளியிட்டுத் தான் வருகிறேன்.

இது தான் கருத்துச் சுதந்திரம் பற்றி நான் கொண்டிருக்கும் கருத்து.

'உவர் எப்பிடி உப்பிடிச் சொல்லலாம்?' என்ற யாழ்ப்பாணியின் மிரட்டல் சிந்தனை இல்லாமல், 'முதல்ல அவனைக் கதைக்க விடு, அவன் என்ன சொல்லிறான் என்பதைக் கேட்பம்' என்பது தான் எப்போதுமே என் கருத்தாக இருந்தது.

தாயகம் வெளிவந்த காலத்தில், புலிகள் வெளியிட்ட உலகத்தமிழர் பத்திரிகையை, நான் வாசிப்பது போல, அதன் ஆசிரியர் கூட வாசித்திருக்க மாட்டார்.

தாயகத்தை 'உதையெல்லாம் நாங்கள் வாசிக்கிறேலை' என்று அதை மலசலகூடத்தில் மறைத்து வைத்து வாசித்த புலிவால்கள் போலவே, இன்றைக்கும் 'அபத்தத்தை வாசிக்கிறேலை' என்பதைப் பெருமையாகச் சொல்லிக் கொண்டு, அதில் வந்திருப்பவை பற்றி புலம்பலும் பொறாமையும் கொள்கிற இலக்கியச் செம்மல்(றி) களையும் கண்டுகொண்டு தான் இருக்கிறேன்.

இத்தனை வருடங்களாக ஈழப் போராட்டம் பற்றியும், இப்போது இலக்கியம் பற்றியும் என்னுடைய கருத்துக்களை துணிச்சலாக முன்வைத்துக் கொண்டு தானே இருக்கிறேன்.

என்னைப் பொறுத்த வரைக்கும், கருத்துச் சுதந்திரம் என்பது, தான் நம்புகிற கருத்தைத் துணிச்சலோடு சொல்வது மட்டுமல்ல, அதன் மீதான விமர்சனங்கள் வரும்போது, அதை நியாயப்படுத்துவதற்குமான துணிச்சலையும் சேர்த்துத் தான்.

தான் விரும்பிய பெண் மீதான காதலை வெளிப்படுத்தத் திராணியற்று, அந்தப் பெண் போகும்போது பற்றைகளுக்குப் பின்னால் இருந்து விசிலடித்து, வடலிகளுக்குள் சுய இன்பம் காண்பவர்கள் மாதிரி, கருத்துச் சொல்ல முடியாது.

என்னை அடையாளம் காட்டி, என்னுடைய கருத்துக்களுக்கான தர்க்கரீதியான நியாயங்களைச் சொல்லித் தான் எப்போதும் என்னுடைய கருத்துக்கள் இருந்திருக்கின்றன.

**என்னைப் பொறுத்த வரைக்கும், கருத்துச் சுதந்திரம் என்பது, தான் நம்புகிற கருத்தைத் துணிச்சலோடு சொல்வது மட்டுமல்ல, அதன் மீதான விமர்சனங்கள் வரும்போது, அதை நியாயப்படுத்துவதற்குமான துணிச்சலையும் சேர்த்துத் தான்.**

**தான் விரும்பிய பெண் மீதான காதலை வெளிப்படுத்தத் திராணியற்று, அந்தப் பெண் போகும்போது பற்றைகளுக்குப் பின்னால் இருந்து விசிலடித்து, வடலிகளுக்குள் சுய இன்பம் காண்பவர்கள் மாதிரி, கருத்துச் சொல்ல முடியாது.**

**என்னை அடையாளம் காட்டி, என்னுடைய கருத்துக்களுக்கான தர்க்கரீதியான நியாயங்களைச் சொல்லித் தான் எப்போதும் என்னுடைய கருத்துக்கள் இருந்திருக்கின்றன.**

இதனால் தான் புனைபெயர்களில் எழுதுவதும் இல்லை. எழுதும்போது கூட, மாறுவேடம் போட்ட எம்.ஜி.ஆர் மாதிரி, என்னை அடையாளம் காணக் கூடியதாகத் தான் எழுதுகிறேன்.

மகிந்த ராஜபக்ஷவை ஏன் மீண்டும் ஜனாதிபதியாக்க வேண்டும் என்று எழுதியபோது, அதற்கான தர்க்கரீதியான நியாயங்களைச் சொல்லித் தான் எழுதினேன்.

'ஆகா, சிங்கள இனவாதத்தின் கைக்கூலி வசமாக மாட்டிக் கொண்டான்' என்று அதை வைத்தே எனக்கு முடிவு கட்டலாம் என்று நினைத்தவர்கள் எல்லாம் சரத் பொன்சேகாவை, 'எதிரிக்கு எதிரி நண்பன்' என்ற கருத்தைத் தவிர வேறு எதுவும் இல்லாமல் வாரி அணைத்தவர்கள் தான்.

புலிச் சிந்தனைக்கும் இதற்கும் என்ன வித்தியாசம்? அந்தப் புலிச் சிந்தனை எங்கே கொண்டு போய் விட்டது?

இப்படி, சுகனின் கட்டுரைக்கு எதிர்வினை செய்தவர்கள் எல்லாம் தங்கள் கருத்துக்களுக்குத் தர்க்கரீதியான நியாயங்களைக் கொண்டவர்களாகவோ, அதைத் துணிச்சலோடு சொல்கிறவர்களாக இல்லை.

'உவர் எப்படி உதைப் பிரசுரிக்கலாம்' என்ற வெறும் புலிச் சிந்தனைத் தணிக்கை யாளர்களாகவே முயற்சிக்கிறார்கள்.

என்னோடு உடன்படாத கருத்தைக் கூட வெளியிட என்னால் முடிகிறது. வன்மங்களை (Hatred) கக்குவதாகவும், தனிப்பட்ட அவதூறாகவும், உண்மைகளுக்குப் புறம்பானதாகவும், தர்க்கரீதியான நியாயங்கள் எதுவும் இல்லாததாகவும், மேதாவித்தனத்தைக் காட்ட முயற்சிப்பதாகவும், என்னைப் பயன்படுத்தி தங்கள் நோக்கத்தை நிறைவேற்ற முயற்சிப்பதாகவும், என்னை மாட்டி விடும் உள்நோக்கம் கொண்டதாகவும் உள்ளன தவிர்ந்து, மற்ற எதையும் பிரசுரிப்பதில் எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை.

ஆனால், இவர்களில் பலரும் தங்கள் கருத்துக்களை வெளியில் சொல்வதில்லை.

'உதுக்கு எல்லாம் பதில் சொல்லேலாது' என்ற மிதப்பு முதல், 'உதுக்குப் பதில் சொல்லி உவரைப் பெரிய ஆளாக்கக் கூடாது' என்ற பெருமனது வரைக்கும் உள்ளவர்கள் எங்கள் அரசியல், இலக்கிய குண்டுச்சட்டிக்குள் இருக்கிறார்கள்.

சரி, எப்படித் தாண்டா உங்கள் கருத்துக்களை நாங்கள் பகிரங்கமாக அறிந்து கொள்வது என்று நீங்கள் அவர்களைக் கேட்க முடியாது.

ஏனென்றால், இவர்களுக்கு தங்கள் கருத்துக்கள் மீதே நம்பிக்கையில்லை.

சில நேரம், 'உள்ளுக்க வரவிட்டு அடி நடக்கும்' என்ற பயமாகவும் இருக்கலாம்.

விமர்சனம் செய்கிறவர்களே விமர்சனங்களுக்குப் பயப் படுகிறவர்களாயும் இருக்கிறார்கள்.

தன்னுடைய கருத்துக்களில் நம்பிக்கையிருப்பவர்கள் அதை வெளியிடுவதற்குப் பயப் படுவதில்லை. இவர்களுக்கு அந்த நம்பிக்கை இல்லை.

பொதுவெளியில் ஈன இரக்கம் இல்லாமல் வாங்கிக் கட்ட வேண்டி வரும் என்ற பயம்.

இவர்கள் எல்லாம் தாங்கள் நினைப்பதை நாங்கள் எழுத வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு இருப்பவர்கள்.

அது அவர்களுக்குப் பாதுகாப்பானது. எந்த விமர்சனங்களையும் எதிர்கொள்ளத் தேவையில்லை.

மறுபுறத்தில், பொறாமையால் மனம் புழுங்கும் இன்னொரு கூட்டம் பேஸ்புக்கில் இருக்கிறது. அதற்குக் கருத்து பிரச்சனையாக இருப்பதில்லை. ஆள் தான் பிரச்சனை.

அதன் அடிப்படை பெரும்பாலும் பொறாமையாகத் தான் இருக்கும்.

தங்களால் அவ்வாறாக கருத்துச் சொல்ல முடியாமல் இருக்கிறதே என்ற இயலாமையும், இந்தக் கருத்துக்களால் சொல்கிறவருக்குப் பெருமை கிடைத்துப் பெரிய ஆளாகி விடக் கூடும் என்ற அச்சமும் இவர்களைப் பிதற்ற வைக்கிறது.

இந்தக் கருத்துக்களுக்குப் பதில் சொல்ல முடியாத அளவுக்கு அவற்றில் எந்த தர்க்கமும் இல்லை என்றாலும், இந்த ஆளுமைகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது.

யாழ்ப்பாணிச் சமூகம் கேள்விகள் கேட்டு வளர்ந்த சமூகம் இல்லை. தான் அந்தந்தக் கணத்தில் கொண்டிருக்கும் நம்பிக்கைகளைக் கேள்வி கேட்கும் போதெல்லாம், அந்தக் கருத்துக்களை அவதூறுகள், மிரட்டலால் அடக்கலாம் என்ற நம்பிக்கை கொண்ட சமூகம்.

துரோகி என்ற கட்டமைப்பு பிரபாகரனின் துப்பாக்கிக்கு முதலே, ஜனநாயக அரசியல் காலத்திலேயே வளர்ந்த பெருமை யாழ்ப்பாணத்திற்கு உரியது.

பிரபாகரனின் துப்பாக்கி மீதான பயம் மட்டுமே ஆதரவாக வடிவம் எடுத்தது.

ஊரோடு ஒத்தோடுகின்ற செம்மறிச் சிந்தனை நிறைந்த சமூகத்தில் கருத்துச் சுதந்திரம் என்பது நாய்க்கேன் போர்த்தேங்காய் கதை தான்.

இந்தச் சமூகம் புலிக்குப் பின்னால் போன தன்னுடைய செம்மறிச் சிந்தனை குறித்து இன்றைக்கும் ஒரு விவாதத்தை ஆரம்பிக்கத் தயாராக இருக்கவில்லை. தான் கொண்டிருந்த 'சர்வதேசம் சதி செய்யாட்டி, அண்ணை அடிச்சுப் பறிச்சிருப்பார்' என்ற சிந்தனைக்கு வெளியால் இன்னமும் வரவிரும்பவில்லை.

அவ்வாறான விவாதம் ஒன்று நிகழும் போது, தன்னுடைய கருத்து நிர்வாணம் அம்பலமாகி விடும் என்ற பயத்தைத் தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை.

யுத்தம் முடிந்து இத்தனை வருடங்களின் பின்னாலும், வாய்ச்சவடால் வீரர்களை பாராளுமன்றத்துக்கும் ஜெனிவாவுக்கும் அனுப்பி தீர்வு காணலாம் என்று இன்றைக்கும் நம்பிக் கொண்டிருக்கும் இந்தச் சமூகம் அந்த நம்பிக்கை குறித்த கேள்விகளை எழுப்புவதற்குத் தயாராக இருக்கவில்லை.

சமூகத்தின் எந்த முன்னேற்றமும் தற்போதைய சிந்தனையின் மீதான கேள்விகளாலும், மனம் திறந்த உரையாடல்களாலும் மட்டுமே நிகழ முடியும்.

சர்வதேசமோ, இந்தியாவோ வாங்கித் தரும் தீர்வுப் பொதியால் அல்ல.

தீர்வு கிடைத்தால் எல்லாப் பிரச்சனைகளுக்கும் முடிவு வரும் என்று நம்புகிற சமூகம், அந்தத் தீர்வு என்பது என்ன என்பதிலேயே தெளிவு இல்லாமல் இருக்கும் போது, எப்படி முன்னோக்கி நகர முடியும்?

நான் திருப்பித் திருப்பிச் சொல்லுவது போல, இந்த யாழ்ப்பாணிச் சமூகம் மற்றவர்களுக்கு தங்கள் கருத்தோடு முரண்படும் கருத்தைக் கொண்டிருக்கும் சுதந்திரம் இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்வதிலிருந்து தான் முன்னோக்கி நகர முடியும்.

இந்தச் சமூகத்தில் தனக்கு கருத்தைச் சொல்வதற்கான சுதந்திரம் இருக்கும் என்று நம்பும் போது மட்டும் தான் மனிதர்கள் உண்மை பேச முடியும்.

இந்த உரிமை இல்லாதது மட்டுமல்ல, அதைப்

**ஊரோடு ஒத்தோடுகின்ற செம்மறிச் சிந்தனை நிறைந்த சமூகத்தில் கருத்துச் சுதந்திரம் என்பது நாய்க்கேன் போர்த்தேங்காய் கதை தான்.**

**இந்தச் சமூகம் புலிக்குப் பின்னால் போன தன்னுடைய செம்மறிச் சிந்தனை குறித்து இன்றைக்கும் ஒரு விவாதத்தை ஆரம்பிக்கத் தயாராக இருக்கவில்லை. தான் கொண்டிருந்த 'சர்வதேசம் சதி செய்யாட்டி, அண்ணை அடிச்சுப் பறிச்சிருப்பார்' என்ற சிந்தனைக்கு வெளியால் இன்னமும் வரவிரும்பவில்லை.**

**அவ்வாறான விவாதம் ஒன்று நிகழும் போது, தன்னுடைய கருத்து நிர்வாணம் அம்பலமாகி விடும் என்ற பயத்தைத் தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை.**

அபத்தம்
புரட்டாசி 2023




எழுதிய, எழுதப்பட்ட ஆளுமைகள் குறித்து மேலும் அறிந்து கொள்ளவும், அவர்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் அவர்களின் பேஸ்புக் அடையாளங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

எழுத விரும்புவோர் Read the fine print ஐ வாசிக்க..

ஆக்கங்களுக்கு ஆக்கியோர்களே பொறுப்பு. ஆயினும் அதைப் பிரசுரிப்பதற்கான பொறுப்புகளில் இருந்து அபத்தம் விலக மாட்டாது.

email: apaththam@gmail.com
www.thayagam/apaththam
www.facebook.com/apaththam

ஆசிரியர், வடிவமைப்பு
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
**Editor/Design**
**George R. Ckrhushchev**

பயன்படுத்தினால் துரோகி பட்டம் பெற வேண்டு வரும் என்ற பயம் தான், யுத்தம் முடிந்து இத்தனை வருடங்களின் பின்னாலும் இந்த அரசியல்வாதிகளை, யாழ்ப்பாணிகள் கேட்க விரும்பும் பொய்களைச் சொல்லிக் கொண்டிருக்க வைத்திருக்கிறது. இதனால் தான் வைரவருக்கு வாய்ச்ச நாய் போன்ற தலைவர்கள் யாழ்ப்பாணிகளுக்கு அருளப்பட்டிருக்கிறார்கள்.

அந்தப் பயத்தினால் தான், சமூகத்தில் நல்ல கருத்துக்களை முன்வைக்கக் கூடியவர்கள் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது.
துணிந்து கருத்துச் சொல்கிறவர்களை எந்தத் தற்குறியும் வந்து துரோகி ஆக்க முடியும். அதைக் கேட்டுக் கேள்வி இல்லாமல் நம்பும் நிலைமையில் தான் இந்தச் சமூகம் இருக்கிறது.

யாழ்ப்பாணிச் சமூகத்தின் இயல்பு இது தான் என்ற நிலையில், அந்தச் சமூகத்திலிருந்து வந்து, தங்களைப் புத்திஜீவிகள் என்று நம்பிக் கொண்டிருக்கிற மாற்றுக்கருத்தாளர்கள் மட்டும் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பார்கள் என்று எப்படி நம்ப முடியும்?
கருத்துக்களை வெளியிட முடியாத சூழலில் பத்திரிகை நடத்தியது போல, இன்றைக்கும் கருத்துக்களைச் சுதந்திரமாகச் சொல்லக் கூடிய தளம் ஒன்று அபத்தத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதைப் பயன்படுத்தாமல், பேஸ்புக்கில் போகிற போக்கில் கருத்துச் சொல்வது பலருக்கும் வசதியாக இருக்கிறது. சில லைக்குகளும், அல்லக்கைகளின் 'செமண்ணே!' களும் பல 'கருத்து முதலீட்டுவாதிகளுக்கு' நோகாமல் நொங்கு குடிக்க வசதியாக இருக்கிறது.

எந்த ஆழமான கருத்துப் பரிமாற்றங்களும் விவாதங்களும் இல்லாமல், தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிற அதே ஒத்த கூட்டத்தில் பெரிய ஆளாகப் பெருமிதம் கொள்வதைத் தவிர்த்து, பேஸ்புக் விவாதம் எதற்குப் பயன்படும்?

ஏதாவது விடயம் குறித்து கருத்துக் கந்தசாமிகள் கருத்துச் சொல்லி முடிக்க முன்பாகவே, இன்னொரு பரபரப்பு வர, கந்தசாமிகள் எல்லாம் அங்கே காவடி எடுக்கிறார்கள்,

நடக்கிற எல்லாம் குறித்து தாங்கள் கருத்துச் சொல்லாவிட்டால், கள்ள மௌனம் காக்கிறார்கள் என்ற குற்றம் சாட்டப்படும் பயம்.

அப்படி கள்ள மௌனம் சாதிப்பதாக குற்றம் சாட்டுவதே நீங்கள் தானே?
பிறகெதுக்கடா இந்தப் பயம்?

என்னுடைய அண்ணன் முறையானவர்கள் கதையொன்று சொல்வார்கள்.

தாங்கள் கிரிக்கட் விளையாடப் போன இடத்தில், இவர்களின் 'விளையாட்டு மைதானம்' இருந்த குடிசை வீடுகளில் வாழ்ந்த இருவருக்கு இடையில் சண்டை.

சண்டை நடந்த இருவருக்கும் நடந்த உரையாடல் இது.
'டேய், இங்க வாடா பாப்பம்.'
'நீ இங்க வாடா, பாப்பம்.'.
'என்னத்துக்கு?'
'அடிக்கத் தான்!'
ஆருக்கு?'
'உனக்குத் தான்!'
இதற்குள் ஒருவர் சத்தம் போட்டாராம்..
'விடடி கோமணத்தை!'.
ஏதோ இந்த மாவீரனை மனைவி 'போகாதே என் கணவா!' என்கிறாரோ என்று என் அண்ணன்மார் போய் பார்த்தபோது, மனைவியார், 'ஆரணை உம்மட கோமணத்தை இழுத்துப் பிடிச்சது?' என்றாராம்.

தர்க்க ரீதியான கேள்விகளை, ஆங்காங்கே நின்று முனங்கிக் கொள்வதாலோ, புறுபுறுப்பதாலோ, கண்டுகொள்ளாமல் கடந்து போவதன் மூலமோ...

சவால்களுக்கான பதில் களை, சவடால் விடுவதன் மூலமோ எதிர்கொள்ள முடியாது.

அப்படி, பகிரங்கமாகச் சொல்ல மாட்டோம் என்று கருத்துக்களை அடை காப்பதால், அந்த 'கருத்து முதலீடு' பல்கிப் பெருகுவதில்லை.

அழுகி மணக்கும் கூழ்முட்டையாகத் தான் முடியும்.
















# இயற்கையை மிஞ்சிய ஓவியர் இல்லை.

மாசி மாதம் குளிர்காலத்தின் இறுதி உச்சக் காலம்.

றொறன்ரோ தாவரவியல் பூங்காவில் வருடாந்த நிகழ்வாக நிகழும் ஓர்க்கிட் பூக்களின் கண்காட்சி. கோவிட் காலத்தின் பின்பாக திரும்பவும் ஆரம்பித்திருக்கிறது.

வழமை போல, கனரக ஆயுதங்களுடன், நேர காலத்துடன் ஆரம்பிக்கும் பெருவரிசையில் குளிரில் நின்று, டிக்கட் வாங்கிப் பார்க்கும் கண்காட்சி.

அதில் பெரும்பாலோர் இவற்றை வளர்ப்போரும், வாங்க வருவோரும், அழகை ரசிக்க வருவோரும்.

கைபேசிப் புகைப்படப் பிடிப்பாளரர்களோடு மல்லுக் கட்டி, என்னைப் போல, சில ஆர்வக்கோளாறுகள் பெரிய செட்டப்புகளுடன் அல்லல் படுவதுண்டு. இதற்காக உதவி யாளர்கள், கமெரா முக்காலி, பெருவெளிச்சத் துணைகளோடு ஒரு பூவைப் படம் பிடிக்க, முக்கால் மணி நேரம் எடுப்போரும் உண்டு.

நான் கமாண்டே ஸ்டைல்.

அல்லது தமிழ் சினிமா ஹீரோ ஸ்டைல்.

வந்தமா? கையில் இருப்பதை வைத்துச் சுட்டுத் தள்ளினமா? வெற்றிகரமாகப் பின்வாங்கினமா? ரகம்.

(ஒற்றை விரலால் நான் நெற்றி வியர்வையைத் துடைப்பதில்லை!)

ஒரு ரவுண்ட் ஒரு மக்ரோ லென்ஸோடு வந்து, இன்னொரு ரவுண்டு இன்னொரு லென்ஸோடு வந்து...

எதையும் தவற விடக் கூடாது என்ற எண்ணம்.

கனடியக் குளிருக்குள் இதையெல்லாம் கவனமாக வளர்த்து பூக்க வைக்கும் ஆர்வலர்களை வியக்காமல் இருக்க முடிவதில்லை.

இந்த அழகை ரசிக்கும் போதெல்லாம், நான் அவதானிப்பது

அந்த வண்ணங்களின் சேர்க்கை.

வடிவமைப்பில் எனக்கு ஆர்வம் தோன்றிய நாட்களிலிருந்து, இன்னொரு தடவை திரும்பிப் பார்க்க வைக்கும் வண்ணங்களை, ஒரு தடவை பார்த்து, ஏன் இந்த வண்ணச் சேர்க்கை என் மனதைக் கவர்கிறது என்று முடிவு காணத் தோன்றும்.

அதையெல்லாம் என் வடிவமைப்புகளில் எங்கோ பயன்படுத்த இந்த வண்ணச் சேர்க்கைகள் காரணமாகி விடுகின்றன.

அழகு என்பதில் மயங்குவதை விட, அந்த மயங்க வைப்பதற்கான காரணத்தைத் தேடுவதே எனக்குப் பழக்கமாகியும் விட்டது.

சந்திர வதனங்களைக் காணும் போதும், ஜொள்ளு விடாமல் இருப்பதற்கான காரணம் அதுவாக இருக்கக் கூடும்.

செந்தளிப்பான முகம் என்று இன்னொரு தடவை திருட்டுத் தனமாகப் பார்த்து விட்டுக் கடந்து போக முடிகிறது.

இயற்கையின் படைப்புகளின் அற்புதங்களில் மேலெழுந்த வாரியான அழகை மட்டுமல்லாமல், அந்தப் படைப்புகளில் உள்ள கணித, விஞ்ஞான ரீதியான நேர்த்தி தான் இன்னும் பிரமிப்பு ஊட்டுவது.

வெறுமனே ஒரு பூவின் அழகை விட, அது இனப்பெருக்கத்திற்கான ஒரு ஆரம்பப் புள்ளியாக அமைவதற்கான அதன் அமைப்பு முறையை விஞ்ஞானரீதியாகப் பார்க்கும் போதும், அதன் இதழ்கள் வடிவம் கொள்வதன் கணிதரீதியான சமன்பாடுகளையும் அறிந்து கொள்ளும்போது, இயற்கை எதையெல்லாம் யோசித்து இதைப் படைத்திருக்கிறது என்று வியந்து நிற்க வேண்டி வருகிறது.

ஓர்க்கிட் பூக்கள் அவற்றில் பல்வேறு பிராணிகளின் தோற்றத்தைப் பெற கூர்ப்பு எப்படி வழி வகுத்திருக்கிறது?

இயற்கை புரிந்து கொள்ள முடியாத மர்மம் தான்.

ஆனால், நீங்கள் பேஸ்புக்கில் பல தடசைவகள் காணும் பிராணிகளை ஒத்த ஓர்க்கிட் பூக்கள் பல போட்டோஷொப் பண்ணியவை என்பதையும் நினைவில் கொள்க.















# ரொரண்டோவில் தமிழர் தெருக் கொண்டாட்டங்கள்.

கந்தையா மனோகரன்



ரொரண்டோ தமிழர்களிற்காகச் செயற்பட்டு வரும் அமைப்புக்களாக தம்மை முன்நிறுத்தும் சில அமைப்புக்கள் இவ்வாறான நிகழ்வை ஒழுங்கமைத்துச் செயற்படுத்தி வருகிறார்கள். இதில் வருடாவருடம் கோடை காலத்தில் ‘நட்சத்திர விழா’, ‘Taste of Tamil'. ‘தமிழர் தெருவிழா’ என்று நடத்தப்பட்டு வருகின்றன.

வெயில் காலத்தில் வீடு களுக்குள் அடைந்து கிடக்கும் வயோதிபர்களையும் குழந்தை களையும் அழைத்துக் கொண்டு பொழுது போக்கவும் களிப்படைய வைக்கவும் சிறந்த இடங்களாக இருப்பதால் பெருமளவு தமிழர்கள் கூடும் இடங்களாக இவை இருக்கின்றன.

நெருக்கடிகளும் பணச்சிக்கல்களும் மனவுளைச்சல்களும் ஒன்று சேர்ந்த வாழ்விற்குள் வாழும் மக்களிற்கு இவ்வாறான நிகழ்வுகள் சிறிய ஆறுதலையாவது கொடுக்கும் என்பது உண்மையே. ஆனால் இவற்றை ஒழுங்கமைப்பவர்கள் அதிகமாக வணிகரீதியான அணுகு முறையிலேயே அனைத்தையும் அணுகிச் செயற்படுத்துவதால் மிகப்பெரிய பாதிப்பினை எதிர காலத்தில் இந்த சமூகம் நிச்சயம் எதிர் கொள்ளும். அதனை சம்பந்தப்பட்ட ஒழுங்கமைப்பாளர்கள் கவனித்தே யாகவேண்டும்.

வணிகரீதியாக பணத்தினைக் கவனித்து அங்கே கடை விரிக்க நீங்கள் உரிமம் கொடுக்கப்படுபவர்களில் அதிமுக்கியமாக நீங்கள் கவனிக்கவேண்டியது மதம் சார்ந்த அமைப்புக்கள் குறித்தே. இந்த முறை நீங்கள் நித்தியானந்தா ஆச்சிரமத்தாருக்கும் மற்றும் ‘பிரம்ம குமாரிகள் ராஜயோகம்’ போன்றவர்களுக்கும் ஒரு கடை விரிக்க இடம் கொடுத்திருக்கிறீர்கள். இங்கே எமக்கிருக்கும் ஒரு கேள்வி, நாளை ஞானசார தேரர் தமிழ் மக்கள் பௌத்தத்தில் இணைகிறார்கள் என்று சொல்லி தமிழ் பௌத்தம் பேச உங்கள் தெருவிழாவில் இடம் கேட்டால் என்ன செய்வீர்கள்? அப்படி இடம் கொடுத்தால் நீங்கள் பேசும் அரசியலுக்கும் அதற்கும் சம்பந்தம் இருக்குமா?

ஆன்மீகம், யோகாசனம், தியானம் என்று தமிழர்களின் பணத்தைச் சுரண்ட சூழ்ந்தெழுந்து இருக்கும் ஆசாமிகள் ஆயிரமாயிரம். அதன் பிறகு பங்காரு அம்மா, மேல் மருவத்தூர், கட்டிப்பிடி அம்மா, மதம் சார்ந்த கடைவிரிப்புக்களுக்கு இடம் கொடுத்தால் நாளை விழா செய்வதற்கு அரசினால் உங்களுக்கு ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்ட தெருவின் அளவிற்குள் சாப்பாட்டுக் கடைபோடுவதற்கே இடம் இல்லாது வரும்.

Tamil Fest
தமிழர் தெரு விழா


அப்பொழுது என்ன செய்வீர்கள்? இந்தத் தமிழ்ச் சமூகத்திற்குள். அவ்வளவு வகையான மதங்கள் இருக்கின்றன. தமிழ்ச் சமூகம் மீதான அக்கறை இருந்தால் முதலில் மதங்களை முன்நிறுத்திச் செயற்படுவதை நீங்கள் மறுதலிக்க வேண்டும். உங்களிடம் சமூகம் சார்ந்த அரசியற் சிந்தனை இல்லைத்தான். ஆனால் மக்களின்

எதிர்காலம் மீதான அக்கறையாவது கொஞ்சம் இருக்க வேண்டும். அதுவும் இல்லை என்றால்? நீங்கள் எதற்கு?

தமிழ்ச் சமூகமாக நமக்குள் இருக்கும் கலைஞர்களை நாங்கள் தானே கண்டு கொள்ள வேண்டும். ஆதரவு கொடுக்க வேண்டும். பொது வெளிக்குக் கொண்டு வரவேண்டும். அதனை விடுத்து தமிழ்நாட்டில் உள்ள தொலைக்காட்சி நிகழ்சியிற்குச் சென்று பாடிய பின்பு ஒருவரை உங்கள் மேடையில் ஏற்றிப் பாடவைத்தும் அதனைக் கொண்டு பணம் சம்பாதிக்க நினைப்பதும் கேவலமான நிலை. இதனைத்தான் நீங்கள் தொடர்ந்து செய்து வருகிறீர்கள். இதனை இனிவருங்காலங்களில் மாற்றி நமது கலைஞர்களை இனியாவது கண்டு கொண்டு வாய்ப்பளியுங்கள். இதற்குள் தமிழ்நாட்டுத் தொலைக்காட்சிப் போட்டியில் பாடிவரும் 'அசானி' என்ற அந்த மலையகப் பிள்ளையை வைத்து ஒருவன் உண்டியல் குலுக்க இடம் கொடுக்கிறீர்கள் உங்கள் தெருவிழாவில்.

இது என்ன வகையான பிழைப்பு?

இனிவருங் காலங்களிலாவது கொஞ்சமேனும் சிந்தித்துச் செயற்படுங்கள். சரி உங்களுக்குத்தான் சிந்திக்கும் செயற்திறன் இல்லாது போனால் அதற்கான ஒரு அறிவு சார்ந்த குழுவையாவது வைத்து நிர்வகிக்க முயற்சிகளைச் செய்யுங்கள். புத்திமதி கேளுங்கள். தனியே பணம் பண்ணுவதுதான் நோக்கம் எனில் தமிழ் மக்கள் என்ற அடையாளத்தை விட்டுத் தொலையுங்கள்.





மதங்களேயற்ற தமிழர் வரலாறு என்று கடந்த காலங்களில் கீழடி ஆய்வுகளை மேற்கோள் காட்டி தெருவிழாவில் கண்காட்சி வைக்கிறீர்கள். பிறகு ஆன்மீகம் என்ற பெயரில் உலாவும் மத மோசடிக்காரரர்களுக்கும் இடம் கொடுக்கிறீர்கள்.

உங்கள் நோக்கம் என்ன? அ

**ஆன்மீகம், யோகாசனம், தியானம் என்று தமிழர்களின் பணத்தைச் சுரண்ட சூழ்ந்தெழுந்து இருக்கும் ஆசாமிகள் ஆயிரமாயிரம். அதன் பிறகு பங்காரு அம்மா, மேல் மருவத்தூ ர், கட்டிப்பிடி அம்மா, மதம் சார்ந்த கடைவிரிப்புக்களுக்கு இடம் கொடுத்தால் நாளை விழா செய்வதற்கு அரசினால் உங்களுக்கு ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்ட தெருவின் அளவிற்குள் சாப்பாட்டுக் கடைபோடுவதற்கே இடம் இல்லாது வரும்.**


படம் ஜோர்ஜ் இ.

# ஈழப் போர்க்கால நாவல்களில் பயங்கரவாதியின் இடம்

1983 ஜூலை 23 இல் நிகழ்ந்த கறுப்பு ஜூலை எனக் குறிக்கப்படும் பெருநிகழ்வு ஈழப்போராட்டத்தில் ஒரு தொடக்கம். அந்த நிகழ்வே ஆயுதப் போராட்த்தை தனி ஈழத்துக்கான பாதை என்பதாக அறிவிக்கச் செய்தது. அந்தத் தொடக்கத்திற்கு வயது 40. ஆனால் ஆயுதப்போராட்டம் முள்ளி வாய்க்கால் பேரழிவோடு நிறைவுபெற்றது. தனித்தமிழ் ஈழத்துக்கான ஆயுதப் போராட்டத்தைக் கடைசிவரை நடத்திய விடுதலைப்புலிகள், ஆயுதங்களை மௌனித்துக் கொள்வதாக அறிவித்த நிகழ்வு முள்ளிவாய்க்கால் பேரழிவாகச் சுட்டப்படுகிறது.

அந்த நாள் மே,18. 2009.

இந்த 40 ஆண்டு கால வரலாறை எழுதுவதற்கான சான்றுகளை வரலாற்றாய்வாளர் ஒருவர் தேட நினைத்தால் எல்லாத்தரப்புப் பார்வைகளுக்குமான சான்றுகள் கிடைக்காது. ஒரு பக்கச் சான்றுகளே, அரசின் ஆவணங்களே கிடைக்கும். அரசின் ஆவணங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள குறிப்புகள் முழுமையான சான்றுகளாக ஆகமுடியாது எனக் கருதும் ஆய்வாளருக்குப் பெரிய அளவுக்கு எதிர்த்தரப்பு ஆவணங்களும் பதிவுகளும் கிடைக்க வாய்ப்பில்லை.

**அந்த நாள் மே,18. 2009.**

**இந்த 40 ஆண்டு கால வரலாறை எழுதுவதற்கான சான்றுகளை வரலாற்றாய்வாளர் ஒருவர் தேட நினைத்தால் எல்லாத்தரப்புப் பார்வைகளுக்குமான சான்றுகள் கிடைக்காது. ஒரு பக்கச் சான்றுகளே, அரசின் ஆவணங்களே கிடைக்கும்.**

ஏனென்றால், எல்லா சான்றுகளும் அழிக்கப்பட்டு விட்டன.

நான் இரண்டு முறை இலங்கையில் தமிழ் பேசும் மனிதர்கள் வாழும் பகுதிகளுக்குப் போயிருக்கிறேன். 2016 இல் தமிழர்கள் வாழும் பெரு நகரங்களுக்கும் போய் இருக்கிறேன். மட்டக்களப்பிலும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களுக்கும் சென்றதுண்டு. விடுதலைப்புலிகள் வசம் இருந்த கிராமங்கள், பயிற்சி முகாம்கள் போன்றனவற்றைப் பார்த்திருக்கிறேன். கிளிநொச்சி யிலும் யாழ்ப்பாணத்திலும் சில நாட்களைச் செலவிட்டிருக்கிறேன். போரில் பங்கேற்றவர்களோடும்

அ.ராமசாமி

பாதிக்கப் பட்டவர்களோடும் உரையாடியிருக்கிறேன்.

2019:ல் கொழும்பு தொடங்கி, கண்டி, மலையகம், சப்ரகமுவ, திரிகோணமலை, மட்டக்களப்பு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா எனப் பயணித்த நாட்கள் 20. இம்முறை அதிகமாகக் கிராமப்பகுதிகளைப் பார்த்தேன். முதலாவது பயணத்தில் நான் பார்த்த அழிவுகளும் சிதிலங்களும் இரண்டாவது பயணத்தில் பார்க்கக் கிடைக்கவில்லை. குறிப்பாகப் புலிகளின் அரசாங்கம் செயல்பட்ட கிளிநொச்சிப் பகுதி முழுமையாக மாறியிருக்கிறது. இலங்கை அரசு மறுசீரமைப்பு, பொருளாதார உதவிகள் என்ற பெயரில் போர்க்காலச் சான்றுகள் எதுவும் இல்லாமல் அழித்திருக்கிறது.

இதைச் சொல்லும்போது நான் இரண்டு ஆண்டுகள் (2011: 2013) தங்கியிருந்த வார்சாவில் இரண்டாம் உலகப்போரின் அழிவுகளும் சிதிலங்களும் அப்படியே அழிக்கப்படாமல் இருப்பதைப் பார்த்தேன் என்பதை நினைவுபடுத்திக் கொள்கிறேன். ஐரோப்பாவின் பல நகரங்களில் இரண்டு உலகப்போர்களில் ஏற்பட்ட அழிவுகள் வரலாற்றுச் சான்றுகளாக அருங்காட்சியகங்களில் இருக்கின்றன என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

தனி ஈழத்துக்கான போராட்டங்கள், போர் நிகழ்வுகள் சார்ந்த சுவடுகளும், பதிவுகளும் அழிக்கப்பட்ட நிலையில் அந்த வரலாறை எழுதுவது எப்படி? இந்த பெரும் நிகழ்வை எப்படி மீளுருவாக்கம் செய்வது?

அதற்கு முதன்மையான சான்றுகளாக இருக்கக்கூடியவை பேச்சுகளும் எழுத்துகளும்தான். போர்க்காலத்தில் போர்க்களத்தில் வாழ்ந்தவர்களின் நினைவுகளைப் பதிவுசெய்து தொகுத்துக் கொண்டு ஒரு வகை வரலாற்றை உருவாக்கலாம். அத்தோடு திரள் மக்களின் வாய்மொழிப்பாடல்கள், கதைகள், நிகழ்த்துக்கலைகளுக்கான கதைப்பாடல்கள் போன்றவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். இவையெல்லாம் சொல்பவர்களின் கோணத்தை மட்டுமே தரக்கூடியன.

அவற்றைத் தாண்டிப் போர்க்காலத்தை எழுதிக் காட்டிய இலக்கியப்பனுவல்கள் முதன்மையான சான்றுகளாக இருக்கமுடியும். அதிலும் குறிப்பாக நாவல் இலக்கியங்கள் விரிவான பார்வைகளையும் தரவுகளையும் தரக்கூடிய வடிவம். ஏனென்றால் நாவல் என்பது ஒரு பெரிய இலக்கிய வடிவம். காலம், வெளி, பாத்திரங்கள் என்ற மூன்றிலும் அளவில், எண்ணிக்கையில் பெரியதைக் கோரும் வடிவம்.

ஒரு கவிதை ஒரு மனித உயிரியின் உணர்ச்சி வெளிப்பாட்டை மட்டும் தான் காட்டும். சிறுகதைகள் சின்னச் சின்ன நிகழ்வுகளை மட்டும் தான் சொல்லி இருக்கும். அந்நிகழ்வுக்கான காலம், வெளி ஆகியவற்றில் பெரிய கவனத்தைச் செலுத்தியிருக்காது.


ஆனால் ஆனால் வரலாறு காலத்தையும் நிகழ்வின் வெளிகளின், பரப்பின் பின்புலத்தோடு விவரிப்பது. அதற்குப் பயன்படக்கூடியது நாவல் வடிவமே.

இரண்டு உலகப்போர்களின் சூழலை விவரிக்கப் பல நாவல்கள் பயன்பட்டுள்ளன.

சோவியத் யூனியனில் நடந்த புரட்சியை பேசுவதற்கு ரஷிய நாவல்கள் பயன்பட்டுள்ளன. அதேபோல் பல நாடுகளில் பெரும் நிகழ்வுகளை: குறிப்பாக யுத்தம் சார்ந்த பெரும் நிகழ்வுகளை :அதில் ஈடுபட்ட :பாதிக்கப்பட்ட மனிதர்களின் எண்ணங்களை நாவல்களின் பாத்திரங்கள் தந்துள்ளன,அப்படி பதிவு செய்கிற நாவல்களை வைத்துக்கொண்டு வரலாற்றை கட்டமைக்க முடியும். தமிழ் நாட்டின் வரலாற்றை எழுதுவதற்கே வெவ்வேறு காலகட்டத்து இலக்கியங்கள் பயன்பட்ட தைக் காண்கிறோம். சங்க கால வரலாறு செவ்வியல் கவிதைகள் வழியாகவே கண்டறியப்பட்டது என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

**தனி ஈழத்துக்கான போராட்டங்கள், போர் நிகழ்வுகள் சார்ந்த சுவடுகளும், பதிவுகளும் அழிக்கப்பட்ட நிலையில் அந்த வரலாறை எழுதுவது எப்படி? இந்த பெரும் நிகழ்வை எப்படி மீளுருவாக்கம் செய்வது?**

**அதற்கு முதன்மையான சான்றுகளாக இருக்கக்கூடியவை பேச்சுகளும் எழுத்துகளும்தான். போர்க்காலத்தில் போர்க்களத்தில் வாழ்ந்தவர்களின் நினைவுகளைப் பதிவுசெய்து தொகுத்துக் கொண்டு ஒரு வகை வரலாற்றை உருவாக்கலாம். அத்தோடு திரள் மக்களின் வாய்மொழிப்பாடல்கள், கதைகள், நிகழ்த்துக்கலைகளுக்கான கதைப்பாடல்கள் போன்றவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். இவையெல்லாம் சொல்பவர்களின் கோணத்தை மட்டுமே தரக்கூடியன**




போர்க்கால நாவலாசிரியர்கள்

2016 இல் கனடாவின் யார்க் பல்கலைக்கழகத்தில்‘ ஈழம்:போரும் போருக்குப்பின்னும்: அண்மைப் புனைகதைகளை முன்வைத்து’ என்றொரு கட்டுரை எழுதினேன். அதற்காகப் பின்வரும் நாவல்களை வாசித்தேன்.

1. விமல் குழந்தைவேல்: கசகறணம்(2011)

2. சயந்தன் : ஆறாம்வடு (2012)

3. தமிழ்க்கவி : ஊழிக்காலம் (2013)

4. ஸர்மிளா ஸெய்யித் : உம்மத், (2013, 2015)

5. குணா கவியழகன்: நஞ்சுண்ட காடு (2014)

6. தேவகாந்தன்: கனவுச்சிறை (2014)

7. சயந்தன் : ஆதிரை (2015)

8. சாத்திரி : ஆயுத எழுத்து (2015)

9. குணா கவியழகன்:விடமேறிய கனவு (2015)

10. சோபா சக்தி : Box கதைப்புத்தகம் (2015)

11. சேனன் : லண்டன்காரர் (2015)

12. குணா கவியழகன் : அப்பால் ஒரு நிலம் (2016)

அதற்குப் பின்னும் பலரது நாவல்களை வாசித்துள்ளேன் இப்போதும் வாசித்துக் கொண்டிருக்கிறேன். அவற்றில் பலவும் புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் நாவல்களாக இருக்கின்றன. வெற்றிச்செல்வி, தமிழ்நதி, தமிழினி, தீபச்செல்வன், ஈழவாணி, தாமரைச்செல்வி, நோயல் நடேசன், ஆ.சி.கந்தராஜா, வாசு.முருகவேல், விஜிதரன், ரவி, மாஜிதா, சித்தார்த்தன் என நீளும் பட்டியலில் வெற்றிச்செல்வி,தமிழினி போன்ற ஒன்றிரண்டு பேர்களே புலம்பெயராது ஈழப்பகுதியிலே இருப்பவர்கள்.

எனது பார்வைக்கு வராத நாவலாசிரியர்களின் நாவல்களும் இருக்கக்கூடும் இந்த நாவல்களை வாசித்தால், போர்க்காலத்தைப் பற்றிய நினைவுகளுக்குள் அமிழ்ந்து போகும் மனிதர்களைச் சந்திக்க முடியும். அவர்களின் இடப்பெயர்வுகளையும் வலிகளையும் மரண ஓலங்களையும் கையறு நிலையையும் அறியமுடியும். ஆனால் வரலாற்றை எழுத வேண்டும் என்கிற நோக்கத்தோடு வாசிக்கும் ஆய்வாளர் இவ்வகை உணர்ச்சிகளை வாசிப்பதோடு, எழுதிய நபருடைய நோக்கம் என்ன? அவருக்குள் வெளிப்படும் சார்பு என்ன? எவ்வகையான நிகழ்வுகளைக் கவனப்படுத்துகிறார்? எவ்வகையான மனிதர்களைத் தேர்வு செய்து எழுதுகிறார் என்று கவனித்து வாசிக்கவேண்டும்.

இந்த நாவல்களை வாசிக்கும் ஒருவருக்கும் ஈழப்போர் சார்ந்து வேறுவேறு கோணங்கள் இருந்தன, அவரவர் கோணத்தில் நாவல்கள் எழுதப்பெற்றன என்பது புரியவரலாம். போரையும் போர்க்காலத்தையும் எழுதியுள்ள தன்மையை முன்வைத்து நாவலாசிரியர்களையும் நாவல் களையும் வகைப்படுத்தலாம்.

1. போர்க்காலத்தில் நிலத்தில் இருந்து போரில் பங்கேற்று நேரடி அனுபவம் பெற்றவர்களின் நாவல்கள். இந்நாவல்களில் சொல்முறைமையில் ஒருவிதத்தன்மை கூற்று முறை வெளிப்பட்டுள்ளன

2. போரையும் போர்க்காலத்தையும் அண்மையிலிருந்து பார்த்து அல்லது பங்கேற்று விலகிவந்து தொடரும் நினைவுகளை முன்வைக்கும் மொழிதல் தன்மையில் எழுதப்பெற்ற நாவல்கள். இவ்வகை நாவல்களின் சொல்முறைமையில் முன்னிலைக்கூற்றும் படர்க்கை கூற்று முறைமையும் கலந்து காணப்படுகின்றன.

3. மூன்றாவது வகையான முழுமையும் போரைப் படர்க்கை நிலையில் விவரித்துச் சொல்லும் விலகல் தன்மை கொண்ட நாவல்கள்.

4. ஆயுதப்போர் ஆதரவு நிலைபாட்டில் முழுமையாக விடுதலைப்புலிகளின் சார்பாக நின்று பேசும் நாவல்கள் என்பன நான்காவது வகை.

எழுத்து வெளிப்பாடு என்பது எப்போதும் ஒருவிதச் சார்போடுதான் இருக்கும். சிலரது எழுத்தில் வெளிப்படையான சார்பும், சிலரது எழுத்துகளில் மறைமுகமான சார்பும் இருக்கும்.

தீபச்செல்வனின் கவிதைகள் பெரும்பாலும் ஆயுதப்போரைத் தவிர்க்கமுடியாத ஒன்றாகவே முன்வைத்துள்ளன. ஈழத்தமிழர்கள் மேல் ஆயுதப்போர் திணிக்கப்பட்ட ஒன்று என்ற நிலைப்பாட்டில் நின்று எழுதியவர். அதே நிலைபாட்டையே அவரது புனைகதைகளிலும் வாசிக்க முடிகிறது. அத்தோடு போரை முன்னின்று நடத்தும் வல்லமையும் திறனும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு மட்டுமே இருந்தது என்ற நம்பிக்கை கொண்டவராக வெளிப்பட்டுள்ளார்.

**தீபச்செல்வனின் கவிதைகள் பெரும்பாலும் ஆயுதப்போரைத் தவிர்க்கமுடியாத ஒன்றாகவே முன்வைத்துள்ளன. ஈழத்தமிழர்கள் மேல் ஆயுதப்போர் திணிக்கப்பட்ட ஒன்று என்ற நிலைப்பாட்டில் நின்று எழுதியவர். அதே நிலைபாட்டையே அவரது புனைகதைகளிலும் வாசிக்க முடிகிறது. அத்தோடு போரை முன்னின்று நடத்தும் வல்லமையும் திறனும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு மட்டுமே இருந்தது என்ற நம்பிக்கை கொண்டவராக வெளிப்பட்டுள்ளார்.**



தீபச்செல்வனின் நிலைப் பாட்டையொத்த பார்வையோடு புனைகதைகளில், நாவலில் இயங்கியவர்களாக சிலரை அடையாளப்படுத்த முடியும். குணா கவியழகன், வெற்றிச்செல்வி, தமிழ்நதி, தமிழ்க்கவி, தமிழினி என நீண்டு தீபச்செல்வன் வரை வருகிறது. இவர்களின் புனைவுக்குள் கிடைக்கும் ஈழ யுத்தம், அதனுடைய தேவை, தனி நாடு, அதற்கான நெருக்கடி, ஒரு மொழியின் பெயரால், இனத்தின் பெயரால், ஒரு பெரும்பான்மை அரசு நடத்திய கொடூரம் என எழுதும்போது ஒருவித ஆவணத்தன்மையைக் கொடுக்கிறார்கள். ஈழப்போரில் முள்ளிவாய்க்கால் என்கிற பேரவலம் 2009இல் நடந்து முடிகிறது.

தீபச்செல்வனுடைய இரண்டாவது நாவலான பயங்கரவாதி. முள்ளிவாய்க்காலில் பெரும் கூட்டமாக கொலைகள் நடக்கின்றன அதே நேரத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் என்ன நடந்தன என இரண்டையும் இணையாக வைத்துப் பேசுவதோடு முடிகிறது. நாவலின் தொடக்கம் அங்கிருந்து 4 ஆண்டுகள் முன்னே நகர்ந்து செல்கிறது. 2005 லிருந்து 2009 வரைக்கும் ஈழ யுத்தத்தினுடைய ஒருவித சாட்சியமாக நாவல் வடிவம் கொண்டுள்ளது.

நாவல் என்பது எப்போதுமே நேரடியாக எல்லா உண்மைகளையும் சொல்வதல்ல. அது ஒருவிதப் புனைவுக்கலை. அதே நேரம் மொத்தமும் புனைவாகவும் இருந்துவிடுவதில்லை. உண்மையையும் புனைவையும் கலப்பது தான் நாவலாசிரியரின் வித்தை.

அந்த வித்தையைத் தீபச்செல்வன் எப்படி செய்து இருக்கிறார்? என்பதைக் கவனித்துச் சொல்வதே எனது முதன்மையான நோக்கம். அவரது அரசியல் சார்பும் நிலைப்பாடுகளும் சரியா? என்ற விவாதங்களுக்குள் செல்லப்போவதில்லை. இலக்கிய ஆய்வில் அது தேவையற்றதும் கூட. எழுத நினைத்த கோணத்தையும் ஆதரவையும் கலையியல் சார்ந்து தருவதில் சரியாகச் செய்கிறாரா என்பதைச் சொல்வதே இலக்கியத்திறனாய்வின் பணி என நினைக்கிறேன்.

### ஆவணப்புனைவு

ஆங்கிலத்தில் Docu-fiction என்றொரு கலைச்சொல் உண்டு. தமிழில் ஆவணப்புனைவு எனச் சொல்லலாம். இதற்குள் ஆவணத்தின் கூறுகளும் இருக்கின்றன புனைவுத்தன்மையும் இருக்கிறது என்பதைக் குறிக்கும் கலைச்சொல்.

இதனைக் கொண்டுவருவதிற்குத் தீபச்செல்வன் கையாண்டுள்ள உத்தி முக்கியமான ஒன்று, நாவலின் நிகழ்வு வெளியாக இருப்பது யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம். அதில் நாவலின் காலமான 2005 முதல் 2009 வரை மாணவர்களின் செயல்பாடுகள் குறித்த ஆவணங்கள் இருக்கும் இப்போதும் போய் பார்க்கலாம், அங்கு நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய குறிப்புகள் எல்லாம் பல்கலைக்கழக ஆவணங்களில் இருக்கும். அதனை யாரும் மாற்றியிருக்க வாய்ப்பில்லை அங்கு நடந்த மாணவர் தேர்தல், கலைநிகழ்ச்சிகள், சட்ட எல்லைக்குள் நடந்த போராட்டங்கள், உண்ணா நோன்புகள், ராணுவத்தின் நுழைவு, துணைவேந்தரின் அதிகாரம் சார்ந்து எடுத்த முடிவுகள் என அவற்றை இப்போதும் பெற்றுக்கொள்ள முடியும். அந்த ஆதாரங்களை நேரடிக் காட்சியாக மையப்பாத்திரமான மாறனின் பார்வையில் தருகிறார்.

ஒரு நாவலுக்கு முதன்மையான மூன்று கூறுகள் உண்டு காலம், வெளி, பாத்திரங்கள் என்பன. இம்மூன்றில் காலத்தை உண்மைக் காலமாக்கும்போது நாவலின் நிகழ்வுகளுக்கு ஒருவித நம்பகத்தன்மையைத் தரவேண்டிய நெருக்கடி நாவலாசிரியருக்கு ஏற்படும்.

**எஒரு நாவலுக்கு முதன்மையான மூன்று கூறுகள் உண்டு காலம், வெளி, பாத்திரங்கள் என்பன. இம்மூன்றில் காலத்தை உண்மைக் காலமாக்கும்போது நாவலின் நிகழ்வுகளுக்கு ஒருவித நம்பகத்தன்மையைத் தரவேண்டிய நெருக்கடி நாவலாசிரியருக்கு ஏற்படும்.**

**அதேபோல் நாவலுக்குள் உருவாக்கப்படும் வெளியை இருக்கும் வெளியாகச் சித்திரித்து விட்டால், அந்த நம்பகத்தன்மை இன்னும் கூடுதல் அர்த்தம் கொண்ட தாக மாறிவிடும். அதே நேரம் பாத்திரங்களை உண்மைப் பாத்திரங்களாக எழுதினால் அந்நாவல் தன்வரலாற்று நாவல் அல்லது வரலாற்று நாவலாகக் கருதப்படும் வாய்ப்பு ஏற்படும்.**

அதேபோல் நாவலுக்குள் உருவாக்கப்படும் வெளியை இருக்கும் வெளியாகச் சித்திரித்து விட்டால், அந்த நம்பகத்தன்மை இன்னும் கூடுதல் அர்த்தம் கொண்ட தாக மாறிவிடும். அதே நேரம் பாத்திரங்களை உண்மைப் பாத்திரங்களாக எழுதினால் அந்நாவல் தன்வரலாற்று நாவல் அல்லது வரலாற்று நாவலாகக் கருதப்படும் வாய்ப்பு ஏற்படும்.

அதைப் பெரும்பாலான சமூகப் புனைகதை எழுத்தாளர்கள் செய்வதில்லை. தீபச்செல்வனும் அதைச் செய்யவில்லை. பாத்திரங்களைப் புனைவுப் பாத்திரங்களாகவே உருவாக்கி யிருக்கிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற உண்மையான வெளியைக் கொண்ட பயங்கரவாதி நாவலின் காலமான நான்காண்டுகள் ஒருவருடைய பட்டப் படிப்புக் காலம். இந்த நாலாண்டுகளில் இந்த வளாகத்தில் என்ன நடந்தது? வளாகத்தில் தங்களுடைய உரிமைகளுக்காக போராடிய மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு வெளியே இருந்து இயங்கிய ராணுவ அதிகாரிகள் ‘பயங்கரவாதிகள்’ என்று சொன்னார்கள். ஆனால் மாணவர்கள் அவர்களுடைய உரிமைகளுக்காக போராடினார்கள் அவர்களுடைய வளாக எல்லைக்குள் இருந்து போராடினார்கள் என வளாக நிகழ்வுகளையும், மாணவர்களாக யாழ் நகருக்குள் செயல்பட்ட விதத்தையும் விவரித்துக் காட்டுகிறது.

உண்மை வெளியான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் போராட்டம் நடந்த அதே காலகட்டத்தில் இயக்கம் (விடுதலைப்புலிகள்) கிளிநொச்சிப் பகுதியில் போராடிக் கொண்டிருந்தார்கள். அரசாங்கத்தைக் கட்டி யெழுப்பினார்கள். நிர்வாகம் செய்தார்கள். இலங்கை அரசுக்கு வேறுநாடுகளின் உதவிகள் கிடைத்த நிலையில் இறுதிப்போரில் பின்வாங்கினார்கள் என்பதை

இணையாக வைக்கிறது நாவல். நேரடி காட்சிகளாக இருப்பது முழுவதும் யாழ்ப்பாண பல்கலைகழக வளாகம்தான், இதுவே நாவலுக்கான இடப்பின்புலம், ஆனால் அந்தப் பின்புலத்தில் வரக்கூடிய மனிதர்கள். கதாபாத்திரங்கள் எல்லாம் தேர்வுசெய்த பாத்திரங்கள். அந்தப் பாத்திரத்தேர்வைத் தீபச்செல்வன் எப்படிச் செய்துள்ளார் என்பது கவனிக்கத்தக்கதாக இருக்கிறது.

### வகைமாதிரிப்பாத்திரங்கள்

புனைகதைகளில் உருவாக்கப்படும் பாத்திரங்களை நான்கு வகையான பாத்திரங்களாகச் சொல்லுவார்கள். நடப்பியல் (Realistic) பாத்திரம், குறியீட்டுப் (Symbolic) பாத்திரம், வகைமாதிரிப்பாத்திரம் (typed character), பிரதிநிதித்துவப் (Representative) பாத்திரம் என்பன அவை.

இந்நான்கு வகைப்பாத்திர உருவாக்கத்திற்கும் புனைகதை ஆசிரியர்களுக்குத் தனித்தனி நோக்கங்கள் உண்டு. எழுத்தாளர் உருவாக்கும் புனைவுக்குள் இருக்கும் சமூகத்தில் இருக்கக்கூடிய வெவ்வேறு விதமான மனிதர்களுடைய போக்குகளுடைய வகைமையில்: சாயலில் அந்தப் பாத்திரங்கள் இருக்கும்.

இந்நான்கு வகையான பாத்திரங்களில் தீபச்செல்வனின் நாவலில் வரும் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் வகைமாதிரிப் பாத்திரங்களாக இருக்கின்றன. நாவலில் வெவ்வேறு வகையான வகைமாதிரிகளை அவர் உருவாக்கியுள்ளதை இங்கே சுட்டிக்காட்டலாம். மாணவர்கள், போராட்ட உணர்வுடைய மாணவர்கள், அவருடைய வகை மாதிரி. மாறன் தலைமை தாங்கக்கூடிய, தன்னுடைய விஷயங்களை எதற்காகவும் விட்டுக் கொடுக்காத ஒரு மாணவன். அவனைப் போலவே அவனது காதலி மலரினியும் ஒரு வகைமாதிரியே. அந்தக் கம்பஸில் இருக்கிற எல்லாரையும் அவர் எழுதவில்லை. அவரோடு இணைந்து வேலை செய்கிறவர்களுக்குள் வெவ்வேறு சித்தாந்தத்தில்

**மருத்துவத்துறையில் என்ன செய்தது? கல்விக்கு என்ன செஞ்சது? தலைவருடைய பார்வையில் நடந்ததா? அவற்றில் அவருடைய ஈடுபாடு என்ன? என்பதையெல்லாம் எழுதும்போது, விடுதலைப்புலிகளின் போராட்டத்திற்குப் பின்னால் என்னென்ன விதமான சந்தேகங்களும் ஐயங்களும் எழுப்பப்பட்டதோ அதற்கெல்லாம் பதில் சொல்லுகிற மாதிரி வகை மாதிரி கதாபாத்திரங்களை உருவாக்கியி ருக்கிறார். இவை எல்லாமே உண்மை கதாபாத்திரங்கள் இல்லை,**

: ஐடியாலஜியில்: இருக்க இருக்கக்கூடிய மாணவர்களுடைய வகைமாதிரிகளைக் கொண்டு வந்துள்ளார். அவர்களுடைய குடும்பப் பின்னணியைச் சொல்லும்போது ஈழத்தமிழ்ப் பகுதியின் வெவ்வேறு நிலப் பின்னணியையும் சமூகப் பின்னணியையும் தருகிறார். இப்படித்தருவது வகைமாதிரிகளை உருவாக்குவதில் இருக்கும் கவனத்தைக் காட்டியுள்ளது.

மாணவர்களுக்கு எதிராக இருக்கக்கூடிய மாணவர்களின் வகை மாதிரியையும் உருவாக்கியுள்ளார் நிரோஜன் கதாபாத்திரம் தமிழ் அரசியலில் ஈடுபாடில்லாத நிலையில் மாணவர் தலைவராக ஆக முடியவில்லை என்பதில் தொடங்கி, சிங்கள ராணுவத்துக்கு ஆதரவான துரோகியாக மாறி, கடைசியில் அவர்களாலேயே விரட்டப்படுகிற ஒருத்தராய் அந்த வகை மாதிரியை நாவலுக்குள் கொண்டு வருகிறார். இதன் மூலம் காம்பஸுக்குள்ளேயே ஆதரவான குழுவும் எதிரான குழுவும் என்று வகைமாதிரிகளை உருவாக்குகிறார். இதை தாண்டி அங்கு நடந்த பெரும் பெரும் நிகழ்வுகள் வருகின்றன. பொங்குதமிழ் போன்ற நிகழ்வுகள் யாழ்நகரிலும் சுற்றுவட்டாரச் சிறுநகரங்களிலும் நடந்த நிகழ்வுகள். அவையெல்லாம் நாவலில் வரும் நிகழ்வுகள் நடந்த நிகழ்வுகள் என்ற உண்மைத்தன்மையை உண்டாக்குகின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாக நிகழ்வுகளைச் சொல்லும் முறையிலிருந்து மாறிக் கிளிநொச்சியில் நடக்கும் தமிழீழ அரசாங்கம் குறித்த தகவல் தரப்பட்டுள்ளன. அந்த அரசாங்கம் எப்படி நடந்தது என்பதைச் சிறுசிறு அலகுகள் வழியாக க்காட்டுகிறார். அந்நிகழ்வுகள் உருவாக்கப்படும் பாத்திரங்கள் கூட வகை மாதிரிப்பாத்திரங்களே. மருத்துவத்துறையில் என்ன செய்தது? கல்விக்கு என்ன செஞ்சது? தலைவருடைய பார்வையில் நடந்ததா? அவற்றில் அவருடைய ஈடுபாடு என்ன? என்பதையெல்லாம் எழுதும்போது, விடுதலைப்புலிகளின் போராட்டத்திற்குப் பின்னால் என்னென்ன விதமான சந்தேகங்களும் ஐயங்களும் எழுப்பப்பட்டதோ அதற்கெல்லாம் பதில் சொல்லுகிற மாதிரி வகைமாதிரி கதாபாத்திரங்களை உருவாக்கியி ருக்கிறார். இவை எல்லாமே உண்மை கதாபாத்திரங்கள் இல்லை, இப்படித்தான் இருந்தது, இப்படியான மனிதர்களால் பின்னப்பட்ட ஒரு போராட்ட வரலாறு கொண்ட இயக்கம் எத்தகைய வாழ்க்கையைத் தரும் கனவுகளைக் கொண்டிருந்தது என்பதை முன்வைக்கிறார். அவர்களின் வெற்றியை மட்டுமே சொல்லாமல், இப்படி இருந்த இயக்கம் ஏன் பின் வாங்கியது? அதன் காரணிகள் யார்? யார்? என்பதை விரிவாக எழுதாமல் குறிப்பாகச் சுட்டிச் செல்கிறார். விரிவாக எழுதாமல் போனதற்குப் பல்கலைக்கழக வளாகம் போன்ற நேரடிச் சித்திரிப்புகளுக்குக் கிடைத்த நேரடிப் பங்கேற்பு இல்லாதது காரணமாக இருக்கலாம்.

நாவலின் தொடக்கத்தில் இயக்க ஆதரவு கொண்ட பாத்திரங்களாக மாறனையோ, அவனது நண்பர்களையோ அடையாளப் படுத்தியுள்ள நாவல், மெல்லமெல்லச் சூழலால் அவர்கள் இயக்க ஆதரவுக் கருத்தியலாளர்களாக ஆகிறார்கள் என்றே காட்சிப்படுத்தியுள்ளார். பள்ளிப்படிப்புக்குப் பின்

பல்கலைக்கழக வளாகத்திற்கு வரும் இளையோர்களின் மனநிலையில் மாறனும் மலரினியும் இருக்கிறார்கள். பெண் தன் அருகில் உக்காரும் நிலையில், பார்த்ததும் விருப்பப்படுகிற, காதல் கொள்ளுகிற, எல்லாவிதமான இளம்பருவத்து மனநிலையோடு இருக்கும் ஒருவனாகவே மாறன் அறிமுகம் ஆகின்றான்.

நாவலில் இடம்பெற்றுள்ள ஒரு பெரிய நிகழ்வு முகமாலை. மாணவர்கள் கம்பஸுக்கு வர முடியாமல் தவித்த கால கட்டத்து நிகழ்வு. கிளிநொச்சியில் இருந்து ஒரு மணி நேரத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரலாம். ஆனால் மூன்று நாட்கள் கடல் வழியாகத் திரிகோணமலை போய், அங்கே நின்று வந்த பெரிய துயரப் பயணம். எனது பயணத்தின் போது பலரும் சொன்ன நிகழ்வு அது. ஒரு மணிநேர பயணத்தை மூன்று நாட்கள் சாப்பிடாமல், கடல் பயணம் பிடிக்காமல் செய்த பயணத்தில் பிணப்பொதிகளைத் தூக்கிக் கொண்டு போன பயணங்கள். இந்தப் பயண நிகழ்வில். இன்னொரு வகை மாதிரிப் பாத்திரத்தை உருவாக்கி விடுதலைப்புலிகள் மீது வைக்கப்பட்ட விமரிசனம் ஒன்றுக்குப் பதில் தருகிறார் தீபச்செல்வன். யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லீம்களின் குரலுக்குச் செவி மடுத்துக் காரணம் சொல்வதும், அவரது நிலைப்பாட்டைப் புரிந்துகொள்வதுமான அரசியல் சொல்லாடலுக்கு அதனைப் பயன்படுத்தியுள்ளார்.

அன்வர் என்கிற கதாபாத்திரம், மாறனோடு திருகோணமலைக்கு போகும்போது பயணம் செய்கிறது. போகும்போது ரெண்டு பேரும் அந்த விஷயங்கள் பற்றி பேசுகிறார்கள். இஸ்லாமியர்கள் தரப்பில் என்ன தப்பு நடந்தது? இந்த காட்டிக் கொடுக்கிற வேலையை அவர்கள் மட்டும்தான் செய்கிறார்களா? இங்கேயும் செய்கிறார்களே:? என்று அந்த உரையாடல் வழியாக மொத்தத்தையும் ஒரு பக்கச் சார்பாக நின்று பேசாமல், இரண்டு பக்கமும் அதைப்பற்றி

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்னும் நடப்பில் இருக்கும் வெளியின் நிகழ்வுகளைக் குறிப்பான நான்காண்டுக் காலத்தில் நிகழ்ந்தனவாக எழுதிக்காட்டியுள்ள நாவல், கிளிநொச்சிப் பகுதியையொரு ஒரு புனைவு வெளியாக கோட்டுச் சித்திரமாக எழுதிக்காட்டியுள்ளது. அந்தப் புனைவு இப்படியொரு அரசாங்கம் அமைந்திருந்தால், தொடர் நிகழ்வாக நீண்டிருந்தால் எப்படி இருக்கும் என்ற கனவாகவும் இருக்கலாம்.**

சிந்திப்பதற்கான வாய்ப்புகளைக் கொண்டதாக மாற்றியுள்ளார்.

இந்த நாவல் விடுதலைப்புலிகளின் ஆதரவு நாவல் என்ற விமரிசனத்தைத் தவிர்க்கும் விதமாக அமைவது தீபச்செல்வன் உருவாக்கியுள்ள வகை மாதிரிப்பாத்திரங்களே. முஸ்லீம் பாத்திரங்களைப் போலவே சிங்களப்பாத்திரங்களிலும் அந்த வகைமாதிரியைக் கொண்டு வந்துள்ளார். முழுவதும் வன்மத்தோடு இருக்கும் பந்துலவின் பக்கத்தில் தான் சங்கமவும் இருக்கிறான். சங்கம, மனித நேயம் கொண்ட ராணுவ வீரனின் வகைமாதிரியாக உருவாக்கப் பட்டுள்ளார். வெலிக்கடை சிறை உடைப்பு போராட்டத்தில், கொழும்பில் தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக தயாரான ஒருவருடைய மகன் அவன். 'நான் உயிர்களை கொள்வதற்காக ராணுவத்திற்கு வரவில்லை என்னால் முடிந்தவரை நான் எங்க அப்பா செஞ்ச மாதிரி மனித உயிர்களை காப்பாற்றவே வந்துள்ளேன் என்கிறான். ராணுவம் என்பது வெறும் வன்முறைக்கானதோ, கொலை செய்வதற்கானதோ மட்டுமல்ல, உயிர்களைக் காப்பாற்றும் வேலையும் அதற்கு உண்டு. அதற்காகவே நான் ராணுவத்திற்கு வந்தேன்' என்பது அவன் நிலைப்பாடு. அவன்தான் நிறைய இடங்களில் மாறனைத் தப்பிக்க வைக்கிறான். அந்த வகையில் அதுவும் ஒரு வகைமாதிரி. புலிகளின் மருத்துவ பிரிவு பற்றிய சித்திரம், அவர்களின் மனிதாபிமான வெளிப்பாட்டுவதைக் காட்டுவதற்கான வகைமாதிரியாக அமைந்துள்ளது. உதயங்க என்ற சிங்கள ராணுவ சிப்பாய்க்கு மருத்துவம் பார்த்து அனுப்பும் நிகழ்ச்சி அது. இவ்வகையான குறிப்புகளைப் பின்னர் தங்களது டைரி குறிப்பாகவே சிங்கள ராணுவ வீரர்கள் எழுதியுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்னும் நடப்பில் இருக்கும் வெளியின் நிகழ்வுகளைக் குறிப்பான நான்காண்டுக் காலத்தில் நிகழ்ந்தனவாக எழுதிக்காட்டியுள்ள நாவல், கிளிநொச்சிப்பகுதியையொரு ஒரு புனைவு வெளியாக கோட்டுச் சித்திரமாக எழுதிக்காட்டியுள்ளது. அந்தப் புனைவு இப்படியொரு அரசாங்கம் அமைந்திருந்தால், தொடர் நிகழ்வாக நீண்டிருந்தால் எப்படி இருக்கும் என்ற கனவாகவும் இருக்கலாம். அந்த கனவை உள்ளே வைத்து நாவல் வாசகர்களுக்கு வாசிக்கத் தந்துள்ளது. நாவல் என்கிற கட்டமைப்பில் குறிப்பான காலம், குறிப்பான வெளி என்பதைக் கைக்கொண்டு புனைவுக் கதாபாத்திரங்களை வகைமாதிரிப் பாத்திரங்களாக்கி எழுதியுள்ள பயங்கரவாதி நாவல் தமிழ் வாசகர்களுக்காக மட்டும் எழுதப்பட்டது என்று நினைத்துவிடத் தேவையில்லை. இது மொழிபெயர்க்கப்பட வேண்டும். இந்நாவல் மட்டுமல்ல் எல்லாப் போர்க்கால நாவல்களும் மொழிபெயர்க்கப்பட வேண்டும் மொழிபெயர்க்கப்படும் நாவல்கள் ஊர்வலமாகச் சென்று உலக அரங்குகளில் மனுக்கொடுக்கும் போராட்டம் ஏற்படுத்தும் தாக்கத்தைவிடக் கூடுதல் தாக்கத்தை ஏற்படுத்தும். எழுத்தாளர்கள். கலைஞர்கள் தான் நம்பிய போராட்ட வாழ்க்கைக்கு அதன் காலத்தில் மட்டுமே வேலை செய்வார்கள் என்பதில்லை . போராட்டத்துக்குப் பின்னாலும் தொடர்ந்து வேலை செய்துகொண்டே இருப்பார்கள், அந்த வேலையை தீபச்செல்வன் இந்த நாவலில் செய்திருக்கிறார். அ

# கே.எஸ்.சிவகுமாரன் என்னும் கலை, இலக்கியத் திறனாய்வாளர்!



## வ.ந.கிரிதரன்

**ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் இலக்கியத் திறனாய்வில் தங்கள் பங்களிப்பை நல்கியவர்களில் கே.எஸ்.சிவகுமாரனுக்கும் முக்கிய மானதோரிடமுண்டு. கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அவரது கட்டுரைகளைப் பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் இணைய இதழ்கள் பிரசுரித்து வருகின்றன. அவரது பங்களிப்பு எத்தகையது என்பதைச் சிறிது ஆய்வுக்கண்ணோட்டத்தில் சிந்திப்பதுதான் இக்கட்டுரையின் நோக்கம்.**

இவரது பத்தி எழுத்துகள் அதிகமாக வெளிவருவதால்இவர்தன்னையொரு பத்தி எழுத்தாளராகவே அடிக்கடி கூறிக்கொள்கின்றார். தான் எழுதுவது இலக்கியத் திறனாய்வுகளல்ல வெறும் மதிப்பரைகள்தாம் என்று கூறிக்கொள்கின்றார். இவர் எழுத்துகள் வெறும் புத்தக மதிப்புரைகளா? அல்லது காத்திரமான இலக்கியத் திறனாய்வுகளா? இவ்வகையான எண்ணம் பலருக்கும் அவ்வப்போது ஏற்படுவதுண்டு. இதற்கு முக்கிய காரணங்களிலொன்று இவர் அடிக்கடி தான் எழுதுவது வெறும் மதிப்பபுரைகள்தாம் என்று கூறிக் கொள்வதுமென்பதென் கருத்து.

இது பற்றிக் கலாநிதி கார்த்திகேச சிவத்தம்பி அவர்களும் 'திறனாய்வுப் பார்வைகள்": பத்தி எழுத்துகளும் பல் திரட்டுகளும் 1: (1966இல் வெளிவந்த நூல்) என்னும் கே. எஸ்.எஸ். அவர்களின் கட்டுரைத் தொகுப்பு நூலொன்றுக்கு எழுதிய முன்னுரையில் பின்வருமாறு கூறியிருப்பார்.

'சிவகுமாரன் தன்னை என்றும் ஒரு நியாயமான விமர்சகனாகக் கொள்வதில்லை. இவர் தனது

**‘சிவகுமாரன் தன்னை என்றும் ஒரு நியாயமான விமர்சகனாகக் கொள்வதில்லை. இவர் தனது எழுத்துகளை மதிப்புரை (Review) களாகவும் பத்தி எழுத்துகளாகவுமே (Columns) காண்கிறார். ஆழமான, நுண்ணிதான கருத்து நிலைத்தளம் நின்ற விமர்சனங்களிலிருந்து தனது எழுத்துகளைப் பிரித்துக் காட்டுவதற்காகவே இவர் இவ்வாறு கொள்கின்றார் என்பது தெரிகின்றது. இந்த விடயத்தைப் பொறுத்தவரையில் திரு. சிவகுமாரன் தன்னைத்தானே குறைத்து மதிப்பிடுகின்றார் என்றே கருதுகிறேன்.‘**

எழுத்துகளை மதிப்புரை (Review) களாகவும் பத்தி எழுத்துகளாகவுமே (Columns) காண்கிறார். ஆழமான, நுண்ணிதான கருத்து நிலைத்தளம் நின்ற விமர்சனங்களிலிருந்து தனது எழுத்துகளைப் பிரித்துக் காட்டுவதற்காகவே இவர் இவ்வாறு கொள்கின்றார் என்பது தெரிகின்றது. இந்த விடயத்தைப் பொறுத்தவரையில் திரு. சிவகுமாரன் தன்னைத்தானே குறைத்து மதிப்பிடுகின்றார் என்றே கருதுகிறேன்.‘

மேலுள்ள கூற்றில் கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் ‘சிவகுமாரன் தன்னை என்றும் ஒரு நியாயமான விமர்சகனாகக் கொள்வதில்லை‘ என்று கூறியதை என்னால் ஒருபோதுமே ஏற்றுக்கொள்ள முடியாது. நியாயமான என்ற சொற்பதம் இங்கு தவறாகப் பாவிக்கப்பட்டுள்ளது. நியாயமான விமர்சகனாக அவர் இல்லையென்றால் நியாயமற்ற விமர்சகனா அவர் என்றொரு கேள்வியினை வாசகர்கள் மத்தியில் மேலுள்ள சொற்பதம் ஏற்படுத்துகின்றது. கே.எஸ்.எஸ் அவர்களின் எழுத்தில் குற்றம் காணும் சொற்பதமிது. உண்மையில் நியாயமான என்ற சொற்பதத்தை நீக்கிவிட்டு, தன்னை விமர்சகனாகக் கொள்வதில்லை என்று மட்டும் கூறுயிருந்திருக்கலாம் என்பதென் கருத்து. அவ்வாறு கூறியிருப்பின் திரு. கே.எஸ்.எஸ். அவர்களின் எழுத்தின் தரம் பற்றி, மேலுள்ளவாறு, குழப்பம் ஏற்பட்டிருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. உண்மையில் கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் திரு.கே.எஸ்.எஸ் அவர்கள் தன்னை விமர்சகர்களிலொருவராகக் கருதவில்லை என்றுதான் கூற நினைத்திருக்கின்றார். ஆனால் தேவையற்றுப் பாவித்த நியாயமான என்ற சொற்பதம் கூற வந்த பொருளின் அர்த்ததைத் திசை திருப்பி விட்டதென்றுதான் நான் எண்ணுகின்றேன்.

‘திறனாய்வுப் பார்வைகள்‘ என்னும் நூலின் மீள்பதிப்பு தமிழகத்தில் மணிமேகலை பிரசுரமாக ‘ஒரு திறனாய்வாளரின் இலக்கியப் பார்வை..‘ என்னும் பெயரில் 2008இல் வெளிவந்திருக்கின்றது. திரு. கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள் தன் எழுத்துகளை வெறும் மதிப்புரைகள் என்று கூறிக்கொள்கின்றார். ஆனால் நூலின் தலைப்பு ‘திறனாய்வுப் பார்வைகள்‘ என்று முதற் பதிப்பிலும், ‘ஒரு திறனாய்வாளரின் இலக்கியப் பார்வை..‘ என்று மணிமேகலைப் பிரசுரப் பதிப்பிலும் என்றிருக்கின்றது. அப்படியென்றால் திரு.கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள் தன்னைத் திறனாய்வாளராகக் கருதுகின்றாரா? தனது கட்டுரைகளைத் திறனாய்வாளர் ஒருவர் எழுதிய மதிப்புரைகளாகக் கருதுகின்றாரா?

இவ்விதமான எண்ணங்களை நூலின் தலைப்பு வாசிப்பவர்களிடத்தில் ஏற்படுத்துகின்றது. ஆனால் நூலிலுள்ள ‘திறனாய்வு சில அடிப்படை அம்சங்கள்‘ என்னும் கட்டுரையில், ஓரிடத்தில், திரு.கே.எஸ். சிவகுமாரன் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்:

மு.தளையசிங்கமும், இக் கட்டுரையாளரும் தாங்கள் விமர்சகர்கள் அல்லர் என்று பகிரங்கமாகவே குறிப்பிட்டு உள்ளனர். திறனாய்வு என்றால் என்ன? என்பதை நன்கு அறிந்து வைத்ததனாலேயே அவர்கள் தாம் விமர்சகர்கள் அல்லர் என்று கூறினர்‘ (பக்கம் 237)

தான் திறனாய்வாளரல்லரென்றால் எதற்காக நூலின் தலைப்பாக ‘ஒரு திறனாய்வாளரின் இலக்கியப் பார்வை‘ என்று வைத்தார். உண்மையில் இவர் வைத்தாரா? அல்லது பதிப்பத்தார் வைத்தார்களா?

ஆனால், என்னைப் பொறுத்தவரையில் மேற்படி நூலின் பெயர் சரியான, நியாயமான பெயர் என்றே கருதுகின்றேன். அதற்குரிய என் காரணங்களைக் கூறுவதற்கு முன்னர் திரு.கே.எஸ். சிவகுமாரன் அவர்களின் எழுத்துகள் வெறும் மதிப்புரைகளா? அல்லது திறனாய்வுகளா. என்பதை அவரது படைப்புகள் சிலவற்றின் மூலம் பார்ப்பது நல்லதென்று கருதுகின்றேன். அதற்கு மேற்படி நூல் மிகவும் உரிய நூலென்பதென் கருத்து. தேர்தல் கணிப்புகளில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாக்காளர்களிடம் கருத்துகளைக் கேட்டு முடிவுகளை எடுப்பார்கள். அதுபோல் திரு.கே.எஸ். சிவகுமாரன் அவர்களின் மேற்படி ‘ஒரு திறனாய்வாளரின் இலக்கியப் பார்வை‘ என்னும் நூலை, ஒரு பானை சோறுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கொப்ப, உபயோகப்படுத்துவதும் சாலச் சிறந்ததுதான். ஆனால் ‘ஒரு திறனாய்வாளரின் இலக்கியப் பார்வை‘ என்று பெயர் வைப்பதற்குப் பதில் ‘திறனாய்வாளரொருவரின் இலக்கியப் பார்வை‘ என்று வைத்திருந்தால் இன்னும் இலக்கணச் சுத்தமாக இருந்திருக்குமென்பதையும் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மேற்படி நூலிலுள்ள கட்டுரைகளைப் படிக்கும்போது அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் என்று படுகிறது:

1. ஒரு விடயத்தைப் பற்றிய ஆழமான எழுத்து. உதாரணமாக ‘விபுலானந்தர் தமிழ் திறனாய்வு

முன்னோடி' என்னும் கட்டுரை. இக்கட்டுரையில் விபுலாநந்தர் ஏன் தமிழ் திறனாய்வு முன்னோடி என்பதை, விபுலாநந்தரின் எழுத்துகளோடு, நிறுவியிருப்பார் திரு கே.எஸ்.சிவகுமாரன். இக்கட்டுரை 33 பக்கங்கள் வரை நீண்டதொரு, நூலிலுள்ள கட்டுரைகளில் நீண்ட கட்டுரை. இக்கட்டுரையில் விபுலாநந்தரின் இலக்கியக் கட்டுரைகளினூடு அவர் ஏன் திறனாய்வு முன்னோடி என்பதை ஆராய்ந்திருக்கும் கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள் 'ஒப்பிடுதலென்பது திறனாய் வாளரொருவரின் தேடல் முயற்சிகளிலொன்று' என்பதைச் சுட்டிக்காட்டுவார்.

விபுலாநந்தரும் வில்லிபாரதத்தில் வரும் இலக்கியக் காட்சிகளைக் கிரேக்கர்களின் ஹோமரின் படைப்புகளுடன் ஒப்பிடுவதைக் குறிப்பிட்டு, இவ்விதம் பார்க்கும் திறனாய்வு முன்னோடித்தன்மையை விபுலாநந்தரிடம் தான் பார்ப்பதாகக்' கூறியிருப்பார். மேலும் 'கலாநிதி க. கைலாசபதி அவர்கள் பிற்காலத்தில் தமிழ் சங்க காலப்படைப்புகளைக் கிரேக்க வீர காவியங்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்து கலாநிதிப் பட்டம் பெறுவதற்குத் தூண்டுகோலாக விபுலாநந்தரின் மேற்குறிப்பிட்ட ஒப்பீட்டுப் பாங்கு அமைந்திருந்ததோ!' என்றும் வியப்பார்.

மேற்படி கட்டுரையில் திரு.கே.எஸ். சிவகுமாரன் அவர்கள் விபுலாநந்தரின் கலை, இலக்கியக் கட்டுரைகளினூடு விபுலாநந்தர் இலக்கியத் திறனாய்வாளர் மட்டுமல்லர் கலை, இலக்கியத் திறனாய்வாளரும் கூட என்று விபுலாநந்தரின் 'வண்ணமும் வடிவமும்' ஆய்வுக் கட்டுரையினை உதாரணம் காட்டிக் கூறியிருப்பார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினரால், 1991இல் ஏற்பாடு செய்யப்பட்ட சுவாமி விபுலாநந்த அடிகள் நூற்றாண்டு விழாவில் நினைவுரையாக வாசிக்கப்பட்ட இக்கட்டுரையினை மேலோட்டமானதொரு கட்டுரையாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. திரு.கே.எஸ்.சிவகுமாரனின் இக்கட்டுரை விபுலாநந்த அடிகளாரை இலக்கியத் திறனாய்வு முன்னோடியாக நிறுவும் அதே சமயம் திரு.கே.எஸ்.சிவகுமாரனையும் இலக்கியத் திறனாய்வாளர்களிலொருவராக நிலை நிறுத்துகிறது.

2. எழுத்தாளரொருவரின் முக்கியமான படைப்பு பற்றி அல்லது தொகுப்பொன்றின் முக்கியமான படைப்பு பற்றி எழுதப்பட்ட விரிவான கட்டுரைகள். அவற்றுக்கு உதாரணங்களாக மேற்படி தொகுப்பிலுள்ள 'மௌனி அழியாச்சுடர்', வ.அ.இராசரெத்தினம் தோணி' ஆகிய கட்டுரைகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மேற்படி கட்டுரைகளில் மௌனியின் அழியாச்சுடர் மற்றும் வ.அ.இராசரெத்தினத்தின் தோணி பற்றி விரிவாகவே ஆராய்ந்திருப்பார் திரு.கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள். 'அழியாச்சுடர்' கதையில் வரும் பாத்திரங்களின் கூற்றுகள், ஆசிரியரின் கூற்றுகள், மற்றும் கதையின் அடிநாதம் (Theme) ஆகியவற்றின் அடிப்படையில் மேற்படி கதையினை நுணுகி ஆராய்ந்திருப்பார் திரு.கே.எஸ். சிவகுமாரன் அவர்கள். அவரது மேனாட்டு இலக்கியப் பரிச்சயம் காரணமாக அவரால் 'அழியாச்சுடர்' சிறுகதையினை மேனாட்டு இலக்கியப் போக்குகளுடன் ஒப்பிட்டு முடிவுகளை எடுக்க, மௌனியைக் காஃப்காவுடன் ஒப்பிட்டிட முடிகிறது. ' ..அவர் கதை சொல்லும்போது யதார்த்த பூர்வமாகத்தான் சொல்கிறார். ஆனால், அவர் கதாபாத்திரங்கள்தான் கற்பனா: ஏக்கம் (ரொமாண்டிக் நொஸ்டால்ஜியா), சூனியவாதம் (நிஹிலிஸம்), இருப்புவாதம் (எக்ஸிஸ்டென்ஷலிஸம்), மனப்பிராந்தி (ஹலுஸினேஷன்) போன்ற போக்குகளை உடையவர்களாகக் காணப்படுகின்றார்கள்.',' .. மேற்கண்ட பந்தியின் கடைசி வரிகள் எனக்கு 'எல்ஸ~ஸ்டென்ஷலிஸ' எழுத்தாளர்களான ஜ்ஷான் போல் சாத்ரேயையும், அல்பேர் கெமுவையுமே நினைவுக்குக் கொண்டு வருகின்றன' ஆகிய வரிகள் கே.எஸ்.சிவகுமாரனின் ஒப்பிட்டுத் திறனைப் (மேனாட்டு இலக்கியப் படைப்புகள், படைப்பாளிகளினூடு) புலப்படுத்துகின்றன.

3. எழுத்தாளர் ஒருவரின் நாவல்களைப் பற்றிய தனிக்கட்டுரைகள். இளங்கீரனின் 'தென்றலும், புயலும்', தெணியானின் 'மரக்கொக்கு, சுந்தர ராமசாமியின் புளிய மரத்தின் கதை போன்ற கட்டுரைகள் இவ்வகையின.

4. சிறுகதைத் தொகுப்புகள் பற்றிய அறிமுகக் கட்டுரைகள். பெரும்பாலும் சிறியதொரு அறிமுகத்துடன், தொகுப்பின் சிறுகதைகளைச் சுருக்கமாக விளக்கும் மேலோட்டமான மதிப்புரைகள்.

5. இலக்கியத்திறனாய்வு பற்றிய, இலக்கியத்திறனாய்வு பற்றி வெளிவந்த நூல்கள் பற்றிய கட்டுரைகள்.

இக்கட்டுரைகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக வாசித்தபொழுது எனக்குத் தோன்றிய எண்ணங்களில் முதன்மையானது நூலின் முன்னுரையில் கலாநிதி. கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் கூறிய பின்வரும் கூற்றுதான் 'ஆழமான விமர்சனக் கண்ணோட்டம் ஒன்று இல்லாது மதிப்புரைகளையும், இலக்கியப் பத்திகளையும் எழுத முடியாது......'

ஆம்! உண்மைதான். திரு.கே.எஸ். சிவகுமாரன் மேலோட்டமான அறிமுகக் கட்டுரைகள் பலவற்றை எழுதியிருந்தாலும், ஆய்வுச் சிறப்புள்ள கலை, இலக்கியக் கட்டுரைகள் பலவற்றையும் எழுதியுள்ளார். அவரது மேனாட்டு மற்றும் கீழ்நாட்டுத் தத்துவங்கள், இலக்கியங்கள் ஆகியவற்றிலுள்ள புலமையானது அவரது எழுத்துக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் மேற்படி நூலினை 'ஒரு திறனாய்வாளரின் இலக்கியப் பார்வை...' என்று குறிப்பிடுவதிலும், கே.எஸ். சிவகுமாரனைத் திறனாய்வாளர் என்று குறிப்பிடுவதிலும் எனக்குப் பூரண சம்மதமே!




# சுல்தானாவின் கனவு

## பூங்கோதை

இது ஆங்கிலத்திலிருந்து தமிழிற்கு மொழி பெயர்ப்பு செய்யப்பட்ட ஒரு நூல். இந்நூல் படைக்கப்பட்டு ஏறத்தாழ நூறு ஆண்டுகளின் பின்னர் தமிழ் இலக்கியப் பரப்பிற்கு அறிமுகப்படுத்தும் இந்நூலின் படைப்பாக்க குழுவில் இருக்கும் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவர்களைப் பற்றியும் ஒரு சிறிய அறிமுகத்தோடு இந்த பதின்ம வயதினருக்கான சிறார் இலக்கியத்தைப் பார்க்கலாம்.

இதனை மொழி பெயர்ப்பு செய்த தஞ்சாவூரைச் சேர்ந்த திவ்யா முதுகலைமானிப் பட்டம் பெற்றவர். இது இவரது இரண்டாவது மொழி பெயர்ப்பு நூல். திவ்யா, பஞ்சு மிட்டாய் சிறுவர் இதழ், மற்றும் ஓங்கில் கூட்டம் என்கின்ற பதிப்பாளர்கள், வெளியீட்டாளர்களோடு தொடரச்சியான பணியில் இணைந்திருக்கிறார்.. இவர் பஞ்சு மிட்டாய் பிரபுவின் துணைவியார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாண்டிச்சேரியைச் சேர்ந்த ஓவியர், graphic designer சின்மயா தேவி இந்நூலிற்கான ஓவியங்களை வரைந்திருக்கிறார். இவர் தொடர்ச்சியாக சிறார்களுக்கான ஓவியப்பட்டறைகள் நடாத்தி வருவதோடு சிறார் இலக்கியத்திற்கும் தன் பங்களிப்பைச் செய்து வருகிறார்.

இதற்கு எழுத்தாளர் நிவேதிதா லூயிஸ் இந்நூலின் ஆங்கிலப் பிரதியையும் வாசித்து அணிந்துரை தந்துள்ளார்.

சிறார் இலக்கியம் அல்லது குழந்தைகள் இலக்கியத்திற்காக ஓங்கில் கூட்டம் என்கின்ற பதிப்பாளர்களால் இந்நூல் பதிப்பாக்கம் செய்யப்பட்டுள்ளது. பதின்ம வயதினருக்காக மொழியாக்கம் செய்யப்பட்டதால் இது கைக்கடக்கமான சிறு நூலாக இருந்தாலும் இது உள் விரிவுகள் கொண்டதாகவும், உரையாடல்களை ஆரம்பித்து வைக்கக் கூடிய கனதியான கருத்துக்களைக் கொண்டதாகவும் காணப்படுகிறது.

'ஓங்கில் கூட்டம்' சிறார் இலக்கியங்களின் முக்கியத்துவம்

கருதி பல நூல்களை பதிப்பித்து வருகிறார்கள். இங்கு எழுத்தாளர்களை ஒருங்கிணைக்கும் பெரும் பணியை பிரபுவே நிறைவேற்றுகிறார்.

அவர்களது ஒரு படைப்பே இந்த மொழி பெயர்ப்பு நூல். சிறுவர்கள், பதின்ம வயதினரின் வாசிப்புத் திறனை அதிகரிக்க வேண்டும், அவர்களை வாசிப்பில் ஊக்குவிக்க வேண்டும் என்கின்ற நோக்கில் அறிவியல், விஞ்ஞானம், சூழலியியல், வாழ்க்கை பற்றிய தேடல்கள் என பலவிதமான நூல்களையும் பதிப்பித்து வருகிறார்கள். தற்போதைய டிஜிட்டல் யுகத்தில் பொதுவாகவே எங்கும் வாசிப்பு என்பது அருகி வரும் காலகட்டத்தில் சிறார்களுக்கான நூல்களை வெளிக்கொண்டுவரும் ஓங்கில் கூட்டத்தை நாம் பாராட்ட வேண்டும்.

ஏறத்தாழ நூறு வருடங்களுக்கு முன்பே, இன்று நாங்கள் பேசுகின்ற பெண் விடுதலை, பெண் ஒடுக்குமுறை பற்றிச் சிந்தித்த நூல் ஆசிரியர் ரொக்கேயா பேகம் எம்மை ஆச்சரியப்படுத்துகிறார்.

ரோக்கேயா பேகம் அவர்கள் 1880ம் ஆண்டில் பிறந்து 1932 ம் ஆண்டில் மறைந்திருக்கிறார். இவர் பிறந்த காலத்தில், இவர் வாழ்ந்த காலப்பகுதியில் பெண்களின் வாழ்க்கை முறைமைகள் மிகவும் ஒடுக்கப்பட்டே இருந்தது. அதிலும் வறுமையால் பாதிக்கப்பட்ட பெண்களின் நிலை மிகவும் தாழ்த்தப்பட்டு இருந்தது. அப்படியான ஒரு காலகட்டத்தில் வாழ்ந்த ரொக்கேயா பேகத்தின் கனவு ஒரு பெண்ணியக்கனவாக 'சுல்தானாவின் கனவு' என்ற பெயரில் இங்கு மிளிர்ந்துள்ளது.

வங்காளதேசம் இவரது நினைவாக இன்றும் அவரது இறந்த நாளை 'ரொக்கேயா தினமாக' நினைவு கூர்ந்து, சாதனைப் பெண்களுக்கு விருது வழங்கிக் கௌரவித்து வருகிறது.

சுல்தானாவின் கனவு மிக இனிமையானது. அங்கு பெண் அடக்குமுறை இல்லாத, பெண்களே ஒரு சமூகத்தைக் கொண்டு நடத்தும் ஒரு கம்பீரமான உலகம் அது. அங்கு அறமும் நீதியும் தான் ஆட்சி செய்கின்றன. ஆண்கள் பொது வெளியில் இல்லாத ஒரு உலகை ஆளுமை கொண்ட பெண்களே முன் நின்று நடத்துகிறார்கள். அது எவ்வாறு சாத்தியம் என்பதைப் பல்வேறு உதாரணங்கள் மூலம் ரொக்கேயா புனைவுகளினூடே கொண்டு செல்கிறார். இது அன்றைய காலத்தில் கல்வி மறுக்கப்பட்டு, சமையல் அறையோடு முடக்கப்பட்ட ஆயிரக் கணக்கான பெண்களின் கனவாக வெளிப்பட்டிருக்கிறது.

இது தான் இந்தியாவில் முதன் முதல் எழுதப்பட்ட அறிவியல் சார்ந்த புனைவாகவும் இருக்கிறது என்பதை திவ்யா கூறுகிறார்.

இந்தியாவில் 1905ம் ஆண்டு வெளியான இந்நூலில் பெண் விடுதலைக்கான முக்கியத்துவம், பெண் கல்வியே அவர்களுக்கான சமுதாய விடுதலையை பெற்றுத் தரும், ஆண்:பெண் சமத்துவம், ஆண் ஆதிக்கத்திலிருந்து விடுபட பெண்களிற்கான பொருளாதார விடுதலை அவசியம், ஒரு நாட்டின் சுதந்திரம் என்பது பெண்களிற்கான சுதந்திரத்தையும் உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும் என்பதையெல்லாம் வேண்டி நின்ற ரொக்கேயா, இளம் தாய்மாருக்குத் தேவையான கல்வி, குழந்தை வளர்ப்பு தொடர்பான விழிப்புணர்வை வழங்கும் சேவையோடு வறிய பெண்களுக்கான, இஸ்லாமியப் பெண்களுக்காக உதவும் அமைப்பு ஒன்றையும் அமைத்திருந்தார். இவரைப் பற்றி மேலும் அறிய வேண்டும் என்ற ஆவலைத் தந்த நூலாகவும் இதைத் திவ்யா தந்திருக்கிறார். ஒரு நூற்றாண்டின் பின்னர் இந்நூல் தமிழில் படைக்கப்பட்டிருப்பது பெருமைக்குரிய விடயம்.

இலகுவான மொழி நடையில் இளம் மாணவர்களுக்குப்புரியும்தன்மையில் எழுதப்பட்டிருப்பது மாத்திரமல்ல, ஆண்:பெண் சமத்துவம் பற்றிப் பேசும் ரொக்கேயா, ஆண்களையும் இந்நூலைப் படிக்கத் தூண்டியது போலவே மூலப்பிரதியின் தன்மை மாறாது திவ்யாவும் மொழியைக் கையாண்டிருப்பதாக நிவேதிதா லூயிஸ் தன் அணிந்துரையில் தெரிவித்திருக்கிறார்.

இந்நூலின் இறுதியில் பின் இணைப்பாக ரோகியாவின்

'உண்மையான விடியல்' என்னும் கட்டுரை தரப்பட்டிருக்கிறது. 1931இல் அவர் எழுதிய இக்கட்டுரையில் பெண்களின் உண்மையான விடியல் என்றால் என்ன என்பதை விளக்கியிருக்கிறார். உலகமெங்கும் இருக்கும் பெண்கள் விழித்துக் கொள்ள நாம் மட்டும் இன்னும் எமது சிறைகளினுள்ளே தூங்குகிறோம் எனப் பெண்களின் விழிப்புணர்வைத் தூண்டுகிறார்.

பெண்களே, உங்களுக்கான உரிமைகளையும், கோரிக்கை களையும் பாதுகாப்பதற்கான அமைப்புகளை நீங்களே உருவாக்கிக் கொள்ளுங்கள் என அறைகூவியிருக்கிறார்.

பெண் குழந்தைகளுக்கு குறைந்த பட்சம் ஆரம்பக் கல்வியாவது கிடைக்க வழி செய்வதும், கிடைத்த கல்வியை அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கப் பயன்படுத்த வேண்டும் என்பதும் அவரது கோரிக்கை. அது மட்டுமல்ல, கல்வியானது உடல், உளவளம் இரண்டையும் நிறைவு செய்வதாய் இருக்க வேண்டும்.. பெண்கள் உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும், வெறுமனே நகைகளால் தம்மை அழகு படுத்துவது மட்டும் சமூக மாற்றத்திற்கு வழிவகுக்காது என அன்றைய பெண்களின் சுதந்திரத்திற்காக போராடியிருக்கிறார்.

இக்கட்டுரையைத் தொடர்ந்து, அவர் எழுதிய வேறு நூல்களிலிருந்து எடுக்கப்பட்டு சில வரிகளை மீம்ஸ் வடிவில் தந்திருக்கிறார் திவ்யா. அது எவ்வளவு தூரம் வெற்றியளித்தது அதாவது பதின்வயதினரை வாசிக்கத் தூண்டும் முயற்சிகளில் அவர் வெற்றி கொண்டாரா என்பது தெரியவில்லை.

ஜெனானா என்பது பெண்களுக்காகப் பிரத்தியேகமாக வீடுகளில் அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு தளம். இக்கதையில் அந்நாட்டில் நடைபெற்ற போருக்குப் போக முடியாத ஆண்கள் எல்லோரும் இங்கு தங்குவதற்கு சம்மதிக்கின்றார்கள். அதன் காரணமாக பொது வெளியில் ஆண்கள் இல்லாத ஒரு உலகத்தை ரொக்கேயா, பேகம் படைத்து, அங்கு பெண்களின் தலைமையில் எவ்வாறு ஒரு சமூகத்தின் அரசியல், பொருளாதார, குடியியல் சார்ந்த தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன என்பதை புனைவுகளினூடே காட்சிப்படுத்துகிறார்.

ஆண் பெண் சமத்துவம் பேசிய ரொக்கேயா ஏன் ஆண்கள் இல்லாத உலகம் ஒன்றில் பெண்கள் தம் திறமையை வெளிப்படுத்தும் கதையை உருவாக்கினார் என்பது கேள்விக்குரியது.

இருந்தாலும் ஆரம்ப கால பெண் விடுதலை சார்ந்த கருத்துகளுக்கான விதைகளை இப்பூமியில் ஊன்றி நீர் ஊற்றி வளர்த்தவர் ரொக்கேயா பேகம் அவர்கள். வங்காள தேசத்தில் அவர் வாழ்ந்த காலப்பகுதியை, பெண்களிற்கான நிலையை நாம் கருத்தில் வைத்தால் அந்தக் காலப்பகுதியை நாம் தர்க்க ரீதியாக விமர்சிப்பது ஆகாது என்றே நினைக்கத் தோன்றுகிறது.

ஒரு இருண்ட காலப்பகுதியில் வாழ்ந்த பெண்களுக்கு ஒரு சிறிய விளக்கை தயாரித்து, தன்னால் முடிந்தவரை அவர்களுக்கு ஒரு ஒளிக்கீற்றைக் கொடுக்க அவர் முனைந்திருக்கலாம். அவரது உலகத்தில் நிரவப்படாத இடங்களில் நாம் நூற்றாண்டு கடந்து கேள்விகளை வைப்பது அபத்தம்.

காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது எனக் குறள் சொல்வதைப் போல, காலத்தின் தேவையாய் அவரது சிந்தனைகளும் செயற்பாடுகளும் அன்று வாழ்ந்த பெண்களுக்கு மட்டுமல்ல இன்று வாழ்கின்ற பெண்களில் பலருக்கும் ஒரு விழிப்புணர்வை ஊட்டுவதாகவே காணப்படுகிறது.

கல்வியிலும் செல்வத்திலும் நிறைந்த ஒரு புகழ் பூத்த குடும்பத்தில் பிறந்து, தன் முற்போக்கான சிந்தனையில் மற்றைய பெண்களுக்கு வழி காட்டிய ரொக்கேயா 18 வயதில் முன் பின் தெரியாத ஒருவருக்கு இரண்டாவது மனைவியாக வாழ்க்கைப்படுவது நெருடலாக உள்ளது .

இருந்தாலும் அவர் சந்தித்த அந்த மனிதர் பண்பிலும் அறத்திலும் நிறைந்த ஒருவராக, ரொக்கேயாவின் எண்ணங்களுக்கு மதிப்பளிப்பவராக இருந்திருக்கிறார் என்றே அறியக் கிடைக்கிறது. இவர் தான் ரொக்கேயாவின் கல்வியைத் தொடர்வதற்கும் பெண்களுக்கான பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கும் உந்துகோலாக இருந்திருக்கிறார்.

இவருடைய சிந்தனைகள் இன்றைய பெண்ணியவாதிகளின் எழுத்துக்களிலும் தாக்கம் செலுத்துகின்றன. உதாரணமாக, 1934 இல் பிறந்த கமலா தாஸின் வார்த்தைகளில் சிந்தனையில் ரொக்கேயாவின் எண்ணங்கள் பிரதிபலிக்கின்றன.

'முதலில் என்னைச் சூழ்ந்துள்ள உடைகளையும் ஆபரணங்களையும் அகற்றி வைக்கிறேன். பின்பு, இந்த மெல்லிய அரக்கு நிறத் தோலையும் அதனுள் இருக்கும் எலும்புகளையும் உதறுகிறேன். இறுதியில் வீடற்ற, அனாதையான, அதியழகு நிறைந்த தோல், எலும்புகள் என அனைத்துக்கும் அடியில் உள்ள என் ஆன்மாவை உங்களால் காண இயலும் என நம்புகிறேன்.' என கமலதாஸ் கூறுகிற போது அங்கு நாம் ரொக்கேயாவைக் காண்கிறோம்.



கமலா தாஸ்

கமலாதாஸ் தன்னுடைய மென் உணர்வுகளை கவிதைகளினூடாகவும் எழுத்துகளினூடாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் ரோக்கேயா பெண்களின் உணர்வுகளை சமூக மாற்றத்திற்கான உந்துகோலாக, ஒரு வகை பிரச்சார ரீதியான கதை, கட்டுரைகளைப் படைத்திருக்கிறார். இருந்தாலும் ரோக்கேயாவின் காலத்தில் அவ்வகையான எழுத்துக்கள் கட்டாயமாக தேவைப்பட்டிருக்கிறது என்றே தோன்றுகிறது.

கமலாதாஸின் எழுத்துக்கள் போலவே, 1944 இல் கோயம்புத்தூரில் பிறந்த அம்பையின் எழுத்துக்களும் ரொக்கேயாவின் எழுத்துக்களோடு இயைந்து விடுகின்றன. இங்கு நாங்கள் அம்பையை எடுத்துக் கொண்டால், இவரது சிறுகதைகளும் அனேகமாக பெண்களின் பார்வையிலிருந்து எழுதப்படுபவை. ஆனால் அவை பிரச்சாரக் கதைகள் அல்ல. பாரம்பரியமும், பண்பாடும் பெண்களை காலம் காலமாக எப்படி நேர்முகமாகவும் மறைமுகமாகவும் ஒடுக்கி வந்திருக்கின்றன என்பதை இவரும் சுட்டிக் காட்டுகிறார். பெண்களின் வாழ்க்கையில் உள்ள சமூக ஆதிக்கம், கருத்தியல் ஆதிக்கத்தையே முதன்மை பேசுபொருளாக அம்பை கொண்டிருக்கிறார்.

இவ்வாறு சுல்தானாவின் கனவுகளில் இருந்த பெண்களின் நிறைவேறாத ஆசைகளைப் பற்றி அவர்களது கனவு பற்றி ஒரு நூற்றாண்டு கடந்தும் இன்று வரை பெண்கள் பேசிக் கொண்டிருப்பது துயர்.

இந்நூலை ஆண், பெண் பேதமின்றி அனைவரும் வாசிக்க வேண்டும், முக்கியமாகத் தமிழ் பாடசாலைகளில் உயர் நிலை வகுப்பில் உள்ள அல்லது பதின்ம வயதினரோடு ஆசிரியர்கள் சேர்ந்து வாசித்து உரையாடல்களை ஆரம்பிப்பது நன்மை பயக்கும். திவ்யாவும் தொடர்ந்து இவ்வாறான நூல்களை மொழி பெயர்ப்புச் செய்து சிறார் இலக்கியத்தை வளர்க்க வேண்டும்.

# 'சிதைப்பு'

## அல்லது
## 'இருப்பு பற்றிய விதி'

### அதிகாரம் மூன்று

நீண்ண்ண்ட பாதையின் முடிவுவரை போவதுதான் இலக்காக இருந்தது.

அது;; போகப் போக நீண்ண்ண்டு கொண்டே போகலாமென்றதும் தெரியாமல் தான் இருந்தது.

திடுமென்று முடிவுக்கு வந்து வியப்பிக்கும் என்பதும் தெரியாமல் இருந்தது.

குருதி அமந்தறையாய் கொட்டி அல்லது கொட்டாமல், 'இது' வந்து மிரட்டும் என்பதும் புரியப்படாமல் தொங்கியது.

துலங்காமல் போகும் ஒரு கோர அம்சத்தை நினைத்தே பார்ப்பதில்லை.

இறப்பு!!!!

பாதையின் ஆரம்பத்தில் பயம் இல்லை.

இலக்கை குறி வைத்து நீள நடக்கையில் வரும் அசதியும் ஆயாசமும் அவதியான நகர்வில் திரைக்குப் பின்னால் ஒளியும்.

ஆசுவாசப்பட கைகளில் நேரமில்லை.

வலி முரண்படினும் முக்கி அடித்து அமர்த்தப்படும்.

இடையில் துரத்தும் காட்டு நாய்களையிட்டோ காட்டு மன்களையிட்டோ பயம் கிடையாது.

போவர்.

அவர்களைப்பற்றி எதுவும் தெரியாது.

எதுவரை போனார்கள் என்பதும்.

ஆனாலும், எல்லோரும் போய்க்கொண்டே இருப்பர்.

'இருப்பு பற்றிய விதி இதுதான்'.

# சிறினோ சிறி சிறிசு

# RUIN

## Or The Law of Existence

### Chapter: Three

The aim was to go unto the end
Of the looong path/

It was not known whether
'It' may elongate further

When (you) keep on going
Not known whether
It could come to an abrupt end
And surprise/

This would come and Threaten with
blood spilling Immensely or not
Was hanging In the space
(We) don't think about
This non-shining
Horrendous matter.

Death…!!

There is no fear in the initial
Part of this path

The fatigue and lassitude
that Come from the anguish-move
Hide behind the scene

There is no time in the hand
To solace

If the pain contrasts.
It would be struck and neutralized.

There is no fear of
charging wild dogs or wild people

They go

Nothing is known about them

As well as unto where
But. all continue to go

'This the law of Existence'



# இலங்கை மலையகத் தமிழரின் வாக்குரிமை வரலாறு

**மயில்வாகனம் திலகராஜா**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்



*இலங்கையைப் பிரித்தானியர் கைப்பற்றியதன் பின்னதாக 1830கள் தொடங்கி 1930 கள் வரையான நூறாண்டு காலப்பகுதியில் படிப்படியாக இலங்கையில் பெருந் தோட்டப்பகுதிகளில் வேலை செய்யவென தென்னிந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்டவர்கள் 'இந்தியத் தமிழர்கள்' என அழைக்கப்படுகின்றனர். இலங்கை சனத்தொகைக் கணக்கெடுப்பின் போது இனரீதியான அடிப்படையில் சிங்களம்(1), இலங்கைத் தமிழர் (2), இலங்கை சோனகர் (3) எனும் வரிசையில் நான்காம் இடத்தில் இருப்பவர்களே இந்த 'இந்தியத் தமிழர்கள்'(4). பெருந்தோட்டப்பகுதிகளுக்கு உள்ளும் வெளியேயும் வாழும் இவர்களின் எண்ணிக்கை ஒட்டுமொத்தமாக 15 லட்சம் வாழ்வதாக அனுமானிக்கப் பட்டாலும், இலங்கைப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ பதிவுகளில் எட்டு லட்சம் அளவானோரே 'இந்தியத் தமிழர்'*

*இருக்கத்தக்கதாகவே ஒட்டுமொத்த இந்தியத் தமிழர்களின் குடியுரிமையையும் பறிக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க இலங்கைக் குடியுரிமைச் சட்டம் இந்தியத் தமிழர்களின் இலங்கைக் குடியுரிமையைப் பறித்தது* (act passed on 15th Novemoer 1948 and withheld citizenship from the Indian tamil community)

*1949 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க இலங்கை பாராளுமன்ற தேர்தல்கள் திருத்தச் சட்டம் குடியுரிமை அற்றவர்களுக்கு இலங்கையில் 'வாக்குரிமை'யும் இல்லை என சர்வஜன வாக்குரிமையில் கிடைத்த வாக்களிக்கும் உரிமையையும் பறித்தது.*

*அன்று முதலான தொடர் போராட்டங்களும், கோரிக்கை களும் ராஜதந்திர நடவடிக்கைகளும் என மூன்று தசாப்தத்துக்கும் மேலான காலத்திற்கு பிறகு இலங்கைவாழ் இந்தியத் தமிழர்களது இலங்கைக் குடியுரிமையை மீளப்பெறல்*

படிப்படியாக நிகழ்ந்தது.

1949 ஆம் ஆண்டு 3ஆம் இலக்க இந்திய :பாகிஸ்தான் வதிவாளர்களின் குடியுரிமைச் சட்டம் மூலம் நிபந்தனையுடனான குடியுரிமை விண்ணப்பம் கோரப்பட்டது. பாகிஸ்தானியர்களும், இந்திய மேட்டுக்குடியினரும் தமது ஆதாரங்களைக் காட்டி அப்போது மீளவும் விண்ணப்பித்து இலங்கைக் குடியுரிமைப் பெற்றுக்கொண்டாலும், தமது மூதாதையர் இலங்கையில் வாழ்ந்ததை நிரூபிக்க ஆவணங்கள் இல்லாத உழைப்பாளர் வர்க்கத்தினை இந்தச் சட்டம் வஞ்சித்தது. இருந்ததைப் பறித்துக்கொண்டு மீண்டும் வழங்க நிபந்தனைகளை விதித்தது. சுமார் 9 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் நாடற்றவர்கள் என்ற நிலைக்கு மாற்றப்பட்டனர்.

1954 ஆம் ஆண்டு அப்போதைய இந்திய பிரதமர் ஜவகர்லால் நேருவுக்கும் இலங்கை அதிபர் கொத்தலாவலைக்கும் இடையில் இந்திய இலங்கைக் குடியுரிமை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன்போதும் சுமார் ஐம்பதினாயிரம் அளவினர் விண்ணப்பித்தாலும் மூவாயிரம் அளவினரே குடியுரிமை பெற்றனர். அத்தனை தூரம் அது சிக்கலாகக் கையாளப்பட்டது.

1964 ஆம் ஆண்டு இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கும இந்திய பிரதமர் லால் பகதூர் சாஸ்த்திரிக்கும் இடையிலான 'இலங்கை இந்திய ஒப்பந்தம்' கைச்சாத்தானது. இதன்படி இலங்கையில் 9 இலட்சத்து 75 ஆயிரம் இந்தியத் தமிழர்கள் நாடற்றவர்களாக உள்ளதாக கணக்கிடப்பட்டு, சுமார் 6 இலட்சத்தை இந்தியா பொறுப்பேற்பது என்றும் இலங்கை 3 இலட்சத்து 75 ஆயிரம் பேருக்குக் குடியுரிமை வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. எனினும் இலங்கையில் வாழ்பவர்களுக்கு குடியுரிமை வழங்குவதிலும் பார்க்க இந்தியாவுக்கு அவர்களை திருப்பி அனுப்புவதிலேயே இலங்கை அரசு குறியாக இருந்ததன் காரணமாக ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் பல்வேறு குழப்ப நிலைகள் தோன்றின.(any person to whom the agreement of 1964 applied to, could make an application to or granted citizenship of Sri Lanka, by registration)

இவ்வாறு 1964 ஒப்பந்தம் நடைமுறைக்கு வராத நிலையில் 1974 ஆம் ஆண்டு இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கும் இந்திய பிரதமர் இந்திரா காந்திக்கும் இடையிலாக இன்னுமொரு 'இலங்கை இந்திய ஒப்பந்தம்' கைச்சாத்தானது. அதன்படி முன்னர் தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையில் மாறுதல்கள் ஏற்பட்டது. எவ்வாறெனினும் படிப்படியாக பலவந்தமாக பெருமளவிலான இலங்கைவாழ் இந்தியத் தமிழர்கள் இந்தியா நோக்கி பயணப்பட்டனர். எவ்வாறெனினும் 1981 ஆம் ஆண்டுடன் இந்த ஒப்பந்தங்களின் பிரகாரம் இலங்கைக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் காலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

1986 ஆம் ஆண்டு ஆகும்போது இலங்கையில் தமிழர்கள் தனிநாடு கோரிய உள்நாட்டு யுத்தம் உச்சம் பெறத்தொடங்கியபோது, தமிழர் தரப்பில் ஒரு கோரிக்கையாக நாடற்ற தமிழர்களுக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்படல் வேண்டும் என திம்புப் (பூட்டான்) பேச்சுவார்த்தையின் போது கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்தப்பின்னணியில் 1986ஆம் ஆண்டு 5ஆம் இலக்க நாடற்ற ஆட்களுக்கு குடியுரிமை வழங்கும் சட்டம் இலங்கையில் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டம் 1988 ஆம் ஆண்டு மீளவும் திருத்தப்பட்டு மேலும் துரிதப்படுத்தப்பட்டது. (grant of Citizenship to Stateless Persobs (Special Provisions) act, no 39 of 1988)

யுத்த சூழ்நிலைகள் காரணமாக இலங்கை : இந்திய கப்பல் பயணங்கள் தடைப்பட்டதன் காரணமாக 1964 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி இந்திய கடவுச் சீட்டுப் பெற்றுக்கொண்டும் இந்தியா போகமுடியாது இலங்கையில் தங்கியிருந்தவர்களுக்கும் இனி இந்தியா செல்ல வேண்டியதில்லை என்ற தீர்மானத்தில் 2003ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க இந்திய வம்சாவளியினரான ஆட்களுக்கு குடியுரிமை வழங்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. (grant of Citizenship tt Persons of Indian origin act, no/ 35 of 2003)

1970: 1990 காலப்பகுதியில் வட பகுதியில், குறிப்பாக வன்னியில் குடியேறியவர்களால் இலங்கையில் பறிக்கப்பட்ட குடியுரிமை மீளவும் வழங்கப்பட்டபோது அதற்கு விண்ணப்பிக்க முடியாதவகையில் யுத்த சூழ்நிலைக்குள் வாழ்ந்தனர். அத்தோடு அகதிகளாக தமிழ்



நாட்டுக்கும் சென்றார்கள். இவர்களே அகதிகளாகவும் நாடற்றவர்களாகவும் முகாம்களில் வாழ்கின்றனர்.

*2008 ஆம் ஆண்டு இந்தியா வந்த இலங்கைப் பாராளுமன்ற தெரிவுக்குழு மொத்தமாக 117 முகாம்களில் 95,219 அகதிகள் வாழ்வதாகவும் இவர்களும் நாடற்ற இலங்கை அகதிகள் 28,489 பேர் வாழ்வதாக அடையாளம் கண்டனர். இந்தியாவுக்கான இலங்கை பிரதித் தூதுவர் (சென்னை) திரு. ஹம்சா நாடாளுமன்ற குழுவுக்கு இதனை அறிக்கை இட்டார்.*

*இதன்படி 2009 ஆம் ஆண்டு இந்தச் சட்டம் 1988 ஆம் ஆண்டு நாடற்ற ஆட்களுக்கு குடியுரிமை வழங்கும் சட்டம் மீளவும் திருத்தப்பட்டு* grant of Citizenship to Stateless Persons (Special Provisions) act, no/05 of 2009 *எனும் திருத்தச் சட்டமும் , 2009 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க இந்திய வம்சாவளியினரான ஆட்களுக்கு குடியுரிமை வழங்கும் (திருத்தச்) சட்டம்* (grant of Citizenship to Persons of Indian origin (amendment) act, no/ 6 of 2009) *இலங்கை நாடாளுமன்றில் ஏகமனதாக நிறைவேறியது.*

*மேற்படி சுருக்க வரலாறு இந்திய வம்சாவளிகளான இலங்கை பிரஜைகளின் குடியுரிமைப் பறிப்பு மற்றும் மீளவழங்கலை பட்டியலிட்டு காட்டுகிறது.*

*இந்த வரலாற்றில் அவதானிக்கப்படவேண்டிய ஒன்று 1948 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தால் மலையகத் தமிழர்களின்* (Citizenship act, no/ 18 of 1948 *குடியுரிமைப் பறிக்கப்பட்டதனால் 1949 ஆம் ஆண்டு முதல் அவர்களது வாக்குரிமையும் பறிபோனது* (Ceylon Parliamentary Elections (amendment) act, no/ 48 of 1949 stipulated citizenship as a requiremebt to vote/ Indian tamils, bHt considered citizens as per the 1948 and 1949 acts, were disenfranchised)

*அதற்கடுத்து 1986 வரை சிறுகச் சிறுக ஆங்காங்கு குடியுரிமை*



*மீளவும் வழங்கப்பட்டது. 1986 க்குப் பின்னரே அதிகரித்த அளவில் குடியுரிமை மீளவும் வழங்கப்பட்டது. பறிக்கப்பட்டபோது 1948 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டம் எனும் ஒரு சட்டத்தினைக் கொண்டு பறித்துவிட்டு அதனை மீள வழங்கும்போது வெள்வேறு சட்டங்களின், ஒப்பந்தங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ளதோடு, 1931 முதல் 1948 வரை இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மக்களை வெவ்வேறு விதமாக அணுகியிருக்கிறார்கள் என்பதையும் அந்தச் சட்டங்களின் தலைப்புகள் பிரதிபலித்து நிற்கின்றன.*

1. *1949 ஆம் ஆண்டு 3ஆம் இலக்க இந்திய: பாகிஸ்தான் வதிவாளர்களின் குடியுரிமைச் சட்டம்* (India Pakistan residents citizenship act, no 3 of 1949)

2. *1954 ஆம் ஆண்டு அப்போதைய இந்திய பிரதமர் ஜவகர்லால் நேருவுக்கும் இலங்கை அதிபர் கொத்தலாவலைக்கும் இடையில இந்திய இலங்கைக் குடியுரிமை ஒப்பந்தம்* (Indo-Ceylon agreemebt of 1954 Nehru - Kotelawala Pact )

3. *1964 ஆம் ஆண்டு இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவிற்கும் இந்திய பிரதமர் லால் பகதூர் சாஸ்த்திரிக்கும் இடையிலான 'இலங்கை இந்திய ஒப்பந்தம்'* (Indo-Ceylon agreement of 1964 (Sirima- Sastri Pact)

4. *1974 ஆம் ஆண்டு இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கும் இந்திய பிரதமர் இந்திரா காந்திக்கும் இடையிலான 'இலங்கை இந்திய ஒப்பந்தம்'* Indo-Ceylon agreement of 1974 (Sirima-Indira Pact)

5. *1986ஆம் ஆண்டு 5ஆம் இலக்க நாடற்ற ஆட்களுக்கு குடியுரிமை வழங்கும் சட்டம்* grant of Citizenship toStateless Persons act, no/ 5 of 1986

6. *1988 ஆம் ஆண்டு 5ஆம் இலக்க நாடற்ற ஆட்களுக்கு குடியுரிமை வழங்கும் (திருத்தச்) சட்டம்* grant of Citizebship to Stateless Persons (amendment) act, no/ 5 of 1986

7. *2003ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க இந்திய வம்சாவளியினரான ஆட்களுக்கு குடியுரிமை வழங்கும் சட்டம்* grant of Citizebship to Persons of Indian origin act, no 35 Hf 2003

8. *2009 ஆம் ஆண்டு 5ஆம் இலக்க நாடற்ற ஆட்களுக்கு குடியுரிமை வழங்கும் (திருத்தச்) சட்டம்* grant of Citizebship to Stateless Persons (amendment) act,

no 5 of 2009

*9. 2009 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க இந்திய வம்சாவளியினரான ஆட்களுக்கு குடியுரிமை வழங்கும் (திருத்தச்) சட்டம்* grant of Citizebship to Persons of Indian origin act (amendment) act, no 6 of 2009

*1949 முதல் 2009 வரையான அறுபது (60) ஆண்டுகளில் பகுதி பகுதியாக மீள வழங்கப்பட்ட எந்தக் குடியுரிமைச் சட்டத்திலும் மலையகத் தமிழ் மக்களை இலங்கைப் பிரஜைகளாக அடையாளப் படுத்தவோ அங்கீகரிக்கவோ ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.*

*1949 ஆம் ஆண்டு இந்திய பாகிஸ்தான் வதிவாளர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. 1954, 1964, 1974 ஆகிய ஆண்டுகளில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களில் இவர்கள் இந்தியர்கள் என்பதாகவே அடையாளப் படுத்தப்பட்டு அவர்களை இந்தியா மீளப்பெறவேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து 1986 மற்றும் 1988 ஆகிய சந்தர்ப்பங்களில் இந்த மக்களை நாடற்றவர்கள் என்று சட்டத்தினாலேயே சுட்டிக்காட்டக்கட்டுள்ளது. 2003 மற்றும் 2009 அகிய சந்தர்ப்பங்களில் இந்திய வம்சாவவளியினர் என்றே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இப்போதும் இலங்கை சனத்தொகைக் கணக்கெடுப்பின்பொது 'இந்தியத் தமிழர்' என்று குறிப்பிடப்பட்டே சேர்க்கப்படுகின்றனர்.*



*இந்த நிலைமையானது இந்த மக்கள் இன்னும் முழுமையாக இலங்கைப் பிரஜைகளாக அங்கீகரிக்கப் படவில்லை என்பதற்கான ஆதாரமாகும். தனியே சட்டத்தினனால் மாத்திரம் அல்லாது அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதாலும் அவர்கள் இன்னும் முழுமையான இலங்கைப் பிரஜைகளாக அங்கீகரிக்கப் படவில்லை. காணி உரிமை, வீட்டு உரிமை மறுக்கப்பட்ட மக்களாக, இலவசக் கல்வி முறைமைக்குள் 40 ஆண்டுகள் கழித்தே உள்ளீர்க்கப் பட்டவர்களாக, இன்னுமே ஆரம்ப சுகாதார வசதிகளுக்காக அரச பொது சுகாதார வாய்ப்பு மறுக்கப் பட்டவர்களாகவே, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கிடைக்கப் பெறாதவர்களாக, உள்நாட்டு நிர்வாகத்தில் முழுமையாக உள்ளீர்க்கப் படாதவர்களாக, தமக்கான தபால் முகவரி ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக வைக்கப்பட்டுள்ளனர்.*



*2022 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் சமகால அடிமைததனம் குறித்த அறிக்கையாளர் டொமாயோ ஒபக்காட்டோ பெருந்தோட்டப்பகுதிகளில் வாழும் மக்கள் (99 வீத தமிழர்கள்) இன்னும் அரை அடிமை நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளனர் என அறிக்கையிட்டு மேற்படி நிலைமைகளை உறுதி செய்துள்ளளார்.*

எனவே குடியுரிமை பறிக்கப்பட்டதனால் வாக்குரிமை பறிக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்கள் வாக்குரிமையின் வலியை சுமந்தவர்களாக அதன் வலிமையை உணர்த்தியவாறே இலங்கையில் வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர். இதில் உள்ள சுவாரஷ்மான விடயம் என்னவெனில் வாக்களிப்பதனால் மட்டுமே உரிமைகளை வென்றெடுக்கலாம் என்ற நினைபபில் நாட்டில் ஏனைய எல்லா பாகங்களையும் விட எல்லா தேர்தல்களிலும் அதிக வீதாசாரத்தில் (வாக்களிப்பு வீதம்) வாக்களிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

# கொன்றால் பாவம்



நோயல் நடேசன்

மனிதர்களது அகவயக்காரணிகளான காதல், காமம், துயரம், நகைச்சுவை, பேராசை என்பனவற்றை வைத்து இலக்கியங்கள் மற்றும் திரைப்படங்கள் உருவாக்கும்போது அப்படைப்புகள் காலம் கடந்து நிலைக்கும். நாம் அவற்றை கலாச்சாரம், பண்பாடு, நிலம் கடந்து புரிந்துகொள்ள முடியும். இலியட் ஓடிசி போன்ற கிரேக்கக் காவியங்களோ அல்லது நமது இந்திய காவியங்களான மகாபாரதம் இராமாயணம் போன்றவையோ மத மயபபடுத்தாது விட்டிருந்தாலும் நிச்சயம் நிலைத்திருக்கும். அவை அடிப்படை மனித இயல்புகளின் சாரத்தை எழுத்தில் வைக்கின்றன என்பதே அதற்கான காரணம்.

இந்த காவியங்களுக்கு நிகராக பண்டைய கிரேக்க நாடகங்கள் இன்றும் உலகத்தின் பல மேடைகளில், 2500 வருடங்கள் பின்னும், மேடையேற்றப்படுகின்றன. இவற்றைப் புரிந்துகொள்வதற்கு மொழியோ கலாச்சாரமோ தேவையில்லை. முக்கியமாக கிரேக்க துன்பியல் நாடகங்களை எழுதியவர்கள், அக்காலக் காப்பியங்களையும் தொன்மைக் கதைகளையும் கொண்டு எழுதினார்கள். அவர்கள் பெயர்கள் இன்றும் பல்கலைக்கழக மாணவர்கள் தவறாது உச்சரிக்கிறார்கள். அகமனான், எடிப்பஸ், மெடியா ( Aeschylus-Agamemnon. Sophocles-Oedipus the King and Euripides- Medea) போன்றோரின் பல நாடகங்கள் இருந்தாலும் எனக்குப் பிடித்தவை, தெரிந்தவையே இங்குள்ளன.

இப்படிப்பட்ட கிரேக்க நாடக ஆசிரியர்களது நாடகங்களுக்கு ஈடானது முதலாவது மகாயுத்தத்தில் இணைந்து தனது 27 வயதில் இறந்த இளைஞன் ரோபட் புரோக்கின் நாடகம் (Rupert Brooke#s tragic one act play 'Lithuania' staged in 1915)/ 1915ல் லித்துவேனியா என்ற பெயரில் அந்த நாடகம் வெளிவந்தது. பிரித்தானியாவை சேர்ந்த இவன் இறக்காமலிருந்தால் ஷேக்ஸ்பியர், மில்டன் வரிசையில் இடம்பெற்றிருக்கலாம். இந்த நாடகத்தைப்போல் பிரபலமானது சோல்ஜர் (The Soldier) எனும் ரோபட் புரோக்கின் ஒரு கவிதை.

The Soldier

If I should die. think only this of me:

That there's some corner of a foreign field

That is for ever England/ There shall be

In that rich earth a richer dust concealed;

A dust whom England bore. shaped. made aware.

Gave. once. her flowers to love. her ways to roam.

A body of England's. breathing English air.

Washed by the rivers. blest by suns of home.

And think. this heart. all evil shed away.

A pulse in the eternal mind. no less

Gives somewhere back the thoughts by England given;

Her sights and sounds; dreams happy as her day;

And laughter. learnt of friends; and gentleness.

In hearts at peace. under an English heaven

நமக்கு முதல் நாள் குடித்த வைன் கழிவாக போவதுமல்லாது அடுத்த நாள் என்ன குடித்தோம் என மறந்துவிடும். ஆனால் பழக்கத் தோசத்தாலும் அந்தந்த நேரத்தின் போதைக்காகவும் வைன் குடிப்போம். அது போல்தான் நான் தமிழ்ப் படங்கள் பார்ப்பது. அடுத்த நாள் பெயர்கூட நினைவிராது. முடிவைப் பார்க்காது நித்திரைக்குச் சென்ற என் மனைவி, படத்தின் முடிவு என்ன என்றபோது மட்டும் என்ன பார்த்தேன் என சிந்திப்பேன். ஆனால் சில திரைப்படங்கள், பாடசாலைக்காலத்தில் மேசையின் கீழ்ப் பகுதியில் ஒட்டிய சுவிங்கமாக, பல காலமாக நினைவுகளில் குடியிருக்கும்.

காரணம் என்ன?

திரைத்துறைகளில் மனவியல் ரீதியான எதிர்மறை கதைகளைப் பார்க்கும்போது அவை மனத்தின் ஆழத்தில் பொருந்தமைத்து அங்கு குறுகுறுத்தபடி வாழ்ந்து கொண்டிருக்கும். அவைகளைப் படமாக்குவதற்கு மிகுந்த துணிவு வேண்டும். பணத்தை மட்டும் லட்சியமாகக் கொண்டவர்களால் படமாக்க முடியாது. ஆனால் இப்படியான படங்களைப் பற்றிய நினைவுகள் பார்ப்பவர்களை விட்டு இலகுவில் விலகாது.

இந்தியத் திரைப்படங்களில், தமிழ் இந்தி தெலுங்கு மொழிப்படங்கள் வசூலை குறி வைத்து, நடிகர்களது விருப்பத்திற்கேற்ப கதை எழுதித் தயாரிக்கப்படுபவை. போருக்காக ஒரே மாதிரியாகத் தயாரிக்கப்படும் ஆயுதங்கள் போன்று ஒரே நோக்கம் கொண்டவை.

நமது மனத்துக்கு ஆறுதலாக, கன்னட திரைத்துறையிலும் மலையாளத்திலும் பரீட்சார்த்த முயற்சிகளை இடைக்கிடையே பார்க்க முடியும். மலையாளத்தில் கிரேக்க நாடகமான எலக்ரா, கிரேக்க அரசனின் மனைவி, காதலன் உதவியுடன் கணவனைக் கொல்லுவதை(Elektra by Sophocles) நயன்தாரா , பிரகாஷ்ராஜ், மனுஷா கோரலா போன்றவர்களை வைத்து ஒரு அருமையான படத்தை எடுத்திருந்தார்கள்.

சமீபத்தில் நான் பார்த்த படம் ‘கொன்றால் பாவம்‘. கன்னட நாடகத்திலிருந்து தயாள் பத்மநாபனால் இயக்கப்பட்டுள்ளது. படத்தைப் பார்த்துக்கொண்டிருந்த எனக்கு எங்கோ படித்த நினைவு வருகிறதே என்று தலையைக் குடைந்தபோது : அல்பேட் காமுவின் அன்னியன் (Stranger) கதாநாயகன் சிறையிலிருந்து படிக்கும் பத்திரிகையில் வந்த செய்தியாக வருகிறது. அந்த செய்தியில் செக்கேஸ்லேவாக்கியாவில் நடந்த உண்மை சம்பவமாக அது வருகிறது

அக்கால செக்கோஸ்லேவியாவில் பணம் சேர்ப்பதற்காக ஒரு இளைஞன் வீட்டை விட்டு வெளியேறுகிறான். பல வருடங்கள் பணத்தைச் சேர்த்து, திருமணமாகி, குழந்தையுடன் குடும்பஸ் தனாகிறான். பணத்துடனும் மனைவி குழந்தையோடு தனது பிறந்த வீட்டை நோக்கிப் புறப்படுகிறான். ஊரை அடைந்தபோது குழந்தையையும் மனைவியையும் ஒரு ஹோட்டலில் விட்டு விட்டு, தனது வீட்டை நோக்கிச் சென்றபோது, அங்கு அவனது சகோதரியும் தாயும் அந்த வீட்டை ஹோட்டலாக நடத்துகிறார்கள். அவர்கள் அவனை அடையாளம் காணவில்லை. தன்னை அடையாளம் காட்டாமல் அந்த வீட்டில் வாடகைக்கு இருந்ததுடன், தனது பணத்தை அவர்களுக்குக் காட்டினான். அன்றிரவு தாயும் சகோதரியும் அவனைக் கொலை செய்து பணத்தைத் திருடினார்கள். அடுத்த நாள் கணவனைத் தேடி வந்த மனைவி அவனை அடையாளம் சொன்னபோது தாய் கயிற்றில் தொங்கி உயிர்விட்டார். சகோதரி கிணற்றில் பாய்ந்து தற்கொலை செய்தார்.‘

> **படத்தைப் பார்த்துக்கொண்டிருந்த எனக்கு எங்கோ படித்த நினைவு வருகிறதே என்று தலையைக் குடைந்தபோது அல்பேட் காமுவின் அன்னியன் (Stranger) கதாநாயகன் சிறையிலிருந்து படிக்கும் பத்திரிகையில் வந்த செய்தியாக வருகிறது. அந்த செய்தியில் செக்கோஸ்லேவாக்கியாவில் நடந்த உண்மை சம்பவமாக அது வருகிறது**

அல்பேட் காமுவின் இந்த நாவல் அன்னியன் (Stranger) *1945*களில் எழுதப்பட்டது

ஆனால் இதன் முன்பே லித்துவேனியா என்ற ரோபட் புரோக்கின் நாடகம், கிரிக்க நாடகம்போல் சோகத்தில் முடிவதுடன் வறுமையிலும் பேராசை தவறு என்ற அறத்தை வெளிப்படுத்துகிறது. இந்த கதையின் கரு செக்கோஸ்லேவேக்கியா, லித்துவேனியாவில் மட்டுமல்ல இலங்கை இந்தியாவிலும் நடக்கலாம். மனிதர்களின் நிறம், இடம், கலாச்சாரம் வேறுபாடாக தோன்றியபோதும் அடிப்படையில் பேராசை எங்குமுண்டு.

‘கொன்றால் பாவம்‘ திரைப்படம், தமிழ்நாடு : தர்மபுரி மாவட்டத்தில் நிகழும் ஒரு குடும்பத்தின் கதை. வட்டிக்குக் கடன் எடுத்துத் துன்பப்படும் குடும்பம். அதில் காலம் கடந்தும் திருமணமாகாத பெண் மல்லிகா பெற்றோருடன் சிறிய வீட்டில் வாழ்ந்து வருகிறார். அப்போது புதிதாகக் கிராமத்துக்கு ஒரு இளைஞன் வருகிறான். அவனிடம் கடன் கொடுத்தவர் வந்து குடும்பத்தினரை இழிவு படுத்தும்போது அந்த இளைஞன் தனது பணத்தைக் காட்டி அதை

வைத்து கடனை அடைக்கும்படி கேட்க குடும்பத்தினர் மறுத்துவிடுகிறனர்.

இறுதியில் அவனது பணத்தை அடையும் நோக்கில் மல்லிகா அவனை ஆசை காட்டி மயக்க முயன்றபோது அவன் எரிந்து விழ, இறுதியில் அவனைக் கொன்று பணத்தை அபகரிக்க முழு குடும்பமும் திட்டம் தீட்டுகிறது .

மல்லிகா அவன் கழுத்தை வெட்டி கொலை செய்தபின், அந்த இளைஞன் ஆரம்பத்தில் வீட்டை விட்டு ஓடிய அந்தக் குடும்பத்து மகன் என்பது தெரிய வந்ததும் முழுக் குடும்பமும் தற்கொலை செய்கிறது.

மல்லிகாவாக வரும் வரலட்சுமி சரத்குமாரின் நடிப்பு மிகவும் இயற்கையானது. பேசும் வசனங்கள், கல்யாணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பகட்டில்லாத பெண்ணின் நடிப்பு, ஒளிவு மறைவற்ற வார்த்தைகளோடு . எதிர்மறையான ஒரு பாத்திரமாக நடிக்காது, திரைப்படத்தில் வாழ்கிறார்: ஒவ்வொரு கிராமத்திலும், கொலை செய்யாத போதிலும், பல மல்லிகாக்கள் வாழ்கிறார்கள். சார்லி மிகவும் திறமையான நடிகர். அவரது முத்திரை தெரிகிறது. ஈஸ்வரி ராவை நான் இதற்கு முன் பார்த்ததில்லை. தாயாக, மிகவும் வலிமையான பாத்திரம். ஆண் பாத்திரமாக (சந்தோஸ் பிரதாப்) தனக்கான பகுதியைச் செய்கிறார்.

இந்தப் படத்தில் கதைக்கப்பால் வசனங்கள் தெறித்து விழுகிறன. அலங்காரமோ இரட்டைத்தன்மை, அடுக்கு மொழிகளற்று, மல்லிகாவின் வசனங்கள் நம்மை அதிரவைக்கிறன. 'முற்றிய கத்தரிக்காய் சந்தையில் என்ன விலை தெரியுமா' எனும்போது சீதன முறை சமூகத்தை நமக்குச் சவுக்கடியாக வெளிப்படுத்துகிறது. அதேபோல் கதைகளமான கிராமத்தை மிக அருமையாக கமரா சிறைப்படுத்தியுள்ளது.

இது ஒரு வித 'சைகோலஜிக்கல் திரில்லர்' என்பதுடன் படத்தின் இறுதி முடிவை ஊகிக்க முடியாதவாது சிறப்பாக கதை நகர்த்திப்படமாக்கியிருக்கிறார்கள். வெளிப்புற தாக்கங்களால் மனிதர்களில் மனங்கள் மாறுவதைத் தெளிவாக இத்திரைப்படம் காட்டுகிறது. ஆனால் கன்னடம் தெலுங்கில் வெளியாகி பின்பே தமிழில் எடுத்திருக்கிறார்கள். எனவே கனவுகளில் மிதக்க விரும்பும் எமது ரசிகர்களுக்கு விருப்பமான படமாக இது இருக்குமா என்பது சந்தேகமே!

நடிகர் ரஜினிகாந்த் சொன்னதுபோல், ஐந்து நட்சத்திர உணவகத்திலும் இட்லி, தோசை மட்டுமே நாம் சாப்பிடுவோம் இல்லையா?

அ





# கறுப்பு ஜூலையும் புகைப்பட அவதூறுகளும்

**சதீஸ் செல்வராஜ்**

ஜூலை மாதம் வரும் பொழுதெல்லாம் சமூக வலைத்தளங்களில் ஒரு நபரின் முகத்திற்கு வட்ட வடிவில் அடையாளமிடப்பட்ட புகைப்படமும் உலா வருவது வழமையாகிவிட்டது. அந்த முகம் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தற்போதைய பொதுச்செயலாளர் டில்வின் சில்வாவினுடையது என்றும் அல்லது அது அவர்தானா என்ற வினாவுடனும் அப்புகைப்படம் பதிவேற்றப்பட்டு பகிரப்படுகிறது. இவ்வாறு உலாவரும் இப்புகைப்படத்தின் உண்மைத் தன்மை குறித்தே இங்கு பார்க்கப்போகிறோம்.

அந்தப்புகைப்படத்தில் இடதுபுறத்தில் நிர்வாணமாக்கப்பட்ட நபர் ஒருவர் தனது தலையில் கைவைத்தவாறே கூனிக் குறுகி அமர்ந்திருக்கிறார். பாதிக்கப்பட்டவரின் இடப்பக்கத்தில் ஒருவரும் அவருக்கு முன்னால் மூவரும் நிற்கிறார்கள். அம்மூவரில் மூக்குக் கண்ணாடி அணிந்துள்ள நபர் சிரித்து மகிழ்ந்தவாறிருப்பார். இவ்வாறான மிலேச்சத்தனத்தையே இப்புகைப்படம் காட்டிநிற்கிறது. இந்தப் புகைப்படத்தில் இருக்கும் மூக்குக் கண்ணாடி அணிந்த நபர் யார் என்பதே பேசுபொருளாகவிருக்கிறது? சிங்கள சமூகம் இப்புகைப்படம் குறித்து தெளிவடைந்துள்ள போதிலும், தமிழ்ச் சமூகத்திடம் அத்தெளிவு இன்னமும் இல்லை.

தொடக்கத்தில் இப்புகைப்படம் தேர்தல்காலங்களிலும், அரசியற்களம் சூடுபிடிக்கும் தருணங்களிலுமே பகிரப்பட்டு வந்தது. இந்தப் புகைப்படம் 1988.89களில் ஜே.வி.பி. செயற்பாடுகளுடன் தொடர்புபட்டதென்றும், மூக்குக் கண்ணாடி அணிந்துள்ள நபர் ஜே.வி.பி. இன் நிகழ்கால பொதுச் செயலாளர் டில்வின் சில்வா என்றும் கூறப்பட்டது.

'88.89 காலப்பகுதியில், ஜே.வி.பி.காரரர்களின் சொல்லுக்கு கீழ்ப்படியாதவர்களை சித்திரவதை செய்ய டில்வின் சில்வாவின் தலைமையில் சென்ற துன்புறுத்தும் குழு!

> **இந்தப் புகைப்படத்தில் இருக்கும் மூக்குக் கண்ணாடி அணிந்த நபர் யார் என்பதே பேசுபொருளாக இருக்கிறது?**
>
> **சிங்கள சமூகம் இப்புகைப்படம் குறித்து தெளிவடைந்துள்ள போதிலும், தமிழ்ச் சமூகத்திடம் அத்தெளிவு இன்னமும் இல்லை.**

(ஜே.வி.பி. இன் கடந்தகால அனுபவம் இல்லாத, அவர்களின் பொய்ப் புரட்டுகளுக்கு மயங்கிப் போயிருக்கும் இன்றைய தலைமுறையினர் தெரிந்துகொள்வதற்காக)' என்றே முதன்முதலில் இப்புகைப்படம் Yasas Darshanapriya என்ற முகப்புத்தக கணக்கில் பதிவேற்றப்பட்டு பகிரப்பட்டது.

அதற்கடுத்ததாக 2018 நவம்பர் 25 ஆம் திகதி Podujana Peramuna என்ற முகப்புத்தக பக்கத்தில் 'ஜனநாயகத்தின் காவலர்கள் அன்று!' என எழுதப்பட்டு மீண்டும் அப் புகைப்படம் பதிவேற்றப்பட்டிருந்தது. இவ்விரு சந்தர்ப்பங்களிலும் இந்தப் புகைப்படம் அதிகளவில் பகிரப்பட்டிருந்தது. அதன் பின்னரே இந்தப் புகைப்படத்தில் இருக்கும் மூக்குக் கண்ணாடி அணிந்த நபர் உண்மையிலேயே டில்வின் சில்வாதானா என்ற கதையாடல் ஆரம்பமானது. Fact Crescendo அமைப்பு அதன் உண்மைத் தன்மையை அறிய தனது ஆய்வையும் நடத்தியது. அதன்படி, அவர்கள் Google Reverse Image Search இல் இந்தப் புகைப்படம் குறித்து தேடினார்கள். அதன்படி, அப்புகைப்படம் 88.89 காலப்பகுதிக்குரியது அல்லவெனவும், அது 1983 கறுப்பு ஜூலையுடன் தொடர்புடையது என்பதும்

*உறுதியாகியது.*

*1983 ஜூலை 23 ஆம் திகதி, வடக்கில் 13 இராணுவ சிப்பாய்கள் விடுதலைப் புலிகளினால் படுகொலை செய்யப்பட்டதையடுத்து, அந்நாட்களில் நாடு முழுவதும் தமிழ் மக்களை இலக்கு வைத்து சிங்கள இனவாதிகளால் இனவாத தாக்குதல் தொடர்ச்சியாக நடத்தப்பட்டது. அதன் பின்னணியில் இருந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியற் தலைவர்களும் அவர்களின் அடியாட்களும் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. அக்கட்சியின் தொழிற்சங்க உறுப்பினர்களும் தமிழர்களுக்கு எதிரான தாக்குதலில் பயன்படுத்தப்பட்டுள்ளனர். கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல்வாதிகள் கச்சேரிக்குள் புகுந்து அங்கிருந்த வாக்காளர் பதிவு பட்டியலை கொண்டு வந்து தமிழர்களுடைய விலாசங்களை தங்களது காடையர்களுக்கு வழங்கியமை பகிரங்கமான விடயமாகவிருக்கிறது.*

*அதன்படி, 1983 தமிழர்களுக்கு எதிரான வன்முறையில் கொழும்பு பிரதேசங்களில் வசித்துவந்த தமிழர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். உடைமைகள் அழிக்கப்பட்டன. கொள்ளையடிக்கப் பட்டன. தாக்குதலுக்கும் ஆளாயினர். பலர் படுகொலை செய்யப்பட்டனர்.*

*இவ்வாறான சூழலில் 'எத்த' என்ற சிங்கள பத்திரிகையில் ஊடகவியலாளராக செயற்பட்டுவந்த*






*சந்திரகுப்த என்ற புகைப்படக் கலைஞராலேயே இப்புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. 1983 ஜூலை மாதத்தில் பொரளை பஸ் தரிப்பிடத்திற்கு அருகிலேயே குறித்த சம்பவம் நடந்துள்ளது. பேரினவாதிகள் கூட்டு சேர்ந்து தமிழரின் ஆடைகளை கலைந்து நிர்வாணமாக்கி அவரை தாக்கும்போது இப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் புகைப்படத்தில் நிர்வாணமாக்கப் பட்டிருக்கும் தமிழர் இனவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்துள்ளதாக பதிவாகியிருக்கிறது.*

*புகைப்படக்கலைஞர் சந்திரகுப்த அமரசிங்கவிடம் நீண்ட காலமாகவிருந்த இப்புகைப்படம் 1997 ஆம் ஆண்டு ராவய பத்திரிகையில் முதன்முதலில் பிரசுரிக்கப்பட்டது. அந்த வெளியீட்டில் இது பொரளை பஸ் தரிப்பிடத்தில் நடந்த சம்பவம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ராவய பத்திரிகை 1987 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.*

*ராவயபத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் அவர் எழுதிய கட்டுரைக்கு தன்னுடைய அனுமதியின்றி இந்தப் புகைப்படத்தை இணைத்ததாக சந்திரகுப்தவால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது. சந்திரகுப்தவிற்கு சார்பாக நீதிமன்றத்தின் தீர்ப்பு அமைந்தது. புகைப்படக் கலைஞர் சந்திரகுப்த அமரசிங்கவும், ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவனும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தப் புகைப்படத்தில் இருப்பவர் ஜே.வி.பி.இன் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா என்று குறிப்பிடவில்லை. இப்புகைப்படம் குறித்து* Fact Crescendo *விக்டர் ஐவனிடம் கேட்டபோது, இதை தான் சந்திரகுப்தவிடம் பெற்றுக்கொண்டாகவும், இது கறுப்பு ஜூலை கலவரத்தின் போது எடுக்கப்பட்டதெனவும், இதில் இருப்பவர் டில்வின் சில்வா அல்லவெனவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*2021 ஜூலை 25 ஆம் திகதி* Dr.Thusiyan Nandakumar *என்ற ட்விட்டர் கணக்கில் அந்தப் புகைப்படத்தில் இருக்கும் கண்ணாடி அணிந்த நபரின் உருவம் பெருப்பிக்கப்பட்டு,* #To all Sri Lankans writing/tweeting about #blackJuly/

Instead of focusing on saviours or empty messages of #never again# – take practical measures and hold perpetrators accountable/

For example/ Identify this man/# *என்று எழுதப்பட்டு பதிவேற்றப்பட்டிருந்தது.*

**புகைப்படக்கலைஞர் சந்திரகுப்த அமரசிங்கவிடம் நீண்ட காலமாகவிருந்த இப்புகைப்படம் 1997 ஆம் ஆண்டு ராவய பத்திரிகையில் முதன்முதலில் பிரசுரிக்கப்பட்டது. அந்த வெளியீட்டில் இது பொரளை பஸ் தரிப்பிடத்தில் நடந்த சம்பவம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.**


‘எவ்வாறாயினும் இந்தப் புகைப்படத்தில் இருக்கும் வெள்ளை சட்டையும் கறுப்பு நிற நீள காற்சட்டையும் மூக்குக்கண்ணாடியும் அணிந்துள்ள நபர் யார் என்பதை நிச்சயமாக இனங்காண எமக்கு ஆளுமை கிடைக்கவில்லை.‘ என Fact Crescendo தெரிவிக்கிறது.

இப்புகைப்படம் தொடர்பில் Fact Crescendo அமைப்பு ஜே.வி.பி. இன் பொதுச் செயலாளர் டில்வின் சில்வாவிடமும் விசாரித்துள்ளது. அதன்போது அவர், ‘இந்தப் புகைப்படத்தில் இருக்கும் நபர் யார் என்றோ, இந்த இடம் எங்குள்ளது என்றோ, எதனுடன் சம்பந்தப்பட்டது என்றோ தனக்கு எதுவும் தெரியாது‘ என்று தெரிவித்துள்ளார். தனக்கு சேறுபூசுவதற்காக நீண்டகாலமாக பயன்படுத்திவரும் தனது உருவம் அல்லாத புகைப்படம் இதுவென்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தான் பிறந்தது 1956 இல் என்றும், கறுப்பு ஜூலையின் போது (1983 ஆம் வருடம்) தனக்கு 27 வயது என்றும் அவர் தெரிவித்துள்ளார். தான் 40 வயதிலேயே (90களில்) மூக்குக்கண்ணாடி அணிய ஆரம்பித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

Fact Crescendo இன் ஆய்வின்படி, இப்புகைப்படத்தில் இருக்கும் நபர் டில்வின் சில்வாவை விட உயரமானவர் என்ற முடிவு எட்டப்பட்டுள்ளது. இருவரும் அணிந்துள்ள மூக்குக்கண்ணாடிகளின் தன்மையும் வேறுபட்டுள்ளது. முகத்தின் பண்புகளும் (Facial Features) ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எடுத்துகாட்டாக, காதின் அமைப்பு முற்றிலும் வேறுபட்டிருக்கிறது. ஆக, இப்புகைப்படத்தில் இருப்பவர் டில்வின் சில்வா அல்லவென்பது ஏற்கெனவே ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கிறது.




**இப்புகைப்படம் தொடர்பில் Fact Crescendo அமைப்பு ஜே.வி.பி. இன் பொதுச் செயலாளர் டில்வின் சில்வாவிடமும் விசாரித்துள்ளது. அதன்போது அவர், ‘இந்தப் புகைப்படத்தில் இருக்கும் நபர் யார் என்றோ, இந்த இடம் எங்குள்ளது என்றோ, எதனுடன் சம்பந்தப்பட்டது என்றோ தனக்கு எதுவும் தெரியாது‘ என்று தெரிவித்துள்ளார். தனக்கு சேறுபூசுவதற்காக நீண்டகாலமாக பயன்படுத்திவரும் தனது உருவம் அல்லாத புகைப்படம் இதுவென்று அவர் குறிப்பிட்டுள்ளார்.**

ஆனால், சிங்கள இனவாத அரசியல்வாதிகளின் ஒருபிரிவினர் 88.89களின் போது ஜே.வி.பியினர் பொதுமக்களை துன்புறுத்தியபோது இப்புகைப்படம் எடுக்கப்பட்டது என்றும், மற்றொரு பிரிவினர் 1983 இல் ஜே.வி.பி.யினர் தமிழர்களை தாக்கியபோது எடுக்கப்பட்ட புகைப்படம் இதுவென்றும் வதந்திகளை பரப்பி வருகின்றனர். அதுப்போலவே, தமிழ் இனவாத அரசில்வாதிகளும் பழைய இடதுசாரி கூட்டங்களும் 1983 இல் ஜே.வி.பி. தமிழர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தியபோது எடுக்கப்பட்ட புகைப்படம் என்றும் அவதூறு கற்பித்துவருகின்றன.

ஆனால், இவ்விரு கருத்துக்களும் முற்றிலும் பொய்யானது என்று ஆணித்தரமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இம்முறையும் கறுப்பு ஜூலை நினைவுகூரலுடன் சேர்ந்து இப்புகைப்படமும் வலம் வந்தது. ஆனால், அந்தப் போலியான பரப்புரைக்கு சிங்கள சமூகத்திடமிருந்து பாரிய எதிர்ப்பும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன. சிங்கள சமூகத்திடம் இம்முறை இப்புகைப்படம் எடுபடவில்லை. மக்கள் தெளிவடைந்திருக்கிறார்கள்.





# ‘ஒரு ஏதோ..!’

## அங்கும் இங்கும், எங்கும்
## ஒரு நீள் கதை

### முன் சிறு குறு குறிப்பு

மிக, மிஹ்ஹ நீண்ண்ண்ட நாட்களுக்கு முன் ஒரு Novel எழுத கிளம்பினேன்.

அது எப்போதோ வெளிவந்திருக்க வேண்டும்.

வரவில்லை.

காரணம் ஆயிரம்.

பல நீள் விஷயங்களுக்கான எதிர்:புதிர்:சதிர் .இன்ன பிற, என்ற பல ‘திர்‘ ‘திறில் கருக்கள்‘ மனப்படங்கில் குவிந்திருப்பினும் அவை கடப்பில் கடாசப்பட ‘நீதி‘ உண்டு◦

எக்கச்சக்கர் கதைகள் எழுதுகிறார்கள். இன்னும் எக்கச்சக்கர் அதை புளுகுகிறார்கள். எக்கச்சக்க விழாக்கள் எடுத்து, எக்கச்சக்க விருதுகளை வாரி அப்புகிறார்கள்.

இன்றைய தமிழ் இலக்கியம் இவ்வாறுதான் குறுகி, குறாவுகிறது.

தொழில் நுட்ப வசதிகள், தொலை தூரத்து விஷய விவகாரங்களை அறிய வாய்ப்புகள் பீறிட்டு கிளர்ந்துள்ள இந்நவீன உலகில், பல பின்னுக்கு வந்த, பிறமொழி இலக்கியங்கள் அபரிமிதமாய் வளர, நாம் இட்டலிச் சட்டிக்குள் இடும்பன் போர் நடத்துவது துயர்.

சும்மா மண்டையில் பட்டதால், இதைச்சொல்ல வேண்டியிருந்தது. நான் சொன்ன விதத்தில் பிழை கூட இருக்கலாம்.

இது போக, நான் தொடரவிருக்கும் இந்த இடையில் அறுபட்ட ,முன்னாள் : ?? NOVEL இன் சுருக்கமாகவும் இதை (?!) ‘ஒரு ஏதோ‘வை கொள்ளலாம்.

**சிறினோ சிறி சிறிசு**

**அதிகாரம் ஒன்று.**

# இங்கு

வெளியே படு(ஊ) குளிர். உள்ளே, எதுபடியும் சூடாகத்தான் இருந்திருக்க வேண்டும். சூடாக்கிகள் தம்பாட்டில் செம்மையாகத்தான் தொழிற்பட்டன. சாளரங்கள் படு இறுக்கமாய்த்தான் சாத்தப்பட்டிருந்தன. ஆனால், உள்ளேயும் குளிர்.

படு(குளிர்) ..!!!!!

அதை வெறும் நிர்வாண குளிரென்றும் சொல்ல முடியாது. ஆச்சர்யகரமாக படு குளிரும் படு வெக்கையுமிலாத ஒரு மர்ம உணர்வு, யதார்த்தத்தில் இருப்பதும் உண்மை. பலர் இம்மாதிரியான குளிருஷ்ணமாய உஷ்ணக்குளிரை உணர்ந்திருக்கலாம்.

அதல்ல அறையுள்.

அது வெறும் குளிர்தான்.

அது வெறும், அப்பட்ட, 'அப்படிப்பட்ட' குளிர்தான்.

பஞ்சபூத பஞ்சேந்திரியங்களின் குழப்பகரமான, ஒன்றுக்கொன்றான ஏறுப்படுகை சார்ந்து, உஷ்ணத்திலும் குளிர் இருக்கலாமாக்கும்.

Heating செம்மையாக வேலை செய்கிறபோது 'இவண்',: வெறும் அப்பட்ட, அப்படிப்பட்ட குளிரையே உணர்ந்தால் வேறெதைச் சொல்ல முடியும்?!!

,இவனை 'இவண்' என்றுதான் விளிக்க முடியும். ஏனெனில், இவன் 'இவன்' இல்லை. இவனிடத்தில் 'இவனுக்கான' எந்த அசுமாத்தமும் இல்லை. குணாம்சமும் இல்லை. மேலும், மௌலி: உச்ச ரத்ன ஒளியெறி, மஹா பெரு சுழியன் இவன். இவ்ன்' 'ன்னன்னா'வின் ஒற்றைச்சுழியிலும் (னகர மெய்) பெரீய்ய்ய சுழியனாக இருப்பதால் இரட்டைச்சுழி 'ண்ணன்னா' (ணகர மெய்) தான் 'இவ:ன்.ண்' இற்கு கூடுதலாக பொருந்தும். அது கூட பல தருணங்களில் போதாது. னகரமோ ணகரமோ, 'மெய்' தான் பிரதானம்.

'இவண்' படுக்கையின் இடது புறத்தை தூக்கப்போதை தூக்கிய சலிப்பில் பார்த்தான். வேறு சில போதைகள் திடும் முடிவுக்கு வந்திருந்தன. கரைகளில் பொன்னிற கட்டங்கள் கொண்ட வெளிர் நீல நிறப்போர்வை படுதா பல்வரி, பலகோண சுருக்கங்களுடன் தெரிந்தது. அது, இப்போதும் Usomi மிக அருகில் படுத்திருப்பதைப் போன்றதொரு விநோத பிரமையைத் தந்தது.

உண்மையில், உஸோமி படுக்கையில், பக்கத்தில் இல்லை. அவள் புறப்பட்டுப்போய் ஆகக்குறைந்தது மூன்று மணித்தியாலங்களாவது ஆகியிருக்கும். இவண், உஸோமி படுத்திருந்த இடது பக்க சுருங்கல் போர்வையைத் தொட்டபோது, அது வேறு சுட்டது் கடூரமாய்!!!! சுள்ளுச்சுள்ளென்று குத்துமாற்போல, வயிற்றிலோ வாயிலோ ஆசன 'வாயிலோ' நோவு சுள்ளிடும் கணியத்துக்கு,: ஒற்றைக்கணத்துள் இடது கை முன் விரல்கள் எரிந்தமாதிரி தோற்றிற்று. அவளைத்தொடுகையிலும் இப்படி சுடுவதுண்டு. அதன் கடூரம் இதனிலும் படு பெரிது. ஆனாலும், அலுவல், சிற்றனுபவ, குற்றின்ப, நேர கால அந்தங்களை அண்டி, ஆச்சர்யகரமாய் தொட குளிர்வதுமுண்டு.

ஆயினும், அறையில் தொடர்ந்தும் குளிரைத்தான் உணர்ந்தான்.

போர்வை சுடவும் அறை குளிரவும் நிலபரமிருப்பதும் பஞ்சேந்திரியத்தின் பாற்பட்டதாகலாம்.

கொழுவிக் கொண்டுதான் போனாள், உஸோமி. இரவு கொழுவிய கொழுவல் வேறு. காலைக்கொழுவல் வேறு.'இரவுக்கொழுவல்' மாதிரியான காலைக் கொழுவல்களும் முற்பாடெல்லாம் இருந்தன. இப்போ இல்லை. இப்போதெல்லாம் அடிக்கடி கோபக்கொழுவலும் கொழுவல் கோபமுந்தான்.

கொழுவல் என்பது சண்டையென்ற ஒன்று மட்டுமல்ல.

இரவு 'சூடு:குளிர்' யதார்த்தத்துக்கும் காலை.பகல் 'குளிர்:சூடு' விவகாரத்துக்கும் நிறைய்ய்ய வேறுபாடு இருக்கிறது. இருக்கவே இருக்கிறது.

இல்லை, எனலாம். பொய் பேசலாம் எவ்வளவும் பேசலாம். 'அடிப்படையில்' இதுதான் சாஸ்வத நிஜம்.

இரவும் பகலும் ரொம்ப வேறுபட்டவை, இவனும் உஸோமியும் வேறுபட்டவர் போல்.

கறுப்பும் வெள்ளையும் ஒன்றென்று சொல்பவர்கள் இருப்பதால்தான் கறுப்பும் வெள்ளையும் ஒன்றாக இல்லை அல்லது இருக்கிறது.

ஆயினும், கறுப்பும் வெள்ளையும் ஒன்றல்ல.

உஸோமியுடனான சமீபத்தைய சச்சரவுகளின் 'உள்ளுடன்', வியப்புகரமாய் மிக்க வித்தியாசமானதுதான்.

இவண் சொல்லிருக்காத உள் நுண் விஷயங்கள் ஏதோ சில, உஸாமிக்கு தெரிந்திருக்க வேண்டும். அது இவணின் முன்னாளும் இந்நாளும் சம்பந்தப்பட்டது. முன்னாளாள் சம்ப'ந்நந்'தப்பட்டது. ஆனால், அதி பிரமாண்டமான புதிர் யாதெனில், எப்படி அது அவளை அடைந்திருக்கும்? என்பதுதான்.

'யார் போய் இதையெல்லாம் உஸோமி யிடம் போட்டடித்திருப்பார்கள்?!!'

எதிர்பார்க்கா இடத்திலெல்லாம் எதிர்பார்க்கா வகையில் எதிர்பார்க்கா ஆட்கள், எதிர் வேலை செய்கிறார்கள்தான்.

யாரிந்த எதிர்பார்க்கா ஆட்கள்..??!!

இவண், உஸோமியிடம் சுசிவேணி பற்றி ஒருகாலுமே மூச்சும் விடவில்லை. சுசிவேணியிடம் அம்பிகை பற்றி மூச்சும் விடாதது மாதிரி. அம்பிகை இவணது முதல் காதலி. சுசிவேணி இரண்டாவது. ஏதோ வகையில் இப்போதும் இவணிடத்தில் சு.வே. இருக்கவே செய்கிறாள். அது நீண்ட இதிஹாஸம். ஆனால், அம்பிகை முடிந்த கதை (?).

திரும்ப 'இதை',: 'அம்பிகை முடிந்த கதை' என்பதை திருத்தி சொல்லியே ஆக வேண்டும். சாதாரண வழக்குக்கு

அது முடிவுற்ற இதிஹாஸமாக தோற்றினும், உள்ளத்தின் உள்ளே உள்ள உள்ளுணர்வின் விருத்தத்துக்கு, அது முடிவுறாத ஒன்றுமாகலாம்.

அம்பிகைக்கு எப்போதோ ஈஸ்வரனும் ஆயிற்று, என்று கேள்வி. அதுவும் வேறுதான். பட்டர் மனதில் சதா படும் அபிராமி போலல்லவெனினும், தொடுப்புக்கு 'எப்போதோ முடிந்த காரியமா'யினும், இவண் மனதில், அம்பிகோற்ஸவம் இடையிடை சுழல்வது நிஜம். ஆகமத்து ஆலய ஸ்தாபித நெறியில், யந்திரம் தாட்டு விக்கிரஹ பிரதிஷ்டை செய்யின், உற்ஸவமானது,: எண்ணெய் காப்பென்ற தைலாப்பியம், கும்பாபிஷேக கிரியைகள் என்கிற பிராயச்சித்த வழிகள் முடிய, கண்டிப்பாக வருமாற்போல, இவண் மனதில்,துவக்கத்தில்,புதிதான:முதன் முதலான அம்பிகை பிரதிஷ்டை, 'மர்ம யந்திரம்' புதைத்து சிக்காராய் பதிக்கப்பட்டதால், இடையிடையான அம்பிகோற்ஸவங்களின் சுழற்சி தவிர்க்க முடியாததாயிருந்தது. ஆலய ஆகமத்து பிராயச்சித்தம் மாதிரி அர்த்தத்தில் இல்லாவிடினும், முதற்காதலி, அம்பிகையை திருவாசியில் கட்டாததையிட்டு, 'பிராயச்சித்தம்' செய்யவில்லையேயென்று இவண் மனம் அடிக்கடி அடிபடுவதுண்டு.

ஆலய ஆகம பிராயச்சித்தமும், இவனது சித்தத்தில் பிராய வேறுபாடின்றி தாங்கலூட்டும் பிராயச்சித்தமும் ஒன்றல்ல.

இதனுள் சுசிவேணி. பிறகிப்போ உஸோமி வேறு.

இவண் மண்டைக்குழப்பம், 'சுசிவேணியுஸோமியம்பிகா நமஹ' என்ற கோணங்களில், படு(ஊ) குழப்பகரமாக, மந்திரப்பாங்கில் மண்டையை அடிக்கடி இடிப்பதுண்டு.

வெளியிலும், சூடாக்கி இருந்தும் உள்ளும் குளிர் 'தகித்த' இந்த காலையில், கொழுவல் அமர் சூடானதாயே இருந்தது.

'யாரந்தப்பெண்??!!' என்றாள் உஸோமி படு(ஊ) கோபமாக.

'யாருமில்லை சும்மா தெரிந்த ஒரு ஆள்,'

'இல்லையாமே. அவளுடன் நீ எப்போதுமே படு மன ரஞ்சக தொடர்பில் இருக்கிறாயாமே!!!'

'எவர் உனக்கு சொன்னார்..??!!'

'எவர் சொன்னால் என்ன..? எவராவது சொல்லியிருந்தால், ஏதோ இருக்கிறது, என்று தானே அர்த்தம். யாரந்தப்பெண்??!!'

'அதுதானே சொன்னேனே, சும்மா தெரிந்த ஒரு ஆள், என்று,'

'பார்த்தாயா?! சும்மா தெரிந்த ஒரு பெண், என்று கூடச் சொல்கிறாயில்லை. சொல்ல துணிவில்லை. சொல்லும் மண்டைச்சுத்தி இல்லை. ஆள்!!! யார் அந்த ஆள்?!! அந்த பெண் ஆளை அங்கும், என்னை இங்கும் சும்மாப்புண்டாக்களாக வைத்திருக்கிற எண்ணம் போலும் உனக்கு. இரட்டை வேஷதாரியாகத்தான் மாய்மாலம் கொட்டுகிறாய். உண்மையைச் சொல்.'

**'யாரந்தப்பெண்??!!' என்றாள் உஸோமி படு(ஊ) கோபமாக.**

**'யாருமில்லை சும்மா தெரிந்த ஒரு ஆள்,'**

**'இல்லையாமே. அவளுடன் நீ எப்போதுமே படு மன ரஞ்சக தொடர்பில் இருக்கிறாயாமே!!!'**

**'எவர் உனக்கு சொன்னார்..??!!'**

**'எவர் சொன்னால் என்ன..? எவராவது சொல்லியிருந்தால், ஏதோ இருக்கிறது, என்று தானே அர்த்தம். யாரந்தப்பெண்??!!'**

**'அதுதானே சொன்னேனே, சும்மா தெரிந்த ஒரு ஆள், என்று,'**

**'பார்த்தாயா?! சும்மா தெரிந்த ஒரு பெண், என்று கூடச் சொல்கிறாயில்லை. சொல்ல துணிவில்லை. சொல்லும் மண்டைச்சுத்தி இல்லை. ஆள்!!! யார் அந்த ஆள்?!!**

'எந்த உண்மையைச் சொல்லுவது?!! உண்மையில்லாத உண்மையையா..??'

இவண் உண்மையைச் சொல்லவில்லை. உண்மையைச் சொல்லும் எண்ணமுமில்லை. உண்மையைச் சொல்ல முடியாதவொரு நிலையின் உள்ளுருவாகத் தன்னை ஏற்படுத்தியமையை உணர்ந்திருந்தான்.

அது உண்மை.

இவண் பாட்டில் உண்மையை, 'உண்மையாகிலும்' எங்கும், எப்போதும், எல்லோர்க்கும் சொல்லிவிட முடியாது. பல தருணங்களில் உண்மை பொய்யிலும் பலவீனமானது என்றுதான் எண்ணினான். என்றுதான் பெரும்பான்மையானவர் எண்ணுகிறார்கள்.

கடுஞ்சினம் கதித்து, கொழுவல் முற்றி வெடித்து, 'தூக்கா பாக்கா' என்று திட்டியபின், உஸோமி உதறியடித்துக்கொண்டு வெளிறி, வெளியேறிப்போன குளிர்க்காலையில், உள்ளும் புறமும் குளிர் சுட்டெரித்த காலையில்,: உஸோமி படுத்திருந்த, இடது பக்க சுருங்கல் போர்வையைத் தொட்டான்.

இவணது இடது கை விரல்கள் எரிந்து சாம்பராயின.

அங்கு

அம்மம்மா, 'சிவாகரன் உன்னோடைதானே படிக்கிறவன். நீயும் செத்தவீட்டை போட்டு வா. நான் பிறகு போய், முகத்தைக் காட்டிப் போட்டு வாறன்,' என்று கிளப்பி விட்டா.

'இவணிடத்தில்', கிரஹிக்க முடியாததொரு, கூச்செறியும் இரத்தவுஷ்ண உணர்வு உடல் பூரா படர்ந்தது. அது, செருக்கு மாதிரித்தான். செருக்களம் புகும் தற்றூய்மை கொண்ட வீரனின் ஆகிருதிச்செருக்கு மாதிரியும்.

பதினொரு வயது சின்னப்பையனை தனித்து 'நீயும் ஒராள். சாவீட்டுக்கு

போய் வா,‘ என்பது, இல்லாச் செருக்கையும் இலகுவாய் அழைக்கும் ஒரு சமாச்சாரந்தான்.

செருக்கு சிறு பிராயத்திலேயே துவங்கி விடுகிறது.

தூரத்தில் பறையொலி டமாரித்தது. கிட்ட நெருங்க நெருங்க, படாரென்றான ‘டட்டாண் டுக்குடு டண்ணன்டட டுக்குடு‘ பெரிதுற்று, அது தன் குறியாய், நெருங்கி வரும் இவனை மட்டும், முழுதாய் கைப்பற்றி, கழுத்திலும் கவட்டு: குறி. விதைகளிலும் சுருக்கு கயிறு போடுமாற்போலான ஒரு பேய்ச்சூழலை உரம் போட்டு விதைத்தது.

இவண் பயந்தான். கிட்டக்கிட்ட போகலாமோவென்ற வினாப்பயமும் கிட்டக்கிட்ட போகையில் மிகைத்தது.

‘டாண் டுக்குடு .‘ செவிப்பறையை மட்டுமல்ல, ‘பயமில் பறையையும்‘ கிழித்தது.

போனான்.

அது பெரிய திருவிழா. சாவீட்டு திருவிழா.

பறையடிக்கும் பறையரை உள்ளே விடாமல், வெள்ளையாச்சி சொல்லிக் கொடுத்த, ஒன்றுடன் ஒன்று ஏறிய, இரட்டை தென்னோலைப்பாதி பிணைப்பின்னல் தடுக்கை ஊத்தை மண்ணில் போட்டு, முத்தத்தில் அவர்களை குந்த விட்டு ‘அடியுங்கோடா, ஆக்கள் வர,‘ என்று சத்தமும் சட்டமும் போட்டிருந்தனர்.

‘டாணட்டடட்டட ..டட்டாண் டுக்குடு .‘

பெருபறை அடித்த டமார பறையருக்கு ஊத்தை போத்தலில் கொஞ்சம் சீனி போட்ட ‘தேத்தண்ணி‘ கொடுத்தனர் .

‘டுக்குடு‘ காரருக்கு, செம்மையில்லால் ‘செருக்கிய‘ தலைக்காய் தேங்காய்ச்சிரட்டையில் நக்க, சிறிது கல்லாக்காரம் தந்தனர்.

அதையும் குண்டி கழுவும் இடது கை முன்முனையில் கொடுத்தனர்.

‘நக்கினால் நக்கு. நக்காவிடினும் நக்கு‘.

‘நீ நக்காதவனாகிலுங்கூட நக்க வேண்டியவனாகில் நக்கு.‘

இப்படித்தான், நக்காதவரும் நக்க வெளிப்பட்டனர்.

முதலில், அம்மம்மாவின் கதைப்படி, செம்மையாகச் சொன்னால், அம்மம்மாவின் பேச்சை இவண் கிரஹித்தபடி, இவண், சிவாகரனின் பேரக்கிழவனின் செத்த வீட்டுக்குத்தான் போனான். ஆனால், அங்கு பேரக்கிழவர் முழு உயிருடன், குந்துக்கரைக் கப்பில் வளைந்த முதுகை அண்டித்து குந்தியிருந்தார். பனித்த விழிகளிலிருந்து சொரிந்த நீர், சவரங்காணாத முகரைக்கட்டை ஊத்தை வெண்தாடியூடு வழிந்தது.

அப்போ யார் செத்தவர்? என்று இவன் விழித்தான்.

அது பீட்டன் சிவாகரனின் பீட்டன். பீட்டிக்கிழவியும் உயிருடன் இருந்தது. நோஞ்சானாக, காய்ந்த வாழைத்தடல் நார்க்கும்பம் இறுக்கமற்று தளருமாற்போல், நோய்ந்து நோய்ந்து, பிரேதப்பெட்டியையண்டி அரக்கிற்று. சித்த சுவாதீனமற்ற பூர்ணவறளை பெயர்ந்த ஒரு அரைச்சீவனின், இருளை இருள் வெட்டும் புகாருலக நடை.

பேரனின் மனைவி ஏலவே செத்துப்போயிற்று. சிவாகரனின் தந்தை அங்கில்லை. இன்னோர் பெண்ணுடன் நீள்நாள் முன்பே ஊரை விட்டோடியதாக ஊர் பறைந்தது.

படலை வாசலில் மொந்தன் வாழைமரம் நிமிர்த்தி, தென்னங்குருத்து தோரணங்களை தலைகீழாய் முட்டொழுங்கைச் சந்தி வரை தொங்க விட்டு, குருக்கள் அம்பாரம் கறுப்பெள், துளசிமாலை, பலாக்கட்டை, பஞ்சகௌவியம், சணல் கயிறு, யாகவகப்பை, தர்ப்பை ஆய சாச்சடங்கு சாமான்களை பரப்பி, அம்பாரம் மந்திரம் சொல்லி, கிரியை முடிக்க, இவணது அம்மம்மாவும் செத்தவீட்டில் முகம் காட்ட வந்திருந்தா.

அங்குமிங்கும்

,இங்கு

உஸோமி திரும்பவும் இரவு வந்திருந்தாள். வருவாள் என்று இவணுக்கு துலாம்பரமாகத் தெரியும். கொழுவல்கள் தேவையானவை.

குளிரிரவு. மறைய மறுக்கும் குளிர். மீள மீள மீளும் இரவு. அசாதாரணங்களுக்குள் மறைந்திருக்கும் சாதாரண நிஜங்கள். இப்படித்தான் கோபித்து கொழுவி ஓடுவதும், கொழுவ மீள திரும்புவதுமாக உஸோமி. சுசிவேணியும் தற்காலிகமாய் மறைந்திருந்தாள். இவணுக்கும் அவளுக்குமாக. இப்போதைக்கு.

குளிர் .!! தகிப்பு கேட்டது.

சுண்டு மிருகம் திடுமென சொல்லாமல் கொள்ளாமல் பெரு கரிக்கரி: கருவாண் யானையாக பிரமாண்டித்தது. துதிக்கை எம்பிப்பருக்க, முன் கால்களைத்தூக்கி பிளிறிற்று.

போர்வை இறுகிற்று. சுருக்கங்கள் வரிவடிவங்களாவதும் வரிகள் வடிவங்கெடுவதும் சுருக்கம் நிரவப்படுவதும் உறிஞ்சிய நீரை விசுறுவதுமென எம்பிப்பருத்த துதிக்கை துழாவிற்று. போர்வைச் சுருக்கங்களில் எரி நட்சத்திரங்கள் விழுந்து, அவை தீப்பற்றி எரிந்து கரியாகின. கரிக்கரி ஆக்ரோஷமாய் பிளிற, சுசிவேணி இடது பக்க, எரிந்து கரியான போர்வைச் சுருக்கங்களிலிருந்து வெளியே தவழ்ந்து வர, கட்டிலுக்கு மேலே முகட்டு தொங்கு தளத்தில் அம்பிகை அந்தரத்தில் பாவ, அதே கணத்தில் !

அங்கு

ஈ பூச்சரங்கள் தொங்கும் நாலுபக்க கொம்பு வைத்த பாடையில் சிவாகரனின் பீட்டனின் பிரேதப்பெட்டியை கிடத்தி, சுடலைக்கு வாசலால் வழியனுப்பக் கூடாதென பூவரசங்கதிகால்கள் நெருக்கிய வேலியைப்பிரித்து, கொம்புப்பாடையை தூக்கினர்.

சிவாகரனின் பீட்டனின் செத்தவீட்டிற்கு சென்ற இவணுக்கு வயது பதினொன்றுதான் .!!!!!!

இன்னும் வர உண்டு.



# சந்திரயான்

## சம்பந்தமேயில்லாத சில பல நினைவுகள்

ஜோர்ஜ் இ.

இந்தியா அனுப்பிய சந்திரயான் விண்கலம் சந்திரனின் தென்துருவத்தில் இறங்கிச் சாதனை படைத்திருக்கிறது. விண்வெளி விஞ்ஞானிகளின் சாதனையைப் பாராட்டுவோம் என்றால், வில்லேஜ் விஞ்ஞானிகளின் மீம்களைப் பார்த்து அறிவை வளர்த்து, அந்த 'தாம் பெற்ற இன்பத்தையும்' பெரிய மனதோடு ஷெயார் பண்ணும் பேஸ்புக் விஞ்ஞானிகளின் தொல்லை வேறு.

பூமி தட்டையானதுதான் என்று இன்றும் நம்புகிறவர்கள் போல, அமெரிக்கா சந்திரனில் மனிதர்களை இறக்கவில்லை என்று இன்றும் நம்புகிறவர்கள் இருக்கிறார்கள். அதற்கான ஆதாரங்களாக பல conspiracy theory களை ஆதாரம் காட்டுவார்கள். அந்த 'ஆதாரங்கள்' யூடியூப்பில் நிறையவே உண்டு. அதையே பேஸ்புக்கிலும் ஷெயார் பண்ணுவார்கள்.

இவர்கள் எல்லாம் 'அரசாங்கம் பொய் சொல்கிறது' என்ற, ட்ரம்பின் ஆதரவாளர்கள் போன்ற, அறிவுக் கொழுந்துகள் தான்.

இவர்களுக்கு எந்த ஆதாரத்தைக் காட்டினாலும் நம்ப மாட்டார்கள்.

மண்டையில் இரத்தம் வழிய கண்ணைத் திறந்தபடி கிடந்த ஒருவரின் வீடியோவைப் பார்த்தும் நம்பாமல், கடவுள் மாதிரி, அங்க இருக்கிறார், இங்க இருக்கிறார் என்று நம்புவது போல!

யாழ்ப்பாணியின் மூல வியாதியே அதுதானே!?

நிலாவில் பாட்டி வடை சுடுகிறாள் என்ற கதையை நாங்களும் தான் நம்பினோம்.

•••

றொக்கட்டுகளின் அடிப்படையே உருண்டையான பூமியில் கல்லை பக்கவாட்டில், பூமியின் விட்டத்தின் எல்லைக்கான தொலைதூரத்திற்கு எறிந்தால், அது பூமியைச் சுற்றி வரும் என்பது தான்.

இந்தத் தத்துவத்தில் தான் நாஸி ஜேர்மனியில் வேர்ணர் வொன் பிறவுண் என்ற விஞ்ஞானி V2 றொக்கட்டுகளை வடிவமைத்தார். இரண்டாம் உலக யுத்தம் முடிந்ததும், தோல்வி அடைந்த ஜேர்மனியில் விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஜேர்மன் விஞ்ஞானிகள் 'கைது செய்யப்பட்டு', அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் அனுப்பப்பட்டார்கள்.

அவர்களின் ஆராய்ச்சியின் பயனாகத் தான் இரண்டு நாடுகளிலும் விண்வெளி ஆராய்ச்சிகள் ஆரம்பித்தன.

புவியீர்ப்பை மீறி, வளிமண்டலத்தைக் கடந்து விண்வெளியை ஆராய்ச்சி செய்ய, முதலில் ஆளில்லா விண்கலங்கள் அனுப்பப்பட்டன. அவையும் தொலைதூர மின் அலைக் கட்டுப்பாடுகளால் இயக்கப்பட்டன.

•••

பின்னர் லைக்கா நாய்.

சோவியத்தின் ஸ்புட்னிக் விண்கலத் திட்டத்திற்காக பிடிக்கப்பட்ட, மொஸ்கோ வீதிகளில் கட்டாக்காலியாக திரிந்த நாய்களில் ஒன்று தான் லைக்கா என்ற பெண் நாய்.

ஊடகங்களிலும்

மக்கள் மனங்களிலும் பெரும் இடத்தைப் பிடித்த ஹீரோவாகச் (ஹீரோயினியாக!) சித்தரிக்கப்பட்டு பெரும் புகழ் பெற்ற நாய்.

1957 இல் ஏவப்பட்டு, ஐந்து மாதங்கள் பூமியைச் சுற்றி விண்ணில் வலம் வந்த ஸ்புட்னிக்கில் இந்த நாய் விண்ணில் ஏவப்பட்டு நாலைந்து நாட்கள் உயிரோடு இருந்ததாக ரஷ்யா கூறிய போதும், அங்கு பணிபுரிந்த விஞ்ஞானி ஒருவர் பின்னர் தான் உண்மையைக் கூறியிருந்தார். மிகக் குறுகிய இடத்திற்குள் இருந்து, அதிகமான வெப்பத்தாலும், பயத்தாலும் ஏவப்பட்ட சில மணி நேரங்களிலேயே அந்த நாய் உயிரிழந்தது.

சோவியத் புரட்சியின் நாற்பதாவது ஆண்டு கொண்டாட்ட காலத்தில் இதை ஏவ வேண்டும் என்ற அரசியல் அழுத்தம் காரணமாக விஞ்ஞானிகள் இந்த நாயைக் காப்பாற்றுவதற்கான வழிமுறைகளை வடிவமைப்பதில் அதிகம் அக்கறை எடுக்கவில்லை.

திரும்பி உயிரோடு வர வைக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல், இறக்கும் என்று தெரிந்தே குண்டைக் கட்டி அனுப்பப்பட்ட தற்கொலைப்போராளி தான் அது.

வழமை போல, மாவீரர் பட்டம் பெற்று கௌவரம் பெற்ற நாய்.

ஸ்புட்னிக் திரும்பவும் வளி மண்டலத்திற்குள் நுழையும்போது, எரிந்து சிதறியது.

•••

அதன் பின்னர் யூரி ககாரின் முதல் விண்வெளி வீரரானார்.


வலன்டினா டெரஷ்கோவா முதலாவது விண்வெளி வீராங்கனை.

முதலில் பூமியைச் சுற்றி வந்து கொண்டிருந்த விண்கலங்களை, சந்திரனுக்கு அனுப்பும் எண்ணம் பிறந்தது.

ரஷ்யா ஆளில்லா விண்கலங்களை சந்திரனுக்கு ஏவிய போதும், ஒரு போதும் மனிதர்களை இறக்கவில்லை.

இயந்திரங்களே மண் மாதிரிகளை தோண்டி எடுத்துக் கொண்டு வந்திருந்தன.

ஆனால், ரஷ்ய விண்கலங்கள்



திரும்பவும் பூமிக்கு வரும்போது தரையிலேயே இறங்கும். அமெரிக்க விண்கலங்கள் கடலிலேயே இறக்கப்படும்.

ரஷ்யாவின் லூனா திட்டம் சந்திரனுக்கு பல்வேறு விண்கலங்களை அனுப்பியிருந்தது. சந்திரனைச் சுற்றி வருவது, மோதி இறக்குவது, மெதுவாக இறக்குவது, அங்கு றோவர் வாகனத்தை ஓடச் செய்து தரையை ஆராய்ச்சி செய்வது, அங்குள்ள மண் மாதிரிகளைச் சேர்த்துக் கொண்டு திரும்பவும் பூமிக்கு வருவது என்று பல்வேறு படிநிலைகளில் ரஷ்ய விண்கலங்கள் முன்னேற்றம் கண்டன.

விண்வெளிக்கு நாயை அனுப்பிய ரஷ்யா சந்திரனைச் சுற்றி வரும் கலங்களில் இரண்டு ஆமைகளைக் கூட அனுப்பியிருந்தது.

அதில் ஒன்று தான் சீமானுக்கு சமைக்க தேசியத்தலைவர் பிடித்தது என்று கதையைக் கிளப்பினால், அதை ஷெயர் பண்ண ஆயிரம் முட்டாள்கள் இருப்பார்கள்.

•••

சந்திரனின் பின்பக்கத்தை முதன்முறையாகப் படம் பிடித்தது ரஷ்யாவின் லூனா 3 விண் கலமே.

சந்திரன் தன்னைத் தானே சுற்றிக் கொள்ளும் காலமும், பூமியைச் சுற்றி வரும் காலமும் ஒன்றாக இருப்பதால், சந்திரனின் ஒரு பக்கம் மட்டுமே பூமியை நோக்கியதாக இருக்கிறது.

இதனால் தான் சந்திரனைப் பூமியில் இருந்து எடுக்கும் எந்தப் படமும் ஒரே மாதிரியானதாக இருக்கிறது.

மிகவும் பிரபலமான இந்த Dark side of the moon என்ற பெயரில் Pink Floyd இசைக்குழுவின் விற்பனையில் மிகவும் சாதனை படைத்த அல்பம் ஒன்று கூட உண்டு.

முன்பு எல்லாம், சந்திரனைச் சுற்றி வரும் விண் கலங்கள் இந்தப் பின் பகுதியைச் சுற்றி வரும் நேரம் முழுவதும் விஞ்ஞானிகளுக்கு என்ன நடக்கிறது என்று தெரியாது. அத்தோடு அதனைத் தொடர்பு கொண்டு கட்டுப்படுத்தவும் முடியாது. நகம் கடிக்க வைக்கும் தருணங்கள் அவை.

தற்போது சந்திரனைச் சுற்றியபடி அமெரிக்கா அனுப்பிய உப கோள்கள் இருப்பதால் இந்தப் பிரச்சனை இருப்பதில்லை. அவற்றின் மூலமாக தொடர்பு கொள்ள முடியும்.

•••

பூமியை சந்திரன் சுற்றி வருவதால் சந்திரனின் ஈர்ப்பு பூமியில் கடல் பெருக்கில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

சிறுவயதில் பண்ணைப் பாலத்தில் பஸ்ஸில் போகும்போது,

காலையில் கடல் நீர் ஒரு புறமிருந்து மற்றப் புறமாக கீழுள்ள குழாய்களுக்குள்ளால் பாயும். மாலை திரும்பி வரும்போது மறுபுறத்தில் பாயும். இதற்கான காரணத்தை விஞ்ஞானத்தில் ஆர்வம் உள்ள என் அண்ணன் றொபின்சனிடம் கேட்டபோது இந்த சந்திரனின் ஈர்ப்பு பற்றிய விளக்கத்தைத் தந்தார்.

•••

ரஷ்யா விண்கலத்தை ஏவியதும், அமெரிக்காவில் ஜனாதிபதி கென்னடி, சந்திரனில் மனிதனை பத்தாண்டுகளில் இறக்கும் என்று அறிவித்தார்.

சபாஷ், பலே, சரியான போட்டி தான்!

அதன்படி, அமெரிக்கா அப்பொலோ திட்டத்தின்படி, பல்வேறு விண்கலங்களை அனுப்பி, 11ம் தடவை முயற்சியில் நீல் ஆம்ஸ்ட்ரோங்கை சந்திரனில் இறக்கியது. அந்த மூன்று விண்வெளிவீரர்களின் படம் ஒன்று போஸ்ட் காட் வடிவத்தில் அந்தக் காலத்தில் என்னிடம் நீண்ட காலம் இருந்தது. எப்படிக் கிடைத்தது என்று தெரியாது.


அதற்கு முன்பாக ஒரு தடவை விண்வெளி வீரர்களை அனுப்பி, சந்திரனைச் சுற்றி வந்த போதும், அவர்கள் இறங்காமலேயே திரும்பி வந்திருந்தார்கள்.

இதற்கு முன்பான ஒரு அப்போலோ முயற்சியில் ஏவுவதற்கு முன்பே விண்கலம் வெடித்து, வீரர்கள் இறந்திருந்தனர்.



அப்போலோ 13ம் திட்டத்திலும் விண்கலத்தில் பெரும் விபத்து ஏற்பட்டு, அந்த வீரர்களைப் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்த்த முயற்சி வெற்றிப்படமாகக் கூட வந்தது.

அப்போலோ கலம் விபத்துக்குள்ளாகி, அந்தக் கலத்தில் உள்ள காற்று அமுக்கத்தை குறைப்பதற்கான அளவைக் கணக்கிட, நாசா தொலைபேசி மூலம் றொறன்ரோ பல்கலைக்கழகத்தின் கணிதப் பேராசிரியர் ஒருவரிடம் உதவி கேட்க முயன்றபோது, அவர் உணவகம் ஒன்றில் உணவு உண்டு கொண்டிருந்தார். அவர் கை துடைக்கும் துண்டில் கணிதச் சமன்பாடுகளைக் கணக்கிட்டு கொடுத்ததாக ஒரு தடவை றொறன்ரோ ஸ்டாரில் வாசித்திருந்தேன். கம்பியூட்டர்கள் பரவலாக இல்லாத காலம் அது.




சந்திரனில் முதன்முதலில் இறங்கும்போது, அங்கு பிடிக்கப்படும் படங்களை பூமிக்கு அனுப்ப, அப்போது சந்திரனுக்கு நெருக்கமாக இருந்த பகுதி அவுஸ்திரேலியால் மிகவும் ஒதுக்குப்புறமான இடத்தில் இருந்த ஒரு பண்ணைப் பகுதி. அங்கே ஒரு கோப்பை அன்டனா கருவி ஒன்றை நிறுவித் தான் விண்கலத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தார்கள். அதன் மூலமாகத் தான் சந்திரனில் இருந்து அனுப்பப்பட்ட படங்கள் பெறப்பட்டு ஒளிபரப்பப்பட்டன.

அந்தக் கதை கூட, The Dish என்ற பெயரில் 2000 இல், படமாக வந்தது. அந்தப் படத்தில் மனிதன் சந்திரனில் இறங்கிய காட்சி வரும் போது, அப்போது போப் ஆண்டவராக இருந்த ஆறாம் சின்னப்பர் சிலுவை போட்டு, அந்தக் காலத்து கறுப்பு வெள்ளை டிவியை ஆசீர்வதிக்கும் காட்சி சிரிப்பு வர வைத்தது.

இந்தப் போட்டி முடிந்து, அமெரிக்காவும் சந்திரனுக்கு ஆள் அனுப்பும் முயற்சிகளை நிறுத்தி விட்டது. இப்போது திரும்பவும் ஆள்



அனுப்பும் திட்டம் உண்டு.

அதற்கு தலை மாற்றி ஆள் அனுப்புவதில் அனுபவம் வாய்ந்த யாழ்ப்பாணி ஏஜன்சிக்காரர்களின் உதவியை நாசா நாடக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படியாவது நாசாவை, தமிழனைத் திரும்பிப் பார்க்க வைக்க வேண்டும் என்பதே புலன் பெயர்ந்த யாழ்ப்பாணிகளின் ஆசையும் கூட.

கவன ஈர்ப்பு என்பது பூமியில் உள்ள சர்வதேசத்திற்கு மட்டுமா என்ன?

பின்னர் இரண்டு நாடுகளும் சேர்ந்து, பூமியைச் சுற்றி வரும் விண்வெளி ஆய்வுகூடத்தை அனுப்பி அந்தத் திட்டம் இன்றும் செயற்பட்டு வருகிறது. அந்த ஆய்வுகூடத்தில் அமெரிக்க, ரஷ்ய விஞ்ஞானிகள் சேர்ந்து பணிபுரிகிறார்கள்.

ரஷ்யா உடைந்த போது, அதில் இருந்த விண்வெளிவீரர் தன் எதிர்காலம் பற்றிக் கவலைப் பட்டுக் கொண்டிருந்தது தனிக் கதை.

தற்போது சீனாவும், இந்தியாவும் விண்வெளி ஆராய்ச்சியில் முழுமையாக ஈடுபட்டுள்ளன. இவையும் ஆளில்லாக் கலங்களை சந்திரனில் தரையிறக்கியிருக்கின்றன.


இவ்வளவு தொகைப்பணம் செலவிட்டு இந்த ஆராய்ச்சி எல்லாம் செய்ய வேண்டுமா என்ற கேள்வி பேஸ்புக் அறிவாளிகளால் எப்போதுமே கேட்கப்படுகின்ற ஒன்று தான்.

•••

விண்வெளி ஆராய்ச்சியின் பயன்களில் ஒன்று தான், தோடம்பழப் பவுடர். விண்வெளி வீரர்கள் நீரில் கலந்து அருந்துவதற்காக கண்டுபிடிக்கப்பட்டது தான் Tang என்ற பெயரில் விற்பனையாகும் பவுடர்.

இந்த பேஸ்புக் அறிவாளிகள் பாவிக்கின்ற பேஸ்புக் பார்க்கும் செல்போன் கூட இந்த விண்வெளி ஆராய்ச்சியின் பயன் தான்.

பூமியைச் சுற்றி வருகின்ற



செயற்கைக் கோள்களை விண்ணுக்கு அனுப்பி, அவற்றை பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்ளும் வேகத்தில் இயங்க வைத்தால், அவை ஒரே இடத்தில் நிற்பது போல இருக்கும். அவை பூமியின் மத்திய கோட்டுக்கு நேரே 36 ஆயிரம் கிலோ மீட்டர் உயரத்தில் செக்கனுக்கு மூன்று கிலோ மீட்டர் வேகத்தில் இயங்கினால் இந்த உபகோள்கள் ஒரே இடத்தில் நிலையாக நிற்பது போல இருக்கும். இவற்றை ஆங்கிலத்தில் Geo-stationary satellites என்பார்கள்.

இந்தக் கருத்தை முன்மொழிந்தவர் இங்கிலாந்தில் பிறந்து, இலங்கையில் வாழ்ந்து வந்த ஆர்தர் சி.கிளார்க் என்ற விஞ்ஞானக் கற்பனை எழுத்தாளர்.

இவ்வாறு மூன்று உபகோள்களை பூமியைச் சுற்றி சம தூரத்தில் இயங்க வைத்தால், முக்கோண வடிவில் முழுப் பூமியையும் உள்ளடக்கி, பூமியில் எந்த இடத்திற்கும் ஒரே நேரத்தில் தொலைத்தொடர்புகளை ஏற்படுத்த முடியும்.

தற்போதைய கைபேசித் தொடர்புகள், அவற்றுக்கான இணைய இணைப்புகள் முதல் தொலைக்காட்சி ஒளிபரப்புகள், காலநிலை முன்னறிவுப்புகள் வரைக்கும் இந்த உபகோள்களின் உதவியுடனேயே நடைபெறுகின்றன.

இவற்றுக்கெல்லாம் மற்ற நாடுகளில் தங்கியிராமல் பெரிய நாடுகள் எல்லாம் இப்படி பல உபகோள்களை அனுப்பி வைத்திருக்கின்றன.

ரோகித ராஜபக்ஷவும் உபகோள் அனுப்பிய கதை உண்டு. அது சுவிஸ் பாங்கில் பத்திரமாக இருக்கக்கூடும்.



அடுத்த முறை ஜெனிவாவில் தீர்வுப்பொதி தமிழர்களிடம் கையளிக்கப்படும்போது, அந்தப் பொதிக்குள் அந்த உபகோளும் அடக்கப்பட்டிருக்கும். அதை, மலரப்போகும் தமிழீழ வல்லரசின் நாசா வல்வெட்டித்துறையில் நடைபெறும் பட்டம் விடும் போட்டியின் போது விண்வெளிக்கும் அனுப்பக் கூடும்.

•••

இதைவிட, உளவு பார்ப்பது போன்ற விடயங்களுக்காக பூமியின் வேகத்தை விட வேகமாக சுற்றி வரும் உபகோள்களும் உண்டு.

சிறுவயதில் முற்றத்தில் சாக்குக்கட்டிலில் கிடந்தபடியே 'வெள்ளி பார்த்த' காலத்தில் சில நேரங்களில் இரவுகளில் இந்த விண்கலங்கள் அசைந்து செல்வதைப் பார்த்திருக்கிறேன்.

இவை எல்லாமே இந்த விண்வெளி ஆராய்ச்சியின் பயன்கள் தான்.

•••

றொக்கட்டுகளை அனுப்பி அவை இரண்டாம் முறை பயன்படாமல் போவதால், விமானம் போன்ற, மீண்டும் பயன்படுத்தக் கூடிய விண்வெளி ஓடத்தை (Space shuttle) அமெரிக்கா பயன்படுத்தத் தொடங்கியது. அதுகூட ஒரு தடவை திரும்பவும் பூமிக்குள் திரும்பும்போது வெடித்துச் சிதறியிருந்தது. பின்னர் அந்தத் திட்டமும் கைவிடப்பட்டு, இப்போது திரும்பவும் றொக்கட்டுகளே அனுப்பப்படுகின்றன.

தற்போது தனியார் நிறுவனங்களும் விண்வெளி ஆராய்ச்சியிலும், விண்கலங்களை அனுப்புவதிலும் ஈடுபட்டுள்ளன. இதில் ட்விட்டர் எலோன் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் ஒன்று.

அது உபகோள்களை அனுப்புவது, விண்வெளி ஆய்வுகூடத்திற்கு பொருட்களை வினியோகிப்பது போன்றவற்றை பணம் சம்பாதிக்கும் வியாபார முயற்சியாகச் செய்கிறது.

அதன் விண்கலங்கள் தரையிலேயேபத்திரமாக இறங்குமாறு வடிவமைக்கப்படுகின்றன.

•••

இம்முறையும் ரஷ்யா அனுப்பிய விண்கலம் கடைசி நேரத்தில் வெடித்துச் சிதறி விட்டது. 47 வருடங்களின் பின்னர் ரஷ்யா இந்த விண்கலத்தை அனுப்பியிருந்தது. அந்த விண்கலம் சிதறிய இடத்தை அமெரிக்க உபகோள்கள் கண்டுபிடித்திருப்பதாக அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

இதைப் போட்டியாக இல்லாமல், ஆராய்ச்சி முயற்சியாக இந்தியா செய்து வெற்றி கண்டிருக்கிறது.

இப்படி இந்தியா சந்திரனின் தென் துருவத்தில் விண்கலத்தை இறக்கியதை ஒரு தொழில்நுட்பச் சாதனையாகக் கொள்ளாமல், வல்லரசுப் போட்டி அளவுக்கு கூட இல்லாத உள்ளூர் அரசியல் கலப்பதில் தான் பேஸ்புக் வில்லேஜ் விஞ்ஞானிகளின் குடுமிப்பிடிச் சண்டை.

இதை வைத்து, இதற்கான உரிமை கோர மோடி முயற்சிக்கிறார் என்றால், அந்த வெற்றி ஊர்வலத்தில் மழை பெய்ய, இஸ்ரோவை ஆரம்பித்தது நேரு என்று ஒரு தரப்பு.

சிவனின் தலைமுடியில் இருக்கும் சந்திரனில் மனிதன் காலடி வைத்தது அபத்தம் என்று சொன்னது பார்ப்பனர்கள். இப்போது அவர்கள் எப்போ யாழ்ப்பாணிகள் சந்திரனுக்குப் போவார்கள், அவர்கள் முதலில் கட்டுவது கோவில் தானே? அங்கே போய் தட்சணை வாங்கலாம் என்ற கனவில் அவர்கள் இருக்கக் கூடும்.

தென் துருவத்திற்கு சிவசக்தி என்று மோடி பெயரிட்டதன் பின்னால், இந்துத்துவா வெறி இருக்கிறது என்று இன்னொரு தரப்பு.

இல்லை, அமெரிக்காவே அப்போலோ, வீனஸ் என்றெல்லாம் கிரேக்க தெய்வப் பெயர்களை வைத்தது தானே என்று இந்துத்துவத்துக்கு முண்டு கொடுக்கிறவர்கள் இன்னொரு பக்கம்.

உலகத்தில் ஏதாவது பரபரப்பாக நடந்தால், எல்லாம் தெரிந்த யாழ்ப்பாணி வாயை மூடிக் கொண்டு இருக்க முடியுமா?

முன்பின் தெரியாதவர் மண்டையைப் போட்டாலேயே, 'உமது மக்கள் கொத்துக் கொத்தாக...' என்று தொடங்குகிற யாழ்ப்பாணி.


இந்திய தொலைக்காட்சியில் கண்ணீர் விட்டழுது ஈழத்தை அடிச்சுப் பிடிக்கலாம் என்று நம்புகிற யாழ்ப்பாணி, இந்தியாவுக்கு அந்தப் பெருமை கிடைக்கவே கூடாது என்று, அதைப் பாராட்டக்கூடாது என்று முடிவு எடுத்து விட்டான்.

யாழ்ப்பாணிக்கு இந்தியா தென் துருவத்தில் விண்கலம் இறக்கியது எல்லாம் என்ன பெரிய சாதனை?

எங்கட கிட்டு காக்கை தீவில ஹெலிகொப்டர் விட்டதும், கனடாவில் வயலுக்கு கிருமிநாசினி விசிறுகிற விமானத்தோடு, வான்படை வைத்திருந்த கதையும் தானே பெரும் சாதனைகள்.








மலரப் போகும் தமிழீழம் அஞ்சு வரியத்தில வல்லரசு, நாங்களும் செவ்வாய்க்கு வேட்டி கட்டின தமிழனை அனுப்புவம், அங்கயும் பெண்கொடுதீவு விலாஸ் சோத்துக்கடை போடுவம், கோயில் கட்டுவம் என்பது தானே ஒவ்வொரு யாழ்ப்பாணியினதும் கனவு.

ஆனா, கனடியத் தமிழன் மட்டும் கொத்துரொட்டிக் கடை போடுவான்!

அங்கே யாராவது கனடிய அரசியல்வாதி கொத்துரொட்டி வெட்டிக் கொண்டிருப்பார்.

அவரும் மறக்காமல், 'ஊரில் எவடம்?' என்று கேட்பார்.

•••

யாரோ ஒருத்தன் போட்டோஷொப் செய்து போட்ட, நிலவு மண்ணில் றோவர் சில் பதிந்த இந்திய இலச்சினையை எல்லா அறிவாளிகளும், (ஆயிரம் முட்டாள்கள்?) பேஸ்புக்கில் பகிர்ந்து கொண்டார்கள்.

சில்லின் பதிவுக்கு தொடர்ச்சி இல்லையே, ஒரு சிறிய இடத்தில் மட்டுமே எப்படி இருக்க முடியும்? எந்தக் கோணத்தில் இருந்து இந்த போட்டோ எடுக்கப்பட்டிருக்கும்? என்ற தர்க்கரீதியான கேள்விகளைக் கேட்கக் கூட ஆளில்லை.

அந்தப் புரளியைக் கிளப்பியவனே, அதைச் சொன்ன பின்னாலும், அந்த வதந்தி நிற்கவேயில்லை.

•••

நீல் ஆம்ஸ்ட்ரோங் இறங்கிய காலத்தின் பின் நீண்ட நாட்களின் பின், பேஸ்புக், இணையம் எல்லாம் இல்லாத காலத்திலேயே, ஒரு வதந்தியைக் கிளப்பி விட்டிருந்தார்கள்.

அவர் இறங்கிய போது, அல்லா என்ற ஒலி கேட்டதாகவும், அதனால் அவர் முஸ்லிமாக மதம் மாறியதாகவும் அந்தக் காலத்தில் பெரும் கதை உலவியது.

அதைக் கேட்டு, 'மாஷா அல்லா!' என்று இறைவன் பெருமையை புகழ்ந்தேத்தியவர்களும் இருந் தார்கள். பிறகு நீல் ஆம்ஸ்ட்ரோங்கே அந்தக் கதை உண்மை இல்லை என்று விட்டார்.

•••

இந்த பேஸ்புக் அறிவுக் கொழுந்துகளையெல்லாம் விழுங்கிச் சாப்பிடும் பேரறிவாளர்கள் இங்கே இருக்கிறார்கள்.

இங்கே Supermarket tabloid களில், நிலவில் உள்ள காணிகளை விற்றுப் பணம் சம்பாதித்தவர்கள் இருக்கிறார்கள்.

; அமெரிக்கா இறங்கியவுடன், இனிமேல் சந்திரன் அமெரிக்காவுக்கே சொந்தம், நீங்கள் அங்கு காணி வாங்கலாம், இப்போது வாங்கினால் மலிவு என்று உங்கள் காணி உறுதியின் படத்தையும் போட்டு விளம்பரம் இருக்கும்.

இப்போது வாங்கினால், பிறகு விலை கூடும் என்று நம்பி பணத்தை அனுப்பி வெறும் 'நற்சான்றிதழை' வாங்கி, விருது வாங்கிய தமிழர்கள் மாதிரி, பிரேம் போட்டு, வரவேற்பறையில் தொங்க வைத்து, வீட்டுக்கு வருவோருக்கு தங்கள் புத்திசாலித்தனத்தை மெச்சிப் பேசுவோர் இருந்தனர். இப்போது அந்தக் காணி உறுதிகளுக்கு என்னாச்சு என்பது தெரியாது.

இப்படி, நிலவில் இருந்து வந்த கல், மண் என்றெல்லாம் ஊரைச் சுற்றி விற்றார்கள்.

புலிகள் காலத்தில் மண் முடிப்பு வேறு கொடுத்திருந்தார்கள். யாழ்ப்பாணிகள் என்றால், உவருக்கு ஏன் வீணா காசைக் குடுப்பான்? ஆராச்சும் பிரக்கிராசியைப் பிடிச்சா கள்ள உறுதி முடிக்கலாம். எங்கட எழுபத்தைஞ்சு வோட்டு கிளிநொச்சி பண்ணையார் உதைத் தானே செய்கிறார் என்று யோசித்திருப்பார்கள்.

'உப்பிடி ஏமாத்திறது என்ன புது விசயமோ? கனடாவில விருது வாங்கியும் வாங்காமலும் வீடு விக்கிற புரோக்கர்மார் உப்பிடித் தலையைக் கழுவித் தானே உந்தத் தமிழ்ச் சனத்தைச் சுத்துகினம்' என்று நீங்கள் சொன்னால் நான் என்ன மறுப்பா சொல்ல முடியும்?

ஊரைச் சுத்துகிற உந்த சுத்திஜீவிகளால், நானும் உப்பிடிச் சுத்துப்பட்டனான் தான்!




(இந்த விண்வெளி ஆராய்ச்சி பற்றிய தகவல்களில் நான் அத்துபடியாக இருந்தற்கான காரணம் இருக்கிறது. கலாநிதி இந்திரகுமார் எழுதிய 'மண்ணில் இருந்து விண்ணிற்கு' என்ற வீரகேசரி பிரசுர புத்தகம் என்னிடம் இருந்தது. அந்தப் புத்தகத்தை நான் எத்தனை தடவை மீள்வாசிப்புச் செய்தேன் என்று

எனக்குத் தெரியாது. எங்கள் ஓலை மண்வீட்டுத் திண்ணையிலும், அந்தச் சாக்குக்கட்டிலிலும் படுத்தபடி நிறையத் தடவைகள் வாசித்திருக்கிறேன்.

அப்படி பல மறுவாசிப்புகள் செய்த இன்னொரு புத்தகம், சுஜாதாவின் ‘நான் பிளேன் ஓட்டக் கற்றுக் கொண்டேன்’ என்ற குமுதத்தின் இலவச இணைப்பு. சிறிய துண்டு சைஸ் புத்தகம் அது. அதுவும் நூற்றுக்கணக்கான மறுவாசிப்புகள் தான்.

கலாநிதி இந்திரகுமார் இலங்கையில் தயாரிக்கப்பட்ட, செங்கை ஆழியானின் நாவலைப் படமாக்கிய வாடைக்காற்று படத்தில் நடித்தவர். அதில் நெடுந்தீவு பற்றிக் குறிப்பிட்டது குறித்து கோபமடைந்து நெடுந்தீவில் அந்தப் புத்தகம் எரிக்கப்பட்ட ஞாபகம்.

அவர் ரஷ்யாவுக்கு சென்று, இந்த விண்வெளி ஆராய்ச்சி பற்றி சுற்றிப் பார்வையிட்டு இந்தப் புத்தகத்தை எழுதியிருந்தார்.

உயர்தர வகுப்பில் இரசாயனவியலில் சிறந்த மாணவன் என்று ஒரு தடவை எனக்கு பரிசு கிடைத்தது. அப்போது எல்லாம் பரிசளிப்பு விழா என்றால், எனது இரசாயனவியல் ஆசிரியரும் யாழ்ப்பாணத்தில் பிரபலமான டியூசன் ஆசிரியருமான சாம் மாஸ்டர் தான் புத்தகங்களைத் தெரிவு செய்து வாங்குவார். அவர் தான் பரிசளிப்பு நேரத்தில் பரிசு வழங்கும் பிரதம விருந்தினருக்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களை கொடுப்பதற்காக எடுத்து வழங்குவார்.

அவர் என் மீது பிரத்தியேகமான அன்பு பூண்டவர். அவரது வகுப்பில் அவரிடம் கேள்வி கேட்கக் கூடாது என்பது விதி. நான் ஒருவன் தான் பயப்படாமல் கேள்வி கேட்டவன் என்பதாலும், அவருக்கு சிதம்பர ரகசியம் பற்றிய விளக்கம் கொடுத்தவன் என்பதாலும், ஏதோ கெட்டிக்காரன் என்பதாலும் என் மீது பிரியமானவர்.

என்னுடைய அந்த சிதம்பர ரகசியக் கதை, நான் மூன்று மாதம் ஆங்கில இலக்கணம் படித்துப் பாண்டித்தியம் பெற்ற நல்லூர் வைமன் றோட் ஐயர் மாஸ்டர் சொன்னது. அவருக்குப் பிடித்தமான மாணவன் நான் என்பது தனிக்கதை.

எனக்குப் பின், என்னைப் பார்த்து ஐயர் மாஸ்டரிடம் போய் அட்வான்ஸ் ஆங்கிலம் படித்த என்னுடைய அண்ணனுக்கும், அண்ணனின் நண்பரும் அவரோடு வேலை செய்தவரும், ஈழநாடு பத்திரிகையில் போயா நாட்களில் பௌத்த நற்சிந்தனை எழுதியவருமான சிங்களவரான பண்டா அண்ணைக்கும் ஐயர் மாஸ்டர் என்னைப்புகழ்ந்துதள்ளியது அண்ணைக்குப் பெரும் புழுகம். என்னை வளர்த்த அப்பாவுக்கு வந்து சொல்லி அவருக்கும் வலுத்த புழுகம்.

இப்படி சாம் மாஸ்டர் ஆசிரியர்களுக்கான அறையில் போய், இந்த சிதம்பர ரகசியக் கதையைச் சொல்லி, எனக்குத் தாவரவியல் படிப்பித்த ரத்தினசபாபதி மாஸ்டர் வகுப்பில் வந்து சிரித்தபடியே என்னைப் பார்த்து சிதம்பர ரகசியக் கதை சொன்னது தனிக்கதை.

இப்படி சாம் மாஸ்டர் என் மீது தனிப்பிரியம் என்பதால், அவரோடு போட்டி மனப்பான்மை கொண்டிருந்த, எனக்குப் பௌதிகம் படிப்பித்த ஞானம் மாஸ்டருக்கு என் மீது தனிக் ‘கறள்’. அதற்காகவே மனிதர் எனக்குப் பெரும் அலுப்புத் தந்தார். அது தனியே கதையாக எழுதுவேன்.



இப்படி சாம் மாஸ்டர் தான் எனக்காக அந்தப் புத்தகத்தைத் தெரிந்து தந்திருந்தார். வகுப்பில் சிறந்த மாணவன் என்பதற்காக, ராஜாஜியின் வியாசர் விருந்து தந்திருந்தார்கள். இன்னொரு தடவை தமிழில் சிறந்த மாணவன் என்று கோவூரின் கோர இரவுகள் புத்தகம் கிடைத்தது. அவையும் சில பல தடவைகள் மறுவாசிப்புச் செய்யப்பட்டவை தான். சில தடவைகள் தமிழில் இரண்டாம் பரிசுக்கான நற்சான்றிதழ்கள் கிடைத்த போதும், விருதுகள் மாதிரி அவற்றைப் பிரேம் போடப் பணமோ, தொங்க வைக்க சுவரோ வீட்டில் இருந்ததில்லை.

இப்படி இங்கே என் மகன் உயர்தரம் படித்தபோது, அவனுக்கும் பரிசில்கள் கிடைத்த போது, அவன் மீதான அன்பினால் அவனது கணித ஆசிரியர் தன்னுடைய தனிப்பட்ட அன்பளிப்பாக ஐன்ஸ்டைனின் வாழ்க்கை பற்றிய புத்தகத்தை வழங்கியிருந்தார்.

அவனிடம் அதைப் பற்றி நினைவு படுத்தியபோது, தன்னோடு போட்டிக்குப் படித்த மாணவனுக்கு ஒப்பன்ஹைமரின் வரலாற்றுப் புத்தகம் கொடுத்ததாகச் சொன்னான்.

சரி, இப்படியெல்லாம் தன்னைப் பற்றிச் சொல்லி, பீலா விடுகிறார் என்று நீங்கள் நினைக்கலாம். நான் முன்பும் அபத்தத்தில் எழுதியிருக்கிறேன். என்னைப் பற்றி எழுதுவதும் சொல்வதும் என்னுடைய இயல்பும் இல்லை. அது எனக்கே வெட்கமாகவும் இருக்கிறது.

ஆனால் சொல்ல வேண்டியிருக்கிறது. மாக்ஸை மட்டும் படித்து விட்டு, பேஸ்புக்கில் பீலா விட்டுக் கொண்டிருக்கும் சில பல ‘அல்லேலூயாத் தோழர்’களுக்கும், தோஸ்தோயேவ்ஸ்கியின் பெயரை மட்டும் தெரிந்து கொண்டு தங்களை இலக்கியவாதிகள் மாதிரி உடான்ஸ் விடும் இலக்கியப் பெருந்தகைகளுக்கும், ‘உங்களைப் போல, உதுகளை மட்டும் படிச்சுப் போட்டுப் பீலா விடுகிற ஆள் நானில்லை’ என்பதைச் சொல்ல வேண்டும் என்பதற்காக மட்டும் தன்னடக்கத்தோடு சொல்வது தான் இதெல்லாம்!) அ

# படுகொலைகளிற்கு அரிதாரமா?

**கடந்த இதழில் சுகன் எழுதியிருந்த மக்களின் மகத்தான தலைவன் குறித்த கட்டுரைக்கான சிறு விளக்கம்.**

**கற்சுறா**

*25.000 பெயர்களைக் கொண்டிருந்த புளொட் என்ற தாபனத்தில் 3004ம் இலக்கத்தை வகித்துக் கொண்ட எனதன்பு சுகனுக்கு...*

*எனது சிறு வயதில் எனது ஊரில் நான் கண்டு அதிசயித்த ஒரு மனிதன். தெருவெங்கும் ஓடித் திரிந்து மக்களின் முன்னேற்றத்திற்காக எதையாவது செய்து விடவேண்டும் என்று ஆலாய்ப் பறந்த உரு சத்தியன். எத்தனையோ பேர் ஆலாய்ப் பறந்த காலத்தில் அவசரத்துடன் அந்த முன்னேற்றத்திற்காய் பறந்து திரிந்தவர் அவர். கால்தரித்து ஆறாத அதி வேகப் பறப்பின் உரு அது.*

*பயணத்தில்மட்டுமல்லசிந்திப்பதிலும் பேசுவதிலும் அவசரம் கொண்டு திரிந்த சத்தியனை புளொட்டின் அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்கு தெரியும். சொக்கலிங்கம் கமலேஸ்வரன் என்ற இயற்பெயர் கொண்ட அவரை மல்லாவியில் உள்ளவர்கள் அனைவரும் அக்காலத்தில் நன்கு அறிவார்கள்.*

*இயக்கத்திற்குப் போனபின் ஒரு நீல நிறமான கொண்டா 200 மோட்டார் சைக்கிள் ஓட்டியபடி மல்லாவிக்கு ஒருமுறை வந்த சத்தியனை ஒரு பின்னிரவு சந்திக்கச் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அவரது தோழர்களைச் சந்திக்க அவர் அங்கு வந்திருந்தார். அந்த இடத்தில் நானும் எதேச்சையாக நின்றதால் அந்தச் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. தன்னால் உருவாக்கிக் கட்டியெழுப்ப எண்ணிய ஒரு பண்ணை பற்றிய உரையாடலாக இருந்தது அந்தச் சந்திப்பு.*

*எத்தனை பேரை அதற்குள் உள்வாங்கலாம், என்னவெல்லாம் பயன் அடையலாம் என்பதுபோல் நீண்ட உரையாடல் அது. ஒரு வீட்டின் பின் காணியில் செங்கற் சூளையைப் பிரித்து அடுக்கிக் கொண்டிருந்த தோழர்கள் அவரது*



**ஆக, அதிர்ச்சி எங்கிருந்து வரும் என்று எங்கள் யாருக்குத்தான் தெரியும் சுகன்?**

**எங்களுக்குத் தொடர்ந்தும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது.**

**'தமிழ் ஈழவிடுதலை' என்ற ஒரு சொல்லைக் கேள்விப் பட்டதிலிருந்து நாம் பட்ட அதிர்ச்சி கொஞ்சமல்ல.**

**கிளிநொச்சி வங்கியினைக் கொள்ளை அடித்தார்கள் என அறிந்ததில் அதிர்ச்சி!**

**அதற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் வட்டக்கச்சி விவசாயத் திணைக் களத்திலிருந்து கடத்தப்பட்டது என அறிந்தபோது அதிர்ச்சி!.**

**துரோகிகளையும் சமூக விரோதிகளையும் அழிக்கிறோம் என்று சொல்லி பெருமாள் கோயிலில் துரையப்பா தொடக்கம் யாழ் வைத்தியசாலையில் திலகரை, வவுனியாவில் புலேந்திரனை என்று தொடங்கி ஊரிலிருந்த மாட்டுக் கள்ளர்களையும் கசிப்புக் காய்ச்சியவர்களையும் தெருவில் சுட்டுப் போட்ட ஒவ்வொரு தடவையும் நாங்கள் அதிர்ச்சியடைந்து கொண்டே இருந்தோம்.**

**ஏனெனில் ஈழ விடுதலை என்பது சாகசங்களுக்கும் அதிர்ச்சிகளுக்கும் இடையேதான் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. இந்த தமிழீழ விடுதலைக் கதை என்பது முள்ளிவாய்க்காலில் முடியும் வரை நாம் அடைந்த அதிர்ச்சிகளுக்கு ஒருபொழுதும் குறையிருக்கவில்லை. ஆனாலும் அதன் பின்னால் இன்று தினந்தினம் நாம் காணநேரும்: அறிய நேரும் அதிர்ச்சிகளுக்கும் குறைவில்லாதுதானே இருக்கிறது சுகன்?**

பேச்சைக் கேட்டபடியே வேலை செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது அந்தச் சூளைக்குள் படுத்திருந்த ஒரு சிறிய புடையன் பாம்பைக் கையால் அமத்திப்பிடித்த தோழர்கள் அதனை உணவாக்கத் தயாரான பொழுது அந்த வீட்டின் தாயார் அதனைச் செய்யவிடாது மறித்திருந்த சம்பவம் அன்றைய இரவைச் சந்தோசமாக்கியது. ஆனால் அதற்கிடையிலும் சத்தியன் தொடர்ந்து தோழர்களுடன் பேசிக்கொண்டேயிருந்தார். அவரது வேகமான உரைமொழிமூலம் தனது திட்டம் குறித்துச் சொல்லிக் கொண்டிருந்தார்.

தன்னுடைய சிந்தனை மூலம் மக்களுக்கு என்னவெல்லாம் செய்து விடமுடியும் என்று தினமும் சிந்தித்தபடி இருந்த ஒரு ஆளுமையை அவர் சார்ந்திருந்த புளொட் அமைப்பினரே 26 மே 1988 அன்று கொழும்பில் வைத்துச் சுட்டுக் கொன்ற போது நாம் அடைந்த அதிர்ச்சி இன்னமும் மனதை விட்டுப் போகவில்லை. வன்னியில் சாதாரண ஒரு குடும்பத்தின் மூத்த மகனாக இருந்த சத்தியனை இழந்த குடும்பமும் அந்தச் சமூகமும் அடைந்த அதிர்சிக்கும் வலிக்கும் அளவேயில்லை.

ஆக, அதிர்ச்சி எங்கிருந்து வரும் என்று எங்கள் யாருக்குத்தான் தெரியும் சுகன்?

எங்களுக்குத் தொடர்ந்தும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

'தமிழ் ஈழவிடுதலை' என்ற ஒரு சொல்லைக் கேள்விப் பட்டதிலிருந்து நாம் பட்ட அதிர்ச்சி கொஞ்சமல்ல.

கிளிநொச்சி வங்கியினைக் கொள்ளை அடித்தார்கள் என அறிந்ததில் அதிர்ச்சி!

அதற்குப்பயன்படுத்தப்பட்ட வாகனம் வட்டக்கச்சி விவசாயத் திணைக் களத்திலிருந்து கடத்தப்பட்டது என அறிந்தபோது அதிர்ச்சி!.

'வொண்டர்லைட் சோப் வாங்குங்கள். மிக வெண்மையைத் தருவது வொண்டர் லைட் சோப்' என்று பாட்டுப்பாடியபடி அங்கிருந்த காவலாளியின் கண்ணுக்கு டோச் லைட் அடித்துக் கொண்டு வந்தே வாகனத்தை எடுத்துப் போனார்கள் என்று அறிந்தபோதும் அதிர்ச்சி!

'ஏலுமெண்டால் பிடித்துப்பார்' என்று சொல்லி வங்கியின் கண்ணாடியில் கைரேகையைப் பதித்து விட்டு வந்தார்கள் என்று அன்று சனம் சொன்ன பொய்க் கதைகளைக் கேட்டும் அதிர்ச்சி!

நீர்வேலி வங்கிக் கொள்ளையை அறிந்ததும் அதிர்ச்சி. கையுறை அணிந்தபடியே குட்டிமணி அந்த இரவிலும் தன்வீட்டில் கதவைத் தட்டித் தண்ணி கேட்டுக் குடித்தார் என உடுவில் டச் றோட்டில் வாழ்ந்த குடும்பத்தார் சொன்ன பொய்கதைக்கும் அதிர்ச்சி!

ஓடிவந்த வாகனமும் அதற்குள் இருந்த பணமற்ற றங்குப் பெட்டிகளும் உடுவில் டச்றோட்டில் எரிந்து கொண்டிருந்ததைப் பார்த்த போதும் அதிர்ச்சி! என்று எங்களுக்குக் கிடைத்த அதிர்ச்சிகளுக்கு அப்போது பஞ்சமேயில்லை.

துரோகிகளையும் சமூக விரோதிகளையும் அழிக்கிறோம் என்று சொல்லி பெருமாள் கோயிலில் துரையப்பா தொடக்கம் யாழ் வைத்தியசாலையில் திலகரை, வவுனியாவில் புலேந்திரனை என்று தொடங்கி ஊரிலிருந்த மாட்டுக் கள்ளர்களையும் கசிப்புக் காய்ச்சியவர்களையும் தெருவில் சுட்டுப் போட்ட ஒவ்வொரு தடவையும்நாங்கள் அதிர்ச்சியடைந்து கொண்டே இருந்தோம்.

ஏனெனில் ஈழ விடுதலை என்பது சாகசங்களுக்கும் அதிர்ச்சிகளுக்கும் இடையேதான் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. இந்த தமிழீழ விடுதலைக் கதை என்பது முள்ளிவாய்க்காலில் முடியும் வரை நாம் அடைந்த அதிர்ச்சிகளுக்கு ஒருபொழுதும் குறையிருக்கவில்லை. ஆனாலும் அதன் பின்னால் இன்று தினந்தினம் நாம் காணநேரும்: அறிய நேரும் அதிர்ச்சிகளுக்கும் குறைவில்லாதுதானே இருக்கிறது சுகன்?

எக்காலத்திலும் அதிர்ச்சிகளிலிருந்து நாம் மீளமுடியாதுதானே இருக்கிறோம்.

இந்த அதிர்ச்சிகள் குறித்து இன்னும் நாம் விரிவாகப் பேசவேண்டும் சுகன்.

ஆனாலும் இத்தனைநாள் கழித்து நீங்கள் மக்களின் மகத்தான தலைவன் முகுந்தன் என்று சொன்னதும் இதுவரை பெற்ற அதிர்ச்சிகளை விடவும் பேரதிர்ச்சி! அவ்வளவுதான். இங்கே சண்டை செய்ய ஒன்றுமில்லை. ஆனாலும் சில கருத்துக்களை எனது வாழ்வனுபவத்துடன் பதிவு செய்வது மட்டுந்தான் இந்தக் குறிப்பு.

25.000 பேரைக் கொண்டமைந்த தாபனத்தின் உங்கள் மகத்தான மக்களின் தலைவன் தனியே அந்த 25.000 பேரையும் மட்டும் தன்னுடன் கைசேர்த்து வைத்திருக்கவில்லை என்பது நீங்கள் அறியாததல்ல.

25.000 பேருக்கும் பின்னால் மிகப்பெரிய மக்கள் கூட்டம் ஒன்றும் அன்று இருந்தது. இதுவும் ஒரு வீக்கந்தான். அவர்களுக்கு உங்களுக்குக் கிடைத்த இலக்கம் போன்று இலக்கங்கள் இருக்கவில்லை. அந்த மக்கள் கூட்டத்தை இணைத்தது உங்கள் மகத்தான மக்கள் தலைவனல்ல. மாறாக, மக்களை நேசித்து இயங்கிய பலரின் உழைப்பும் கனவாகவுமாக இருந்தது அது.

ஈழத்தில் நிலவியிருந்த சமூகக் கொடுமைகளுக் கெதிராகவும் அடக்கு முறைக்கு எதிராகவும் ஏற்கனவே சமூகத்திற்குள் இயங்கிக் கொண்டிருந்த பலர் புளொட் என்ற தாபனத்திற்குள் இணைந்து கொண்டதால் சாத்தியப்பட்ட நிகழ்வு அது. ஒவ்வொரு சிறு குக்கிராமங்களிலும் சமூகநீதிக்காகச் செயற்பட்டவர்களின் மீதான நம்பிக்கையில் இணைத்து கொள்ளப்பட்ட மக்கள் தொகை அது.

புளொட் என்ற இயக்கத்தின் கொள்கைகளோ வீரதீர சாகசங்களோ என்று எதுவுமே அறிந்திராத மக்கள் கூட்டம், தமக்குமுன் ஏற்கனவே அறியப்பட்டிருந்த சமூக அக்கறையாளர்களின் பின்னால் அணிதிரளத் தொடங்கினர். அந்தச் சமூக அக்கறையாளர்கள் அல்லது சமூக மாற்றத்திற்காக எதையாவது செய்யவேண்டும் எனக் கண்விழித்திருந்தவர்கள் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் என்ற ஒன்றை நோக்கித் தமது கைகளைக் காட்டியபோது அந்தக் கைகளின் பின்னால் மக்கள் திரண்டனரேயன்றி நீங்கள் சொல்லும் மகத்தான தலைவனுக்குப் பின்னால் அல்ல.

அவ்வாறு திரண்டவர்களுக்கு தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் முதன் முதலில் தமிழ் மொழியில் கலண்டர் வெளியிட்ட போது அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

தமிழில் தபால்தலை வெளியிட்ட போது அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

தமிழில்வானொலி தொடங்கியபோது அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

அந்த வானொலியை சிங்களத்திலும் செயற்படுத்தியதை அறிந்தும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

துண்டுப் பிரசுரங்களிலும் அறிக்கைளிலும் ஏற்படுத்தப்பட்ட தமிழ் எழுத்து மாற்றங்களைக் கண்டும் பெரும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

ஆனால் இந்த அதிர்ச்சிகளை எல்லாம் வீணாய்ப்போக வைத்ததுடன், அதன் பின்னாலிருந்து செயற்பட்ட அத்தனை செயற்பாட்டாளர்களையும் கையறு நிலையில் கொண்டுவந்துவிட்டதோடு மல்லாமல், அதிகமானவர்களை மனநோயாளிகளாகவும் ஆக்கிவிட்டு, அதுகுறித்த எந்தச் சிறு கவலையுமற்று, 'நீங்கள் எல்லாம் போய்விடுங்கள். மலையக மக்களையும், சிங்கள் முற்போக்கு சக்திகளையும் இணைத்து நான் புதியதொரு தாபனத்தை உருவாக்கப் போகிறேன்' என்று சொல்கிறார் என்றால் எவ்வளவு முட்டாளாக அவர் இந்த மக்களைக் கருதியிருக்கிறார் என்று அறியமுடிகிறதல்லவா? அவரையா நீங்கள் மக்களின் மகத்தான தலைவன் என்கிறீர்கள்? அவ்வாறு அவர் சொன்ன கருத்தினை 'அவரது முடிவு ஒரு நெகிழ்ச்சியான புரட்சிகர முடிவாகவே இன்றும் தெரிகிறது.' என்கிறீர்கள் நீங்கள். இதைவிட இந்த மக்களை முட்டாளாக்கும் ஒரு மடையனை இனியொரு பொழுதிலும் பார்க்க முடியாது என்பதற்கமைவான சொல் உங்களுடையது. மக்களின் எந்த வலியையும் உணரமுடியாத தலைமை விசுவாசம் மட்டுமே நிரம்பிய கொலைகாரனுக்கு இருக்கும் மனநிலைக்கு ஒப்பான வார்த்தைகள் இவை.

"

புளொட் என்ற இயக்கத்தின் கொள்கைகளோ வீரதீர சாகசங்களோ என்று எதுவுமே அறிந்திராத மக்கள் கூட்டம், தமக்குமுன் ஏற்கனவே அறியப்பட்டிருந்த சமூக அக்கறையாளர்களின் பின்னால் அணிதிரளத் தொடங்கினர். அந்தச் சமூக அக்கறையாளர்கள் அல்லது சமூக மாற்றத்திற்காக எதையாவது செய்யவேண்டும் எனக் கண்விழித்திருந்தவர்கள் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் என்ற ஒன்றை நோக்கித் தமது கைகளைக் காட்டியபோது அந்தக் கைகளின் பின்னால் மக்கள் திரண்டனரேயன்றி நீங்கள் சொல்லும் மகத்தான தலைவனுக்குப் பின்னால் அல்ல.

நீங்கள் கருத்தியலாகக் கொலையை ஆதரிக்கும், தத்துவார்த்தமாகக் கொலையை ஆதரிக்கும் நிலையை அடைந்திருப்பது என்னளவில் ஏற்கமுடியாதது. கிட்டத்தட்ட தெய்வங்களுக்கு நரபலி கொடுக்கும் நிலையினை ஆதரித்து நிற்கும் இடத்திற்கு நீங்கள் வந்து விட்டிருக்கிறீர்கள். இது ஒன்றும் வைரவருக்கு மடை பரவும் செயல் பற்றியதில்லை. அல்லது பேய்க்கு படையல் செய்யும் பாசாங்குச் சேட்டையுமல்ல. ஒரு சமூகத்தின் அழிவுக்கு மூலகாரணமாய் இருக்கும் கேள்வி.

நாம் பேசுவது சமூகத்தின் கொலை பற்றியது.

'தாபனத்திற்குள் நடந்த 50க்கும் உட்பட்ட உட்கொலைகளுக்கு மவுனமாக அங்கீகாரம் வழங்கியும் செயலற்றும் பார்த்துக் கொண்டிருந்ததும் அக்கொலைகளுக்கு உடந்தையாக இருந்தார் என்றும் முகுந்தன் மீது இருந்து வரும் விமர்சனங்கள் அவர் அழிவிற்கு சமாந்தரமாகச் செல்வன.' என்று சொல்கிறீர்கள்.

இங்கே கொலையில் எண்ணிக்கையை அளவிடுவதும் கணக்குச் சமன்பாடு சொல்வதும் புலிமனம். அப்படிக் கணக்கிட்ட போதிலும் உட்கொலைகளை அளவிடுவதிலும் நீங்கள்

அடையாளம் கொண்டவர்களை மட்டுமே கணக்கில் சேர்ப்பதும் இன்னும் வேடிக்கையானது. அடையாளமே இல்லாது இறந்து போனவர்களையும் 'பின்தளம் '(இந்தியா) சென்றபின் கணக்கிலே இல்லாது எங்கேனும் இன்றுவரை திரும்பி வராதவர்களையும் நீங்கள் உங்கள் கணக்கிற்குள் சேர்க்கவேயில்லை. அதனையும் விட 'தளம்' என்று நாம் அழைத்த இலங்கைக்குள் புளொட்டின் பெயரில் நிகழ்த்தப்பட்ட கொலைகளை நாம் எந்த இடத்தில் சேர்ப்பது? அதிலும் கொலையின் எண்ணிக்கையில் விடுதலைக்கான சாத்தியத்தியத்தைக் கணக்கிட முயலும் உங்களுக்கும் அதிக மரணம் நிகழ்ந்தால் தான் சர்வதேசத்தில் ஈழம் பற்றிய கரிசனையை உருவாக்க முடியும் என்ற புலிமனத்தின் முட்டாள்த் தனத்திற்கும் என்ன வித்தியாசம் சுகன்.?

இவ்வாறான உங்கள் எழுத்து வகைமையின் பின்னர் ஈழவிடுதலைப் போராட்டம் சார்ந்து நமக்குக்கிடைத்த தலைவர்கள் அனைவரையும் சுயமோகம் இன்றி ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய நேரம் வந்து விட்டிருக்கிறது என நினைக்கிறேன். இன்றைக்கு இத்தனை அழிவுக்குப் பின்னும் இவ்வாறு முகுந்தன் குறித்து எழுதிய உங்கள் எழுத்தின் பின்னிருக்கும் சிந்தனை நமது எதிர்காலச் சமூகத்திற்கு மிகவும் அபாயகரமானது எனவும் எண்ணுகிறேன்.

விட்ட தவறுகளிலிருந்து நாம் எதையும் கற்றுக் கொண்டுபயணிக்க எவ்வித எத்தனங்களையும் உருவாக்காது. விட்ட தவறுகளுக்கு தத்துவார்த்த விளக்கம் கொடுக்க முற்படும் போது அது அபாய எச்சரிக்கையை உடனடியாகவே சுட்டிக் காட்டி விடுகிறது. அதனால் தான் சொல்கிறேன். இந்த சமூகத்தை மிகவும் சாதுரியமாக ஏமாற்றிவிட முனையும் கட்டுரையே உங்களுடையது சுகன். ஆனாலும் உங்கள் கட்டுரை சுட்டி நிற்கும் உள்ளார்ந்த விடயம் ஏற்கனவே பலரால் செயற்படுத்தப்பட்டு பலவீனப்பட்ட ஒன்றுதான்.

**இங்கே கொலையில் எண்ணிக்கையை அளவிடுவதும் கணக்குச் சமன்பாடு சொல்வதும் புலிமனம். அப்படிக் கணக்கிட்ட போதிலும் உட்கொலைகளை அளவிடுவதிலும் நீங்கள் அடையாளம் கொண்டவர்களை மட்டுமே கணக்கில் சேர்ப்பதும் இன்னும் வேடிக்கையானது. அடையாளமே இல்லாது இறந்து போனவர்களையும் 'பின்தளம் '(இந்தியா) சென்றபின் கணக்கிலே இல்லாது எங்கேனும் இன்றுவரை திரும்பி வராதவர்களையும் நீங்கள் உங்கள் கணக்கிற்குள் சேர்க்கவேயில்லை. அதனையும் விட 'தளம்' என்று நாம் அழைத்த இலங்கைக்குள் புளொட்டின் பெயரில் நிகழ்த்தப்பட்ட கொலைகளை நாம் எந்த இடத்தில் சேர்ப்பது? அதிலும் கொலையின் எண்ணிக்கையில் விடுதலைக்கான சாத்தியத்தியத்தைக் கணக்கிட முயலும் உங்களுக்கும் அதிக மரணம் நிகழ்ந்தால் தான் சர்வதேசத்தில் ஈழம் பற்றிய கரிசனையை உருவாக்க முடியும் என்ற புலிமனத்தின் முட்டாள்த் தனத்திற்கும் என்ன வித்தியாசம் சுகன்.?**

அதாவது இந்த சமூகத்தில்த்தான் எல்லோரும் தங்கள் தங்கள் தலைவர்கள் புனிதமானவர்கள் என்று மாவீரர் தினமும் வீரமக்கள் தினமும் தியாகிகள் தினமும் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இவை கொலையாளிகள் தினம் என்று நன்றாகவே அனைவருக்கும் தெரிந்தாலும்தம்மைச்சார்ந்திருக்கும் சனத்தின் அளவைக் கொண்டு அவை கொண்டாடப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன..

புலிகளைக் கொலையாளிகளாக வர்ணித்தபடி இருக்கும் ஈ.பி. ஆர். எல். எவ். இயக்கத்தினர் தான் முதன் முதலில் வன்னியில் குழந்தைகளை கட்டாய ஆட்சேர்ப்பில் இணைத்தவர்கள் என்ற கதையாவது உங்களுக்குத் தெரியுமா சுகன்? அவர்களுடன் இணைந்த ஈ.என்.டி. எல். எவ். இயக்கத்தினர் அடுத்த தரத்தில் உள்ளவர்கள்.

தங்களது முகாம்களைத் தாண்டிச் செல்லும் பஸ்களிலிருந்து குழந்தைகளை இறக்கியவுடன் மொட்டை அடித்து அரைக்காற்சட்டையும் போட்டு விட்டவர்களில் முதன்மையாளர்கள் அவர்கள். அதற்குள் நடந்த கொலைகள் எல்லாம் எத்தனை? எத்தனை?

இவற்றிற்கெல்லாம் எந்த வர்ணச் சாயமும் பூசிவிட முடியாது யாராலும்.

அதனைப் போல்த்தான் புளொட்டின் பெயரில் வவுனியா நகரம், நரகமாகிய கதையையும் யாராலும் மறுத்தெழுத முடியாத கதையாகவே இருக்கிறது. இதற்குள் வவுனியாவில் முகுந்தனது பெயரில் வீதியிருக்கிறது என்ற பெருமை உங்களுக்கு? இதனைத்தான் எருமைத்தனக் கதை என்பார்கள் வன்னியில்.

இங்கே நான்உங்களுக்கு முக்கியமாகச் சுட்டிக்காட்ட நினைப்பது, நடத்தப்பட்ட கொலைகளை மட்டுமல்ல. நடத்தப்பட்ட கொலைகளின் வடிவங்களையுந்தான்.

ஆம். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் பெயர் கொண்ட கொலைகளின் வடிவங்களும் விசித்திரமானவை. அவற்றை நீங்கள் ஒரு கலையாகவே நிகழ்த்தினீர்கள். பின்தளத்திலும் சரி தளத்திலும் சரி அவை நிகழ்த்தப்பட்ட விதத்தில் நீங்களே முன்னோடி. இது அதிகமாக அத்தனை பேருக்கும் நன்றாகத் தெரிந்த உண்மை. ஆனால் ஏனோ 3004ம் இலக்கத்தைக் கொண்ட சுகன் தோழருக்கு மட்டும் தெரியாது போயிருக்கிறது. ஆனால் 3004வது தோழருக்கு கட்டாயம் சுந்தரம் படையணியினரது கொலைக் கலையாவது நன்றாகத் தெரிந்திருக்கும் என்றே நினைக்கிறேன்.

சுழிபுரத்துச் சுடுமணலின் புதைகுழிகள் குறித்த அதிர்ச்சி இன்னமும் தானே எங்களை விட்டுக் கழரவில்லை?

'வரலாற்றுச் சக்கரங்கள் பின்நோக்கிச்

சுழல்வதில்லை' என்று அந்தக் கொலையை மறுத்து எழுதிய துண்டுப் பிரசுரத்தை முகவரியற்ற தெருக்களிலும் கொண்டு திரிந்து கொடுத்தவர்கள் அதிகம்பேர். ஒரு சில தினங்களில் அதனைத் தாபனந்தான் செய்தது என அறிந்தபோது அவர்களது உணர்வு எவ்வாறதானதாக இருந்திருக்கும் என நீங்கள் கற்பனை பண்ணிப் பார்த்ததுண்டா? அந்தக் கொலைக்கு மறுத்தான் கொலை புரிந்த புலிகள் பண்டா: ஜெகதீஸ்வரன்(மற்றவர்கள் பெயர் மறந்து போய்விட்டது) என்று ஐவரைக் கொலை செய்த போது, அதற்கு கண்டனமாய் ஊரெல்லாம் குமுறிக் கொதித்தெழ வைத்த காலத்தை நீங்கள் மறந்துவிட மாட்டீர்கள் என்றே நினைக்கிறேன்.

'நாம் ஆயுதத்தால் பேச நினைப்பவர்களல்ல

பேச வைத்தால் அதுவும் பேசும்'

என்று எழுதிய சுவரொட்டிகளை எனதூரில் நானே எழுதினேன். ஆனால் துப்பாக்கிகளே இல்லாத அந்தச் சூழல்: அதற்குள்ளேதான் இத்தனை வக்கிரக் கொலைகளும் நடந்தன என்பதனையாவது நீங்கள் எப்போது உணருவீர்கள் சுகன்?

இங்கே நீங்கள் எழுதிய மாணிக்தாசன் அவர்களது சிக்கல்களை உங்கள் மக்களின் மகத்தான தலைவன் கணக்கிட்ட கதை வாசிக்க வேடிக்கையாக இருந்தது. நீங்கள் சொல்வது போல அவர் சிறந்த கதை சொல்லிதான். பேச்சாளர் தான் என்பதனைச் சொல்ல பல்வேறு உதாரணங்கள் உள்ளன. அந்தப் பேச்சுக்களைக் கேட்டு நடுத்தெருவுக்கு வந்தவர்கள் இன்று வரை நடுத்தெருவில்தானே இருக்கிறார்கள் உங்களைத் தவிர்த்து. ஒரு அயோக்கியத் தனத்தை யோக்கியம் என்று நிரூபிக்க இப்படியெல்லாம் நீங்கள் கதை சொல்ல வேண்டியிருக்கிறது என்பதே எனது கவலை.

எனது நண்பன் அவன் பின்தளத்தில் ஒரு முகாமிற்குப் பொறுப்பாக இருந்திருக்கிறான். அந்த முகாமிலிருந்த மற்றயவர்கள் அவனுடன் முரண்பட்டுக் கொண்டு இருந்த பொழுது தான் பொறுப்பிலிருந்து விலகுவதாக அறிவித்திருக்கிறான். அதற்கு அவனை முகாமை விட்டு வெளியில் அழைத்துச் சென்று அவனின் தோளில் கை போட்டவாறே ' இதென்ன ஒரு பிரச்சனை? இது ஒன்றுமேயில்லை. உன்னை விலகச் சொல்லித்தானே சொல்கிறார்கள். என்னைப்பற்றிப் புத்தகமே எழுதி அடித்து விட்டார்கள். இதெல்லாம் பெரிதில்லை நீ உன்ர பொறுப்பில் இரு. நான் பார்க்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். ஆகக் குறைந்த அறிவில் அவர் ஒரு சிக்கலைக் கையாளும் விதம், கையாண்ட விதம் இதுவாகத்தான் இருக்கிறது. சிக்கல்கள் எங்கிருந்து தொடங்குகின்றன? என்ற சாதாரண அறிவின் தேடலாக அவை ஒருபொழுதும் இருந்ததில்லை. அவ்வாறு தேடியபோது, அவற்றைக் கையாள்வது கொலையாகவே இருந்தது எனபதுதான் இங்கே நாம் பேசும் சிக்கல். ஆனால் தோழர் சுகன் உங்களால் அந்தத் தருணத்திற்குக் கிட்டவே போக முடியவில்லை என்பது வேடிக்கையானது.

'நீதானே அனைத்து முகாம் பொறுப்பாளர். நீதானே இதனைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் சொன்ன பிற்பாடுதான், தனது பதவி என்னவெனறு மாணிக்கதாசனுக்கத் தெரிந்த கதையைச் சொல்லும் பொழுது, இப்படித்தான் பொறுப்பற்ற பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டுச் சீரழிந்து போனது என்ற குற்றவுணர்வாவது உங்களுக்குத் தோன்றவில்லையா?

புளொட் என்ற தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தைக் குறித்தும் அதன் தலைவரான முகுந்தன் குறித்தும் நீங்கள் என்ன மதிப்பீட்டையும் வைத்துவிட்டுப் போங்கள். ஆனால் அதுசார்ந்து எனக்கிருக்கும் ஒரேயொரு அக்கறை அதில் அங்கம் வகித்த பெண்கள் பற்றியதே.

நான் அறிந்து எத்தனையோ பெண்கள் தமது குடும்ப நிலவரங்களையும்

**இத்தனை நாள் கழித்து முகுந்தனது கொலைக்குத் தத்துவார்த்த விளக்கம் கொடுக்க முன்வந்திருக்கும் உங்களது எழுத்து, புலிகளின் ஒட்டு மொத்த கொலையையும் நியாயத் தராசில் நிறுத்தமுனையும் ஒரு முன் செயற்பாடே.**

தாண்டி தாம் வாழும் சமூகத்திற்காக அக்கறைப்பட்டு புளொட்டில் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருந்தவர்கள். யாழ்ப்பாணத்தார் கேள்விப் பட்டேயிராத வன்னியின் சிறு சிறு ஊர்களிலிருந்தும் வீட்டைத் துறந்து வெளியில் வந்து செயலாற்றிய பெண்கள் அதிகம் பேர். அந்த ஊர்களிலிருந்து புளொட் என்ற சாக்கடையைநம்பிக் கல்வியை இழந்த பெண்கள் அதிகம். வழமையான தமிழ்ச் சமூக மனோபாவத்தில் இந்த சமூகம் 'தேவடியாள்' என்று விழித்து அழைத்த போதும் அதை மீறிச் செயற்பட்டவர்கள் அவர்கள். தமது எதிர்காலத்தைத் தொலைத்துச் செயலாற்றிக் கொண்டிருந்தார்கள். அவ்வளவு பெண்களையும் இந்தத் தலைமை ஒற்றை நாளில் நடுத்தெருவில் விட்டது.

இறுதியில் சமூகம் கொண்டிருந்த 'தேவடியாள்' பட்டத்தை இலகுவாக அவர்களுக்குச் சூட்ட வைத்தது. காலம் பூராவும் அந்தப் பெயரை மறுதலிக்க, இந்த சமூகத்திற்குள் அவர்கள் தன்னிச்சையாக இன்னுமொரு போராட்டத்தைத் தொடங்க வேண்டியிருந்தது. அதற்காகச் சமூகத்தைப் புறக்கணித்து வேறு சூழலுக்குள் வாழத் தொடங்குவது, அல்லது தற்கொலை செய்வது எனத்தான் அந்தக் காலம் இருந்தது. புளொட் இயக்கத்திற்குச் சென்ற பெண்களில் பெரும்பாலானோர் இயக்கம் கைவிட்ட பின்பு அந்த அமைப்பிற்குள்ளேயே திருமணம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது. அப்படிச் செய்தவர்களையும் இன்னொரு வழியால் புலி வழிமறித்துக் கொன்றது. இந்த நிலைக்குக் கொண்டுவந்து விட்டது குறித்த எந்த வெட்கமும்

இல்லையா உங்களுக்கு?

கழகத்திற்குள் நடந்த எந்தக் கதைகளின் வதைகளையும் கவனியாது நான் மலையகத் தமிழர்களையும் சிங்களவர்களையும் வைத்து இயக்கத்தைத் தொடருவேன் என்று சொல்லும் தலைவன் யாருடைய தலைவன் சுகன்? அவரைத்தான் மக்களின் மகத்தான தலைவன் என நீங்கள் வழிகாட்டுவது யாரின் தேவைக்காகச் சுகன்?

இன்னும் இது குறித்து நாம் வெளிப்படையாகப் பேச வேண்டும். ஆனாலும் ஒன்று நமது மக்களுக்கு எந்த மகத்தான தலைவர்களும் வழிகாட்டி நிற்கவில்லை. மகத்தான அந்த மக்களிற்குள் சில மனிதத் தன்மையுடன் செயற்படும் மகான்கள் இருந்தார்கள். அவர்களே அந்த மக்களிற்காக இருந்தார்கள். அவர்களை அந்த மக்கள் அடையாளம் கண்டார்கள். அவர்கள் ஈழவிடுதலை என்று ஆரம்பித்த எல்லா இயக்கங்களிலும் இருந்தார்கள். மக்களைக் கோரப்பலி எடுத்த புலிகள் அமைப்பிலும் கூட அவ்வாறான மகான்கள் இருக்கத்தான் செய்தார்கள். மக்களின் வாழ்வு முன்னேற்றத்திற்காக தினமும் சிந்தித்தவர்களாகவே இருந்தர்கள் அவர்கள். ஒவ்வொரு இயக்கத்திற்குள்ளும் இருந்த மகான்கள் ஒருபொழுதிலும் யாரையும் வெறுத்ததில்லை. யாரையும் கொலை செய்யத் துணிந்ததில்லை. அவ்வாறு செய்யப்பட்ட போதிலெல்லாம் அந்த மகான்கள் ஒரேநேர் கோட்டில் சிந்தித்தார்கள். அவர்களுக்குள் ஒரு ஒற்றுமை இருந்தது. அந்த மகான்களை அவர்கள் சாந்த இயக்கத்தினரே அதிகமாகக் கொலை செய்தார்கள். துன்புறுத்தினார்கள். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்கள் ஒருவருக்கொருவர் உதவினார்கள். ஒரவரையொருவர் காப்பாற்றினார்கள். ஆனாலும் பின்நாளில் அவ்வாறானவர்களை ஒட்டுமொத்தமாய்கருவறுத்தபுலிகள், வதைமுகாம்களில் அடைத்தார்கள், துன்புறுத்தினார்கள். கொலை செய்தார்கள்.

**ஈழவிடுதலை என்ற பெயரில் ஒரு கொடூர வாழ்வியலைக் கடந்து விட்டு வந்து நிற்கிறோம். இதற்குள் மக்களுக்காகவே வாழ்ந்து இறந்து போன சத்தியன் போன்ற மகத்தானவர்கள் அதிகம் பேரைப் பலிகொடுத்து விட்டு நிற்கிறோம்.**

ஆனால் இத்தனை நாள் கழித்து முகுந்தனது கொலைக்குத் தத்துவார்த்த விளக்கம் கொடுக்க முன்வந்திருக்கும் உங்களது எழுத்து, புலிகளின் ஒட்டு மொத்த கொலையையும் நியாயத் தராசில் நிறுத்தமுனையும் ஒரு முன் செயற்பாடே.

டொமினிக்கின் 'புதியதோர் உலகம் வெளிவந்த போது, 'இவையெல்லாம் தாபனத்திற்கு உள்ளே வைத்து விமர்சிக்கப்பட வேண்டியவை, விவாதிக்கப்பட வேண்டியவை, வெளியே அல்ல. எதிரிக்குத்தான் இவை வாய்ப்பாக அமையும்.' என்று சொன்ன கம்யூனிஸ்ட் இயக்கம் கட்சி உடைந்து அணி பிரிந்து பலமிழந்து போனதைக் கண்முன்னே கண்டு நொந்து வருந்திய அந்தப் புகழ் மிக்க கம்யூனிஸ்ட் தலைவரது பெயரையும் நீங்கள் இதில் குறிப்பிட்டிருக்க வேண்டும். அதுதானே தர்மம். நீங்கள் அவரது பெயரை மட்டும் ஏன் மறைக்க முனைந்தீர்கள்?

அந்தப் புகழ் மிக்க கம்யுனிஸ்ட் தலைவர் சொல்லும் கருத்தைப் போன்றுதானே புலிகளின் கருத்தியலும் இருந்தது. தமிழீழப் போராட்டமே முக்கியமானது.. அதனைக் குறித்து எதிர்க்கும் விடயங்கள் எப்பொழுதும் எதிரிக்கு வாய்ப்பாகவே அமையும். ஆக, அதனை எதிர்ப்பவர்கள் துரோகிகள். அழித்தொழிக்கப்பட வேண்டியவர்கள் என்பதாகத்தானே அவர்கள் வழிநடத்தல் இருந்தது. இப்போது நீங்கள் வருத்தப்படும் புகழ்மிக்க கம்யூனிஸ்ட் தலைவரது கருத்திற்கும் புலிகளின் கருத்திற்கும் ஏதாவது மாறுபாடு இருக்கிறதா சுகன்?

ஈழவிடுதலை என்ற பெயரில் ஒரு கொடூர வாழ்வியலைக் கடந்து விட்டு வந்து நிற்கிறோம். இதற்குள் மக்களுக்காகவே வாழ்ந்து இறந்து போன சத்தியன் போன்ற மகத்தானவர்கள் அதிகம் பேரைப் பலிகொடுத்து விட்டு நிற்கிறோம். தமிழீழப்பாசிசச் சிந்தனை தனியே புலிகளுக்குள் மட்டும் இருந்ததில்லை என்பதனையும் மிக உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். நீங்கள் பூசநினைக்கும் அரிதாரம் நமது சமூகத்தின் எதிர்காலத்திற்குக் கேடு விளைவிக்கும் என்பதனையும் சொல்லிவிடுகிறேன்.

ஆனாலும், நாம் கடந்து வந்த சூழல் குறித்தும் தியாகம் துரோகம் வீரம் குறித்தும் வெளிப்படையாகப் பேசுவதற்கான இன்னும் ஒரு வாசலைத் திறந்து விட்டதற்கு நன்றி சுகன். உங்களின் இந்தக் கட்டுரை குறித்து இதில் ஆழமாகச் சம்பந்தப்பட்டவர்களும் பேசவேண்டும் என்பதே என் விருப்பம். அதிகம் பேர் இன்னமும் உயிருடனே உள்ளார்கள். எதிர்கால நமது சமூகம் குறித்த கரிசனையில் என்றாலும் அவர்கள் வாய்திறக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். அ



# கவிஞர் திருமாவளவன் பற்றிய சில குறிப்புகள்



எழுத்தாளர் திருமாவளவனை நினைத்தால் முதலில் நினைவுக்கு வருவது அவரது உள்ளத்தைக் கவரும் புன்னகையுடன் கூடிய முகம். கனடாவில் அவ்வப்போது கலை, இலக்கிய நிகழ்வுகளில் சந்திக்கும்போது என்னுடன் கலை, இலக்கியம் பற்றி உரையாடும் மிகச்சிலரில் எழுத்தாளர் திருமாவளவனும் ஒருவர். சில சமயங்களில் நான் அவரது கவிதைகள் சிலவற்றை விமர்சிக்கையில், அவற்றை ஒருவித புன்சிரிப்புடன் ஏற்றுக்கொண்டு தன் பதிற் கருத்தினை முன் வைக்கும் அவரது பாங்கு என்னைக் கவர்ந்ததொன்று.

வ.ந.கிரிதரன்

எழுத்தாளர் கலைச்செல்வன் கவிஞர் திருமாவளவனின் கூடப்பிறந்த சகோதரர். ஒருமுறை அவர் கனடாவுக்கு வருகை தந்திருந்தபோது திருமாவளவன் கலைச்செல்வன் என்னைச் சந்திக்க விரும்புவதாக எனக்குத் தொலைபேசியினூடு அழைப்பு விடுத்திருந்தார். அன்று திருமாவளவனின் இருப்பிடம் சென்று, அவரையும், கலைச்செல்வனையும் அழைத்துக் கொண்டு விக்டோரியாப் பார்க் வீதியும், டான்ஃபோர்த் வீதியும் சந்திக்குமிடத்தில், வடகிழக்குத் திசையிலிருந்த உணவகமாகவும், இரவு கேளிக்கை விடுதியாகவும் இயங்கிக்கொண்டிருந்த 'ட்ரொபிகல் நைற்ஸ்' (Tropical Nights) உணவகத்துக்கு அழைத்துச் சென்றிருந்தேன். அந்த கேளிக்கை விடுதியில் பின்னர் ஒரு சமயம் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினால் அக்கேளிக்கை விடுதி நிரந்தரமாகவே மூடப்பட்டு விட்டது. இன்று அந்தக் கேளிக்கை விடுதி இருந்த இடத்தில் பள்ளி வாசலொன்று அமைந்திருக்கின்றது. அவ்வுணவகத்தில் நான் திருமாவளவன், கலைச்செல்வனுடன் சில மணித் துளிகளைச் செலவிட்டிருந்தேன். மறக்க முடியாத சந்திப்புகளிலொன்றாக அச்சந்திப்பு அமைந்து விட்டது,

எழுத்தாளர் திருமாவளவனை நினைத்தால் முதலில் நினைவுக்கு வருவது அவரது உள்ளத்தைக் கவரும் புன்னகையுடன் கூடிய முகம். கனடாவில் அவ்வப்போது கலை, இலக்கிய நிகழ்வுகளில் சந்திக்கும்போது என்னுடன் கலை, இலக்கியம் பற்றி உரையாடும் மிகச்சிலரில் எழுத்தாளர் திருமாவளவனும் ஒருவர். சில சமயங்களில் நான் அவரது கவிதைகள் சிலவற்றை விமர்சிக்கையில், அவற்றை ஒருவித புன்சிரிப்புடன் ஏற்றுக்கொண்டு தன் பதிற் கருத்தினை முன் வைக்கும் அவரது பாங்கு என்னைக் கவர்ந்ததொன்று. அவரைப்பற்றி எண்ணியதுமே அவருடன் சந்தித்த, உரையாடிய காட்சிகள் விரிகின்றன. அவரது எழுத்துகள் குறிப்பாகக் கவிதைகள் பற்றிய எண்ணங்கள் சிறகடிக்கின்றன.

புகலிடத் தமிழ்க்கவிஞர்களில்

திருமாவளவன் முக்கியமானவர் மட்டுமல்லர் தனித்துவமானவரும் கூட. பொதுவாக நாடறிந்த கவிஞர்களெல்லாரும் அரச அடக்குமுறைகளைப் பற்றி, அரச மனித உரிமை மீறல்களைப் பற்றியே தம் கவனத்தைத் திருப்பியிருந்த சமயம், சிலர் மதில் மேற் பூனைகளாக உருமாறியிருந்த சமயம், அக்காலகட்டத்தில் அரச மனித உரிமை மீறல்களுக்கெதிராகத் தன் குரலை உயர்த்தி முன் வைத்த அதே சமயம், விடுதலைப்புலிகளையும் துணிந்து விமர்சனத்துக் குள்ளாக்கியவர் அவர். விடுதலைப் போராட்டத்தில் அரச அடக்கு முறைகளுக்கெதிராக மட்டுமே குரல் கொடுக்க வேண்டுமென்று ஏனையவர்களெல்லாரும் அடக்கி வாசித்துக் கொண்டிருக்கையில், திருமாவளவனின் குரல் தனித்தொலிக்கின்றது. அதுவே அவரது கவிதைகள் ஏனையவர்களின் கவிதைகளிலிருந்து வேறுபடுவதற்கு முக்கிய காரணம்.

திருமாவளவனின் கவிதைகள் இழந்த மண்ணைப் பற்றிய கழிவிரக்கத்தை வெளிப்படுத்துவன. இலங்கை அரசின் கொடிய அடக்கு முறைகளுக்கெதிரான எதிர்க்குரலாக ஒலித்தன. புகலிடத் தமிழர்களின் சமூக, பொருளியல் நெருக்கடிகளைப்பேசின. அதே சமயம் அக்காலகட்டத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் மனித உரிமை மீறல்களுக்கெதிராகவும் கடும் கண்டனத்தை வெளிப்படுத்தின. ஏனைய கவிஞர்கள் பலரிடமிருந்து கவிஞர் திருமாவளவன் வேறுபடும் இரண்டு முக்கிய விடயங்களாக அவரது விடுதலைப்புலிகளின் குழந்தைப்போராளிகள் பற்றிய கடும் விமர்சனத்தையும், புகலிடத் தமிழர்களின் நெருக்கடி மிகுந்த வாழ்வினை வெளிப்படுத்தும் போக்கினையும் குறிப்பிடலாம். உதாரணத்துக்குத் திருமாவளவனின் 'நச்சுக்கொடி' மற்றும் 'ஷத்திரியம்' ஆகிய இரு கவிதைகளையும் சிறிது நோக்குவோம்.

'நச்சுக்கொடி'

'அழு பெண்ணே அழு.
உன் ஒப்பாரியில்
ஏழு கடல்தாண்டி
எழுகிறது
என் செவியில்.'

'கண்மூடி விழிக்கு முன்னெழுந்த
கணப்பொழுதுள்
களத்தில் பாய்ந்து
வெடித்துச் சிதறி
காற்றில் கலந்து விட்டான்
உன் பாலன்.

கட்டிப்புரண்டு
கதறி அழுகின்றாய்
நீ
என்ன செய்வாய்.

வெடிவால் முளைக்கு முன்னர்
அழைத்து
மூளை நீக்கி
கபாலத்தைக் கோதாக்கி
சலவையிட்டு
துடைத்து
வெடிமருந்தை நிரப்பி
ஏவி விடும் கலையும்
மாவீரம் செய்கின்ற

வல்லமையும்
அவர்க்கு.

அழு பெண்ணே!
அழு

மாவீரமென்று
சோகத்தை புதைத்து
வெதும்பத் தெரியாத
பேதை நீ

அழு
உன் ஒப்பாரிப்பாடல்
எட்டுத்திக்கும்
ஒலிக்கட்டும்'

என்று முடியும்.

அக்காலகட்டத்தில் இதுபோல் குழந்தைகளைப் போராட்டத்துக்குப் பாவிப்பதைக் கடுமையாக எதிர்த்துத் தன் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தி யிருக்கின்றார் கவிஞர் திருமாவளவன். கவிஞனொருவனுக்கு இருக்க வேண்டிய நேர்மையும், தனக்குச் சரியென்று பட்டதை எடுத்தியம்பும் துணிவும் கவிஞரிடம் நிறையவேயுள்ளன. நமக்கேன் வம்பு என்று பெரும்பாலானவர்கள் மதிற் மேற் பூனைகளாக மாறியிருந்த காலகட்டத்தில், அவ்விதம் உரு மாறாமல் துணிச்சலுடன் அக்காலத்துக்கான தன் வரலாற்றுப்பங்களிப்பினைச் சரியாகவே செய்திருக்கின்றார் கவிஞர். வரலாறு அவரை இவ்விடயத்தில் நன்றியுடன் நினைவு கூரும்.

இன்னுமொரு கவிதை 'ஷத்திரியம்'. சாதி, மதம், மொழி, இனம் போன்ற முரண்பாடுகளைக் காரணமாக வைத்து உருவாகும் போராட்டங்களில் அப்பாவி மக்கள் மேல் குண்டுகளை வெடித்துக் கொல்லும் செயற்பாடுகளைக் கடுமையாகக் கண்டிக்கும் கவிதை. உலகின் பல பாகங்களிலும், நம் நாட்டிலும் நடைபெற்ற ,நடைபெறுகின்ற இவ்வகையான செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பவை கவிஞர் திருமாவளவனின் கவிதைகள்.

'எதுவாயிருந்தாலும் நேரம்
முக்கியம்

மனிதர் கூடும் நேரம்
இயக்கு

குண்டுப்பிண்டம் வெடிக்கட்டும்
பாலர் பெண்டிர் கர்ப்பிணியர்
வயோதிபர் பாவியர் வழிப்போக்கர்
குழந்தைகள்
குருதியில் குளி
குடித்து மகிழ்
நிணம் புசி'

இவ்விதம் கூறும் கவிதை

'எக்கணமும்
தூக்கம் மறந்திரு
மீளக் கிளம்ப வேண்டும்.

வேட்டையாடல்
சத்திரியர்க்கு அறம்'

என்று முடியும்.

ஒரு படைப்பாளியின்
அநீதிக்கெதிரான ஆவேசமானது
பக்கச் சார்பானதாக
இருக்கக்கூடாது. குற்றம்
குற்றமே என்று எடுத்துரைக்கும்
நக்கீரத்தனம் அவரிடம் இருக்க
வேண்டும். அந்நக்கீரக் குணம்

கவிஞர் திருமாவளவனிடம் நிறையவேயுண்டு.

அடுத்து புகலிடத்தமிழர்களின் இருப்பின் வலியினை, இழந்த மண் மீதான கழிவிரக்கத்தினை, இழந்த மண்ணில் அரசினால் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த கொடிய அடக்கு முறைகளையெல்லாம் பாடுபொருளாக்கிச் சிறப்பான கவிதைகள் பலவற்றைக் கவிஞர் திருமாவளவன்படைத்திருக்கின்றார். அத்துடன் தனது கவிதைகள் பலவற்றில் இவர் பாவித்திருக்கும் சிறப்பான படிமங்களும் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை. உதாரணத்துக்கு நூலின் தலைப்புக் கவிதையான 'பனிவயல் உழவு' கவிதையைக் குறிப்பிடலாம். அதில் வரும் பின்வரும் வரிகளை ஒரு கணம் நோக்குங்கள்.

'காமக்கிழத்தியென
இருளாடை களைந்து வெண்பனி
உள்ளாடையுள்
எடுப்பாய் உடல் வனப்பு காட்டும்
ரொறன்ரோ நகரி'

' உடல் தழுவிக்
காமக்கிறக்கத்தில்
சலனமற்றுக் கிடக்கும்
ஒன்ராரியோ நீர்வாவி
கட்டில் விளிம்பில்
விடிவிளக்கென
நாணிக்கிடப்பார் சூரியனார்'

இருளாடை கலைந்து, வெண்பனி உள்ளாடையுள் எடுப்பாய் தன் உடல் வனப்பினைக்காட்டும் பெண் ரொறன்ரோ நகரி. நகரைப் பெண்ணாக உருவகிப்பதால் நகரி என்கின்றார் கவிஞர். ரொறன்ரோ நகரைப்பெண்ணாக்கியிருப்பது நல்லதொரு படிமம். அடுத்து 'ஒன்ராரியோ நீர்வாவி கட்டில் விளிம்பில்' என்று ஒன்ராரியோ வாவியைக் கட்டிலாக்கியிருப்பார் கவிஞர். இதுவும் நல்லதோர் உருவகம். படிமம். அக்கட்டிலில் விடிவிளக்காகக் கிடப்பவர் சூரியனார். சூரியனை விடிவிளக்காக்கியிருப்பது சிறப்பான உருவகம்.. ஆனால் அவ்விதம் சூரியனைக் கட்டிலாக்கியிருப்பவர் சூரியனார் என்று சூரியனை ஆண் பாலாக்கியிருக்கின்றார் என்பது புரியவில்லை.

இக்கவிதையில் வரும் கீழ்வரும் வரிகளும் எனக்குப் பிடித்த வரிகள்.

'துருவக் கொடுக்குளிரில்
அலைகின்ற சூரியன் நீ
ஆயுதந் துரத்த
நெடுந்துயர் கடந்த
பரதேசி நான்

உனை யார் துரத்த
இங்கு வந்து அகதியானாய்?'

இங்கு கவிஞர் சூரியனை அகதி ஆக்கியுள்ளார். ஆயுதந் துரத்த நெடுந்துயர் கடந்து, துருவக்கொடுங்குளிரில் அலைகின்ற பரதேசியான தன்னைப்போன்ற அகதியாகத் துருவக்கொடுங்குளிரில் அலையும் சூரியனையும் உருவகிக்கின்றார் கவிஞர். இங்குள்ள நெடுந்துயர் என்பது நெடுந்தூரம் என்பதன் தட்டச்சுப்பிழையாகவே எனக்குத் தென்படுகின்றது. இவ்விதமாக ரொறன்றொ நகரத்து அகதி வாழ்க்கை விபரிக்கும் கவிதை, இருப்பிற்காய் ஆலைகளில் கடுமுழைப்புக்குள் மூழ்கிய வாழ்க்கையையும் 'மாலை எந்திரம், பிழிந்து துப்பி விட, உடல் மீளும்' என்னும் வரிகள் மூலம் வெளிப்படுத்துகின்றது.

இழந்த மண் மீதான கழிவிரக்கம் இவரது கவிதைகள் பலவற்றில் காணப்படுகின்றது. உதாரணங்களாகப் பின்வருவனற்றைக் குறிப்பிடலாம்.

'என் குடில் இழந்து
பனி வயற் காட்டில்
குடி பெயர்ந்தேன்'

( 'வாடாமல்லி :1')

'காலக்கடல் அலையில்
கரைந்து போகிறது

கட்டிய வீடு
இன்று

நினைவுகள் மட்டும்
நெருஞ்சியாய்' (வாடாமல்லி 1)

'புலரிப் பொழுதில்
புறப்பட்ட பயணம்
கூடு
திரும்பவில்லை' ('தேடுகை')

'எப்போது
நான் வீடு சேர்வேன்?' ('தேடுகை')

'எல்லாம் இழந்தோம்
எல்லாமும் இழந்தோம்' ('தீ')

'வயல் வரப்பில்
வடலி வெளிகளில்
பூநாறிப் புதர்களில்
காணாமல் போனவர்கள்
நினைவு உறுத்தும்'

('நுகத்தடி மனிதர்கள்')

இவ்விதம் இவரது கவிதைகளில் இழந்த மண் மீதான கழிவிரக்கத்தை வெளிப்படுத்தும் வரிகளை எடுத்துக்காட்டலாம். அதே நேரம் அக்கவிதைகள் பல இழ்ந்த மண் மீதான் கழிவிரக்கத்தோடு , புகலிட வாழ்வின் வலிகளையும், இயல்பையும் விபரிக்கின்றன. உதாரணத்துக்கு மேலே குறிப்பிட்டுள்ள 'நுகத்தடி மனிதர்கள்' கவிதையினைக் குறிப்பிடலாம்.

இவை தவிர முதற் காதல் போன்ற தனிமனித உணர்வுகளை வெளிப்படுத்தும் கவிதைகளையும் கவிஞர் படைத்துள்ளார். உதாரணத்துக்கு வாடாமல்லி :1, வாடாமல்லி 2 மற்றும் வாடாமல்லி 3 என்னும் தலைப்பிலான கவிதைகள் முதற்காதலின் வலியினை, நினைவுகளைச் சுமந்து வருகின்றன. முதற் காதலியைப்பற்றிய கவிஞரின் தேடலை விபரிக்கும் கவிதைக் காதலி எப்படியிருப்பாள் என்பது பற்றிய கற்பனையினையும் ஓட விடுகின்றது.

'புணரும் இரு கரு அரவென
புட்டம் தாண்டி நெளிந்த கூந்தல்
உதிர்ந்து நரைமேய்ந்து
விழி சூழ கருவளையம் படர்ந்து
ஊளைச்சதை தொங்க
தோல் செத்து
நிமிர்ந்த முலை தளர்ந்து
அவள்
அழகும் அடையாளங்களும்
வீழ்ந்து
அழிந்திருத்தல் கூடும்'
('வாடாமல்லி :3')



# மல்லாவி 5

# புதிய வாழ்க்கை முறையும் சமூகக் கட்டமைப்பும்

மல்லாவியில் குடியேறிய மக்கள் யாழ் குடாநாட்டின் தீவுப் பகுதிகள், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி எனப் பல பகுதிகளில் இருந்து குடியேறியதால் இளம் குடும்பத்தவர்களான முதல் சந்ததி அதுவரையில் வாழ்ந்த கிராமங்களில் இருந்த சமூக சாதிய தொழில் ரீதியான கட்டமைப்புக்கு மாறான ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பித்தார்கள்.

அவ்வாறு குடியேறிப் புதிய வாழ்வை ஆரம்பித்த பல ஊரவர்களும் ஒருவருக்கொருவர் புதியவர்களாக இருந்ததுடன் மல்லாவியைச் சூழவிருந்த வன்னி மக்களையும் புதிதாக அறிமுகமாகக்கிக் கொண்டனர்.

குடியேற்றங்களின் பின்னர் பழைய குடியிருப்பார் அல்லது பழைய வன்னி மக்கள் தமது நீண்ட கால அமைதியான வாழ்க்கைச் சூழலில் ஒரு பெரிய மாறுபாட்டை உணர்ந்தார்கள்.

புதிதாகக் குடியேறியவர்களுக்குப் பல்வேறு விடயங்களில் பழைய குடியிருப்பு மக்களே உதவினார்கள். அவர்களிடம் மாடுகள் அதிகமாக இருந்ததால் உழவு வேலைகளில் அதிகம் பங்களித்தனர். யாழ் குடாநாட்டில் எருது மாடுகள் மாத்திரமே உழவில் ஈடுபடும் வழக்கம் இருந்தது. வன்னியில் முதற் தடவையாக எருமை மாட்டைக் கொண்டு உழவு செய்வதை அவர்களால் காண முடிந்தது.

எருமை மாட்டின் பெண் மாடுகள் உழவு, பலகை அடிப்பது போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்பட்டன.

**அ.விஜயன்**

சேற்றில் வேலை செய்வது எருமை மாடுகளுக்கு மிகவும் பிடித்தமான விடயமாக இருந்ததால் அவற்றைக் கொண்டு வேலை செய்வது இலகுவாக இருந்தது. ஆனாலும் எருமை மாடுகளை எருது மாடுகள் போல இலகுவாகக் கையாள முடிவதில்லை.

எருமை மாடுகளின் கால்க் குழம்பு மிகவும் அகலமானதும் உறுதியானதுமாக இருப்பதால் காலால் மிதிப்பது கலப்பையால் உழவு செய்வதைவிட சிறப்பாக இருக்கும். மண் பிதுங்கி பதப்படும் தன்மை அதிகமாக இருக்கும். 5 சோடி எருமை மாடுகள் வரிசையில் நடந்தால் அதுவே பெரிய உழவாக இருக்கும். சேற்றைக் கலக்கிக் கொண்டே செல்வதால் வயலிலுள்ள புற்கள் அவற்றின் கால்களில் அகப்பட்டுப் புதைக்கப்படும்.

தற்போது ரக்ரர்களை வைத்து விதைக்கப்படும் பல வயல்களை முன்னைய சந்ததியினர் மாட்டு உழவுகள் மூலமே உழுது விதைத்தார்கள். தற்போது அரிவு வெட்டும் இயந்திரங்களால் வெட்டப்படும் வயல்களை முன்னைய காலத்தில் மக்களே அரிவு வெட்டி சூடடித்தார்கள். அவ்வாறு பார்க்கும்போது புதிதாகக் குடியேறிய மக்களின் கூட்டு வாழ்க்கையும் கடினமான உழைப்புமே மல்லாவிப் பகுதியை உருவாக்கியது.

## தொழில் பயிற்சி

1960களின் பின்பான காலத்தில் மாடு, ஆடு, கோழி வளர்ப்புகள், வயல் வேலை, வீடு மேய்தல், தலையில் சுமை சுமத்தல், சைக்கிளில் சுமை கட்டி ஓடுதல், வண்டில் செலுத்துதல், வேட்டைக்குச் செல்லல், மரம் தறித்தல், காடு வெட்டுதல், மீன் பிடித்தல், சங்கக் கடையில் பொருள்கள் வாங்குவது, பன்றி, குருவிக் காவல் ஆகிய பல வேலைகளைப் பல்வேறு ஊர்களைச் சேர்ந்த முதற் குடியேறிகளே தமது பிள்ளைகளுக்குக் கற்பித்தார்கள். இந்தவேலைகளுக்கு யாரும் நிர்ப்பந்தமாகச் சென்றதில்லை. அயலவர்கள், நண்பர்கள் என வேலைக்கு அழைக்கும்போது சம்பளத்துக்காக அல்லாமல் அந்த வேலையைக் கூட்டாகச் செய்து முடிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அங்கு போய்ச் செய்து கொடுப்பது வழக்கம். அப்போது தனித்து யாரும் செயற்பட முடியாத தொழில் முறையே இருந்தது. எந்தத் தொழிலையும் அது புதிய தொழில் என்றோ என்னால் செய்ய முடியாது என்றோ யாரும் கூறுவதில்லை. ஒருவர் தலைமை தாங்கி அதை எடு, இதை எடு, அதைத் தூக்கு, பறி என்ற கட்டளைகளுக்குச் செயற்படுவதே அந்தத் தொழிற்பயிற்சியாக வழங்கப்பட்டது. அவற்றைச் சுமையாக எடுத்துக் கொள்ளாத வாழ்க்கை முறை அது.

**அயலவர்கள், நண்பர்கள் என வேலைக்கு அழைக்கும்போது சம்பளத்துக்காக அல்லாமல் அந்த வேலையைக் கூட்டாகச் செய்து முடிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அங்கு போய்ச் செய்து கொடுப்பது வழக்கம். அப்போது தனித்து யாரும் செயற்பட முடியாத தொழில் முறையே இருந்தது. எந்தத் தொழிலையும் அது புதிய தொழில் என்றோ என்னால் செய்ய முடியாது என்றோ யாரும் கூறுவதில்லை.**

**ஒருவர் தலைமை தாங்கி அதை எடு, இதை எடு, அதைத் தூக்கு, பறி என்ற கட்டளைகளுக்குச் செயற்படுவதே அந்தத் தொழிற்பயிற்சியாக வழங்கப்பட்டது. அவற்றைச் சுமையாக எடுத்துக் கொள்ளாத வாழ்க்கை முறை அது.**

மல்லாவிக் குடியேற்றத்தில் குடியேறிய எந்தக் குடும்பமும் இந்தக் காட்டில் கொண்டுவந்து விட்டு விட்டாங்கள் என்று கவலைப்பட்டு இங்கு வாழ முடியாது என மல்லாவியை விட்டு ஓடியதாக எனக்கு ஞாபகமில்லை. இந்தக் குடியேற்றத் திட்டத்தில் அரச திணைக்களங்கள், பாடசாலைகள் என அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதால் ஆசிரியர்களும் ஏனைய அரச ஊழியர்களும் யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து அங்கு வந்து சேவையாற்றினார்கள்.

நான் கல்வி கற்ற 3ஆம் யூனிற் மகாவித்தியாலயத்தில் நான் படித்த 1969 :1980 வருட காலப்பகுதியில் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் வெளியூர்களில் இருந்து வந்து போனார்கள். எனது ஞாபகத்திலுள்ள ஆசிரியர்கள் பற்றிய பல சுவையான விடயங்களைப் பின்னர் எழுதுவேன். அதேபோல அரச ஊழியர்களும் நூற்றுக்கணக்கில் வந்து போனார்கள். அங்கு வந்த ஆசிரியர்கள் சிலரும் அரச ஊழியர்களில் சிலரும் மல்லாவியில் நிரந்தரமாகக் குடியேறினார்கள். அவர்கள் குடியேற்றத்திட்டத்தில் தம்மையும் ஓர் அங்கத்தவராக மாற்றிப் புதிய சமூகத்துக்குள் கரைந்து கலந்தார்கள்.

மல்லாவி வெளியிலிருந்து வருவோருக்கு மிகவும் விருப்பமாக இருக்கும் ஓர் ஊராகும். வறுமை இந்த மக்களைத் தொடர்ந்தும் துரத்தியதற்குக் குடும்ப அங்கத்தவர்கள் அதிகமாக இருந்ததும் ஒரு காரணம் எனலாம். எல்லா விடுகளிலும் பெரியளவிலான சட்டி, பானைகளே இருந்தன. கோவில்கள் விரதங்கள் மரக்கறிச் சாப்பாடுகள் என்ற வரையறைகள் இருக்கவில்லை. அந்த மக்கள் மத்தியில் பகிர்ந்துண்பதே மரபாக இருந்தது.



# விருந்தோம்பலில் சிறப்பு

மல்லாவியில் குடியேறிய மக்களுக்குத் தமது பாரம்பரிய ஊர்களில் இருந்தது போன்ற சொந்தங்கள் இருக்கவில்லை. புதிய அயலவர்களே ஒருவருக்கு ஒருவர் உறவாகவும் ஆதராவாகவும் இருந்தார்கள். இயந்திர மயமாக்கப்படாத அந்தக் காலத்தில் சரீர உழைப்பும் கூட்டாக இணைந்து வேலைகளைச் செய்வதும் அங்கு காணப்பட்ட சிறப்பம்சமாகும். அனேகமான மக்கள் கால்நடையாகவே செல்வதால் இந்த அக்கறை எல்லோரிடமும் இருந்தது. ‘இண்டைக்கு மானிறைச்சி, மரையிறைச்சி, பன்றியிறைச்சி, உடும்பிறைச்சி காய்ச்சினனாங்கள் சாப்பிட்டுப் போங்கோ‘ என்று தம்மிட்முள்ள உணவை மற்றவர்களுக்கு வழங்கும் நிலை இருந்தது.

அந்தக் காலத்தில் தெருவில் நடந்து செல்லும்போது எந்த வீட்டில் என்ன கறி சமைக்கிறார்கள் என்பது குசினியிலிருந்து வெளியேறும் வாசனையை வைத்துக் கண்டுபிடித்துவிடலாம். இறைச்சி, மீன், முருங்கைக்காய், கத்தரிக்காய் என வித்தியாசம் வித்தியாசமான வாசம் வீசும். அப்படியொரு சமையல் வாசனையைத் தற்போது சமையலில் நுகர்ந்து பிடிக்க முடியாது. அதேபோல இன்னொரு விடயமும் செவிக்கு இன்பமாக இருக்கும். அப்போது உபாலி குறூப்பின் தயாரிப்பான யுனிக் றெடியோக்கள் எல்லா வீடுகளிலும் இருக்கும். அவை மின் கலங்களில் இயங்கும். ஊருக்குள் மோட்டார் சைக்கிள் ஏனைய வாகனச் சத்தங்கள் இருக்காது. எப்போதாவது ரக்ரர் சத்தம் கேட்கும். காலையில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகும் பொங்கும் பூம்புனல் நிகழ்ச்சியில் இடம்பெறுகின்ற பாடல் ஒன்றை வீட்டிலிருந்து புறப்படும்போதுகேட்டுக்கொண்டு நடந்து சென்றால் எல்லா வீட்டு வானொலிப் பெட்டிகளிலும் அதே பாட்டு இடம்பெறும். அப்போது வேறு வானொலிச் சேவைகள் இருக்கவில்லை. அப்படி அமைதியான பாட்டுடன் தெருவில் நடந்துசெல்லும் சுகம் இனி எங்கும் கிடைக்காது.



மல்லாவி மக்களின் விருந்தோம்பலின் மிக உன்னதமான நிலையை 1970 களின் ஆரம்பத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியில் சிறப்பாகக் காணமுடிந்தது. அப்போது அரிசித் தட்டுப்பாடு, பாண் வாங்குவதற்கு அதிகாலை 4 மணிக்கே வரிசையில் நிற்கவேண்டும் சீனி சங்கக் கடையில் குடும்பத்துக்கு இவ்வளவு என்று மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. கூப்பனுக்கு வழங்கும் ரேஷன் முறை இருந்தது. அந்த நேரத்தில்கூட மரவள்ளிக் கிழங்கு வேறு ஏதாவது மாவைக் குழைத்து சீனியைக் கையில் நக்கிக் கொண்டு தேநீர் கொடுப்பது போன்ற அருந்தலான உணவுத் தட்டுப்பாடான காலத்திலும் தம்மிடம் இருந்தவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நிலை மிக உன்னதமான அரவணைப்பு எனலாம். ஒரு மனிதன் பசியுடன் இருக்கக்கூடாது என்கிற அடிப்படை ஒழுக்கம் எல்லாக் குடும்பங்களிலும் இருந்தது. ஒவ்வொரு குடும்பத்திலும் அதிக பிள்ளைகள் இருந்ததால் அந்தப் பிள்ளைகளின் வகுப்பில் படிக்கிற சக மாணவர்கள் மற்றைய நபர்களின் வீடுகளுக்குச் செல்வது அந்த வீட்டிலுள்ளவற்றை வாங்கிக் கொள்வது மாம்பழம் சாப்பிடுவது என எல்லாமே இருந்தன. ஆரம்ப காலத்தில் மல்லாவிப் பகுதியில் பலாப்பழம் இருக்கவில்லை. கொடிகாமம் பகுதியிலிருந்து பலாப்பழம் வாங்கி வந்து வெட்டி அயலவர்களுக்கும் ஒவ்வொரு துண்டுகள் கொடுப்பதுண்டு. அவ்வாறு உண்ட பழங்களின் விதைகளை நட்டுப் பலர் மல்லாவியில் பலா மரங்களை உருவாக்கிக் கொண்டார்கள்.

கடலில் தூக்கி வீசப்பட்டவன் எப்படியாவது நீந்திக் கரையேற வேண்டும் என்ற நிலையே மல்லாவியில் குடியேறிய மக்களுக்கு இருந்தது. அந்த முயற்சியில் அவர்கள் வெற்றி கண்டார்கள். ஒவ்வொரு வீட்டிலும் மாடுகள், ஆடுகள், கோழிகள் வளர்க்கப்பட்டன. அந்தக் கால கட்டத்தில் அயலவர்களுக்கு இடையே நடக்கும் சண்டைகள் வேலிக்குள்ளால் புகுந்துபோய் ஆடு, மாடுகள் மற்றவர்களின் பயிர்களை தின்றுவிட்டால் ஏற்படும் முரண்பாடாகவே இருந்தன. ஆடுகளுக்குப் பனை மட்டையால் கழுத்துத் தடை ஒன்றை அணிந்து விடுகிற வழக்கமும் அப்போது இருந்தது.

பல ஊரவர்கள் ஒரே பாடசாலையில் சந்திப்பது, மருத்துவமனையில் சந்திப்பது, சந்தையில் சந்திப்பது, சங்கக் கடையில் சந்திப்பது என ஆறுதலாக வாழ்ந்த காலம் அது. பெரும்பாலான மக்கள் கால் நடையாகவே திரிவதால் சங்கக் கடைச் சாமான்கள் மில்லுக்கு நெல்லுக் கொண்டுபோவது எல்லாமே தலையில் சுமந்து செல்வதே வழக்கம். வீட்டிலிருந்து தூக்கிச் செல்லும் சிறிய நெல்லு மூட்டையை மில்லில் கொண்டுபோய்ச் சேர்க்கும்போது பாரம் தாங்காமல் கழுத்து அழுத்தப்பட்டுக் கழுத்து உள்ளே போய் விட்டது போலவும் சுமையை இறக்கியதும் கழுத்து உயர்வதுபோன்ற உணர்வையும் அந்தக் காலத்து இளம் பிள்ளைகள் அனுபவித்தார்கள். புழுங்கல் அரிசி குற்றும்போது வரும் வாசம், மில் இயந்திரம் வெளியேற்றிய அரிசியைச் சுடச் சுடச் சப்புவது சுவையாக இருந்தது. அது அப்போதைய பிள்ளைகளின் சோர்ட்டீஸ்ற்றும் ஸ்நாக்ஸ‍ும்...!



# வாசிப்பும் யோசிப்பும்




வ.ந.கிரிதரன்

## சிங்கிஸ் ஐத்மாத்தாவின் அன்னை வயல்!

அளவில் சிறிய இந்த நாவல் தல்கோனை என்னும் முதிய பெண் வயலுடன் பேசுவதாக ஆரம்பிக்கின்றது. முடிவில் அவ்வயலிடமிருந்து அவள் பிரியாவிடை கூறுவதுடன் முடிகிறது. இதற்கிடையில் அவள் அதுவரை காலத்துத் தன் வாழ்வை பகிர்ந்துகொள்கின்றாள். சிறுமியாக, யுவதியாக, மனைவியாக, தாயாக, மாமியாக, பாட்டியாக என அவளது வாழ்வின் அனைத்துப் பருவச் சம்பவங்களையும் விபரிக்கின்றாள். எவ்விதம் ஜெர்மனியருடனான போர் அவர்கள் வாழும் கிராமத்து மனித வாழ்க்கையையே மாற்றிவிடுகின்றது என்பதை விபரிக்கும் நாவல் போர்ச் சூழலில் வாழ்ந்த அனைவருக்கும் தம் வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்க வைக்கும்.

சிறிய நாவலில் இயற்கையுடன் ஒன்றிய மானுட வாழ்வு எவ்விதம் பல்வகை இடர்களுக்குள்ளாகிறது என்பதை நெஞ்சைத்தொடும் வகையில், அதிர வைக்கும் வகையில் விபரிக்கப்படுகின்றது. பாசம், காதல் போன்ற மானுட உணர்வுகளையெல்லாம் போர் எவ்விதம் சிதைத்து விடுகின்றது. நாவலின் போர் கவிந்திருக்கும் மானுட உணர்வுகளை வெளிப்படுத்தும் மொழி தரும் துயரம் போரற்ற மானுட வாழ்வுக்காக ஏங்க வைக்கின்றது. போருக்காக ஆண்கள் இராணுவ சேவைக்கு அழைக்கப்படுவதும், அதனால் பெண்கள் (மனைவி, தாய் என) அடையும் மனப்பாதிப்புகளும் சிறப்பாக விபரிக்கப்பட்டுள்ளன. உண்மையில் வாசித்ததும் நெஞ்சில் நிலைத்து நின்று விடும் படைப்பு. கவித்துவம் மிக்க, இயற்கையுடன் ஒன்றிப்பயணிக்கும் மொழி நாவலின் இன்னுமொரு சிறப்பு.

**பாசம், காதல் போன்ற மானுட உணர்வுகளையெல்லாம் போர் எவ்விதம் சிதைத்து விடுகின்றது.**

**நாவலின் போர் கவிந்திருக்கும் மானுட உணர்வுகளை வெளிப்படுத்தும் மொழி தரும் துயரம் போரற்ற மானுட வாழ்வுக்காக ஏங்க வைக்கின்றது. போருக்காக ஆண்கள் இராணுவ சேவைக்கு அழைக்கப்படுவதும், அதனால் பெண்கள் (மனைவி, தாய் என) அடையும் மனப்பாதிப்புகளும் சிறப்பாக விபரிக்கப்பட்டுள்ளன.**

இந்த நாவலில் எறும்புகள் பற்றி வரும் பகுதி என் வாழ்க்கையின் ஒரு பக்கத்தை மீண்டும் நினைவூட்டியது. சாரை சாரையாக நடந்து செல்லும் எறும்புகளைப் பார்த்து தல்கோனை பொறாமைப் படுகின்றாள். அவற்றுக்கு மானுடர் அடையும் போர்த்துயரங்கள் இல்லையே என்று ஏங்குகின்றாள். இவ்விதமானதொரு மனநிலையினை நானும் அடைந்திருக்கின்றேன்.

83 சூலைக் கலவரத்தின்போது தெகிவளைச் சந்தியில் காரியாலய வானிலிருந்து இறங்கி, கடற்கரை வழியாக ராமகிருஷ்ண மண்டபத்தை நோக்கிச் செல்கையில் எம்மைச் சுற்றி நகரம் கலவரத்தால் பற்றியெரிந்து கொண்டிருந்தது. அபொழுது என்னருகில் பறந்து கொண்டிருந்த பறவைகளைப் பார்த்து அவை எவ்விதம் கீழே நடக்கும் சூழலின் பாதிப்புகளற்றுப் பறந்து கொண்டிருக்கின்றன என்று ஏங்கியிருக்கின்றேன். இதனை என் 'குடிவரவாளன்' நாவலிலும் பதிவு செய்துள்ளேன்॰

"இது பற்றிய எவ்விதக் கவலைகளுமற்று விண்ணில் சிறகடித்துக் கொணடிருந்த பறவைகள் சிலவற்றை ஒருவிதப் பொறாமையுடன் பார்த்தான் இளங்கோ. இத்தகைய சமயங்களில் எவ்வளவு சுதந்திரமாக அவை

விண்ணில் சிறகடிக்கின்றன.' ('குடிவரவாளன்' நாவல், பக்கம் 32)

நாவலில் எறும்புகள் பற்றிப் பின்வருமாறு வருகின்றது'

'எறும்புகள் சாரை சாரையாகப் பாதையில் ஊர்ந்து கொண்டிருந்தன. அவையும் உழைத்தன. வைக்கோலையும் தானியத்தையும் சுமந்து சென்றன. துயரத்தில் ஆழ்ந்த மனிதப்பிறவி , உழைப்பாளி அருகே வீற்றிருப்பது எவ்விதத்திலும் குறையாத உழைப்பாளி அருகே வீற்றிருப்பது, அந்தக் கணத்தில் அவற்றின் மேல், அற்ப உழைப்பாளிகளான எறும்புகள் மேல்கூட அந்த மனிதப்பிறவி பொறமைப்படுவது அவற்றுக்குத் தெரியவே தெரியாது. நிம்மதியுடன் தங்கள் வேலையைச் செய்ய அவற்றுக்கு முடிந்தது. ('அன்னை வயல்' நாவல், பக்கம் 41)

நாவல் சிறப்பாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மொழி பெயர்த்தவர் பூ.சோமசுந்தரம். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு.

# எழுத்தாளர் முனியப்பதாசன் எழுதிய தொடர்கதை 'காற்றே நீ கேட்டிலையோ?'






இவரது கதைகள் இவரது ஆன்மீகத் தேடலை வெளிப்படுத்துபவை. அத்துடன் மானுட நேயம் மிக்கவை. சக மனிதர்கள் எதிர்கொள்ளும் வறுமை போன்ற பிரச்சினைகளெல்லாம் இவரை வருத்தியுள்ளன. அவற்றின் பாதிப்புகள் இவரது கதைகளில் வெளிப்பட்டுள்ளன. யாழ் நகர வீதிகளில் இவர் தனது தேடல் காரணமாக அலைந்து திரிந்தாகவும் அறியக்கிடக்கின்றது.

இலங்கைத் தமிழ் இலக்கியத்துக்கு வளம் சேர்த்த எழுத்தாளர்களில் ஒருவர் முனியப்பதாசன். இவர் பற்றி எழுதியவர்கள் இவரது சிறுகதைகள் பற்றியே குறிப்பிட்டுள்ளார்கள். யாருமே இவர் தொடர்கதை எதுவும் எழுதியதாகக் குறிப்பிட்டதில்லை. ஆனால் இவர் தொடர்கதையொன்றும் எழுதியுள்ளார். அது கடல் தொழிலாளர்களை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட தொடர்கதை. அது ஈழநாடு பத்திரிகையில் தொடராக வெளியான தொடர்கதை. அதன் பெயர் : காற்றே நீ கேட்டிலையோ? தொடர்கதை முழுமை அடையவில்லை. நான்கு அத்தியாயங்களையே என் தேடலில் காண முடிந்தது. இருந்தாலும் இது முக்கியமானதோர் அவதானிப்பு. இதுவரையில் யாருமே முனியப்பதாசனின் இத்தொடர்கதை பற்றிக் கூறாததால் இப்பதிவு முக்கியத்துவம் மிக்கது. ஆவணச்சிறப்பும் மிக்கது. இத்தொடர்கதை ஈழநாடு பத்திரிகையின் 6.10.1966 பதிப்பில் ஆரம்பமாகி , 28.10.1966 பதிப்பு வரையில் வெளியாகியுள்ளது. மொத்தம் நான்கு அத்தியாயங்களே வெளியாகியுள்ளன. நாவல் முடியாமலேயே இடையில் நின்றுபோயுள்ளது. நூலகம் தளத்தில் நாவல் வெளியான ஈழநாடுப் பத்திரிகைப் பிரதிகளுள்ளன. நூலகத்தின் இணையத்தள முகவரி ://www/noolaham/org


## எழுத்தாளர் முனியப்பதாசன் பற்றி...

எழுத்தாளர் முனியப்பதாசனின் எழுத்துப்பிரவேசம் 1964இல் கலைச்செல்வி சஞ்சிகை நடத்திய சிறுகதைப்போட்டியில் இவரது 'வெறியும் பலியும்' சிறுகதை முதற்பரிசு பெற்றதுடன் ஆரம்பமாகியது. கடற் தொழிலாளர் சமூகத்தைப் பின்னணியாகக் கொண்டு படைக்கப்பட்ட சிறுகதை. கலைச்செல்வியின் ஆசிரியரும், பதிப்பாளருமான சிற்பி சரவணபவன் எழுத்தாளர்கள் பலரை உருவாக்கியுள்ளார். அவர்களில் இவருமொருவர். இவரது இயற்பெயர் தாமோதரம்பிள்ளை சண்முகநாதன்.

யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர். யாழ் இந்துக் கல்லூரியின் அருகிலிருந்த ஒழுங்கைப்பகுதியில் வாழ்ந்ததாக அறிகின்றேன். இவரது கதைகள் ஈழநாடு, சுதந்திரன், கலைச்செல்வி, விவேகி போன்ற பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளியாகின. ஈழநாடு ஆசிரியர் ஹரன் இவரது எழுத்தின்பால் பெரு மதிப்பு மிக்கவரென்றும், அவரே இவரது சிறுகதையொன்றை ஆனந்தவிகடனுக்குக் கொண்டு சென்று கொடுத்ததாகவும், அது விகடனில் முத்திரைக்கதையாக வெளியாகியதாகவும் மேலும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் ஐம்பதுக்கும் குறைவான கதைகள் வரையில் எழுதியுள்ளதாக ஈழநாடு குறிப்பிடுகின்றது. எழுத்தாளர் செங்கை ஆழியான் அவர் இருபது சிறுகதைகளே எழுதியுள்ளதாகக் குறிப்பிடுவார். அவற்றில் சிலவற்றை எழுத்தாளர் செங்கை ஆழியான் சேகரிக்க, எழுத்தாளர் டொமினிக் ஜீவா தனது மல்லிகைப்பந்தல் பிரசுரமாக வெளியிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. முற் போக்காளரான டொமினிக் ஜீவா அவர்கள் ஆன்மிகப் போக்குள்ளவரான முனியப்பதாசனின் சிறுகதைகளைத் தனது பதிப்பக வெளியீடாக வெளியிட்டுள்ளதும் முக்கியமானது. இத்தொகுதியை நூலகம் எண்ணிம நூலகத்தில் வாசிக்கலாம்.

இவரது கதைகள் இவரது ஆன்மீகத் தேடலை வெளிப்படுத்துபவை. அத்துடன் மானுட நேயம் மிக்கவை. சக மனிதர்கள் எதிர்கொள்ளும் வறுமை போன்ற பிரச்சினைகளெல்லாம் இவரை வருத்தியுள்ளன. அவற்றின் பாதிப்புகள் இவரது கதைகளில் வெளிப்பட்டுள்ளன. யாழ் நகர வீதிகளில் இவர் தனது தேடல் காரணமாக அலைந்து திரிந்தாகவும் அறியக்கிடக்கின்றது. இவரைப்பற்றி , இவரது படைப்புகளைப்பற்றி மேலும் விரிவாக அறிய வேண்டுமென்று உணர்கின்றேன். சுமார் மூன்று வருடங்களே எழுத்துலகில் இயங்கிய இவரது வாழ்வும் குறுகியதாக அமைந்துவிட்டதும் சோகமானதே.



# கவிஞர் நீலாவணனின் 'பல்லிகள்'!

என் பதின்ம வயதுகளில் இரவுகளில் படுக்கையில் சாய்ந்திருந்தபடி படுக்கையறைச் சுவரில் பூச்சிகளைப் பிடிக்க வரும் பல்லிகளை அவதானித்திருக்கின்றேன். அந்த அவதானிப்பின் விளைவுகளாக மூன்று சிறுகதைகள் எழுதியிருக்கின்றேன். பல்லி சொன்ன பாடம் (ஈழநாடு வாரமலர்), பல்லிக்கூடம் (ஆனந்த விகடன்) பல்லி (தாயகம்). கவிஞர் நீலாவணனும் என்னைப்போல் பல்லிகளை அவதானிப்பவர் என்பதை பெப்ருவரி 71 அஞ்சலி இதழில் வெளியான அவரது 'பல்லிகள்', கவிதை மூலம் அறிய முடிகின்றது.

'வெண்டிப்பிஞ்சின் இருபுறமும் விரல்கள் வந்து முளைத்ததுபோல்' பல்லியின் உடல் வாகு இவருக்குத் தென்படுகின்றது.'பாசிமணி பதித்தது போல் பளபளக்கும்' பல்லிகளின் விழிகள் அமைந்திருக்கின்றன. இவ்விதம் பல்லியின் உடலமைப்பை ஆரம்பத்தில் வர்ணிக்கும் கவிதை பின்னர் அவற்றின் கூடலை வர்ணிக்கின்றது. அதனை வாசிக்கையில் இலேசானதொரு புன்னகை அரும்பாமல் போகாது. 'பூச்சியுண்ட போதை கொண்டு, புருஷனைப்போய் வளைத்துக்கொண்டு, கீச்சுமூச்சு மூட்டு'தாம். 'கிசுகிசுத்து'ப் பேசுதாம் பெண் பல்லி. 'அதற்காகத்தானடியேய் ஆடை அவிழ்த்தோம் என ஆண் கதையாதே காதலில் கட்டுண்டு' கிடக்குமாம். நிச்சயம் சொல்லுங்கள் இவ்வரிகளைப் படிக்கையில் உங்கள் இதழ்களில் புன்னகை படர்கிறதா இல்லையா?

> பெண் பல்லிகளின் வயிறுகளுக்குள் முத்துக்களாய் இருக்கும் பல்லிக்குஞ்சுகள் முதலாளிக் குஞ்சுகளாகக் கவிஞருக்குத் தோன்றுகின்றன. 'சுவரென்னும் உலகத்தில்' உழைத்துண்ணும் உழைப்பாளிகளான பூச்சிகளை எவ்வித உழைப்புமின்றி பிடித்துண்டு உடல் வளர்க்கும் முதலாளிகளான பல்லிகளின் குஞ்சுகளோ பிறந்து விட்டால் உழைக்காமல் பிழைத்துக்கொள்ளும் தந்திரம் மிக்கவையாம்.

இவ்வளவுடன் கவிஞரின் சிந்தனை போய்விடவில்லை. இதன் பின்னர்தான் கவிஞரின் அறச்சீற்றம் மேலோங்குகின்றது. பெண் பல்லிகளின் வயிறுகளுக்குள் முத்துக்களாய் இருக்கும் பல்லிக்குஞ்சுகள் முதலாளிக் குஞ்சுகளாகக் கவிஞருக்குத் தோன்றுகின்றன. 'சுவரென்னும் உலகத்தில்' உழைத்துண்ணும் உழைப்பாளிகளான பூச்சிகளை எவ்வித உழைப்புமின்றி பிடித்துண்டு உடல் வளர்க்கும் முதலாளிகளான பல்லிகளின் குஞ்சுகளோ பிறந்து விட்டால் உழைக்காமல் பிழைத்துக்கொள்ளும் தந்திரம் மிக்கவையாம்.

பல்லிகளின் உடலமைப்பு, உணர்வுகளின் கூடலை விபரிக்கும் கவிதை இறுதியில் கவிஞரின் சமுதாயப் பிரக்ஞை காரணமாக அறச்சீற்றம் கொண்டு பல்லிகளுக்கு எதிராக, முதலாளித்துவத்துக்கு எதிராக அறை கூவல் விடுக்கின்றது. கூற வந்த கருத்தினை எவ்வளவு அழகாக, சிறப்பாக எவ்விதப் பிரச்சார வாடையுமற்றுக் கூறியிருக்கின்றார் இக்கவிதையில் கவிஞர்.

கவிதை வெளியான அஞ்சலி இதழினை வாசிக்க:

https://noolaham.net/project/178/17769/17769/pdf




## மு.தளையசிங்கத்தின் 'போர்ப்பறை'!

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மு.தளையசிங்கத்துக்கு முக்கிய பங்குண்டு. எழுத்தாளராக, சமூக, அரசியற் செயற்பாட்டாளராகச் செயற் பட்டவர்களில் அவருமொருவர். டானியல், அ.ந. கந்தசாமி, மு.தளையசிங்கம் போன்றவர்கள் எழுத்தாளர்களாக இருந்த அதே சமயம் தாம் நம்பிய அரசியல் கோட்பாடுகளுக்காக மக்கள் மத்தியில் இறங்கிச் செயற்பட்டவர்களும் கூட.

மு.தளையசிங்கம் என்னும் ஆளுமையை அறிவதற்கு அவரது நூல்கள் பெரிதும் உதவும். 'பிரபஞ்ச யதார்த்தவாதம்' என்னும் சிந்தனையைத் தனது மானுட விடுதலைக்கான தீர்வாக உருவாக்கியவர் மு.பொ. கருத்துமுதல்வாதியான ஹெகலின் சிந்தனைகளை உள்வாங்கி மார்க்சியத்தை உருவாக்கினார் கார்ல் மார்க்ஸ். கார்ல் மார்க்ஸின் சிந்தனைகளின் நல்ல அம்சங்கள் என்று தான் கருதியவற்றை உள்வாங்கி, அவற்றை ஏற்று, மீண்டும் மார்க்ஸ் ஏற்காத கருத்து முதல்வாதத்தை ஏற்று, ஹெகலியக்கருத்து முதல்வாதச் சிந்தனையை அதிலேற்றி, மானுட விடுதலைக்கு மார்க்சின் புறவிடுதலை மட்டும் போதாது, அக விடுதலையும் அவசியம் என்று தனது பிரபஞ்ச யதார்த்த வாதச் சிந்தனையை உருவாக்கியவர் மு.த.

அவரது போர்ப்பறை நூலிலுள்ள 'புதிய வார்ப்புகள்' கட்டுரையில் வரும் பின்வரும் பகுதி அதனை ஆணித்தரமாக எடுத்துரைக்கும்.

'கருத்தை முதலாகக் கொண்டு சிந்தனை மாற்றத்தின் அடிப்படையில் யுகப் பிரிவை வகுக்கும்போது மார்க்ஸைத் திரும்பவும் எகலிடம் (ழுநபநட) கொண்டுபோகிறோம். எகலின் கருத்து முதல் வாதம்! ஆனால் எகலிலிருந்து பிரிந்து மார்க்ஸ் சென்ற பாதையில் கண்டுபிடிக்கப்பட்ட முக்கிய உண்மைகளை விட்டுக் கொடுக்காமலும் இழந்துவிடாமலும் திரும்பிப் போகிறோம். பொருளாதார சமூக அடிப்படையில் மார்க்ஸ் சரித்திரத்துக்குக் கொடுத்த வியாக்கியானங்கள் மனித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியிருக்கின்றன. அவற்றை மனிதகுலம் சதா பேணிக்காக்கவே செய்யும். ஆனால் பொருளாதார சமத்துவம் பொதுவுடமைப் பொருளாதாரமும் மிக அவசியம் எனற அளவோடேயே அவை நின்றுவிடும். அவற்றை உணர்ந்து அவற்றை ஏற்றுக்கொண்டு அவற்றை அடைவதில் ஓரளவுக்கு வெற்றியும் கிட்டும் சமயத்தில் மனிதனின் தேவைகள் அவற்றுக்கு அப்பாலும் போவதை உணரும் சூழலும் அந்த அப்பாலான நிலையில் நின்றே பொருளாதார சமத்துவத்தையும் பூரணமாக அடையலாம் என்ற உண்மையை உணரும் புதிய நம்பிக்கையும் சிந்தனை மாற்றமும் உருவாகி விடுகின்றன. இன்றைய உலக சூழல் அதுதான்.'

எழுத்தாளர் மு.தளையசிங்கம் மார்க்சிய மறுப்பாளர் அல்லர். மு.த வலியுறுத்தும் சர்வோதயக் கோட்பாடு 'பொதுவுடைமைப் பொருளாதாரமும், கருத்துச் சுதந்திரத்தை வலியுறுத்தும் பொருளாதார அரசியலும், பிரதேச சுயாட்சியும்' வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றது. இன, மொழி, எல்லைகளைக்கடந்த சகோதரத்தும், வர்க்கம் கடந்த சமூக சமத்துவம்' என்பவற்றை வலியுறுத்துகின்றது. அவரது சர்வோதய அமைப்பின் தாரக மந்திரம் 'சர்வோதயம் பொதுவுடைமைக் குரல்'. இவை காட்டுவதென்ன? அவர் மார்க்சியத்தை உள்வாங்கியவர் என்பதைத்தானே. அவர் மார்க்சியத்தை மறுக்கவில்லை. அதனை உள்வாங்கி அதில் திருத்தங்கள் செய்தவர் என்று கூறுவதே சரியானதென்பதென் நிலைப்பாடு. ஹெகலின் கருத்து முதல்வாதச் சிந்தனையைத்தள்ளி, உள்வாங்கி மார்க்சியத்தை உருவாக்கியவர் கார்ல் மார்க்ஸ். மார்க்சியத்தை உள்வாங்கி, அதில் மீண்டும் கருத்துமுதல் வாதச்சிந்தனையைப் புகுத்திப் 'பிரபஞ்ச யதார்த்தவாதத்தை' அறிமுகப்படுத்தியவர் மு.த ஆனால் அவர் மார்க்சியக் கட்சி அரசியலை மறுத்தவர்.

**எழுத்தாளர் மு. தளையசிங்கம் மார்க்சிய மறுப்பாளர் அல்லர். மு.த வலியுறுத்தும் சர்வோதயக் கோட்பாடு 'பொதுவுடைமைப் பொருளாதாரமும், கருத்துச் சுதந்திரத்தை வலியுறுத்தும் பொருளாதார அரசியலும், பிரதேச சுயாட்சியும்' வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றது.**

**இன, மொழி, எல்லைகளைக்கடந்த சகோதரத்தும், வர்க்கம் கடந்த சமூக சமத்துவம்' என்பவற்றை வலியுறுத்துகின்றது. அவரது சர்வோதய அமைப்பின் தாரக மந்திரம் 'சர்வோதயம் பொதுவுடைமைக் குரல்'. இவை காட்டுவதென்ன? அவர் மார்க்சியத்தை உள்வாங்கியவர் என்பதைத்தானே. அவர் மார்க்சியத்தை மறுக்கவில்லை. அதனை உள்வாங்கி அதில் திருத்தங்கள் செய்தவர் என்று கூறுவதே சரியானதென்பதென் நிலைப்பாடு.**

# ஷோபாசக்தியின் பொக்ஸ்!

தற்போதுள்ள தமிழ் எழுத்தாளர்களில் ஷோபா சக்தியின் எழுத்து மிகவும் வலிமையானது. ஷோபாசக்தி சிறந்த கதைசொல்லி என்றாலும், அவரது படைப்புகளில் பாவிக்கப்படும் மொழியே அக்கதை சொல்லலில் பிரதான பங்கினை வகிக்கின்றது. அந்த வலிமையான மொழியே அப்படைப்புகளில் வரும் பாத்திரங்களை முதல் வாசிப்பிலேயே நீண்ட காலத்துக்கு மறக்க முடியாதபடி செய்து விடுகின்றது. தனிப்பட்டரீதியில் நான் இவ்வகை மொழியின் உபாசகனல்லன். எனக்குத் தெளிந்த நீரோடை போன்ற, சிக்கலான விடயங்களையும் சிந்திக்க வைக்கின்ற எழுத்து நடையே விருப்பத்துக்குரியது. டால்ஸ்டாய், ஃபியதோர் தத்யயேவ்ஸ்கி போன்றோரின் படைப்புகளில் பாவிக்கப்பட்டுள்ள மொழி எனக்கு விருப்புக்குரியது. ஷோபா சக்தியின் மொழி எனக்கு யூதரான ஜேர்ஸி கொஸின்ஸ்கியின் 'நிறமூட்டப்பட்ட பறவைகள்', வால்டேயரின் 'கண்டிட்', ஜெயமோகனின் 'ஏழாவது உலகம்' போன்ற நாவல்களில் பாவிக்கப்பட்டுள்ள மொழியினை நினைவு படுத்தும்.

இவர்களது படைப்புகளிலெல்லாம் பாத்திரங்கள் அடையும் அனுபவங்கள் நெஞ்சை உறைய வைக்கும் வகையில் விபரிக்கப்பட்டிருக்கும், பாத்திரங்கள் அடையும் வேதனை, வலி வாசிக்கும் வாசகர்களையும் நீண்ட நாட்கள் ஆட்கொண்டிருக்கும், அந்த வேதனை, வலியை நான் விரும்புவனல்லன். அதனால்தான் இவ்விதமான வலியினைத் தரும் படைப்புகள் சிறந்த படைப்புகளாக விருந்தபோதும் நான் அவற்றின் உபாசகன் அல்லன். என் அபிமான எழுத்தாளர்களின் படைப்புகளை மீண்டும் மீண்டும் வாசிப்பது போல் என்னால் இவ்வகையான, வலியினைத்தரும் படைப்புகளை வாசிக்க முடிவதில்லை. மீண்டும் வாசித்தால் ஏற்படும் வலி நீங்க மேலும் பல நாட்கள் எடுக்கும் என்னும் அச்சமே அதற்கு முக்கிய காரணம். அண்மையில் ஷோபா சக்தியின் 'னாடீஓ கதைப்புத்தகம் வாசித்தபோது இதனை மீண்டுமுணர்ந்தேன். இதில் பாவிக்கப்பட்டுள்ள மொழி வலி தருவது. ஆனால் அந்த மொழியே ஷோபாசக்தி என்னும் கதைசொல்லியின் பலம்.

சாதாரணமாக வானில் பவனி வந்து போகும், மனத்துக்கு மகிழ்ச்சியளிக்கும் நிலவைக்கூட மறக்க முடியாத வகையில் செய்து விடுகின்றது ஷோபாசக்தியின் மொழி. எல்லோரும் வெண்ணிலவின் பேரழகை, தண்ணிலவைப் பார்த்திருக்க, ஷோபாசக்தியோ நிலவை இன்னுமொரு கோணத்தில் அணுகுகின்றார். தன்னைச்சுற்றி நடைபெறும் நிகழ்வுகளுக்குச் சாட்சியாக நிற்கும் நோக்கில் அதனை அணுகுகின்றார். நிலவே நீ சாட்சி என்றொரு தமிழ்த் திரைப்படப்பாடலுண்டு. ஆனால் அந்நிலவு எதற்கெல்லாம் சாட்சியாக நிற்கிறது? அதன் சாட்சியாக விரிவதுதான் ஷோபாசக்தியின் பொக்ஸ்.

நாவலின் ஆரம்பத்திலிருந்து சில வரிகள்◦

'நிர்வாணம் மீது நிலவு தனது ஒளியை பாய்ச்சி நீர்மேல் நிற்கலாயிற்று. குளத்தின் மையத்தில் அமையாள் கிழவி பிறந்த மேனியாக மல்லாக்க நீந்திக்கொண்டிருந்தார். அப்போது பெரிய பள்ளன் குளத்தில் கார்த்திகை மாதச் சாமமாயிருந்தது.' இவ்விதம் தொடங்கும் ஆரம்பமான 'மய்யக்கதை' பின்வருமாறு முடிகின்றது◦ 'அப்போது 'அம்மா' என்றொரு ஓலத்தை நிலவு கேட்டது. அந்த ஓலம் சாவின் ஓலமென நிலவு அறிந்தது. அது தனது ஒளியை எடுத்துக்கொண்டு சாவை நோக்கி நகரலாயிற்று.'

நாவலின் ஆரம்பமான 'மய்யக்கதை'யில் நிலவு சாட்சியாகவிருக்கின்றது. நாவல் முழுவதும் நிலவு சாட்சியாக வருகின்றது. அந்நிலவின் சாட்சியமே ஷோபா சக்தியின் 'பொக்ஸ்'. சாவின் ஓலத்தின் சாட்சியம் அது.






கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் கிழக்கு மண் குறித்து தொடர்ந்தும் ஆவணப்படுத்தலை மேற்கொண்டு வருகிறது. அதன் தொடர்ச்சியில் தொகுக்கப்பட்டு உள்ள சிறுகதைத் தொகுப்பே இது.

கிழக்கின் நூறு சிறுகதைகள் மட்டக்களப்பில் வணசிங்க Wanasinghe Printers அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது. மிக நேர்த்தியாக வடிவமைப்பு செய்யப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது.

நம்மவர்கள் தமிழ்நாட்டுப் பதிப்பகத்திற்கு ஏங்கிக் கிடந்து அழிந்து உருக்குலைந்து கவலையுறுவதை விட இலங்கையில் உள்ளவர்கள் இதனைக் கவனிக்க வேண்டும்.

*இன்றிருந்தால் நூறு வயதைத் தொட்டிருக்கக் கூடிய படைப்பாளிகள் தொடக்கம் முப்பத்து மூன்று இளைஞர் வரை இந்தத் தொகுப்பில் உள்ளார்கள். இந்த மண்ணில் பிறந்து இறுதிவரை வாழ்ந்து மறைந்தவர்கள். மண்வாசத்தைச் சுவாசித்து இங்கேயே வாழந்து கொண்டிருப்பவர்கள் பல்வேறு காரணங்களால் மண் துறந்து வெவ்வேறு திக்குகளுக்குப் புலம் பெயர்ந்து சென்றவர்கள். காரணகாரியமாக கிழக்கு மண்ணில் காலடியெடுத்து வைத்துக் காலப் பொக்கில் 'பாயோடு ஒட்டி வேரோடியவர்கள்'... எனப் பலருக்கும் இத்தொகுப்பு விரிந்து இடமளித்திருக்கிறது.*

*நூலின் முன்னுரையில் இருந்து*

**உமா வரதராஜன்**



# அட, சும்மா அதிருதில்ல!?

## ஜோர்ஜ் மாமா

என்மேல் அன்பும் பெருமதிப்பும் கொண்ட திருமதி பபி ரவி, தான் தனது சகோதரர்களுடன் சேர்ந்து சிறுவயதில் நடத்திய சிறுபொறி என்ற கையெழுத்துப் பிரதியை, மாணவர்களுக்காக நீண்ட நாட்களின் பின்னர் அச்சில் வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

இடதுசாரித் தலைவராக இருந்த காலம் சென்ற கே.ஏ.சுப்பிரமணியம் அவர்களின் மகளான அவர், சத்தியமனை என்ற என்ற தங்கள் இல்லத்தில் இருந்து, பெரும் நூலகம் ஒன்றை நடத்தி வருவதுடன், பல்வேறு கலை, இலக்கிய, அறிவியல் செயற்பாடுகளையும், நிகழ்வுகளையும் தனது அன்னையார் திருமதி வள்ளியம்மை, கணவர் ரவீந்திரன் உடன் இணைந்து செயற்படுத்தி வருகிறார்.

அந்த சிறுபொறி மாணவர் இதழுக்காக, மாணவர்களுக்காக என்னை எந்த விடயம் பற்றியும் எழுதலாம் என்று கேட்டுக் கொண்டதற்காக நான் எழுதியது.

படிக்கிற நேரமெல்லாம் படிக்கிறதை விட்டு, கைபேசியை நோண்டிக் கொண்டு, வட்சப்பில் ஜொள்ளு விட்டுக் கொண்டிருப்பீர்கள் என்றால், வட்சப் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகள் எல்லாம் உங்கள் கண்ணில் பட்டிருக்கும்.

சிதம்பரம் தில்லை நடராஜரின் காலிற்கு கீழ் தான் பூமியின் காந்தப் புல மையம் இருக்கிறது, அவரது ருத்திர தாண்டவம் அணுவின் அதிர்வுகளைக் காட்டுகிறது, அதனால் தான் சுவிட்சலாந்தில் இருக்கும் அணுத் துகள்களை மோத விட்டு ஆய்வு நடத்தும் ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சியினால் உலகம் அதிர்ந்து அழிந்து விடும் என்பதற்காக அதன் வாசலில் சிவபெருமான் சிலை இருக்கிறது என்று எல்லாம், வட்சப்பில் நிரம்பி வழியும் 'நமது முன்னோர்கள் முட்டாள்கள் அல்ல!' என்று 'கடவுள் ஆணை' அடிச்சுச் சத்தியம் செய்யும் வில்லேஜ் விஞ்ஞானிகள் அடிச்சு விடும் கண்டுபிடிப்புகளை எல்லாம் நீங்களும் உங்கள் வட்சப் நண்பர்களோடு பெருமையோடு பகிர்ந்து கொண்டிருப்பீர்கள்.

மற்றவர்கள் எதைச் சொன்னாலும், கேட்டுக் கேள்வி இல்லாமல் நம்பி, வதந்திகளை இப்படி எல்லாம் உண்மையாக நினைத்து, நீங்களும் பரப்பக் கூடாது.

கேள்வி கேட்டதால் தான் விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது.

இல்லாவிட்டால், பூமியைத் தான் சூரியன் சுற்றிக் கொண்டிருக்கிறது என்று நாங்கள் இப்போதும் நம்பிக் கொண்டிருப்போம்.

இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள எல்லாமே அதிர்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

மிகவும் நுண்ணிய அணுவைப் பிரித்த துகள்களான இலத்திரன், புரோட்டோன், நியூட்ரோன் முதல், மிகப் பெரிய சூரியன்கள், கிரகங்கள் எல்லாம் அதிர்ந்தபடியே இருக்கின்றன.

நீங்களும் கூடத் தான். உங்கள் உடலில் உள்ள உயிரின் அடிப்படையான கலங்கள், அந்தக் கலங்களை உருவாக்கும் அணுக்கள் எல்லாமே அதிர்ந்த வண்ணம் தான் இருக்கின்றன.

அணுக்கருவைச் சுற்றி இலத்திரன்கள், சூரியனைக் கிரகங்கள் சுற்றிய மாதிரி, அதிர்ந்தபடியே சுற்றிக் கொண்டிருக்கின்றன.

ஆனால், கிரகங்கள் சூரியனை ஒரு தட்டையான பாதையில், வெவ்வேறு தூரங்களில் வெவ்வேறு வேகங்களில் சுற்றிக் கொண்டிருக்கின்றன.

இலத்திரன்களோ மூன்று பரிமாணங்களில் எல்லாப் பக்கமும் சுற்றிக் கொண்டிருக்கின்றன. சிவபெருமான் நடனம் மாதிரி இரண்டு பரிமாணங்களில் சுழல்வதில்லை.

இந்த நுண்ணிய அணுத்துகள்கள் திண்மமாகவும் அலையாகவும் மாறி மாறி இருப்பதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.


இப்படிச் சுற்றிக் கொண்டிருக்கும்போதும் இவை அதிர்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

இந்த அதிர்வு என்பது ஊஞ்சல் மாதிரியோ, ஒரு இசைக்கருவியின் கம்பியின் அதிர்வு மாதிரியோ, கம்பிச் சுருள் ஒன்றில் கட்டிய நிறை கொண்ட பொருள் மேலும் கீழும் அசைவது மாதிரியோ நீங்கள் கற்பனை செய்யலாம்.

இப்படி இயற்கையில் உள்ள சகல பொருட்களுக்கும் இயற்கையான அதிர்வுகள் இருக்கும்.

இயற்கையானதும், செயற்கை யானதுமான அதிர்வுகள் அலைகளை உண்டாக்கும்.

உங்கள் தொண்டைக்குள் உள்ள குரல் நாண்களின் அதிர்வு எழுப்பும் அலைகள் ஒலி அலைகளாக காற்றில் வந்து காதில் விழுகின்றன. இசைக்கருவிகளும் தட்டுவதன் மூலமோ, மீட்டுவதன்




மூலமோ, காற்றின் உதவியாலோ அதிர்வுகளை ஏற்படுத்துவதால் தான் ஒலி உண்டாகிறது. அது சுரங்களாக வகைப்படுத்தப்படும்போது, இசை உண்டாகிறது. இல்லாவிட்டால் அதெல்லாம் வெறும் காட்டுக்கத்தல் தான்.

ஒளி அலைக்கும் ஒலி அலைக்குமான வித்தியாசம், ஒலிக்கு வளி மண்டலம் போன்ற ஊடகம் தேவை. ஒளிக்கு அதைக் கடத்துவதற்கு ஊடகம் தேவையில்லாததால் தான் விண்வெளியில் உள்ள வெற்றிடத்திற்குள்ளால் சூரியக் கதிர்கள் சூரியனில் இருந்து பூமிக்கு வருகின்றன.

ரேடியோ அலைகள் எனப்படும் மின்காந்த அலைகள் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும், அவை ஒலியையும் ஒளியையும் காவிச் செல்லக் கூடியனவாக மாற்றப்பட்டு, அதற்குரிய மின் கருவிகளால் நாங்கள் உணரக் கூடிய வானொலியாகவும் தொலைக் காட்சியாகவும் மாற்றப்படுகின்றன.

அந்த மின் காந்த அலைகளை மாற்றாவிட்டால், உங்களால் அவற்றை உணரவே முடியாது. உங்களால் உணரக் கூடிய அலைவீச்சுக்குள் அவை இல்லை.

உங்கள் கைபேசியின் சகல தொடர்புகளும் இப்படியான மின்காந்த அலைகள் தான்.

அவற்றுக்கும் ஊடகம் தேவையில்லாதபடியால் தான் விண்வெளிக்கு அனுப்பப்படும் விண்கலங்களுடன் பூமியில் இருந்து தொடர்பு கொள்ளவும், பூமியில் இருந்தபடியே அவற்றைக் கட்டுப்படுத்தவும் இந்த மின்காந்த அலைகள் பயன்படுகின்றன.

இதனால் தான் 1977ம் ஆண்டு ஏவப்பட்டு, சூரிய வட்டத்தைக் கடந்து 24 பில்லியன் கிலோமீட்டர் தூரத்தில் பயணம் செய்து கொண்டிருக்கும் வொயேஜர் விண்கலத்துடன் பூமியிலிருந்து விஞ்ஞானிகள் தொடர்பு கொண்டு அதைக் கட்டுப்படுத்த முடிகிறது. ஆனால், அந்த மின்காந்த அலைகள் பூமியிலிருந்து அந்த விண்கலத்தை அடைய பதினெட்டு மணி நேரமும் அந்த விண்கலத்திலிருந்து பதில் செய்தி வர இன்னொரு பதினெட்டு மணி நேரமும் பிடிக்கின்றன.

இப்படி, பொருட்களின் அதிர்வுகள் பிறீக்குவென்சி எனப்படும் அலைவரிசையில் அளவிடப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட இடத்தை ஒரு செக்கனில் எத்தனை அலைகள் கடக்கின்றன என்பதை வைத்தே அலைவரிசை கணக்கிடப்படுகிறது. ஒரு செக்கனில் ஒரு அலை ஒரு இடத்தைக் கடந்தால் அது ஹேர்ட்ஸ் என்று அளவிடப்படுகிறது.

இப்படி இயற்கையாக இருக்கும் அதிர்வுகள் தனியே ஒரு குறிப்பிட்ட அலைவரிசையாகவோ, அவற்றின் கூட்டாகவோ இருக்கலாம்.

ஒரு பியானோ கருவியில் ஒரு சுரத்தை இசைத்தால் அதில் ஒரு குறிப்பிட்ட அலைவரிசை தான் எழும்.

ஆனால், ஒரு கல் தரையில் விழும்போது எழும் ஒலி பல அலைவரிசைகளின் கலவையாகத் தான் இருக்கும்.

இயற்கையான அதிர்வுகளை விட, செயற்கையாகவும் நீங்கள் அதிர்வுகளை ஏற்படுத்தலாம். ஒரு வயலினில் வெவ்வேறு இடங்களில் அழுத்திக் கொண்டு வாசிக்கும்போது வெவ்வேறு அதிர்வுகள் ஏற்படுகின்றன. அவை சுரங்களாகின்றன.

அதே போல, ஒரு திராட்சை ரசம் குடிக்கும் கிளாசில் நீரை ஊற்றி, விரலில் நீரைத் தொட்டு, கிளாசின் விளிம்பில் வேகமாக அழுத்திச் சுற்றும்போது ஒலி ஏற்படும். அந்த ஒலி கிளாசில் உள்ள நீர் மட்டத்திற்கு ஏற்ப மாறுபடும்.

**அதைப் போல, நீங்கள் நடந்தோ, சைக்கிளில் போகும் போதோ எதிரே உங்களது எதிர்ப் பாலார் வரும்போதும், பின்னால் யாரோ தொடர்ந்து வருவது போல இருக்கும்போதும், உங்களுடைய வயதுக்கு அதிர்வுகள் ஏற்படத்தான் செய்யும்.**

**மனதுக்குள் பட்டாம்பூச்சியும், வயிற்றுக்குள் வண்ணத்துப்பூச்சியும் அதிர்வது போலத் தான் இருக்கும். அந்த எதிர்ப்பாலாரும் உங்களுக்குப் பிடித்தவராக இருந்தால், பரிவு, அதிர்வு எல்லாம் ஏற்பட்டு, இதயம் உடைந்து கொட்டுண்டு விடுமோ என்ற உணர்வு எல்லாம் வரும். அதெல்லாம் இந்த வயதுக்கு உரிய பிரச்சனை தான்.**

**அது எல்லாம் விஞ்ஞான உண்மைகள் இல்லை. வெறும் பிரமை மட்டும் தான்.**

அவ்வாறான கிளாசில் ஒரு தடியால் தட்டும்போதும் இனிமையான ஒலி ஏற்படும். அந்த ஒலி தண்ணீர் மட்டத்திற்கும் கிளாசின் விளிம்பிற்குமான தூரத்திற்கு ஏற்ப மாறுபடும்.

இதை அடிப்படையாகக் கொண்டு, பல்வேறு கிளாஸ்களில் படிப்படியாகநீர்மட்டத்தைஉயர்த்தி, ஒவ்வொரு இசைச்சுரத்திற்கும் தகுந்த உயரத்தில் நீர் விட்டு, தடியால் தட்டி நீங்கள் இசை எழுப்பலாம்.

இவ்வாறான ஒரு இசைக்கருவி தமிழில் உண்டு. அதற்கு ஜலதரங்கம் என்று பெயர்.

இதைத் தமிழன் தான் கண்டுபிடித்தான், நம் முன்னோர்கள் முட்டாள்கள் அல்ல என்று வட்சப்பில் கதையைக் கிளப்ப வேண்டாம். அதைப் போன்று உலகெங்கும் இசை எழுப்பும் முறைகள் உண்டு. ஜலதரங்கம் என்ற பெயரே தமிழ் மொழிப் பெயர் இல்லை. வடமொழிப் பெயர்.

திபெத்தியர்கள் பித்தளையினால் ஆனதொரு கிண்ணத்தில் நீர் நிரப்பி அதைத் தடியால் தட்டி ஒலி எழுப்பியபடி தியானம் செய்வார்கள். தட்டும்போது ஏற்படும் அதிர்வினால் நீரில் ஏற்படும் அலைகள் அழகாக இருக்கும்.

இப்படி ஒவ்வொரு பொருளும் அதிரும்போது, அந்தப் பொருளின் அதே அலைவரிசையுள்ள இன்னொரு பொருளும் அதிர்ந்தால், இரண்டு அலைவரிசைகளும் சேர்ந்து பரிவதிர்வு உருவாகிறது. அதாவது இரண்டும் சேர்ந்து எழுப்பும் அதிர்வு இரண்டையும் விட அதிகமானது.

எனவே, கிளாசில் நீர் நிரப்பி ஒரு குறிப்பிட்ட சுரத்தை இசைக்கும்படி செய்து விட்டு, இன்னொரு இசைக்கருவியில் அதே சுரத்தை இசைத்தீர்களாயின், பரிவதிர்வு உருவாகிறது. அந்த அதிர்வு அதிகமானவுடன், கிளாஸ் வெடித்துச் சிதறும்.

இப்படி வாயால் கிளாசை ஊதியே கிளாசை வெடிக்கப் பண்ணும் வீடியோக்களை நீங்கள் யூடியூப்பில் காணலாம்.

முன்னைய காலங்களில் இப்படியான பரிவு அதிர்வுகளால் பெரும் விபத்துக்கள் கூட நடந்திருக்கின்றன. இராணுவத்தினர் அணிவகுப்பு நடத்தும்போது, எல்லாருடைய காலடிகளும் ஒரே நேரத்தில் நிலத்தில் படும்போது பெரும் அதிர்வு ஏற்படும். ஒரு பாலத்தின் மேல் இப்படி அணிநடை செய்யும்போது, அந்த அணியின் காலடி அதிர்வும், பாலத்தின் இயற்கையான அதிர்வும் ஒன்றாகும்போது, பாலம் இடிந்து விழும்.

இது தான் அதிர்வுகளுக்கான விஞ்ஞான அடிப்படை.

சுவிட்சலாந்தில் உள்ள அணுத்துகள் ஆய்வு நிலையத்தில் நடத்தும் ஆராய்ச்சியால் பூமியின் அதிர்வும் சமனாகி பூமி அழிந்து விடும் என்பதெல்லாம் வெறும் கட்டுக்கதைகள்.

இப்போது மதங்களின் பெருமை பேசுவோர்களும் இப்படி ஏதாவது சம்பந்தமில்லாத விடயங்களுக்கு எல்லாம் அதிர்வு, அலைவரிசை, சக்தி, மின்காந்த அலை என்றெல்லாம் அடித்து விடுவார்கள். அதை எல்லாம் நம்பி வட்சப்பில் பகிராதீர்கள்.

அதைப் போல, நீங்கள் நடந்தோ, சைக்கிளில் போகும் போதோ எதிரே உங்களது எதிர்ப் பாலார் வரும்போதும், பின்னால் யாரோ தொடர்ந்து வருவது போல இருக்கும்போதும், உங்களுடைய வயதுக்கு அதிர்வுகள் ஏற்படத்தான் செய்யும்.

மனதுக்குள்பட்டாம்பூச்சியும், வயிற்றுக்குள் வண்ணத்துப்பூச்சியும் அதிர்வது போலத் தான் இருக்கும். அந்த எதிர்ப்பாலாரும் உங்களுக்குப் பிடித்தவராக இருந்தால், பரிவு, அதிர்வு எல்லாம் ஏற்பட்டு, இதயம் உடைந்து கொட்டுண்டு விடுமோ என்ற உணர்வு எல்லாம் வரும்.

அதெல்லாம் இந்த வயதுக்கு உரிய பிரச்சனை தான். அது எல்லாம் விஞ்ஞான உண்மைகள் இல்லை.

வெறும் பிரமை மட்டும் தான்.

'என்னோடு ஒரே அலைவரிசையில் இருப்பவர் போல' என்றெல்லாம், இதற்கெல்லாம் விஞ்ஞான விளக்கம் கொடுக்க முயற்சிக்காதீர்கள்.

இவ்வாறாக அதிர்வுகளை ஏற்படுத்தும் தற்போதைக்குத் தேவையில்லாத விடயங்களில் தலையைப் போடாமலும், இந்த கைபேசியை ஒரு பக்கம் வைத்து விட்டும், உங்கள் பாடங்களில் கவனம் செலுத்தினால், நீங்கள் உண்மைகளைக் கண்டுபிடிக்கின்ற உண்மையான விஞ்ஞானிகளே ஆகலாம்.

இல்லாமல் பாட நேரத்திலும் கைபேசியை நோண்டிக் கொண்டிருந்தால், நீங்களும் 'உருத்திராக்க மாலையின் மின் காந்த அலைகள்' பற்றி மூட நம்பிக்கைகளுக்கு விஞ்ஞான விளக்கம் கொடுத்து, கதையைக் கிளப்பும் வேலை வெட்டி இல்லாத வட்சப் வில்லேஜ் விஞ்ஞானி ஆக வேண்டியதுதான்.

# மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நாமம்:




## வரலாற்று தேடல்கள் 9

எம்.ஆர்.ஸ்டாலின் ஞானம்
Facebook: M R Stalin Gnanam

## கிழக்கின் முதற் தலைமுறை அரசியல் ஆளுமைகள்



அஞ்சல், தொடர்புத்துறை அமைச்சர்

*1815ம் ஆண்டு கண்டி இராச்சியத்தை ஆங்கிலேயர் கைப்பற்றியதோடு முழு இலங்கையும் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டது. அன்றிலிருந்து சுமார் 100 வருட காலம் முழு இலங்கையர்களும் தமது சொந்த அரசியல் பிரதிநிதிகளை கொண்டிருக்கும் வாய்ப்பை இழந்திருந்தார்கள்.*

*இந்த நிலையில் முதன் முதலாக மாற்றம் ஏற்படுவதற்கு காரணமாய் அமைந்தது 1910ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட குறு மக்கலம் சீர்திருத்த முயற்சி ஆகும். அதன் ஊடாக இலங்கையில் முதன் முதலாக இலங்கை பிரதிநிதிகளை உள்ளடக்கிய சட்டசபை ஒன்று உருவாக்கப்பட்டது. இந்த சட்டசபைக்குள் நுழையும் வாய்ப்பை படித்த இலங்கையர்களின் பிரதிநிதி எனும் வகையில் பொன். இராமநாதன் போன்றோர் தமதாக்கிக் கொண்டனர்.*

*அதனைத் தொடர்ந்து 1921ல் மனிங் சீர்திருத்தம் ஏற்படுத்திய சட்டசபை விரிவாக்க நடவடிக்கைகள் மூலம் பல தமிழர்கள் சட்டசபையில் இடம் பிடித்தனர். இந்த சட்டசபை நுழைவில் இருந்து பல அரசியல் தலைவர்கள் தமிழர்கள் மத்தியில் இருந்து உருவாகத் தொடங்கினர்.*

அந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் இருந்து எம்.எம். சுப்ரமணியம், ஈ.ஆர்.தம்பிமுத்து.போன்றோர் சட்டவாக்க சபை உறுப்பினர்களாக தெரிவானார்கள்.

இந்த நிலையில் தான் 1931 ஆம் ஆண்டு டொனமூர் யாப்பு ஏற்படுத்தப்பட்டது. அதனடிப்படையில் அரசாங்கசபை உருவாக்கப்பட்டது. இந்த அரசாங்க சபைக்கு பிரதேச ரீதியாகவும் சில ஒதுக்கீடுகள் நடந்தன.

அதனடிப்படையில் கிழக்கு மாகாணத்திலிருந்து ஏ.எச்.மாக்கான் மாக்கார், எஸ்.ஓ.கனகரத்தினம், சபா.தர்மரட்ணம் போன்றோர் அரசாங்க சபை உறுப்பினராக தெரிவானார்கள். ஓ.எஸ். கனகரெட்ணம் அவர்கள் கிழக்கு மாகாணத்துக்கான முதலியாராக பணியாற்றியவர். 1936ஆம் ஆண்டில் அரசாங்க சபைத் தேர்தலில் மட்டக்களப்புத் தெற்குத் தேர்தலில் தொகுதியில் போட்டியிட்டு தெரிவானார். சபா.தர்மரெட்ணம் 1938ஆம் ஆண்டில் அரசாங்க சபை உறுப்பினராக தெரிவானார். இவர் கிழக்கு மாகாணத்துக்கான வன்னியனாராக கடமையாற்றியவர்.

இதன் தொடர்ச்சியில்தான் நல்லையா என்னும் பெருமகனார் கிழக்கின் அரசியல் வானில் உதித்தார்.

திருகோணமலை இராமகிருஷ்ண மிஷன் பள்ளியின் ஆசிரியப்பணியில் தொடங்கிய அவரது பொதுவாழ்வு மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம், அட்டாளச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் முதலாவது அதிபர் என்று கிழக்கிலங்கையெங்கும் வியாபித்தது. இராமகிருஷ்ண மிஷனுடன் அவருக்கிருந்த ஈடுபாடுகள் ஆசிரியராக இருந்த நல்லையாயாவை அரசியலில் கால்பதிக்க வைத்தது. அதாவது விபுலாநந்தருடனான நெருக்கமே அந்த வாய்ப்பினை அவருக்கு வழங்கியது. நல்லையா அவர்களின் ஆளுமையை உணர்ந்த விபுலானந்தர் அவர் அரசியல் ஊடாக பெரும்பணியாற்ற முடியும் என்று ஆசி வழங்கினார்.

அதன் பலனாக 1943ஆம் ஆண்டு மட்டக்களப்புத் தெற்கு தொகுதியில் போட்டியிட்டு அரசாங்க சபை உறுப்பினராக வி.நல்லையா அவர்கள் தெரிவானார்கள்.

## நல்லையா மாஸ்டர் என்னும் பெருந்தலைவர்

நல்லையா நினைவு பணி மன்றத்தினரால் 'வாழும் மனிதம்' என்னும் தலைப்பில் நல்லையா அவர்கள் அரிய பல தகவல்களடங்கிய ஒரு வரலாற்று ஆவணம் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்துள்ளது. சுமார் 15 பெறுமதிமிக்க கட்டுரைகள், 09 நினைவுக்குறிப்புக்கள், பாராளுமன்ற உரைகள், மற்றும் நிழல் படங்கள் என மிக கனதியானதொரு தொகுப்பாக இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. எழுத்துக்கும் வார்த்தைக்கும் இல்லாத வசீகரமும் பன்முக பரிமாணமும் மட்டுமல்ல காலப்பெருவெளியின் மிகநுண்ணிய கணங்களைக்கூட இழுத்துவந்து எம் கண்முன்னே கொண்டு நிறுத்தும் அசாத்திய சக்தியும் கூட நிழல்படங்களுக்கேயுண்டு . அந்த வகையில் இத்தொகுப்பின் இறுதியில் சுமார் 35 பக்கங்களுக்கு மேல் இடம்பிடித்திருக்கும் நிழற்படங்கள் பேசுகின்ற வரலாறுகள் அலாதியானவை.

> **இராமகிருஷ்ண மிஷனுடன் அவருக்கிருந்த ஈடுபாடுகள் ஆசிரியராக இருந்த நல்லையாயாவை அரசியலில் கால்பதிக்க வைத்தது. அதாவது விபுலாநந்தருடனான நெருக்கமே அந்த வாய்ப்பினை அவருக்கு வழங்கியது. நல்லையா அவர்களின் ஆளுமையை உணர்ந்த விபுலானந்தர் அவர் அரசியல் ஊடாக பெரும்பணியாற்ற முடியும் என்று ஆசி வழங்கினார்.**

ஒருபட்டதாரியாக, கல்லூரி அதிபராக இருந்து அரசாங்க சபைக்குள் நுழைந்த நல்லையா மாஸ்டரின் திறமையை சிங்கள அரசியல் தலைவர்கள் பெருமதிப்புடன் அணுகினார்கள். அதன் காரணமாக அரசாங்க சபையின் கல்வியமைச்சுக் குழுவிலும் இடம்பெற வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது.

இலங்கையில் அவ்வேளைகளில் காணப்பட்ட உதவி நன்கொடை வெறும் பாடசாலைகளே தரம் உயர்ந்தனவாக இருந்தன. அவற்றிற்கு நிகராக மூன்று மத்திய பாடசாலைகளை உருவாக்க அரசாங்கம் முயன்ற போது அதில் ஒன்று தமிழ்ப் பிரதேசங்களை மையப் படுத்தி நிறுவப்பட வேண்டுமென குரல் கொடுத்தவர் நல்லையா மாஸ்டர் ஆவார். அதனடிப்படையில் அந்த மத்திய மகா வித்தியாலயத்தை கற்குடா தொகுதியிலுள்ள வந்தாறுமூலையில் அரசு நிறுவியது. தமிழ் பிரதேசத்திற்கென ஒதுக்கப்பட்ட அந்த மத்திய மகா வித்தியாலயத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவ வேண்டுமென யாழ்ப்பாணத்து அரசியல் வாதிகள் குரலெழுப்பிய போது பாராளுமன்றத்தில் காரசாரமான விவாதங்கள் ஏற்ப்பட்டன.

வடமாகாணத்தின் கல்வி நிலை, கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலை, இருக்கின்ற வளங்கள், பாடசாலைகள் போன்றவற்றினை ஒப்பிட்டு பாராளுமன்றில் நல்லையா மாஸ்டர் ஆற்றிய உரை வரலாற்றுச் சிறப்பு மிக்கது. அவரது அயராத முயற்சியின் காரணமாகவே இன்று கிழக்கு பல்கலைக் கழகத்திற்கு அத்திவாரமாய் அமைந்த வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் உருவாக்கப்பட்டது.

அது மட்டுமன்றி மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலை, கோட்டமுனை மகாவித்தியாலயம்

போன்றவற்றினை அமைத்ததனூடாக மட்டக்களப்பின் கல்வியியல் வரலாற்றில் பெருந்திருப்பமொன்றினை அவர் நிகழ்த்தினார்.

வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் (இன்றைய கிழக்கு பல்கலைக்கழகம்), மட். கோட்டைமுனை மகாவித்தியாலயம் (தற்போதைய மட். இந்துக் கல்லூரி, வாழைச்சேனை மகா வித்தியாலயம் (இன்றைய வாழை .இந்து கல்லூரி) திருகோணமலை மகா வித்தியாலயம்(இன்றைய இந்துக்கல்லூரி) என்று கிழக்கிலங்கை எங்கும் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட அரசாங்க பாடசாலைகளின் ஸ்தாபகராகவும், நல்லையா என்கின்ற இந்த ஒரே மனிதனே செயல்பட்டிருக்கின்றான்.

அதன் தொடர்ச்சியாக 1947ம் ஆண்டு இடம் பெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறை அறிமுகமானபோது நல்லையா மாஸ்டர் அவர்கள் கல்குடா தொகுதியிலிருந்து சுயேச்சையாக போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானார். அதன் பயனாக டி.எஸ்.சேனாநாயக்காவின் ஆட்சியில் இணைந்து சுகாதாரம் மாற்று உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றார். இந்த வேளையில் தான் ஜீ.ஜீ. பொன்னம்பலமும் டி.எஸ். சேனநாயக்கா அமைச்சரவையில் அமைச்சராக இருந்தார். வடக்கின் பெருந்தலைவராக உருவாகியிருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலத்திற்கு நிகராக கிழக்கு மாகாணத்தின் தனித்துவங்களை பறை சாற்றும் வல்லமை கொண்ட தலைவராக நல்லையா மிளிர்ந்தார்.

அதேபோல 1952 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றியீட்டி டட்லி சேனநாயக்காவின் அமைச்சரவையில் தபால் தொடர்புத்துறை அமைச்சராக பணியாற்றினார்.

இலங்கை சுதந்திரமடைந்த போது வடக்கில் காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலையும் பரந்தனில் இரசாயனத் தொழிற்சாலையும் நிறுவப்பட்டது. அவ் வேளை கிழக்கு மாகாண மக்களின் நன்மை கருதி கிழக்கு மாகாணத்திலும் ஒரு தொழிற்சாலை நிறுவ வேண்டுமென நல்லையாவின் குரல் ஓங்கி ஒலித்தது. இதற்காக மேற்கொண்ட அயராத முயற்சி காரணமாகவே வாழைச்சேனை காகித ஆலை நிறுவப்பட்டது.

> **1947ம் ஆண்டு இடம் பெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறை அறிமுகமானபோது நல்லையா மாஸ்டர் அவர்கள் கல்குடா தொகுதியிலிருந்து சுயேச்சையாக போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானார். அதன் பயனாக டி.எஸ்.சேனாநாயக்காவின் ஆட்சியில் இணைந்து சுகாதாரம் மாற்று உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றார்.**
>
> **இந்த வேளையில் தான் ஜீ.ஜீ.பொன்னம்பலமும் டி.எஸ்.சேனநாயக்கா அமைச்சரவையில் அமைச்சராக இருந்தார். வடக்கின் பெருந்தலைவராக உருவாகியிருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலத்திற்கு நிகராக கிழக்கு மாகாணத்தின் தனித்துவங்களை பறை சாற்றும் வல்லமை கொண்ட தலைவராக நல்லையா மிளிர்ந்தார்.**



வாழைச்சேனை பிரதேசத்திலிருக்கின்ற இயற்கை வளங்களை ஆதாரமாகக் கொண்டு வாழைச்சேனை பெரு நகரத் திட்டமொன்றினை அமைக்க நல்லையா அவர்கள் எண்ணங் கொண்டிருந்தார். காகிதஆலை, மத்திய மகாவித்தியாலயம் போன்றவற்றோடு இணைத்து பாசிக்குடா சுற்றுலாமையம், கற்குடா துறைமுகம் என்பவற்றை அபிவிருத்தி செய்வதனூடாக வாழைச்சேனையை கல்வி, சமூக,பொருளாதார ரீதியில் கிழக்கு மாகாணத்தின் பெருமையாக உருவாக்க அவர் கனவு கண்டார்.

கல்விசார் துறை மட்டுமன்றி கிழக்கு மாகாண மக்களின் சமூக, பொருளாதார, பத்திரிகை துறையென்று சகல துறைகளையும் முன்னேற்ற அவர் பாடுபட்டார். இரா.பத்மநாதன், பெரியாரின் சுயமரியாதைக் கொள்கையை மட்டக்களப்பிலே பரப்புவதில் முன்னின்றுழைத்த எஸ்.டி. சிவநாயகம் போன்ற ஊடக முன்னோடிகளை இலங்கையின் பத்திரிகைத் துறையில் பெரும் ஆளுமைகளாக வளர்த்தெடுத்தமையிலும் அவரது பங்கு அளப்பரியதாக இருந்தது.

வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலை தொடங்கி மட்டக்களப்பு மாநகர மண்டபம், பிரதான தபால் அலுவலகம், மாவட்டத்தில் காணப்படுகின்ற பெரும்பாலான வைத்திய சாலைகள் மற்றும்

அதுமட்டுமல்ல குளங்களின் புனரமைப்பு ஆகட்டும், நீர்ப்பாசன திட்டங்கள் ஆகட்டும் குடியேற்ற திட்டங்கள் ஆகட்டும் இன, மத, சாதி பேதமின்றி அவரது செயல்பாடுகள் அமைந்திருக்கின்றன. போடிமார்களால் ஒடுக்கப்பட்டு நிலமின்றி வாடிய ஏழை சமூகங்களின் மீட்பராக அவர் உருவாக்கிய விசேட குடியேற்ற திட்டங்கள் இருந்திருக்கின்றன. தேசிய உடமையாக்கல் கொள்கைகளோ,

நெற்காணி உச்சவரம்பு சட்டங்களோ அமுலாக்கபடுவதற்கு முன்பே விசேட பிரேரணைகள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் பெரும் நிலச்சுவான்தர்களிடமிருந்து நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தி அவற்றை ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கும் கைங்கரியத்தை செய்திருக்கின்றார் என்றால் அவர்கொண்டிருந்த பொதுவுடைமை கொள்கைக்கு வேறு சான்றுகள் தேவையில்லை. அவ்வாறாக முஸ்லிம் மற்றும் பறங்கிய சமூகங்களுக்கென விசேட குடியேற்ற, வீடமைப்பு திட்டங்களை உருவாக்கியது மட்டுமன்றி பள்ளிவாசல்களைக் கூட கட்டித்தந்த பெருமானார் நல்லையா மாஸ்டர்.

இலவச கல்வியை சனநாயகப்படுத்தலின் அவசியம் பற்றியும் சுயபாஷைகளுக்கான விவாதங்களின் போதும் தமிழையும் அரசகரும மொழியாக இணைத்துக்கொள்ளவேண்டியதன் அவசியம் பற்றியும், அவர் ஆற்றிய உரைகள் இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் குறிப்பிடத் தக்கவையாகும். தமிழ் ‘பெருங்குடிகள்’ வழிவந்த தலைவர்களெல்லாம் மக்கள் நலத்திட்ட மசோதாக்களை எதிர்த்துகொண்டும் சுதேச மொழி பிரேரணையைஎதிர்த்துக் கொண்டும் ஆங்கிலம் அகற்றப்படக்கூடாது என்று ஒற்றைக்காலில் நின்றபோது சுயபாஷைகளின் அவசியம் குறித்து அவர் முன்வைத்த வாதங்களும் அவற்றை எடுத்துரைத்த விதமும் தனித்துவமானவையாகும்.

அதுமட்டுமன்றி தமிழரசு கட்சியினரினதும் யாழ்ப்பாண தலைவர்களினதும் இனவாத அணிதிரட்டல்கள் பாரிய அவலநிலை ஒன்றை எதிர்கொள்ளவேண்டிய நிலைக்கு தமிழ் மக்களை இட்டுச்செல்லும் என்பதனை சுமார் 70 வருடங்களுக்கு முன்பே தீர்க்கதரிசனமாக இந்த மனிதன் அழுத்தி பேசியிருக்கின்றான்

1945ம் ஆண்டுகளில் தமிழர் வாழும் பிரதேசங்களில் இருந்த தீண்டாமைக் கொடுமைகள் சொல்லில டங்காதவையாகும். ஆனால் அவ்வேளையில் அந்த ஒடுக்கப்பட்ட மக்கள் திரள் குறித்து மிக கருசனை கொண்ட உரைகளை அவர் பாராளுமன்றில் ஆற்றியுள்ளார். ‘ஒடுக்கப்பட்ட சாதிகளான கட்டாடிகள், சிகை வெட்டுவோர், கூலியாட்கள் என்போருக்கெல்லாம் ஒய்வூதியம் கொடுப்பது அரசின் கடமை‘ என்று குரல் எழுப்பியவர் இந்த மட்டக்களப்பு நல்லையா மட்டுமேதான் என்றால் அது மிகையாகாது.

## கிழக்கு மாகாண மக்கள் கட்சி

1943ஆம் ஆண்டிலிருந்து அரசாங்க சபை உறுப்பினராகவும் 1947 ஆம், 1952 ஆம் ஆண்டுகளில் பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவாகி வெறும் பதின்மூன்று வருடங்கள் மட்டுமே அதிகாரத்தில் இருந்த நல்லையா மாஸ்டர் இத்தனையையும் சாதித்திருக்கின்றார் என்பது அதிசயமே. அதனால்தான் அவரை ‘மட்டக்களப்பின் நவயுக சிற்பி’ எனப் புகழுரைப்பார் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்.

அதேபோல இலங்கை அரசியல் வானில் உச்சநிலை தலைவர்களில் ஒருவராக இருந்த போதும் அவர் தன் பரம்பரைகளுக்காக கொழும்பு கறுவாத் தோட்டத்தில் மாட மாளிகைகளைத் தேடிவைக்கவில்லை. செல்வத்தை கொழும்பிலே குவித்து வைத்துக்கொண்டு மட்டக்களப்பிலே வந்து நாயகமாக நடிக்கவில்லை. தனது இறுதிக் காலங்களில் கொழும்பில் ஒரு ஏழையாக வாடகை வீடொன்றில் வாழ்ந்து மறைந்திருக்கின்றார். இதனை நினைவில் கொண்டுதான் இந்த நல்லையா மாஸ்டர் பற்றி மட்டக்களப்பின் மூதறிஞர் எஃப். எக்ஸ்.சி.நடராஜா அவர்கள் ‘நல்லையா ஒரு கையூட்டு வாங்காத மெய்யாளன்’ என விதந்துரைப்பார்.

ஆனால் 1949 ஆம் ஆண்டில் வடக்கில் உருவான தமிழரசுக் கட்சியினரும் எஸ்.ஜே.வி செல்வநாயகமும் கிழக்குக்கு வந்து வாய் கூசாது நல்லையா ஒரு ‘அரச கைக்கூலி’ என்னும் விசமப் பிரச்சாரத்தைச் செய்தனர். தமிழரசுக்கட்சியினரின் சேறடிப்புகளும் தமிழ்:சிங்களம் என்னும் மிகையுணர்ச்சி சார்ந்த இனவாத அணிதிரட்டல்களும் இணைந்து நல்லையா அவர்களை தோற்கடித்தது.

ஆனால் தன் தொடர் தோல்வியிலும் (1956, 1960,1 965) தளராத நல்லையா அவர்கள் தனது வரலாற்றுக் கடமையாக கிழக்கு மக்களுக்கான தனிக்கட்சியின் அவசியத்தை எதிர்காலத்துக்கு உணர்த்திவிட்டே சென்றார். தனது இறுதிக்காலங்களில் அவர் ‘கிழக்கு மாகாண மக்கள் கட்சி’ என்னும் புதிய கட்சியொன்றை ஸ்தாபித்தார். அக்கட்சியை அன்று அவரால் வளர்த்தெடுக்க முடியாது போயிருந்தாலும் அதன் வேர்கள் இன்றுவரை உயிர்ப்புடனேயே இருக்கின்றன.

**1945ம் ஆண்டுகளில் தமிழர் வாழும் பிரதேசங்களில் இருந்த தீண்டாமைக் கொடுமைகள் சொல்லில டங்காதவையாகும். ஆனால் அவ்வேளையில் அந்த ஒடுக்கப்பட்ட மக்கள் திரள் குறித்து மிக கருசனை கொண்ட உரைகளை அவர் பாராளுமன்றில் ஆற்றியுள்ளார். ‘ஒடுக்கப்பட்ட சாதிகளான கட்டாடிகள், சிகை வெட்டுவோர், கூலியாட்கள் என்போருக்கெல்லாம் ஒய்வூதியம் கொடுப்பது அரசின் கடமை‘ என்று குரல் எழுப்பியவர் இந்த மட்டக்களப்பு நல்லையா மட்டுமேதான் என்றால் அது மிகையாகாது.**




# பிரபாகரன் வருகிறார்!
# யாழ்ப்பாணியே, எழுந்து வா!

பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

எல்விஸ் பிரெஸ்லி உயிரோடு இருக்கிறார் என்று இங்குள்ள Supermarket tabloid களில் திடுக்கிடும், பரபரப்பூட்டும் செய்திகள் வருவது போல, பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்று அடிக்கடி புரளி கிளம்பும்.

சுபாஸ் சந்திரபோஸ் உயிரோடு இருக்கிறார் என்ற கதை போலத் தான், இது கடந்த பதினைந்து ஆண்டுகளாக அவ்வப்போது அரங்கேற்றப்படுகிற புராணப் படிப்பு.

உடனே, யாழ்ப்பாணிகளின் புலன் பெயர் ஊடகங்கள் எல்லாம் பிரேக்கிங் நியூஸ் போட்டு, புழுதி கிளப்பும்.

காடு கலங்கப் போகிறது என்ற மாதிரி, தொலைக்காட்சி ஆய்வாளர்களும், யூடியூபர்களும் பரபரப்பை ஏற்படுத்துவார்கள்.

'உண்மை என்று நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவும் இல்லை, உண்மையாக இருந்து விடக் கூடாதோ என்று ஏக்கமாக இருக்கிறது. உண்மையாக இல்லாமல் போய் விடுமோ என்று ஆதங்கமாகவும் இருக்கிறது' என்றெல்லாம் உருட்டுவார்கள்.

பிரபாகரனை வைத்து இன்றைக்கும் பிழைக்கலாம் என்று நம்புகிறவர்களில் இவர்கள் ஒரு சிறுபகுதியினரே.

**'உண்மை என்று நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவும் இல்லை, உண்மையாக இருந்து விடக் கூடாதோ என்று ஏக்கமாக இருக்கிறது. உண்மையாக இல்லாமல் போய் விடுமோ என்று ஆதங்கமாகவும் இருக்கிறது' என்றெல்லாம் உருட்டுவார்கள்.**

**பிரபாகரனை வைத்து இன்றைக்கும் பிழைக்கலாம் என்று நம்புகிறவர்களில் இவர்கள் ஒரு சிறுபகுதியினரே.**

இப்போது பிரபாகரனின் மனைவி மதிவதனியின் சகோதரி, தான் போய் மூலநோயால் பாதிக்கப்படும் பிரபாகரனைக் கண்டு வந்ததாகவும், அவரோடு நூற்றுக்கணக்கான போராளிகள் வாடுவதாகவும், துவாரகாவின் தலைமையில் போராட்டம் நடக்கும் என்பதாகவும் கதை விட்டிருக்கிறார்.

பிறகென்ன?

நிமிர்த்த முடியாத புல நாய் வாலர்கள் ஒரே அரசியல் ஆய்வு தான்.

படம் எடுக்க முடியாதபடிக்கு, மச்சாள்காரியை போனை உள்ளே கொண்டு போக விடாததால், பொட்டம்மானும் தலைவரோடு இருக்கிறார் போல என்றெல்லாம் ஆய்வு செய்து வழமை போல ஊரைச் சுத்துகிறார்கள்.

(தலைவருக்கு அந்தளவுக்குக் கூட அறிவில்லை என்ற இயக்க இரகசியத்தை வெளியே விட்டதற்கே, வந்ததும் முதல் வேலையாக தலைவர் மண்டையில் போடப் போகிறார்.)

பொங்கலுக்கு ஈழப்பிரகடனம் என்ற வதந்தியை 84 ம் ஆண்டு நம்பிய இந்தச் சமூகம் தான்...

தலைவர் மாவீரர் தின உரை நிகழ்த்துவார் என்ற கதையை 2015 இலும் நம்பிக் கொண்டிருந்தது.

அதற்கு பிரபாகரன் திரும்பி வருவார் என்ற கதையை நம்புவதும் பெரிய பிரச்சனை இல்லை.

'கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்பது தெரியாது. ஆனால் இருந்தால் நல்லது!' என்று கமல்தனமான சிந்தனை யாழ்ப்பாணிகளுக்கும் வந்திருக்கக் கூடும்.

ஆனால், இந்த யாழ்ப்பாணிகள் இந்தக் கதையைத் தாங்கள் நம்புகிறார்களோ இல்லையோ, நானும் நீங்களும் நம்ப வேண்டும் என்பது தான் அவர்களின் பிரச்சனை.

தாங்கள் நம்பாவிட்டாலும், நாங்கள் நம்பினால் அவர்களுக்குப் போதும்.

'எண்டாலும் அவர் கடைசி மட்டும் ஈழத்தைக் கைவிடேலைத் தானே! போராட்டத்துக்காக தன்ரை குடும்பத்தையே தியாகம் செய்தவர் அல்லே!' என்று அடிச்சு விட்ட அதே கூட்டம் தான், புர்கா, பர்தாவோட மதிவதனியும் துவாரகாவும் வந்த கதையைச் சொல்லிக்

கொண்டிருக்கிறது.

இதெல்லாம் புலன் பெயர்ந்த யாழ்ப்பாணிகளின் கூத்து.

சரி, பிரபாகரன் வந்து விட்டார் என்று யாழ்ப்பாணம் வாழ் யாழ்ப்பாணிகள் பட்டாசு கொளுத்திக் கொண்டாடினார்களா என்றால் அதுவும் இல்லை. அவர்கள் தங்கள் தங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுடைய பிரச்சனை வேறு.

புத்தரா? சிவனா? யூறோப்பா? கனடாவா?

பிரபாகரனைக் கண்டு சர்வதேசம் திணறுகிறது, சிங்கள வல்லாதிக்கம் கதறுகிறது என்றெல்லாம் அடித்து விட்டுக் கொண்டிருந்த யாழ்ப்பாணிகள், சிங்களவர்களைப் பார்த்து, 'ஒரு அப்பனுக்கு பிறந்திருந்தால், வாங்கடா வெளியால!' என்றல்லவா கிளம்பியிருக்க வேண்டும்?

அல்லது,

'அண்ணை, உந்தச் சிங்களவனை விடப்படாது. நாங்கள் உங்களுக்குப் பின்னால தான்' என்று, பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு, இன்னொரு வணங்காமண்ணை வாடகைக்குப் பிடித்து 'அமத்திக் கொண்டு' போயல்லவா இருக்க வேண்டும்?

எதுவும் இல்லை.

'அவர் வந்தால், அடிச்சுப் பிடிப்பார் தானே! அப்பிடி அவர் பிடிக்காட்டியும், நாங்கள் இப்ப நல்லூர் திருவிழாவுக்கு சிறிலங்காவுக்குப் போகலாம் தானே!?' என்ற எண்ணம்.

குறைந்த பட்சம், ஸ்லோ மோஷனில் திரையில் தோன்றுகிற தமிழ்நாட்டுச் சினிமா நாயகனுக்கு அடிக்கிற விசில் கூட, லூஸ் மோஷனில் அவதிப்படும் பிரபாகரனுக்கு அடிக்க யாழ்ப்பாணிகள் தயாராக இல்லை.

நிலைமை அப்படி.

இந்தக் கதையைக் கிளப்பி விடுகிறவர்கள் யார்?

இன்றைக்கும் புலியை வைத்துப் பணம் சேர்க்கலாம் என்று நம்புகிற உண்டியல் புலிகள் தான் இந்தக் கதை சொல்லல்களின் சூத்திரதாரிகள்.

முன்பு கோடிகளாய் குவிந்த உண்டியல்கள் தற்போது வற்ற ஆரம்பித்து விட்டன.

**பிரபாகரன் வந்து விட்டார் என்று யாழ்ப்பாணம் வாழ் யாழ்ப்பாணிகள் பட்டாசு கொளுத்திக் கொண்டாடினார்களா என்றால் அதுவும் இல்லை. அவர்கள் தங்கள் தங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.**

**அவர்களுடைய பிரச்சனை வேறு.**

**புத்தரா? சிவனா? யூறோப்பா? கனடாவா?**

போராட்டப் பணத்தைச் சுருட்டிய பலரும், புலியின் சொத்துக்களைத் தலைவர் வரும் வரையில் பாதுகாத்துக் கொண்டிருக்கும் தமிழ்த்தேசிய உணர்வாளர்களும் அந்த முதலீடுகளால் கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறார்கள். அவர்களில் பலர் இனியும் உண்டியல் தூக்க வேண்டிய தேவை பெரிதும் இல்லை.

ஆனால், இன்னமும் புலியை வைத்துப் பிழைப்பு நடத்தலாம் என்று நம்புகிறவர்கள் இன்னும் இருக்கிறார்கள்.

அவர்கள் தான் முன்பு நெடுமாறனுக்கும், பின்பு கொஞ்ச நாள் சீமானுக்கும் பைனான்சியர்களாக இருந்தவர்கள்.

அவர்களுக்குக் கொஞ்சம் பணத்தை வீசினால், வாலை ஆட்டுவார்கள். காட்டிய இடத்தை நோக்கிக் குரைப்பார்கள்.

திடீரென்று நெடுமாறன் பத்திரிகையாளர் மாநாடு நடத்தி, பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்று கதை விட்டதெல்லாம், வாங்கிய பணத்திற்காக, 'சொல்லச் சொன்னாங்க, சொன்னேன்' என்று ஜகா வாங்கியதில் முடிந்தது தான்.

இந்தப் பரபரப்புகளை வைத்து, சில சுவிஸ் புலிகள், மதிவதனியும், துவாரகாவும் புர்காவோடு வந்ததாக, சீன் போட்டு பெருந்தொகைப் பணம் திரட்டியதாகவும் கதைகள் உலவுகின்றன.

இந்தக் கதைகளை நம்பிப் பணம் கொடுக்க இன்னமும் ஒரு தொகை யாழ்ப்பாணிகள் இருக்கிறார்கள்.

இவர்கள் உண்மையாகவே நம்புகிறார்களா? இல்லை, 'ஊருக்கு வா, கவனிப்பம்!' என்ற பயத்தினால் கொடுக்கிறார்களா? என்பது தெரியவில்லை.

ஆனால், இன்றைக்கும் எந்த புலன் பெயர்ந்த ஊடகமோ, யாழ்ப்பாணிப் புத்திஜீவிகளோ, 'பிரபாகரன் வந்தாலும் என்னத்தைப் புடுங்க முடியும்?' என்ற கேள்வியைக் கேட்கவேயில்லை.

கேட்கவும் போவதில்லை.

இதென்ன, ஜெயிலர் தனியே போட்டுத் தள்ளுவது போல, பங்கரர் கதையா?

ஒன்று மட்டும் உண்மை.

பிரபாகரன் உண்மையாகவே நேரடியாக வந்தால், பிரபாகரனை அடித்துக் கொல்வது, பிரபாகரனால் கொல்லப் பட்டவர்களின் உறவினர்களாக இருக்காது.

பிரபாகரனை வைத்துப் பிழைப்பவர்களாகத் தான் அது இருக்கும்.

•••

அண்ணை அடிச்சுப் பறிக்கிறாரோ இல்லையோ, ஈழத்தை அழுதாவது பறிக்கலாம் என்று ஒரு கூட்டம் நினைக்கிறது.

தமிழ்நாட்டு தொலைக் காட்சிப் பாட்டுத் திறன் போட்டியில் எல்லாம், இனத்தின் அழிவை ஒப்பாரி வைத்து, 'அனாதைப் பிணம் சாமி, தர்மம் போடுங்க!' என்று, பாடிப் பரிசில் பெறலாம் என்ற சிந்தனை யாழ்ப்பாணிகளுக்கு வந்திருக்கிறது.

ஒரு இனத்தின் அழிவை இனி வேறு எப்படியெல்லாம் கேவலப்படுத்த முடியும் என்று தெரிய முடியாத அளவுக்கு, இருக்கிறது இன்றைய நிலைமை.

'மாங்கிளியும் மரங் கொத்தியும் வீடு திரும்பத் தடையில்லை' என்று அந்தக் காலத்தில் புலன் பெயர் மேடைகளில் பாடிய போது, விசில் அடித்துக் கண்ணீர் மல்கிய அத்தனை யாழ்ப்பாணியும் இன்றைக்கு நல்லூர் முருகனோடு செல்பி எடுத்து

பேஸ்புக்கில் நேரடி ஒளிபரப்புச் செய்து கொண்டிருக்கிறான்.

அவ்வாறான ஒரு போலித்தனம், இந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலமாக எங்கள் போராட்டத்திற்கு ஆதரவு பெற வைக்க முடியும் என்ற சிந்தனையாக வடிவம் கண்டிருக்கிறது. அதற்கென சில பாட்டுக்கள் கைவசம் இருக்கின்றன.

உணர்வுகளைச் சுண்டி யிழுத்து ரேட்டிங்கை எகிறப் பண்ண, தொலைக்காட்சி வியாபாரிகளுக்கு எதையும் விற்கும் சிந்தனை...

ஒரு இனத்தின் அவலத்தைக் கூட விற்கலாம் என்ற எண்ணம் அந்த தொலைக்காட்சி வியாபாரிகளுக்கு மட்டுமல்ல, அதை வைத்துப் பிழைப்பு நடத்தலாம் என்று நம்புகிற புலன் பெயர் வியாபாரிகளுக்கும் உண்டு.

குறிப்பிட்ட பாடல்களைப் பாட வேண்டும் என்று அழுத்தம் கொடுப்பது கூட அவர்களாகத் தான் இருக்கிறது.

சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்து, இன அழிப்பு முத்திரை வாங்க வேண்டும் என்று ஒரு பதினைந்து வருடங்களாக நடந்து வரும் கூத்துக்கள் போல இதுவும் ஒரு கவன ஈர்ப்புத் தான்.

தமிழ்நாட்டுக்காரருக்கு இவர்களை வைத்துப் பிழைப்பு நடத்தலாம் என்பது அன்று தொடக்கம் தெரிந்திருக்கிறது.

ஆனால் ஒரு போதும் பரிசைக் கொடுக்கவே மாட்டார்கள்.

கள்ள வோட்டுப் போட்டாவது வெல்ல வைக்க முயன்ற யாழ்ப்பாணிகளும், தங்கள் கண்ணீருக்குப் பரிசில் கிடைக்கவில்லை என்று தொலைக்காட்சியைப் பகிஷ்கரிப்போம் என்று கிளம்புவார்கள்.

ஜப்பான் பொருட்களைப் பகிஷ்கரிப்போம் என்று தொடங்கிய கோமாளிகள் இப்போதும் பேஸ்புக்கில் இருக்கிறார்கள்.

யுத்தத்தில் வாழ்ந்த தலைமுறையும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தலைமுறையும் அழியும் வரைக்கும் இந்தக் கூத்துத் தொடரத் தான் செய்யும்.

ஜெனிவா வரைக்கும் பறவைக்காவடி எடுத்து சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்து முடிஞ்சுது.

தமிழ்நாட்டின் கவனத்தை ஈர்த்து, என்ன சிகையடா பண்ணப் போறீங்க? என்று யாரும் கேட்கப் போவதுமில்லை.

இசைப்பிரியாவின் ஆடைகள் இல்லாத படத்தைப் போட்டு, அனுதாபம் தேடிய கூட்டம். எதைத் தான் செய்ய மாட்டாது?

•••

தமிழீழத்தின் தலைசிறந்த 'ஊடக ஜாம்பவான்களில்' வித்தியாதரனும் ஒருவர். புலி இப்படிப் பல தமிழ்த் தேசிய ஊடகவியலாளர்களையும், அரசியல் ஆய்வாளர்களையும் கொம்பு சீவி வளர்த்து விட்டது.

இருந்தாலும், ஊடகத்தை வைத்து பிழைக்கத் தெரிந்தவர் ஊடக உரிமையாளரான அவரின் மைத்துனர் தான்.

அவர் தான் 'ஊடகப் போராளி'!

அவர் மகிந்தவுடன் பிறந்த நாள் கேக் வெட்டுவார். ரணிலோடும் ஒட்டியுறவாடுவார்.

உதயன் பத்திரிகையில், மாகாண சபை வெற்றிக்கு, 'தமிழர் ஆட்சி மலர்ந்தது' என்று தலையங்கமும் போடுவார்.

நிதி நிறுவனம் வைத்து, யாழ்ப்பாணிகளை மொட்டையடித்தாலும், திரும்பவும் தங்களை விற்றுப் பிழைத்து மொட்டையடிக்க, தாங்களே வாக்களித்து அவரை பாராளுமன்றம் அனுப்புவார்கள்.

**ஜெனிவா வரைக்கும் பறவைக்காவடி எடுத்து சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்து முடிஞ்சுது. தமிழ்நாட்டின் கவனத்தை ஈர்த்து, என்ன சிகையடா பண்ணப் போறீங்க? என்று யாரும் கேட்கப் போவதுமில்லை. இசைப்பிரியாவின் ஆடைகள் இல்லாத படத்தைப் போட்டு, அனுதாபம் தேடிய கூட்டம். எதைத் தான் செய்ய மாட்டாது?**

'எண்டாலும், அவர் தமிழ்த் தேசிய உணர்வாளர் தானே!'

அவர் தமிழ் மக்கள் பிரதிநிதியாக பாராளுமன்றமும் போய் கனடாவும் வந்து நடைப்பயணமும் போயிருந்தார்.

என்னவோ, போன முறை யாழ்ப்பாணிகள் காலை வாரி விட்டார்கள்.

இப்படி யாழ்ப்பாணிகளைச் சுத்திப் பிழைக்கும் யாவாரிகளில் ஒருவரான, வித்தியாதரன் தான் மகிந்தவோடு டின்னர் சாப்பிடுவது பிரபாகரனுக்கும் தெரியும், பிரபாகரனோடு லஞ்ச் எடுப்பது மகிந்தவுக்கும் தெரியும் என்பதை பெருமையோடு சொல்லியும் இருக்கிறார்.

இந்திய தரப்போடு பொங்கல் சாப்பிடுவதை அவர் சொல்லவே மாட்டார். அவருக்கும் இந்திய தரப்புக்குமான நெருக்கங்கள் பற்றி, நடேசனின் ஈமெயிலை உடைத்துத் திறந்தவர்கள் வெளியிட்ட தகவல்களில் நிறையவே இருந்தன.

இப்படி சிங்கள தரப்பு, புலி, இந்தியா, அமெரிக்கா என்று எல்லார்க்கும் சகலருக்கும் 'இனியனாக' இருந்து யாழ்ப்பாணியைச் சுற்றி மாமனிதரானவர் தராக்கி சிவராம்.

இருந்தாலும், எப்படியாவது அரசியலில் புகுந்து, சிறிதரன் மாதிரி ஒரு பண்ணையாராக வர அவர் தலையால் மண் கிண்டும் முயற்சி இன்னமும் வெற்றியளிக்கவேயில்லை.

பழைய போராளிகளைச் சேர்த்துக் கொண்டு கட்சி திறந்து பார்த்தார். தமிழரசு வயதானவர்களை விட்டு, இளையவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று சொல்லிப் பார்த்தார். ஊஹூம். யாருமே கடைக்கண் பார்வை பார்ப்பதாக இல்லை.

இனத்தின் அழிவை வைத்துப் பிழைப்பு நடத்தும் இந்த ஊடக அயோக்கியர்களுக்கும், இந்திய தொலைக்காட்சியில் அனாதைப் பிண ஒப்பாரி வைப்பவர்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

•••

சிங்கப்பூரில் தமிழ் வம்சாவளி தர்மன் சண்முகரத்தினம்

ஜனாதிபதியாகியிருக்கிறார்.

கனடாவில் நகர சபை உறுப்பினராக தமிழன் வந்தாலேயே ஈழம் கிடைச்ச பெருமையில் குதிக்கும் யாழ்ப்பாணிக்கு கேட்கவா வேண்டும்?

அவர் யாழ்ப்பாணத் தமிழ்ப் பரம்பரை என்றதும் வழமை போல... யாழ்ப்பாணிகளின் 'ஊரில எவடம்?'.

ஊரெழு என்று விக்கிப்பீடியா கண்டுபிடித்திருக்கிறது.

பிறகென்ன?

யாழ்ப்பாணிகளுக்கு 'அவர் எங்கட ஆக்கள் தான்!'.

பேஸ்புக்கில் வாழ்த்துக்கள் குவிந்த வண்ணமே உள்ளன.

வேட்டி கட்டி விமானம் ஓட்டிய தமிழனுக்கு மாதிரி!

அவர் தன்னை யாழ்ப்பாணிகளுடன் அடையாளப் படுத்தியதாகக் கூட இல்லை. தேசியக்காய் தலையரை வன்னிக்குத் தேடி வந்து அவரோடு போட்டோ எடுத்ததாகவும் இல்லை.

சிங்கப்பூர் நிலைமை அப்படி.

இன, மத வேறுபாடு கடந்து, சிங்கப்பூரியர்கள் என்ற சிந்தனையை அதன் தலைவர்கள் புகுத்தியதாலும், அதை எந்தப் பேதமும் இன்றிக் கடைப்பிடித்ததாலும், சிங்கப்பூர்த் தமிழர்கள் தமிழ்நாட்டுத் தமிழர்கள் மாதிரி இதை வைத்துப் பிழைப்பு நடத்த முடியாது.

'விடை கொடு தாய் நாடே!' விளையாட்டெல்லாம் சிங்கப்பூர் டிவியில் காட்ட முடியாது.

இதற்குள் கதிர்காமர் வெளிநாட்டமைச்சரான போது, வாழ்த்துத் தெரிவித்தார் என்று யாரோ பேஸ்புக்கில் போட, தமிழ்த்தேசியக் குஞ்சு ஒன்று, 'கதிர்காமர் தமிழரா?' என்று கேள்வி கேட்டிருந்தது.

ஆக, யாழ்ப்பாணிக்கு, தமிழன் கனடாவில் பாராளுமன்றம் போய் ஈழம் எடுக்கலாம்.

இலங்கையில் அமைச்சராக இருந்தால் மட்டும் துரோகி!

ஆனால், 'தமிழன் சிங்கப்பூரில் ஜனாதிபதியாக முடிந்தது. இலங்கையில் சிங்களவங்கள் ஒண்டும் தர மாட்டாங்கள்!' என்று யாழ்ப்பாணி கதை சொல்லுவான்.

கதிர்காமரைப் பிரதமர் ஆக்கக் கூட அவர்கள் தயாராக இருந்தார்கள்.

அடே, தமிழன் ஜனாதிபதியாக வந்தாலும், உங்களுக்குத் துரோகி தானேடா!?

கதிர்காமருக்கு வாழ்த்துச் சொன்ன விடயம் வெளியில் தெரிந்ததும் 'அன்று எமது மக்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட போது என்ன செய்து கொண்டிருந்தார்?' என்று ஒரு கூட்டம் கிளம்பும்.

ஊரில் இருக்கும்போது, இருந்த நாட்டுக்கும் விசுவாசம் இல்லை. வெளிநாடு வந்தால், அதற்கும் விசுவாசம் இல்லை. Back home, Sri Lanka பற்றித் தான் நினைப்பு.

'மலரப் போகும் தமிழீழத்திற்கு' மட்டும் தான் யாழ்ப்பாணிகள் விசுவாசமாக இருப்பார்கள்.

இப்படித் துள்ளிக் குதிக்கிற யாழ்ப்பாணிகளுக்கு ஒன்றை நினைவூட்டலாம்.

எழுபதுகளில் தரப்படுத்தல், பகிஷ்கரிப்பு என்று தொடங்கிய காலத்தில், 1974 என்று

**தமிழன் கனடாவில் பாராளுமன்றம் போய் ஈழம் எடுக்கலாம்.**

**இலங்கையில் அமைச்சராக இருந்தால் மட்டும் துரோகி!**

**ஆனால், 'தமிழன் சிங்கப்பூரில் ஜனாதிபதியாக முடிந்தது. இலங்கையில் சிங்களவங்கள் ஒண்டும் தர மாட்டாங்கள்!' என்று யாழ்ப்பாணி கதை சொல்லுவான்.**

**கதிர்காமரைப் பிரதமர் ஆக்கக் கூட அவர்கள் தயாராக இருந்தார்கள்.**

**அடே, தமிழன் ஜனாதிபதியாக வந்தாலும், உங்களுக்குத் துரோகி தானேடா!?**

நினைக்கிறேன், சிங்கப்பூர் உதவிப் பிரதமராக இருந்த ராஜரத்தினம் இலங்கை வந்திருந்தார்.

அவரை வீரகேசரி பேட்டி கண்டிருந்தது. அவரது பேட்டிக்கு வீரகேசரி போட்ட தலையங்கம்...

'உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்தால், பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது!'.

உயிர் தமிழுக்கு! உடல் மண்ணுக்கு! என்று போய், கடைசியில்...
முள்ளிவாய்க்கால் மண்ணுக்கு!

'கமலா ஹறிஸ் மானிப்பாய், விவேக் ராமசாமி ராமசாமிப் பரியாரியாரின்ரை பூட்டன், அவே எங்கட ஆக்கள் தான்!' என்று பீத்திக்கிறதுக்கு முதல் உங்கள் மூளைக்குள் இருக்கும் மலத்தை அகற்றுங்கடா!

•••

முன்பு தாயகம் வெளிவந்த காலத்தில், புலிகள் நடத்திய ஆர்ப்பாட்டம் ஒன்றில் வீடியோ எடுத்துக் கொண்டிருந்த புலிவால் ஒருவரை, 'தாயகம்காரர் வீடியோ எடுக்கிறாங்கடா!' என்று புலிவால்களே அடித்துத் துவைத்து துவம்சம் செய்தது பற்றி முன்பு எழுதியிருந்தேன்.

ஈழம் கிடைச்ச பீலாவுடன் திரைப்படங்களைத் தடை செய்யும் பேஸ்புக் புலிகளின் அடாவடித்தனம், தங்கள் 'தமிழ்த்தேசிய உணர்வாளர்' தயாரித்த படத்தையே தடை செய்ய வைத்திருக்கிறது.

'வெந்து தணிந்தது காடு' படத்திற்கு பேஸ்புக் புலிகள் பத்வா விதித்திருக்கிறார்கள். முகம் தெரியாத கூட்டத்தால் விதிக்கப்பட்ட தடையையும் மீறிப் படத்தை திரையிடுவதே பெருவெற்றியாக கொண்டாடப்படும் அளவுக்கு நிலைமை இருக்கிறது.

கனடாவிலும் படம் ஓடுகிறது, உங்களுக்கு ஒருத்தரும் சொல்லேலையோ? என்று நண்பர் ஒருவர் போன் அடித்தார்.
'எங்க ஓடுதாம்?'

யாருக்கும் தெரியாமல் ஒரு வீட்டில் நிலக்கீழ் அறையில் திரையிடப்பட்டது.

அது இலக்கிய வாதிகளுக்கானதாக இருக்க

வேண்டும். அழைப்பு விடுக்க வேண்டிய அளவுக்கு நான் முக்கியமான ஆளும் இல்லை.

இப்படி காதும் காதும் வைத்தாற் போல, படம் ஓடியது.

ஆக, 'அண்ணை அடிச்சுப் பறிப்பார்' என்று நம்பிய தமிழ்த் தேசிய உணர்வாளர்கள், இந்தப் படத்தைத் தாங்கள் ஓட்டியது தெரிய வந்தால் 'துரோகி ஆக்கிப் போடுவாங்கள்' என்று பயந்திருக்கிறார்கள்.

தாங்கள் சொன்னபடி கேட்க மாட்டார் என்று, 'தலைவரோட போய் கதைச்சுப் போட்டு வந்த' கனடிய அணு விஞ்ஞானியை, கனடிய தேர்தலில் வெற்றி பெற விடாமல் செய்தது 'தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்கள்!'.

தந்தையார் ஆனந்தசங்கரியின் மகன் என்பதற்காக அவரையும் துரோகி என்று தொடங்க, அவரும் டிஎன்ஏ சமர்ப்பிக்காத குறையாக, அவரை எனக்குத் தெரியாது என்று சேவல் கூவ முன்னால் மும்முறை மறுதலிக்க வைத்ததும், அவருடைய பதாகைகளை வெட்டியதும்...

அதே தமிழ்த்தேசிய உணர்வாளர்கள்.

இந்த லட்சணத்தில கனடாவில் நகர சபைக்கோ, சிங்கப்பூரில் அரசவைக்கோ தமிழன் தெரிவாவதில் என்ன பெருமை வேண்டிக்கிடக்கிறது?

•••

கனடாவில் சாம்ராஜ்க்கு இயல் விருது கிடைத்திருந்தது.

இதுவரை இலக்கிய மட்டங்களில் கேள்விப்படாத பெயர்.

பிரபலமாக இருந்ததாக அறியவில்லை.

அவர் முள்ளிவாய்க்காலில் பிரபாகரன் இறந்தது பற்றி ஒண்டிப்புலி என்று எழுதிய கவிதையை தோண்டி எடுத்திருந்தார்கள்.

பிறகென்ன?

தமிழ்த்தேசிய உணர் வாளர்கள் கொதித்து விட்டார்கள்.

அவருக்கு விருது கொடுத்தவர்கள் அவருடைய கருத்துச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டியது பற்றி எதுவுமே சொல்லவில்லை.

அவரும் கொதித்தெழுந்த தமிழ் உணர்வாளர்கள்,

**தாங்கள் சொன்னபடி கேட்க மாட்டார் என்று, 'தலைவரோட போய் கதைச்சுப் போட்டு வந்த' கனடிய அணு விஞ்ஞானியை, கனடிய தேர்தலில் வெற்றி பெற விடாமல் செய்தது 'தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்கள்!'.**

**தந்தையார் ஆனந்தசங்கரியின் மகன் என்பதற்காக அவரையும் துரோகி என்று தொடங்க, அவரும் டிஎன்ஏ சமர்ப்பிக்காத குறையாக, அவரை எனக்குத் தெரியாது என்று சேவல் கூவ முன்னால் மும்முறை மறுதலிக்க வைத்ததும், அவருடைய பதாகைகளை வெட்டியதும்... அதே தமிழ்த்தேசிய உணர்வாளர்கள்.**

**இந்த லட்சணத்தில கனடாவில் நகர சபைக்கோ, சிங்கப்பூரில் அரசவைக்கோ தமிழன் தெரிவாவதில் என்ன பெருமை வேண்டிக்கிடக்கிறது?**

(உணர்வாளினிகளும் தான்!), 'அம்மணமா வெளியால வாடா!' என்று ஆர்ப்பாட்டம் செய்வார்களோ என்ற பயத்தில் ஜகா வாங்கி விட்டார்.

ஆக, எல்லாமே பிழைப்புக்குத் தாண்டா!

சே...

விருதுக்குத் தாண்டா!

அவருக்கு விருது கொடுத்ததற்கான தகுதி, விருதுப் புரவலர் அ.முத்துலிங்கத்தின் புகழ் பாடி வெளிவந்த வைர(ல்) வீடியோவில் வந்த பாடலை எழுதியவர் என்பது தான் என்று தகவல்.

(ஆக, ஒரு மாதிரி இம்முறையும் இயல் விருது பற்றி கடிச்சாச்சு!)

•••

கருத்துச் சுதந்திரம் என்றதும் பத்ரி சேஷாத்திரி கைது பற்றி நினைவுக்கு வருகிறது.

பேஸ்புக்கே அதிர்ந்தது. பின்னால் சத்தமே இல்லை.

ஆள் உள்ளேயா? வெளியேயா? என்பது கூடத் தெரியவில்லை.

தமிழ்நாட்டில் இருந்தபடியே தமிழர்களுக்கு எதிரான வன்மத்தை பார்ப்பனர்கள் வெளியிடுவது இப்போது சர்வசாதாரணமாக நடக்கிறது. ஆனால், எச்.ராஜா, எஸ். வி.சேகர், மதுவந்தி என்றெல்லாம் இருந்தவர்கள் அடங்கிப் போக, இப்போது புலன் பெயர் தமிழர்களின் டார்லிங் கஸ்தூரி தான் அந்தப் பரபரப்புகளுக்கு சொந்தக்காரர்.

பத்ரி சேஷாரி கைது இலக்கிய உலகத்தைக் கலக்கி, இரண்டாகப் பிளந்து விட்டது.

அவரது கருத்துச் சுதந்திரம் என்று, அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று பார்ப்பன முக்கியஸ்தர்களும் அவர்களில் தங்கியிருக்கும் மற்றவர்களும் ஒன்று சேர்ந்து முதல்வர் ஸ்டாலினுக்கு எழுதிய கடிதம் பெரும் சர்ச்சையை உருவாக்கி விட்டது. அதில் கையெழுத்திட்ட மற்றவர்களில் ராஜன் குறை கிருஷ்ணன், பெருமாள் முருகன், ஸ்டாலின் ராஜாங்கம் மீது உடன்பிறப்புகள் கொதித்தெழுந்தார்கள்.

உள்ளுக்குள் தள்ளி, முட்டிக்கு முட்டி தட்ட வேண்டும் என்ற திராவிட உணர்வாளர்கள் மறு புறம்.

இணைய உடன் பிறப்புகளினதும் ஐடி விங்கினரும் இந்த இயல்புகள் பற்றி எனக்கு நேரடி அனுபவம் கூட உண்டு. அது தனிக்கதை.

கூட்டறிக்கை என்பதன் தாற்பரியம் வேறு. சில நேரங்களில் கேட்டதற்காக மறுக்க முடியாத சூழ்நிலைகள் எல்லாம் உண்டு.

பத்ரியின் கிழக்குப் பதிப்பகம் மூலமாக புத்தகம் வெளியிட்டவர்கள் பற்றி பேஸ்புக்கில் இன்னொரு கூட்டம் திட்டிக் கொண்டிருந்தது.

இந்த குடுமிப்பிடிச் சண்டை எல்லாம் எதற்கு? என்பதே என் கேள்வியாக இருந்தது.

வன்மங்கள் கருத்துச் சுதந்திரத்திற்குள் அடங்குவதில்லை என்பது ஒரு புறம் இருக்க, குடுமியில் பிடித்து நாலு அறை விடும் போது, மன்னிப்புக் கேட்பது தானே பார்ப்பனப் பாரம்பரியமாக

இருக்கிறது.

நீதிமன்றங்களை அவமதித்த தற்காக மன்னிப்புக் கேட்ட எச்.ராஜாவும், குருமூர்த்தியும், எஸ்.வி.சேகரும் சொல்லும் வியாக்கியானங்களே, வை.ஜி. மகேந்திரனின் மொக்கை காமெடி மாதிரித் தானே இருக்கின்றன.

இப்படி, சேஷாத்ரியும் மன்னிப்புக் கேட்டு விட்டு, சூடு சுரணை இல்லாமல், எதுவும் நடவாதது போல...

சவுக்கு சங்கர் மாதிரி, பூணூல் பத்ரி என்று யூடியூப் சனல் திறந்தால், பதிப்பகத்தை விட அதிகமாகவே காசு பார்க்கலாம்.

கஸ்தூரியோடு சேர்ந்து, ஸ்டிங் ஒப்பரேஷன் கூடச் செய்யலாம்.

பார்ப்பனியம் வன்மம் கக்குவது இப்போது அன்றாட நிகழ்வாகி விட்டது. பாடசாலைக் குழந்தைகளுக்கு காலை உணவு கொடுப்பதால் மலசலகூடங்கள் நிறைந்து வழிவதாக தினமலர் செய்தி வெளியிட்டது.

தினமலம் என்பதால், மலசலம் பற்றிய அக்கறை இருக்கத் தானே செய்யும்.

தினமலரை நடுநிலைப் பத்திரிகையாக நினைத்தோம் என்று மாநில அமைச்சர், தங்கள் நம்பிக்கையில் மலம் அள்ளிப் போட்டதைச் சொல்லியிருக்கிறார்.

முதல்வர் உண்டு கொழுத்த பரம்பரை பற்றி அறிக்கை விட்டிருக்கிறார்.

இவ்வாறான வன்மங்களை அடக்குவதற்கான வழி, அரச விளம்பரங்களை நிறுத்துவதும், அதில் விளம்பரம் செய்யும் நிறுவனங்களைப் பகிஷ்கரிப்போம் என்று தொடங்குவதும், அதற்கு மேலாக பத்திரிகையை வாங்காமல் விடுவதும் தான்.

Hit them in the pocket, not below the belt!

ஆனால், தினமலர் ஆசிரியரை உள்ளே தள்ளி முட்டிக்கு முட்டி தட்டுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவு.

பெரும்பாலும் அரசாங்கம் வெறும் கருத்துக்களைக் கண்டு, உடனே போய் கைது செய்து விடுவதில்லை.

**இந்த குடுமிப்பிடிச் சண்டை எல்லாம் எதற்கு? என்பதே என் கேள்வியாக இருந்தது.**

**வன்மங்கள் கருத்துச் சுதந்திரத்திற்குள் அடங்குவதில்லை என்பது ஒரு புறம் இருக்க, குடுமியில் பிடித்து நாலு அறை விடும் போது, மன்னிப்புக் கேட்பது தானே பார்ப்பனப் பாரம்பரியமாக இருக்கிறது.**

**நீதிமன்றங்களை அவமதித்த தற்காக மன்னிப்புக் கேட்ட எச்.ராஜாவும், குருமூர்த்தியும், எஸ்.வி.சேகரும் சொல்லும் வியாக்கியானங்களே, வை.ஜி. மகேந்திரனின் மொக்கை காமெடி மாதிரித் தானே இருக்கின்றன.**

**இப்படி, சேஷாத்ரியும் மன்னிப்புக் கேட்டு விட்டு, சூடு சுரணை இல்லாமல், எதுவும் நடவாதது போல...**

**சவுக்கு சங்கர் மாதிரி, பூணூல் பத்ரி என்று யூடியூப் சனல் திறந்தால், பதிப்பகத்தை விட அதிகமாகவே காசு பார்க்கலாம்.**

**கஸ்தூரியோடு சேர்ந்து, ஸ்டிங் ஒப்பரேஷன் கூடச் செய்யலாம்.**

கைதுகளுக்காக அரசை நேரடியாகக் குற்றம் சாட்டுவதும் முறையும் இல்லை.

யாராவது சட்ட ரீதியாகப் புகார் அளித்தால் மட்டுமே பொலிசார் நடவடிக்கை எடுக்க முடியும்.

பத்ரி விடயத்தில் யாரோ சட்டத்தரணி புகார் அளித்ததால் தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தினமலர் பற்றி இன்னமும் எந்தப் புகாரும் அளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டதற்கான முன்னுதாரணங்கள் இல்லாமலும் இல்லை.

புரட்சித் தலைவி சங்கராச்சாரியார் வரைக்கும் உள்ளே தள்ளி முட்டிக்கு முட்டி தட்டியவர் தான்.

இந்தியாவின் பிரபலங்களைத் தங்கள் ஊருக்கு வர வைக்க வேண்டும் என்பதற்காகவே, அவர்கள் மீது நுகர்வாளர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, அவர்களை தங்கள் ஊருக்கு வர வைக்கும் அளவுக்கு இந்தியாவில் சட்டம் இருப்பதாக வாசித்த ஞாபகம்.

விஜயலட்சுமி புகார் அளித்தபடியால் தான் சீமான் மீது விசாரணை நடக்கிறது.

வைரமுத்து மீது சின்மயி புகார் அளிக்காமல், ட்விட்டர் பதிவு போடுவதால் தான், வைரமுத்து துணிச்சலோடு ட்விட்டரில் உலவ முடிகிறது.

இப்போது கோணங்கியின் சஞ்சிகையில் எழுதியவர்கள் குறித்த விவகாரமும் வழமை போல, இலக்கிய உலகை இரண்டாகப் பிரித்து விட்டது.

எழுதியவர்கள் எல்லாம் கோணங்கியின் பாலியல் துஷ்பிரயோகங்களை அங்கீகரிக்கிறார்களா என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

இப்படி தங்கள் முகாம்கள் என்றவுடனேயே முட்டுக் கொடுப்பது, நம்(ண்)பர் வண்களிலேயே ஆரம்பிக்கின்றன.

ஆசான் தொடக்கம் எல்லாருமே, தங்களுக்கு வேண்டப்பட்டவர்கள் என்றால் எந்த விதத்திலும் முட்டுக் கொடுப்பார்கள்.

தமிழ்நாட்டு இலக்கியப் பிரபலர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தபோது, கோணங்கி பற்றிய கதை வந்தது.

அவர் சொன்னதும் இதைத் தான்.

வெறுமனே பேஸ்புக் பதிவுகள் போடுவதால் எந்தப் பயனும் இல்லை. சட்டரீதியாக புகார் அளித்தால் மட்டுமே அதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

மற்றும்படி இதெல்லாம் பேஸ்புக்கின் ஒருவாரப் பரபரப்பு மட்டுமே...


பத்ரியின் கைது மாதிரி!

அடுத்த வாரம், யாருமே பத்ரி எங்கே என்று கூட அலட்டிக் கொள்ள மாட்டார்கள்.

பேஸ்புக் மான்மியம் அப்படி!








# உலகெங்கும் அமசோனில்....

| | |
|---|---|
| இந்தியாவில்... | www.amazon.in |
| அமெரிக்காவில்... | www.amazon.com |
| கனடாவில்... | www.amazon.ca |
| இங்கிலாந்தில்... | www.amazon.co.uk |
| ஜேர்மனியில்... | www.amazon.de |
| பிரான்சில்... | www.amazon.fr |
| நெதர்லாந்தில்... | www.amazon.nl |
| அவுஸ்திரேலியாவில்... | www.amazon.com.au |
| இத்தாலியில்... | www.amazon.it |

ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
என்ற வார்த்தையைத்

தேடுங்கள்...
கண்டடைவீர்கள்!

தாயகம் சுவடிகள்

# அணி இலக்கணம்.. சே... இலக்கியம்!

*தாயகம் இணையத் தளத்தில் எழுதியது.*

*68 இலக்கிய நாய(ன்)மாரே!*

எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாக வேணும்.

புலன் பெயர்ந்தும் பெயராமலும், இலக்கியம் படைச்சும் செய்தும் கொண்டிருக்கிற நீங்கள், யாழ்ப்பாணிப்பின்புலத்தமிழர்களாக இருக்கிறதால, அந்த முற்போக்கு, பிற்போக்கு, நற்போக்கு இலக்கியக் கூட்டம் மாதிரி, சங்கங்கள், கட்சிகள் தொடங்காட்டியும், ஆளுக்கொரு இயக்கம் தொடங்கினது மாதிரி அணி திரண்டிருக்கிறதோ, அவ்வப்போது துரோகி ஒழிப்பு பாணியில கோஷ்டி மோதல்களில் ஈடுபடுறதோ எனக்கு பெரிய ஆச்சரியம் இல்லை.

**இரண்டு தமிழர், மூன்று கட்சி!**

**அதில இரண்டாவது முதலாவதில இருந்து பிரிஞ்சது, மூண்டாவது, இரண்டும் சேர்ந்த கூட்டமைப்பு!**

**நீங்களும் இப்பிடி அணி திரண்டு, சேர்ந்து, பிரிந்து எல்லாம் இலக்கிய யாகம், வேள்வியள் செய்யிறதை நானும் காணிறனான்.**

**ஒற்றுமையே பலம், அதிலயும் நாங்கள் ஒற்றுமையா இருக்கிறதைக் காட்ட வேணும் எண்டு குத்துப்பட்டுக் கொண்டே குடும்பமா இருக்கிற மாதிரி, நீங்களும் அணி திரளுறதும் எனக்கு பிரச்சனையில்லை.**

**ஜோர்ஜ் இ.**

அதுவும் நாலு பேர் சேர்ந்தாலே, பகையெல்லாம் திசையெட்டும் பறந்தோட வைத்த பேரணி என்று பேஸ்புக்கில பீலா விடுற பரம்பரை!

ஒரே வித்தியாசம், நீங்கள் வெற்றி அல்லது வீரமரணம் அளவுக்கு போறேலை, அவ்வளவு தான்!

சண்டை முடிய உங்கட சோலியளைப் பாக்கப் போடுவியள்!

கருத்துச் சுதந்திரம் பற்றி கனக்க கதைக்கிற முற்போக்கு புத்திசீவிகள் தான் மோசமான கருத்து மறுப்பாளர்கள் எண்டது எனக்கு நல்லாத் தெரியும்.

நீங்களும் ஊரில எவடம்? யாழ்ப்பாணம் தானே!

வோல்டேயர் சொன்னதாக இணையத்தில உலாவிற மேற்கோளை மேற்கோள் காட்ட முண்டியடிக்கிறது நீங்கள் தான்.

கருத்துக்களை கருத்துக்களால் வெல்ல வேணும் எண்டு சொல்லிற உங்களில, மற்ற இலக்கியவாதிகளுக்கு எதிராக நோட்டீஸ் அடித்து வெளியிடுறது முதல், கூட்டங்களில் கலாட்டா பண்ணுவது வரையும் கண்டிருக்கிறேன்.

மற்றவே நடத்திற இணையச் சந்திப்புகளை பகிஷ்கரிக்கிறது, நக்கல் அடிக்கிறது, அதுக்குள்ள போய் உங்கட கருத்தை நிலை நாட்ட குத்தி முறியிறது எல்லாம் கண்டு தான் இருக்கிறன்.

தடி இருந்தா அடிச்சிக்கிட்டிருப்போம். கத்தி இருந்தா குத்திக்கிட்டிருப்போம். துப்பாக்கி இருந்துச்சு, சுட்டுக் கிட்டோம் எண்டது மாதிரி...

நோட்டீஸ் இருந்திச்சுது, அடிச்சுக்கிட்டோம் தான்!

என்ரை முன்னோர்கள் செய்த புண்ணியமோ என்னவோ, பூமி சூடாகிறதால வாற இயற்கை அனர்த்தங்களில... சே... உங்கட தலைக்குள்ள இருக்கிற gas சூடாகிறதால வாற அனர்த்தங்களில நான் ஆப்பிடுறேலை.

நல்ல காலம். நானும் உங்களைப் போல Chartered / Certified. Card carrying இலக்கியவாதியாக இல்லாமல் இருக்கிறது.

உங்கட உதைகள் பத்தாதெண்டு, உங்கட சொம்புகள், அல்லக்கையள், குண்டரடிதடிப்பொடிகள் வேற தர்ம அடி போட அலையுதுகள்.

www.thayagam.com
தாயகம்

இரண்டு தமிழர், மூன்று கட்சி!

அதில இரண்டாவது முதலாவதில இருந்து பிரிஞ்சது, மூண்டாவது, இரண்டும் சேர்ந்த கூட்டமைப்பு!

நீங்களும் இப்பிடி அணி திரண்டு, சேர்ந்து, பிரிந்து எல்லாம் இலக்கிய யாகம், வேள்வியள் செய்யிறதை நானும் காணிறனான்.

ஒற்றுமையே பலம், அதிலயும் நாங்கள் ஒற்றுமையா இருக்கிறதைக் காட்ட வேணும் எண்டு குத்துப்பட்டுக் கொண்டே குடும்பமா இருக்கிற மாதிரி, நீங்களும் அணி திரளுறதும் எனக்கு பிரச்சனையில்லை.

உங்களோட அணி சேராமல் இருக்கிறதும் எனக்கும் பிரச்சனையில்லை.

பிரச்சினை என்னண்டா...

எனக்கு தெரிஞ்சு நாளிதுவரை இலக்கியத்தில, சோ அணி, சே அணி தான்.

இதோட அணிசேராமல் ஒரு செ அணி!

சே..சே.. நீங்கள் கனக்க யோசிக்கப்படாது.

சே அணியை எழுத்துப் பிழையோட யோசிக்கக் கூடாது. நான் சொல்லிறது லண்டன்காரர்.

மற்றது எங்க நிக்குது எண்டு ஆருக்கும் தெரியாது! அது இணையத்துக்குள்ளால யாழ்ப் பாணத்திலயும் நிக்கும்! இரண்டாம் ஆளுக்கு தெரியாமல் கொழும்பிலயும் நிக்கும்!

செ அணி எண்டவுடன 'எல்லாம் காலம் தான்!' எண்டு நீங்கள் நினைக்கப்படாது.

அது கடவுள் மாதிரி. தூணிலயும் துரும்பிலயும் இருக்கிற கடவுள் மாதிரி, எல்லா அணிக்குள்ளயும் இருக்கும்.

ஆசானுக்குள்ளயும் இருக்கும்! ....க்குள்ளயும் இருக்கும்!

இலக்கியம் எண்டது, பேருக்கும் பிழைப்புக்கும் எண்ட பின்னால்...

எல்லாமே Free for all தானே!?

**இப்பிடி இந்த இலக்கிய சர்ச்சைகள், மோதல்கள், அடிபிடி எல்லாம் ஓரமாய் நிண்டு ரசிக்கிறது ஜாலியாத் தான் இருக்கும்.**

**இந்த அடிபாட்டுக்குள்ள ஆர் வெல்லுகினம் எண்டு பார்த்து சீக்காய் அடிக்கத் தொடங்கிற ஆக்கள், உள்ளுக்குள்ள சிரிச்சுக் கொண்டிருக்கிற ஆக்கள், உள்பெட்டிக்குள்ள தகடு குடுக்கிற ஆக்கள், ஒருத்தரையும் நோகாமல் gap க்குள்ள எல்லாருக்கும் வேலையைக் குடுக்கிற ஆக்கள் எண்டு எல்லா இலக்கிய பெருந்தகைகளையும் கண்டுதானே வந்திருக்கிறன்.**

நான் சொல்றது, ஆஸி அணி.

சேர்த்தாலும் பிணி, சேர்ந்தாலும் பிணி என்று யாரும் அணி சேர்க்காமலும் சேராமலும் இருக்கிற One man army/

நீங்கள் ஏற்றுக் கொள்ளிறியளோ இல்லையோ, ஆள் ஒரு நல்ல கதை சொல்லி எண்டது எனக்கு தெரியும்.

அதை நீங்கள் வெளியில சொல்ல மாட்டியள்.

நான் சொல்லுவன்.

என்னைப் பற்றிய கதைகளையும் சொல்லி எண்டதால!

பிறகென்ன? தடுத்தாட் கொண்டு விட்டு நம்ம வேலையைப் பார்த்து தான்.

என்னைப் பற்றிய கட்டுக்கதைகள் சொல்ல, நான் மேதகுவும் இல்லை.

ஆமைக்கறிக் கதை சொல்ல செ சீ யும் இல்லை!

ஆக, இந்த புலன் பெயர் ஈழத்தமிழ் இலக்கியத்தில எனக்கு தெரிஞ்சு மூன்று அணி தான் இருக்குது எண்டு நினைச்சுக் கொண்டிருந்தன்.

எம்.ஜி.ஆர் சிவாஜிக்கு ஒரு ஜெமினி!

கமல் ரஜனிக்கு ஒரு பிரபு!

புதுப் பெடியளை எனக்கு கனக்க தெரியாது.

விஜய் அஜித்துக்கும் ஆரும் இருப்பினம் தானே!

அது மாதிரி, முந்தின ஹீரோக்களுக்கு தோரணம் கட்டி, இரத்தம் வித்து படம் பாத்த ரசிகர்கள் மாதிரி, இந்த இலக்கிய ஹீரோக்களுக்கு பாலாபிஷேகம் செய்ய சொம்புகளும், இரத்தம் சிந்த அல்லக்கையளும் இருக்குத்தானே!?

இப்பிடி இந்த இலக்கிய சர்ச்சைகள், மோதல்கள், அடிபிடி எல்லாம் ஓரமாய் நிண்டு ரசிக்கிறது ஜாலியாத் தான் இருக்கும். இந்த அடிபாட்டுக்குள்ள ஆர் வெல்லுகினம் எண்டு பார்த்து சீக்காய் அடிக்கத் தொடங்கிற ஆக்கள், உள்ளுக்குள்ள சிரிச்சுக் கொண்டிருக்கிற ஆக்கள், உள்பெட்டிக்குள்ள தகடு குடுக்கிற ஆக்கள், ஒருத்தரையும் நோகாமல் gap க்குள்ள எல்லாருக்கும் வேலையைக் குடுக்கிற ஆக்கள் எண்டு எல்லா இலக்கிய பெருந்தகைகளையும் கண்டுதானே வந்திருக்கிறன்.

இந்த இலக்கிய அடிபாடுகளுக்குள்ள இன்னொரு சைட் ஷோ ஓடியிட்டிருக்கும். அது இன்னும் சுவாரஷ்யமாக இருக்கும். அது படுக்கையறை முதல், மர்ம அங்க லாவண்ய விபரிப்புகள் வரைக்கும் இருக்கும். அது உங்கட அடிபிடிகளை விட இன்னும் சுவாரஷ்யமா இருக்கும்.

நானும் என்ரை அலுவலோட, என்ன தோட்டம் கொத்திற வேலை தான், பிசியாய் போனவுடன கொஞ்சம் கவனக் குறைவாக இருந்திட்டு திரும்பிப் பாக்கிறன்.

எல்லாம் தலைகீழாப் போச்சு!

உப்பிடித் தான் நானும் பேப்பர் விடுறதை விட்டுட்டு, தொழிற்சங்கப் போராட்டத்தில தலையை விட்டு திரும்பிப் பாக்க...

உங்களில பல பேரால் பாசிஸ்ட் என்று சொல்லப்பட்டவர் உங்களில் பலருக்கே தேசிக்காய் தலையர் ஆனவர். அவரை தேசிக்காய் தலையர்

ஆக்கின ஆக்களைப் பற்றி ஒரு நாளைக்கு எழுதத் தான் இருக்கு!

குளிர் யுத்தம் முடிய அமெரிக்கா ரஷ்யா போய், அமெரிக்கா சீனா எண்டு வந்த மாதிரி, பனிகளின்ரை யுத்தம் முடிஞ்சு புதிசா இரண்டு அணி வந்திருக்காம்.

சோ அணி, சா அணி!

இதென்ன பலாய்டா! இரண்டுமே குழந்தைப் போராளிகள்.

தான் மட்டும் தான் குழந்தைப்போராளி எண்டு ஒருத்தர் மற்றவரை அவ்வாறு அங்கீகரிக்காத child soldiers!

Stand at ease!

ஓலைக்கால்! சீலைக்கால்!

குழந்தையளின்ரை சண்டை எண்டு விடேலாது எண்டு பாத்தா, அது அணிகளாகிப் போச்சுதாம்!

சோவோ, சாவோ, ஆளுக்கு ஆயிரம் சொம்புகளும் அல்லக்கையளும் இல்லாமலா போகும்?

அண்ணை, உதை விடக்கூடாது!

உப்பிடி ஒரு அண்ணை மாண்டு போனது வேற கதை!

Conventional army ஒருபுறம் சண்டை பிடிக்க, ஆழ ஊடுருவும் படையணி தங்கட பாட்டில பின்னூட்டத்தில விளாசித் தள்ள…

இந்த summer முடியும் மட்டும் உந்த சமருகளை follow பண்ண முடியாதபடி தோட்டத்தில களையெடுப்பு நடத்திக் கொண்டிருக்கிற எனக்கு புதிசா ஒரு பயம் வந்திருக்கு.

அதுக்கு காரணமான உண்மையைக் கண்டுபிடிக்காட்டி, உது நம்முடைய 'இருத்தலுக்கு' அச்சுறுத்தலாகி விடுமோ எண்ட எண்ணம் நித்திரையை வேற குழப்புது!

சே.. சே… இத்தனை அணிகளுக்குள்ள ஆரிட்ட அந்த இலக்கிய அளவுகோல் இருக்கு எண்டு எல்லாம் நான் கேட்க மாட்டன்.

அந்த அளவுகோலைத் தந்தியள் எண்டா, என்ரையும் உங்கட அளவுக்கு பெரிசோ எண்டு, அது தான் நான் எழுதுறதுகளும், அளந்து பாக்கலாம் எண்ட எண்ணமும் எனக்கு இல்லை.

ஏழாவது ஈழப் போரைத் தொடங்கின பாவம் என் மீதும் என் பிள்ளைகள், பரம்பரை மீதும் இல்லாமல் போகக் கடவதாக!

என்ரை பிரச்சனை வேற!

இதில நான் சொன்ன அத்தனை பேரும் என்ரை நட்பு பட்டியலில இருக்கிறியள்.

சொந்தப் பேரிலயும், பேக் ஐடியிலயும்!

அவையை விட, உந்த இலக்கியச் செம்ம(றி)ல்களில் பெரும்பாலோரும் அதுக்குள்ள!

நான் என்ன சொல்லிறன் எண்டதை விட, தங்களைப் பற்றி ஏதும் சொல்லிப் போடுவனோ எண்ட எண்ணமாயிருக்கலாம்!

எல்லாரும் இருந்தாலும், ஒருத்தரும் நான் எழுதின எதையும் லைக் பண்ணிறேலை.

அது எனக்கு பிரச்சனையும் இல்லை.

உங்களைப் போல இலக்கிய மேதகுக்களுக்கு அது எல்லாம் கௌரவக் குறைச்சல் எண்டது தெரியும். நீங்கள் மற்றவேயின்ரை பிறந்த நாள் வாழ்த்துக்களுக்கு லைக் போட்டதாகக் கூட கண்ட ஞாபகம் இல்லை.

அதுவும் சொம்புகள் கண்டா என்ன நினைப்பினம் எண்ட எண்ணமாயும் இருக்கலாம்.

நான் கள்ளிகளையும் உள்ளிகளையும் பற்றி எழுதினால் கூட நீங்க கண்டதாக காட்டிக் கொள்ள மாட்டியள் எண்டு தெரியும்.

உங்களிட்ட லைக் வாங்க வேணும் எண்டு நானும் அலைஞ்சதில்லை…

பாவனைக்கு உகந்தது என்று சீல் குத்தின மாதிரி, உங்கட லைக் கிடைச்சுத் தான் அதற்கு அங்கீகாரம் கிடைக்க வேணும் எண்டிறதுக்கு நான் எழுதுறது என்ன மாட்டு இறைச்சியே?

ஆனா, எல்லாத்தையும் வாசிப்பீங்கள் எண்டது தெரியும்.

நான் மறந்தாலும், தம்பி மார்க்கு விட மாட்டான். உங்கட கண்ணுக்கு முன்னால கொண்டு வந்து விட்டுட்டுத் தான் வேற வேலை பாப்பான்.

உங்களுக்கு நான் தீண்டத்தகாதவன் எண்டது எனக்கு தெரியும். உவனைப் பெரிய ஆள் ஆக்கக் கூடாது எண்டு பெருமனது உங்களில ஆருக்கு இருக்கு எண்டதும் தெரியும்.

உப்பிடி எத்தினை ஆண்டைகளைக், ஆண்டிகளையும தான், கண்டிருப்பன்?

நான் வழமையா சொல்றது தான்!

நீ பெரிய ஆளா இருக்கலாம்!

எனக்கு இல்லை!

அதை விடுவம்!

நான் என்ன உங்களோட சமபந்தி, சம்பந்தமா செய்யப் போறன்!?

என்ரை பிரச்சனை என்னண்டா…

உங்கள் அத்தனை பேரிலயும் ஒரே ஒரு ஆள் தான் எனக்கு இடைக்கிடை லைக் போடுறது!

சா!

அதுவும் என்னுடைய கடுமையான புலி எதிர்ப்பையும் மீறி போடுறது எண்டா…

அது நான் போடுறதுக்கு பிரதியுபகாரமாகவும் இருக்கலாம்.

தான் இலக்கியவாதி இல்லை எண்டு சா சொன்னாலும், அதை வைச்சுக் கொண்டு, என்னையும் அந்த அணி எண்டு முடிவு கட்டி…

இந்த குழந்தைப் போராளியையும்…

உங்கட பனிகளின் போருக்கு, கட்டாய ஆட்சேர்ப்பில இழுத்துக் கொண்டு போடுவியளோ?

நானும் ஓலைக்கால், சீலைக்கால் போட வேண்டி வருமோ எண்டது தான் இப்ப என்ரை பயமும் கவலையும்!